ஶ்ரீ:

ருக்மிணீஸத்யபாமாஸமேத
ஶ்ரீ கோபாலக்ருஷ்ணாய
பரப்ரஹ்மணே நம:.

ஶ்ரீமந்நிகிலநிகமாகமஸித்தாந்தபாராவாரபாரத்ருஶ்வநா
பகவதா வ்யாஸமஹர்ஷிணா ப்ரணீதே
அஷ்டாதஶஸஹஸ்ரஸங்க்யாபரிமிதே
ஶ்ரீமத்பாகவதே,
ப்ரதம, த்விதீய, த்ருதீய, சதுர்த்தஸ்கந்த
ஸம்வலிதோऽயம் ஶ்ரீ கோஶ:
ஶ்ரீதரீயவ்யாக்யாநேந
த்ராவிடவிவரணேந ச ஸஹித:

ஸ்ரீமத் பாகவதம்.

1, 2, 3, 4, ஸ்கந்தங்கள்.

ஸ்ரீதரீயவ்யாக்யானத்துடன்

சிறுகாம்பூர்- பிரம்மஸ்ரீ-
ராமாயணம்- நடேச சாஸ்திரியார்
அவர்களால்
வரகவி- திரு- அ- சுப்பிரமணிய பாரதி அவர்களின்
உதவியைக்கொண்டு
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,
எ. வி. ஐயர் அண்டு கம்பெனி ப்ரொப்ரைடர்
எ. வைத்தினாதையரால்
சென்னை, கோமளேசுவரன்பேட்டை,
சச்சிதாநந்த அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1914.

śrīrastu.

hariḥ om

sakalajagatkāraṇa śrīkṛṣṇaparabrahmaṇe namaḥ.

śrīhayavadanaparabrahmaṇe namaḥ.

śrībhāgavatavyākhyānārthaprathamādhyāyakathāsaṅgrahaślokāḥ

prathamaskandhaḥ

12 𑌪𑍁𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗[illegible] 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍇 𑌤𑍁 𑌤𑌥𑍈𑌵𑌾𑌥 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌜𑍍𑌜𑌨𑍍𑌮 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 ॥ 93

13 𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑍋 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍁𑌰𑍋𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍇 ।
𑌉𑌕𑍍𑌤𑌃 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑍇𑌣 [illegible] ॥ 100

14 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍇 𑌅𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌶𑌂𑌕𑌿𑌤𑌃 ।
𑌅𑌶𑍃𑌣𑍋𑌦𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌣𑌮𑌿𑌤𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 112

15 [illegible] 𑌨𑍃𑌪𑌸𑍍𑌯 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
[illegible] 𑌨𑍃𑌪𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ 120

16 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌷𑍋𑌡𑌶𑍇 [illegible] ।
𑌸𑌂𑌵𑌾𑌦𑍋 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 [illegible] 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ॥ 131

17 𑌤𑌤𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑍇 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌕𑌲𑍇𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ।
[illegible] ॥ 139

18 𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌾𑌪𑍋 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌸 𑌚𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹 [illegible] 𑌜𑌾𑌤𑍋 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯[illegible] ॥ 148

19 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋𑌪𑌵𑍇𑌶𑍇 𑌗𑌂𑌗𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌯𑍋𑌗𑌿𑌜𑌨𑌾𑌵𑍃𑌤𑍇 ।
𑌶𑍁𑌕𑌸𑍍𑌯𑌾𑌗𑌮𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍇𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌕𑍇 ॥ 158

𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌥𑌾𑌸𑌂𑌗𑍍𑌰𑌹 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾𑌃.

𑌅𑌥𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌥𑌾𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃.

1 𑌤𑌤𑍍𑌰 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
𑌸𑍍𑌥𑌵𑌿𑌷𑍍𑌠𑍇 𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑍇 𑌮𑌨𑌸𑍋 𑌧𑌾𑌰𑌣𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 169

2 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌤𑍁 𑌤𑌤𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌯𑍋𑌜𑌿𑌤𑌂 𑌮𑌨𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍌 𑌧𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 ॥
[illegible] ।
[illegible] ॥ 182

3 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈𑌶𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌂 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌮𑍁𑌨𑍇𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌦𑍍𑌰𑍇𑌕𑍇𑌣 [illegible] ॥ 198

4 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿 𑌹𑌰𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑍁𑌕𑍇𑌨 [illegible] 𑌸𑌂𑌵𑌾𑌦𑍇𑌨𑌾𑌥 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 ॥ 206

5 𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 𑌨𑌾𑌰𑌦𑍇𑌨𑌾𑌥 𑌪𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿 𑌪𑌦𑍍𑌮𑌜𑌃 ।
𑌹𑌰𑍇𑌰𑍍𑌲𑍀𑌲𑌾 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 [illegible] 𑌶𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ॥ 214

द्वितीयस्कन्धाध्यायकथासंग्रहश्लोकास्समाप्ताः

अथ तृतीयस्कन्धाध्यायकथासंग्रहश्लोकाः.

𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌥𑌾𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾𑌃

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌥𑌾𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃.

3 த்ருதீயே து ஸதீ தாத யஜ்ஞாத் தேவஹிதேச்சயா ।
ஶஜிஷ்யந்தீ ஹரேர்மூர்த்தி வாஸிதா நீதிமேதுபி: ॥ 754

4 சதுர்த்யே து சதிம் ஹித்வா ஶதா விந்த்ராவரோபிதா ।
ராஷா நிரஸ்தஸ்ய தம் யஜ்ஞ ஜஹௌ தேஹரிதீயதே ॥ 763

5 பஞ்சமே து ஸதீதேஹத்யாகஶோகாத்ர ஶங்கர: ।
வீரபத்ர ரோஷேநாத்ய தேந தக்ஷஶிரச்சிநத் ॥ 776

6 ஷஷ்டே து தேவஸம்வேந ஸஹ ஶக்ராஹவம் விபி: ।
ஸாங்க்யயாமாஸ தக்ஷாதிஜீவிதாத்யர்த்தமாதராத் ॥ 784

7 ஸப்தமே விஷ்ணுராகத்ய தத: ஸ்துதோ தக்ஷவாதிபி: ।
யஜ்ஞம் ப்ரவர்த்தயாமாஸ தக்ஷேணேதி நிரூப்யதே ॥ 798

8 அஷ்டமே த்வாநயே ப்ராவ்ருத்தா தக்ஷயஜ்ஞகயோதிதா ।
அஷ்டமே த்வாநயே ப்ராவ்ருத்தா த்ருவசரித்ர வர்ணிதம் ॥
க்ஷேத்ரே ஶாஸ்த்ராரோஷிதோராஷஸ்ஸுத: வநாங்க ।
நிஶம்ய தேந த்ருவேணாஹ தபஸா தோஷணம் ஹரே: ॥ 819

9 நவமே து ஹரிம் த்ருஷ்ட்வா லப்த்வா தஸ்மாத்வராந் த்ருவ: ।
ப்ரத்யாகத்யாகரோத்ராஜ்யம் வித்ராம்தத்வதீயதே ॥ 839

10 தஶமே ஹரந்த்ருஹந்தூணாம் யக்ஷாணாமகரோத்வதம் ।
ஸக்ஸ்வமாலகாம் ஶக்தேத்யஸ்ய விக்ரமம் ரூபம் யதே ॥ 857

11 ஏகாதஶே து யக்ஷாணாம் தக்ஷம் த்ருஷ்ட்வா அநுஸ்வயம் ।
க்ருஶத்ய வாரயாமாஸ ப்ரவஹுதேக்ஷுவலிபேஶத: ॥ 863

12 த்வாதஶே யதேநாஹிநித்த: வநாஸ்மாகத: ।
யஜ்ஞரிஷ்டா ஹரேஸ்ஸ்தாநமாரோஹதி கீர்த்யதே ॥ 872

13 ஸர்வம் வர்ணிதவ்யாபியே: ப்ரவ்யயமாநவர்ணிதா ।
க்ஷேயெகாதஶஸஹிஸ்த்திரம் ஷத்யமாஸித்ருதாய்யதே ॥
தத்ர த்ரயோதஶே வக்த்ரம் வஜ்யோஜகந ப்ரமாநயே ।
அங்கோ வேநவிதா மாத்ரக்ஷயமாஹத உதீயதே ॥ 884

14 சதுர்தஶே து தூஷ்டாக்ருத்யமாஹம்ஶே ஶசித ஜிரேஜை: ।
அஜிஷீக்தஸ்ய வேநஸ்ய ரோஷாமித்தேவயுய உச்யதே ॥ 895

15 தத: பஞ்சதஶே விப்ரை அர்ய நாத்வேந பாஹாத: ।
ஜாதஸ்ய து வ்ருயோர்சாஷிஷேகாஹரணாதிகம் ॥ 905

16 ஷோடஶே ஸமயெகேஸேஸ்ஸ்துதம் ஸாயமாயாதம் ।
அமிவ்யாக்தாஸ்ஸ்தாத்யா ஸ்வகீலஷதி வணர்யதே ॥ 911

17 ததஸ்ஸப்ததஶே யோகே க்ஷமாய: ப்ரஶமஸ்து ப்ரயமா:।
ப்ரஸ்தபீஜம் ச ஹ்ரீம் ஹம்ஸம் யந்த்ரோஹீத்யாதயாஸ்ம்ருத: ॥ 918

18 ஶ்ரோத்ரபீடஸ்ய நாஸிகாயாஸ்து விநதாஸனம் ததா ।
ஜ்யோதிரிந்த்ரவரஸ்யாச ஶாவிரஸ்தேஶாப்ர க்ருத: ॥
சதுஷ்டயே ச ஹீவாக்யோக்தவாக்ப்ராதி ஹேது: ।
ப்ரத்யாதிபிஸ்தக்ஷஸ்ஸ ஹ்ருத்யேதி நிரூப்யதே ॥ 927

19 ஊநவிம்ஶே ஸ்வப்நயோர்கஹ்வாவஹரணாத்ப்ரயோ: ।
இந்த்ரஹம்ஸம் ப்ரவ்ரதஸ்ய யாத்ரா வாரணாப்யதே ॥ 934

20 விம்ஶே து விஷ்ணுநா ஸாக்ஷாத்ப்ரயோஜ்யோ ஜ்ஞாநஶாஸநம் ।
வாதாநப்ர ஸம்ஶ்ருந ஶ்ரீதிஶ்வாந்யாந்யீயதே ॥ 943

21 ஏகவிம்ஶே து ப்ரயதநா ப்ரஜாநா ஶநஶாஸநம் ।
ஶ்ராஸதே ஸர்வாதீநாம் ஶ்ராஸதவி வண்யதே ॥ 955

22 த்வாவிம்ஶே து வரம் ஜ்ஞாநம் ப்ரயவே ஹவிஶாஸநாக ।
ஸநக்தாஶாரோ ஸமவாநாவாதிஶதிதீயதே ॥ .969

23 த்ரயோவிம்ஶே ஸஹாந்யஸ்ய வநே நித்யஸாயித: ।
விஶாநயிராஹ்யாய வேகம்மதிர்பதே ॥ 986

24 ஏகாதஶஹிரண்யாயை: ப்ரயோஶ்ஶிதஶீஸிதம் ।
ப்ரவேதஸாஸ்யாஷாதிஸ்தந்யே வணுஹி: விதம: ॥
வதவிம்ஶே ப்ரவதத்ராதம் ப்ரயோ: ப்ராவீநபஹிஷ: ।
ப்ரவேதஸாம் ஜநிஷ்யேஹ்யா ராஜ்ரூதணு வண்யதே ॥ 996

25 ப்ரவேதஸ்ஸு தவஸ்யஸ்து தத்வேத்ரு நாரதோபரணீ ।
ப்ராவீநபஹிஷேஷ்யாத்ம் வரோகேஷணாஹ வணுஹி: ॥
மாரஞ்ஜநக யாவ்யாஜாத்ஸ்ஷ்விம்ஶே து நாரத: ।
ஶ்ருத்வநோ பஞ்சிஸம்ஶ்ருந விவிதாஶாஹ ஸம்ஸ்ரதிம் ॥
ப்ரவேதஸ்ஸு தவஷ்வீப்ரஞ்சவ்யோநேஷு நாரத: ।
மாரஞ்ஜநகயாகஞ்ச ப்ராஹ ப்ராவீநபஹிஷே ॥ 1016

26 ஷட்விம்ஶே ஜநயா வ்யாஜாத்ஸ்வஜாமரணோக்திபி: ।
ஸப்ஷாதித்யாமயோகாஹ்யாம் ஸம்ஸ்ரதிஸ்ஸா ப்ரவண்யதே ॥ 1032

27 ஸப்தவிம்ஶே ஷியாவாஸ்தோத்ராஸக்த்யா விஸ்ரதாத்மந: ।
காலகந்யாத்யாவாஹ்யாநேஜராநோகாத்யாதீயதே ॥ 1400

28 அஷ்டாவிம்ஶே து வைதர்ப்யாவ்யாநேந ஸ்த்ரீவிஜயா ।
ஸ்த்ரீத்வம் ப்ராப்தஸ்ய தைவேந கதாவிந்த்ரஜித்யதே ॥ 1048

29 ஊநத்ரிம்ஶே பரோக்ஷாய ப்ரத்யாக்யாநேநோபஸம்ஹ்ருத்ய
ஸ்தீஸம்ப்ரதாயஸ்வீயஸம்ப்ரதாயாநுக்ரமோऽபிதீயதே ॥ 1063

30 ஶ்ரஸம்பத்துணஹி: ஶ்ரோத்ரம் ஶ்ருத்தம் ஶ்ராத்தநபஹிஷ: ।
பண்யதே ச பாந அபராஹ்யாம் ஶ்ருஸ்தாணு ஶ்ருபேதவாக் ॥
தத்ர த்ரிம்ஶே தபஸ்தாஷா தேவாஶ்ரய்யபராஸ்த: ।
க்ஷமத்ய பாக்ஷீப்ரஷ்டாஹ்யராஜ்யஞ்ச க்ஷாஸிதீயதே ॥ 1086

31 ஏகத்ரிம்ஶே ஸாதே ஶகேஷ யாரம் ந்யஸ்ய ஶ்ருபேதஸ: ।
நாரஷொக்தோந ஆஶேஷண ஶதா ஆக்தி ஜிதீயதே ॥ 1099

இத்யத்யாயஸ்க்ஷாஸ்ஸ்யாயக்ரமஸம்க்ரஹஶ்லோகாஸ்ஸமாப்தா:.



ஸ்ரீ ஈஸ॒

ஹரிஃ ஓம்

ஹத்ராதிரஜஜந ஸ்ரீ க்ருஷ்ணவரவநஹரணெநமஃ.

ஸ்ரீ மஹாபாகவதவாராணஸநாதநபரகதாநக்ரமஸூசிகா

ப்ரதமஸ்கந்தகதாநக்ரமஸூசிகா.

விஷயஸங்க்யா. வாடஸங்க்யா.

த்விதீயஸ்கந்தகதாநுக்ரமஸூசிகா.

𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌸𑍍𑌥𑌕𑌥𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌣𑌿𑌕𑌾.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌸𑍍𑌥𑌕𑌥𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌣𑌿𑌕𑌾.


ஸ்ரீ பாகவதம் முதல் ஸ்கந்தத்தின்

அட்டவணை

இரண்டாவது ஸ்கந்தம்.

மூன்றாவது ஸ்கந்தம்.

நான்காவது ஸ்கந்தம்.



ஸ்ரீ பாகவதம் முதல் ஸ்கந்தத்தின்

அட்டவணை

இரண்டாவது ஸ்கந்தம்.

மூன்ருவது ஸ்கந்தம்.

நான்காவது ஸ்கந்தம்.

ஸ்ரீமத்பாகவதம்

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑍀𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀𑌸𑌤𑍍𑌯𑌭𑌾𑌮𑌾𑌸𑌮𑍇𑌤 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇, 𑌸𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍇, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌶𑌶𑌿𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 ॥
[illegible] ।
[illegible] ॥

𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌯𑌤𑍋𑌽𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑌿𑌤𑌰𑌤𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌜𑍍𑌞𑌃𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍𑌤𑍇𑌨𑍇
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑍃𑌦𑌾 𑌯 𑌆𑌦𑌿𑌕𑌵𑌯𑍇 𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑌤𑍍𑌸𑍂𑌰𑌯𑌃 ।
𑌤𑍇𑌜𑍋𑌵𑌾𑌰𑌿𑌮𑍃𑌦𑌾𑌂𑌯𑌥𑌾 𑌵𑌿𑌨𑌿𑌮𑌯𑍋 𑌯𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌿𑌸𑌰𑍍𑌗𑍋𑌽𑌮𑍃𑌷𑌾
𑌧𑌾𑌮𑍍𑌨𑌾𑌸𑍍𑌵𑍇𑌨𑌸𑌦𑌾𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌕𑍁𑌹𑌕𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂𑌪𑌰𑌂𑌧𑍀𑌮𑌹𑌿 ॥ 1

முதல் ஸ்கந்தம்.

1-வது அத்தியாயம்.

உலகத்திற்கு எந்தப் பிரஹ்மத்தினிடம் † அந்வயத்தாலும் ‡ வியதிரேகத்தாலும் பிறத்தல், இருத்தல், மரித்தல் என்பன உண்டாகின்றனவோ, எது

வேதவியாசர் என்பவர் அநேக புராணங்களை யியற்றியுள்ளாராயினும் இவருக்கு மனவமைதியுண்டாகவில்லை. ஆதலால் அவர் நாரத மகாமுனிவரிடம் உபதேசம் பெற்று முக்கியமாக பகவானுடைய திவ்ய குணங்களைப் பற்றியே பேசுவதாகிய இந்தப் பாகவதம் என்னும் சத்கிரந்தத்தை இயற்றத் தொடங்கினர். அவர் தாம் தொடங்கிய நூல் இடையூறின்றி முடிதற் பொருட்டு காப்பமைத்துள்ளார் முதல் சுலோகத்தில்.

† அந்வயம்= ஈசுவரன் காரணமாயிருப்பதால், காரியமாகிய பிரபஞ்ச மேற்படுமென்பது.

‡ வியதிரேகம்=ஈசுவரன் காரணமாக இல்லாவிட்டால் காரியமான பிரபஞ்சமில்லை யென்பது.

𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌕𑍈𑌤𑌵𑍋𑌽𑌤𑍍𑌰 𑌪𑌰𑌮𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂
𑌸𑌤𑌾𑌂 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑌵𑌮𑌤𑍍𑌰 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌦𑌂 𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌨𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌕𑍃𑌤𑍇 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌪𑌰𑍈𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌸𑌦𑍍𑌯𑍋
𑌹𑍃𑌦𑍍𑌯𑌵𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇𑌽𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌿𑌭𑌿𑌶𑍍𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌭𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 ॥ 2

𑌨𑌿𑌗𑌮𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍋𑌰𑍍𑌗𑌲𑌿𑌤𑌂 𑌫𑌲𑌂 𑌶𑍁𑌕𑌮𑍁𑌖𑌾 * 𑌦𑌮𑍃𑌤𑌦𑍍𑌰𑌵𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌪𑌿𑌬𑌤 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌰𑌸𑌮𑌾𑌲𑌯𑌂 𑌮𑍁𑌹𑍁𑌰𑌹𑍋 𑌰𑌸𑌿𑌕𑌾 𑌭𑍁𑌵𑌿 𑌭𑌾𑌵𑍁
[𑌕𑌾𑌃 ॥ 3

பொருள்களெல்லாவற்றையும் பார்க்கிறதோ, எது சுவயம் பிரகாசமாக விளங்கு கிறதோ, (வேதத்தின் பொருளை யறிந்துகொள்ளக் குறைவில்லாத ஞான முடைய) பெரியோர்களுக்கும் மயக்கத்தை யுண்டாக்கும் வேதத்தை எது அன்போடு ஆதிகவியாகிய பிரமனுக்கு உபதேசம் செய்ததோ, எந்தப்பிரஹ்மத் தினிடம் அதனுடைய மாயையின் குணங்களாகிய தாமஸம், இராஜஸம், சாத் துவிகம் என்பவைகளில் தமோகுண சிருஷ்டியாகிய பூதங்களும், இரஜோ குண சிருஷ்டியாகிய இந்திரியங்களும் சத்துவகுண சிருஷ்டியாகிய தேவர் களும், பிருதுவி, அப்பு, தேயு இவைகளில் ஒன்றைப் பார்த்து மற்றொன்றாக நினைத்து மயங்குகிறார்களோ, எது தன்னுடைய பிரகாசத்தால் குற்றங்களி னின்றும் விடுபட்டு விளங்குகிறதோ, எது உண்மை உருவமுடையதோ அந்தப் பரமாத்ம சொரூபத்தைத் தியானம் † செய்கிறோம். 1

முனிபுங்கவராகிய வியாசர் இயற்றிய ‡ இந்த ஸ்ரீமத்பாகவதத்தில் மாற் சரியத்தை விட்டொழித்த சாதுக்களுக்குக் கபடமில்லாத தருமம் பிரதிபாதிக் கப்படுகிறது. சுவபாவத்திலேயே சித்தியைத் தந்து மங்களத்தை யுண்டாக்கி ¶ மூன்று தாபங்களையு மொழிப்பதாகிய பரபிரஹ்ம சொரூபமே இதில் தெரிந்து கொள்ளக் கூடியது. மற்ற தருமங்களால் உள்ளபயன் யாது? (எனெ னில்) அநேக ஜன்மமெடுத்துப் புண்ணியம் புரிந்தவர்கள், இந்த பாகவத கிர ந்தத்தை சிரவணம் செய்ய விரும்பிய மாத்திரத்தில், அவர்களுடைய மனதில் சலனமற்று வசித்து வருகிறார் ஈசன். (2)

சாமர்த்திய சாலிகளே! (மங்களங்களைப் பெறுவதற்கு யோக்கியமான) இந்தப் புவியில் (புண்ணிய பலனால் ஜனனமடைந்த) இரஸிகர்களே! சுகபிரஹ்ம

† செய்கிறோம்—இங்ஙனம் பன்மையாகக் கூறியது தமது மாணாக்கர்கள் உள் படவென்பதை விளக்க வெழுந்ததாம்.

‡ வியாசர் கிரந்தத்தை இயற்றுபவராயினும் இது அவரது அறிவில் செவ்வனே காணப்பட்டமையால் இந்த எனச் சுட்டிக் காட்டினர்.

¶ ஆத்தியாத்மிகம், ஆதி தைவிகம், ஆதி பௌதிகம் என்று தாபங்கள் மூவகைப் படும்.

* 𑌆𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍍.—𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

नैमिषेऽनिमिषक्षेत्रे ऋषयः शौनकादयः ।
सत्रं स्वर्गाय लोकाय सहस्रसममासत ॥ 4

त एकदा तु मुनयः प्रातर्हुतहुताग्नयः ।
सत्कृतं सूतमासीनं पप्रच्छुरिदमादरात् ॥ 5

॥ ऋषयः ॥

त्वया खलु पुराणानि सेतिहासानि चानघ ।
आख्यातान्यप्यधीतानि धर्मशास्त्राणि यान्युत ॥

ரிஷியின் முகத்தினின்று நழுவிய வேதமாகிய கற்பகத் தருவின் தீங்கனியை யொத்த இந்த பாகவதம் என்னும் புராணத்தைப் பானம் செய்யுங்கள். இது அமுதத்திரவம் போன்ற சுவையுள்ளது. இந்த இரசத்தைச் சரீரம் நாசமடையும் வரையில் அடிக்கடி பானம் செய்யுங்கள். 3

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் க்ஷேத்திரமாகிய † நைமிசாரண்ணியத்தில் சௌனகர் முதலிய முனிபுங்கவர்கள் மேலான பதவியை அடையும் பொருட்டு ஆயிர வருடகாலம் அனுஷ்டிக்கத்தக்க ‡ ஸத்ரம் என்னும் ஒரு யாகத்தைச் செய்தார்கள். 4

ஒருசமயம் அந்த சௌனகர் முதலிய முனிவர்கள் காலையில் ஹோமஞ் செய்தற் கேற்ற நெய் முதலிய திரவியங்களைக் கொண்டு அக்கினியில் ஹோமம் செய்து, (தங்களுடைய) உபசாரணையைப் பெற்றிருக்கும் சூதபுராணிகரைப் பார்த்து வினயத்துடன் வினவுகிறார்கள். 5

முனிவர்கள் கேட்கிறார்கள்.

பிரஸன்னராகிய சூதபுராணிகரே! வித்துவான்களுக்குள் சிறந்தவரும் மகாமகிமையுள்ளவருமாகிய வாதராயணர், வியாசர், சகுண, நிர்க்குணப் பிரம சொரூப மறிந்த மற்ற முனிவர்கள் இவர்கள் உணர்ந்துள்ள விஷயங்கள் யாவற்

கற்பகத்தரு வேண்டியதை யளிப்பது போல் வேதமும் அபேட்சித்ததை யளிக்கும். சுகர் - ரிஷி- அல்லது கிளி. கிளி கோதிய கனி மிகவும் சுவையுள்ளதாகும். நழுவியது என்றதால், மிகுந்த சுவையுள்ள தென்பதாம். அமுதத்திரவத்திற்குச் சமமான தென்றால் மோக்ஷத்திற்குச் சாதனமாகிய பக்திரஸத்துடன் கூடியதாம். இரஸத்தைப் பானஞ் செய்யுங்களென்றதனால், வேதத்தின் ஞானகாண்டத்தைக் காட்டிலும் இந்த பாகவதம் மேலானதாகிற தென்பது பெறப் படுகிறது.

† நைமிசம்—முன்னொரு சமயம் அந்தணர்கள் பிரமதேவனிடம் சென்று தாங்கள் தவஞ்செய்வதற் குரிய புண்ணிய ஸ்தலம் எது வென்று கேட்க, பிதாமகர் தமது மனதால் ஒரு சக்ரத்தை யுண்டு பண்ணி, இது எங்கு சிதருகிறதோ அதுவே, தவத்திற்குரிய ஸ்தானமெனச் சொல்லிச் சக்ரத்தை யுருட்டி விட்டார். அது சிதரின பிரதேசமே நைமிசமாயிற்று.

‡ ஸத்ரம்—இந்த யாகத்தில் எல்லாருக்கும் யஜமானத்துவமுண்டு, எல்லாருமே ருத்விக்குகள்.

𑌯𑌾𑌨𑌿𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌾𑌂𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍇𑌚𑌮𑍁𑌨𑌯𑌃𑌸𑍂𑌤𑌪𑌰𑌾𑌵𑌰𑌵𑌿𑌦𑍋𑌵𑌿𑌦𑍁𑌃 ॥
𑌵𑍇𑌤𑍍𑌥𑌤𑍍𑌵𑌂𑌸𑍌𑌮𑍍𑌯𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ।
𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌸𑍍𑌯𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌗𑍁𑌰𑌵𑍋𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌪𑍍𑌯𑍁𑌤 ॥ 6-8

𑌤𑌤𑍍𑌰𑌤𑌤𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌸𑌾𑌯𑍁𑌷𑍍𑌮𑌨𑍍 𑌭𑌵𑌤𑌾𑌯𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍁𑌂𑌸𑌾𑌮𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌤𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌃𑌶𑌂𑌸𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ 9

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣𑌾𑌲𑍍𑌪𑌾𑌯𑍁𑌷𑌃𑌸𑌭𑍍𑌯 𑌕𑌲𑌾𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌯𑍁𑌗𑍇 𑌜𑌨𑌾𑌃 ।
𑌮𑌨𑍍𑌦𑌾𑌃𑌸𑍁𑌮𑌨𑍍𑌦𑌮𑌤𑌯𑍋 𑌮𑌨𑍍𑌦𑌭𑌾𑌗𑍍𑌯𑌾𑌹𑍍𑌯𑍁𑌪𑌦𑍍𑌰𑍁𑌤𑌾𑌃 ॥ 10

𑌭𑍂𑌰𑍀𑌣𑌿𑌭𑍂𑌰𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌅𑌤𑌃𑌸𑌾𑌧𑍋𑌽𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌸𑌾𑌰𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯𑌮𑌨𑍀𑌷𑌯𑌾 ।
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿𑌭𑌦𑍍𑌰𑌾𑌯𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 ॥ $11\frac{1}{2}$

𑌸𑍂𑌤𑌜𑌾𑌨𑌾𑌸𑌿𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌾𑌂𑌪𑌤𑌿𑌃 ।
𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌜𑌾𑌤𑍋𑌯𑌸𑍍𑌯𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 ।
𑌤𑌨𑍍𑌨𑌃𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑍁𑌮𑍍 ॥ 13

றையும் தாங்கள் அவர்களுடைய அனுக்கிரகத்தால் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். புராணங்களையும் இதிகாசங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆசிரியர்கள் தங்களிடம் அன்புடையார்க்கு எந்த இரகசியங்களையும் கூறுவார்கள். 6 - 8

ஆயுஷ்மானே! சாஸ்திரங்களில் புருஷர்களுக்கு மகிமையை யுண்டுபண்ணத்தக்க விடயங்களைத் தாங்கள் உண்மையாக நிச்சயஞ் செய்தபடி எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். 9

ஓ சாதுவே! இந்தக் கலியுகத்தில் மானிடர்கள் அற்பமான ஆயுளுடையவர்கள். (அதிலும்) அற்பபுத்தியுடையவர்கள். (அதிலும்) அநேக இடையூறுடையவர்கள். (அதிலும்) பிணி முதலிய துன்பங்களை யுடையவர்கள். 10

சாதுவே! அனுஷ்டிக்கத்தக்க கருமங்களடங்கிய சாஸ்திரங்கள் அநேக பிரிவுகளாக விருக்கின்றன. ஆயினும் இவைகளில் சாரமானதைத் தங்களுடைய புத்திக்குக் கொணர்ந்து ஜனங்களின் நன்மையின் பொருட்டு மனம் நிர்மல மடையும்படி கூறவேண்டும். $11\frac{1}{2}$

சூதபுராணிகரே! தாங்கள் எல்லாந் தெரிந்து கொண்டவர். தங்களுக்கு மங்களமுண்டாக வேண்டும். தொண்டர்களை யாதரிக்கும் பகவான் வசுதேவருக்குத் தேவகியிடம் அவதாரம் செய்ததன் காரணம் என்ன? இது விஷயத்தை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். தாங்கள் வர்ணிக்க வேண்டும். 13

𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑍋𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯𑌚𑌭𑌵𑌾𑌯𑌚 ॥ 13½

𑌆𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌂 𑌘𑍋𑌰𑌾𑌂 𑌯𑌨𑍍𑌨𑌾𑌮𑌵𑌿𑌵𑌶𑍋𑌗𑍃𑌣𑌨𑍍 ।
𑌤𑌤𑌸𑍍𑌸𑌦𑍍𑌯𑍋𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌤 𑌯𑌦𑍍𑌬𑌿𑌭𑍇𑌤𑌿𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑌯𑌮𑍍 ॥ 14½

𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌸𑍂𑌤 𑌮𑍁𑌨𑌯𑌃𑌪𑍍𑌰𑌶𑌮𑌾𑌯𑌨𑌾𑌃 ।
𑌸𑌦𑍍𑌯𑌃𑌪𑍁𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌧𑍁𑌨𑍍𑌯𑌾𑌪𑍋𑌽𑌨𑍁𑌸𑍇𑌵𑌯𑌾 ॥ 15½

𑌕𑍋𑌵𑌾𑌭𑌗𑌵𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌡𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌾𑌮𑍋𑌨𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌦𑍍𑌯𑌶𑌃𑌕𑌲𑌿𑌮𑌲𑌾𑌪𑌹𑌮𑍍 ॥ 16½

𑌤𑌸𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑍁𑌦𑌾𑌰𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌗𑍀𑌤𑌾𑌨𑌿𑌸𑍂𑌰𑌿𑌭𑌿𑌃 ।
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿𑌨𑌶𑍍𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌲𑍀𑌲𑌯𑌾𑌦𑌧𑌤𑌃𑌕𑌲𑌾𑌃 ॥ 17½

𑌅𑌥𑌾𑌖𑍍𑌯𑌾𑌹𑌿𑌹𑌰𑍇𑌰𑍍𑌧𑍀𑌮𑌨𑍍𑌨𑌵𑌤𑌾𑌰𑌕𑌥𑌾𑌶𑍍𑌶𑍁𑌭𑌾𑌃 ।
𑌲𑍀𑌲𑌾𑌵𑌿𑌦𑌧𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑍈𑌰 𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥ 18½

அந்தப் பகவானுடைய அவதாரம் பிராணிகளைப் பரிபாலிப்பதற்கும் (அவைகளுடைய) குறைகளை நிவர்த்திப்பதற்கும் அல்லவா ஏற்பட்டது. 13½

பயங்கரமான சம்சாரத்தை யடைந்தவன் சுவாதீன மில்லாமலே அந்தப் பகவானுடைய நாம கீர்த்தனம் செய்யினும் உடனே சம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகிறான். பகவானுடைய திருநாமத்துக்குப் பயம் என்பது பயமடைகிறது. 14½

† நாராயணனுடைய பாதங்களிலிருந் துண்டானது கங்காநதி. அதில் நீராடல் முதலியவைகளைச் செய்து அதை அடிக்கடி சேவித்தால் பரிசுத்த முண்டாகும். அந்த நாராயணனுடைய பாதகமலங்களை ஆசரித்தவர்களும் மன வமைதியைக் கொண்டவர்களுமாகிய முனிவர்கள் தங்களை யணுகிய மாத்திரத்தில் பரிசுத்தம் செய்கிறார்கள். 15½

புண்ணிய சுலோகர்களால் (பரிசுத்தமான மகிமை யுடையவர்களால்) தோத்திரஞ் செய்யத்தக்க செயலினைவகித்த அந்த முகுந்தனுடைய, சம்ஸார துக்கத்தைப் போக்கும் மகிமையை, தான் பரிசுத்தனாக வேண்டுமென்றெண்ணுகிற எந்த பாகவதன் தான் சிரவணம் செய்யமாட்டான். 16½

(பிரமன் உருத்திரன் முதலிய) மூர்த்திகளை லீலாமாத்திரம் வகித்தருளிய அந்தப் பகவானுடைய உதாரமானவைகளும் (நாரதர் முதலிய) யோகிகளால் புகழப்படுவனவாயுமிருக்கிற (உலக சிருஷ்டி முதலிய) காரியங்களைக் கேட்க விருப்பமுடைய எங்களுக்குக் கூறவேண்டும். 17½

முத்திஞான முடைய சூதமுனிவரே! தன் இச்சைப்படி லீலைகளைச் செய்யும் ஈசன் தன் மாயையால் செய்த சுபமான அவதாரவரலாற்றையும் தெரிவிக்க வேண்டும். 18½

---

† இந்த சுலோகத்தால், கங்காஜலத்தைக் காட்டிலும் சாதுக்களுக்கு மகிமை கூறப்பட்டது.

वयं तु न वितृप्याम उत्तमश्लोकविक्रमे ।
यच्छृण्वतां रसज्ञानां स्वादु स्वादु पदे पदे ॥ 19½

कृतवान् किल वीर्याणि सह रामेण केशवः ।
अतिमर्त्यानि भगवान् गूढः कपटमानुषः ॥ 20½

कलिमागतमाज्ञाय क्षेत्रेऽस्मिन् वैष्णवे वयम् ।
आसीना दीर्घसत्रेण कथायां सक्षणा हरेः ॥ 21½

त्वं नः सन्दर्शितो धात्रा दुस्तरं निस्तितीर्षताम् ।
कलिं सत्त्वहरं पुंसां कर्णधार इवार्णवम् ॥ 22½

ब्रूहि योगेश्वरे कृष्णे ब्रह्मण्ये धर्मवर्मणि ।
स्वां काष्ठामधुनोपेते धर्मः कं शरणं गतः ॥ 23½

நாங்கள் உத்தம சுலோகனுடைய அரிய குணங்களைக் கேட்பதில் இன்னும் திருப்தியடையவில்லை. ஏனெனில், அந்தக் குணங்களைச் சிரவணம் செய்வதில் அன்புடையார்க்கு ஒவ்வொரு பதத்திலு மல்லவா இனிமை யேற்படுகிறது. 19½

† கபடமானிடனாகிய கேசவன், (தன் சொரூபத்தை மறைத்துக்கொண்டு) பலராமருடன் மானிடர்களால் இயலாத (கோவர்த்தனந் தாங்கியது முதலிய) பராக்ரமமான செய்கைகளைச் செய்தனனல்லவா ? 20½

கலி புருஷனுடைய அவதாரத்தை யறிந்த நாங்கள் ஹரிகதா சிரவணம் செய்யச் சமயத்தை யெதிர் பார்த்துக் கொண்டு தீர்க்க சத்ரம் என்னும் உபாயத்தால் இந்த விஷ்ணு க்ஷேத்திரத்தில் வாசம் செய்கின்றோம். 21½

சத்துவ குணத்தை யழிப்பதும் எவராலும் அதிக்கிரமிக்கக் கூடாததுமான கலியைக் கடக்கவேண்டு மென்கிற விருப்பமுள்ளவர்களாகிய எங்களுக்கு, கடத்தற்கரிய கடலைக் கடக்க விருப்பங் கொண்டவர்களுக்குக் கப்பலோட்டும் மாலுமி யேற்படுவது போல், பகவான் தங்களைக் காட்டியிருக்கிறார். 22½

யோகிகளுக்கு ஈசனும் பிராமணர்களுக் கிதனும் தருமத்தைக் கவசம் போல் காப்பவனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணன் சொருபமடைந்த பிறகு தருமம் யாரைச் சரணமாக அடைந்த தென்பதைத் தெரிவிக்க வேண்டும். 23½

முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

† கிருஷ்ணனுடைய சரித்திரத்தையும் தெரிவிக்க வேண்டு மென்பது கருத்து.

ஊதிஸ்ரீ உஹாமவதெ உஹாவுராணெ
அஷாஉமஸஹஸிரகாயாம் ஸஂஹிதாயாம் வாரமஹஂஸ்யாம்
ஸ்ரீவெயாஸிகூாம் ஸ்ரீ ஹயகீவவஹவிஷ்யாயாம்
வுமஉஸ்க்ஷ்ஙெ வுயமொzஷ்யாயஃ.

ஊதிஸஂவுஸூஸஞுஷெ விவாணாஂமஉஹஷுணிஃ |
வுதிவஉஜூவவஷெஷாம் வுவகூஉவவகூஜெ ‖ 1

‖ ஸூதஃ ‖

யஂவுவுஜஞஉநவெதஉவெதகூதூம்
வெவாயநொ விரஹகாதர ஆஜுஹாவ |
வுதெதிதநயதயா தரவொzஸிநெஉஸ்ஷூம்
ஸவுஹஉதஹூஉயம் உநிஊநதொzஸி ‖ 2

யஸ்ஸாநஹாவஉவிஞுரு திஸாரஜெக
உயூதஉவஉதிதிமீரஷதாஞஜொzநடி |
ஸஂஸாரிணாம் கருணயாஹவுராணமஹூஞம்
வுாஸஸூநஉவயாமி மரம் உநீநாடி ‖ 3

2-வது அத்தியாயம்.

இங்ஙனம் அந்தணர்கள் கேட்டதற்கு மிகுதியும் மகிழ்வுற்ற ரோமஹர்ஷணருடைய புத்திரரான ஸூத புராணிகர் அவர்கள் வார்த்தையை (கேள்வியை)ப் புகழ்ந்து பதிற்கூறுகிறார். 1

ஸூதபுராணிகர் கூறுகிறார்.

ஒருவரோடும் சேராதவனும் கருமங்களை யொழித்தவனுமாகிய சுகர் சகல பற்றையுந் துறந்து செல்லும் போது அவருடைய பிரிவாற்றாமைக் கஞ்சிய வியாசர், "புத்திரா!" எனவழைத்தார். அப்போது எங்கும் சுகமயமாகவே ஆய்விட்டது. அதனால் நான்கு பக்கங்களிலும் † மரங்கள் சத்தம் செய்தன. பூதங்களொவ்வொன்றின் இருதயத்திலும் பிரவேசித்த மகா மகிமையுள்ள அந்த சுகமுனிவரை நான் வணங்குகிறேன். 2

சம்ஸாரமென்னும் பேரிருளைக் கடக்கவேண்டு மென்று கருதுகிற சம்ஸார பந்தமுடையவர்களிடம் கொண்ட கருணையால், அசாதாரணமான மகிமையுள்ளதும் வேதங்களின் ஸாரமானதும் நிகரற்றதும் ஆத்மதத்துவத்தைப் பிரகாசப் படுத்துவது மாகிய புராணங்களில் இரகசியமானவைகளை எடுத்தோதியவரும் வியாச புத்திரரும் முனிவர்களுக்குக் குருவுமாகிய சுகரை நான் நமஸ்கரிக்கின்றேன். 3

† சுகப் பிரஹ்மரிஷி விருக்ஷ ரூபமாயிருந்து பதிலளித்தார் என்பது. ஏனெனில் தமது தந்தைக்குத் தம்மிடம் சினேக பந்தம் நீங்குவதற்கேயாம்.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑌤𑍋 𑌜𑌯𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ 4

𑌮𑍁𑌨𑌯𑌸𑍍𑌸𑌾𑌧𑍁 𑌪𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌹𑌂 𑌭𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ।
𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑌂𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋 𑌯𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 ॥ 5

𑌸𑌵𑍈 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌪𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌤𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑍇 ।
𑌅𑌹𑍈𑌤𑍁𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾 𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 ॥ 6

𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌿𑌤𑌃 ।
𑌜𑌨𑌯𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌯𑌦𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 ॥ 7

𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌕𑌥𑌾𑌸𑍁 𑌯𑌃 ।
𑌨𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌰𑌤𑌿𑌂 𑌶𑍍𑌰𑌮 𑌏𑌵 𑌹𑌿 𑌕𑍇𑌵𑌲𑌮𑍍 ॥ 8

𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑌪𑍍𑌯𑌲𑍍𑌪𑌨𑌿𑌷𑍇𑌵𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌹𑌰𑌿𑌕𑌥𑌾𑌮𑍃𑌤𑌾𑌸𑌵𑌮𑍍 ।
𑌯𑌨𑍍𑌨𑌃 𑌸𑌞𑍍𑌜𑌿𑌹𑍍𑌰𑌵𑌤𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑌾𑌶𑍍𑌰𑍁𑌪𑍁𑌲𑌕𑍋𑌦𑍍𑌗𑌮𑌾𑌃 ॥ 9

𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌹𑍍𑌯𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌰𑍍𑌥𑌾𑌯𑍋𑌪𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ।
𑌨𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑍋 𑌲𑌾𑌭𑌾𑌯 𑌹𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

நாராயணன் நரோத்தமனுகிய நரன், தேவியாகிய சரஸ்வதி, வியாசர், இவர்களை வணங்கிய பின் (ஸம்ஸாரபந்தத்தைஒழிக்கும்) கிரந்தத்தைக் கூறுகிறேன். 4

முனிவர்களே! மனதில் மிகவும் ஆநந்த முண்டாகத் தக்க ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விஷயமாய் நீங்கள் கேட்டதால், அது லோக மங்களமானதாகும். (கேட்டது) உசிதந்தான். 5

பலாபேக்ஷை யில்லாததும் இடையூறினல் தடைபடாததுமான பக்தி அதோக்ஷஜரிடம் எந்த † தருமத்தினுலேனும் ஏற்பட்டுப் பரிசுத்த மடையுமாயின் அந்தத் தருமந்தான் மேலானது. 6

மகிமைபொருந்திய வாசுதேவனிடம் ஏற்படும்பக்தியோகம் வைராக்கியத்தையும் (உபனிஷத்தின் சம்பந்தமான) ஞானத்தையும் விரைவாகவுண்டாக்குகிறது. 7

மானிடர்கள் அனுஷ்டித்து வரும் தருமம் பகவானுடைய சரித்திரங்களில் அன்பைத்தரக்கூடியதா யில்லையாயின் அவை வீணுகமுடியும். 8

ஹரிகதாமிருதத்தைப் பானம் செய்த மானிடனுக்கு ஊக்கம், ஆனந்த பாஷ்பம், மயிர்க்குச் செறிதல் இவைகளுண்டாக வில்லையாயின் அவனுக்கு ஆத்மதத்துவம் விளங்காது. 9

அர்த்தம் (பொருள் முதலியவை) மோக்ஷதரும பலனுக்கு யோக்கியமாகாது. தருமத்தை முக்கியமாகவுடைய அர்த்தத்திற்குக் காமம் (அன்னம்

---

† தருமம் பிரவிர்த்தி, நிவிர்த்தி என இருவகைப்படும். சுவர்க்கம் முதலிய சுகத்தை யபேக்ஷித்துச் செய்வது பிரவிர்த்தி தருமம். பலத்தை யபேக்ஷியாமல் பக்திசெய்வது நிவிருத்தி தருமம். இந்த நிவிர்த்திதருமமே சிறந்ததாகும்.

காமஸ்ய நேந்த்ரியப்ரீதிர்லாபோ ஜீவேத யாவதா ।
ஜீவஸ்ய தத்த்வஜிஜ்ஞாஸா நார்தோ யஶ்சேஹ கர்மபி: ॥ 10-11

வதந்தி தத்தத்த்வவிதஸ்தத்த்வம் யஜ்ஜ்ஞானமத்வயம் ।
ப்ரஹ்மேதி பரமாத்மேதி பகவானிதி ஶப்த்யதே ॥ 12

தச்ச்ரத்ததானா முனயோ ஜ்ஞானவைராக்யயுக்தயா ।
பஶ்யந்த்யாத்மனி சாத்மானம் பக்த்யா ஶ்ருதக்ருஹீதயா ॥ 13

அத: பும்பிர்த்விஜஶ்ரேஷ்டா வர்ணாஶ்ரமவிபாகஶ: ।
ஸ்வனுஷ்டிதஸ்ய தர்மஸ்ய ஸம்ஸித்திர்ஹரிதோஷணம் ॥ 14

தஸ்மாதேகேன மனஸா பகவான்ஸாத்வதாம்பதி: ।
ஶ்ரோதவ்ய: கீர்திதவ்யஶ்ச த்யேய: பூஜ்யஶ்ச நித்யதா ॥ 15

யதனுத்யாஸினா யுக்தா: கர்மக்ரந்திநிபந்தனம் ।
சிந்தந்தி கோவிதாஸ்தஸ்ய கோ ந குர்யாத்கதாரதிம் ॥ 16

பானம் முதலியவை) பலனாகாது. விஷய போகத்திற்கு இந்திரியப் பரீதிபல னுவதில்லை. (தான் ஜீவித்திருப்பதற்குரிய காமங்களை மட்டும் கொள்ள வேண்டும்) தத்துவத்தை யறிந்துகொள்ள வேண்டுமென்கிற ஜீவனுக்குக் கருமங்களால் பயனில்லை. 10 - 11

தத்துவமறிந்த பெரியோர்கள் இரண்டற்றதான ஞானத்தையே தத்துவ மென்று கூறுகிறார்கள். (உபனிஷத்தை யுணர்ந்தவர்கள்) பிரமனென்றும் (ஹிரண்யகர்ப்பரின் உபாஸகர்கள்) பரமாத்மா வென்றும் (பக்தர்கள்) பகவான் என்றும் கூறுகிறார்கள். 12

ஆகையால் சிரத்தையுள்ள முனிவர்கள் (பரோக்ஷ) ஞானத்துடனும் வைராக்கியத்துடனும் கூடியதும் (வேதாந்த முதலியவைகளை) சிரவணம் செய்வதா லுண்டாவதுமாகிய பரமாத்மாவை (க்ஷேத்திரஞ்ஞர்களிடம்) பார்க்கிறார்கள்.

ஆகையால், பிராமணோத்தமர்களே! மாந்தர்கள் தத்தம் வருணாச்சிரமத்திற்குரிய தருமங்களைச் சிறிதும் பிறழாதனுஷ்டித்துவரின், அதற்குப் பலன் பகவான் மகிழ்ச்சியடைவதேயாம். 14

ஆகையால் மனத்தைச் சலனமற்றிருக்கச் செய்து பக்தர்களுக்குப் பதியாகிய பகவானுடைய குணங்களைப் பாடி அவனுடைய சரிதைகளைக் கேட்டு அவனுக்குச் சதாகாலமும் பூசை செய்து தியானித்து வரவேண்டும். 15

பகவானைத் தியானஞ் செய்வதாகிய கத்தியால், அகங்காரத்திற்கு முடிச்சாகிய கருமத்தை அறிஞர்கள் சேதித்துவிடுகிறார்கள். அந்த முகுந்தனுடைய சரித்திரத்தைக்கேட்பதில் எவனுக்குத் தான் பிரியமுண்டாகாது? 16

தருமத்திற்கு அர்த்தமும், அர்த்தத்திற்குக் காமமும், காமத்திற்கு இந்திரியப் பரீதி (தேவப்பரீதி) பலன் என்றும் அதனால் மீண்டும் தருமம் முதலியவை உண்டாகின்றன என்றும் கூறுகின்றனர் சிலர். இதை 10, 11 சுலோகங்களிரண்டும் மறுத்து நிற்கின்றன.

𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍋𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌕𑌥𑌾𑌰𑍁𑌚𑌿𑌃 ।
𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌤𑍍𑌸𑍇𑌵𑌯𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍇𑌵𑌣𑌾𑌤𑍍 ॥ 17

𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌕𑌥𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑌣𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌃 ।
𑌹𑍃𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑍋 𑌹𑍍𑌯𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌧𑍁𑌨𑍋𑌤𑌿 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌸𑌤𑌾𑌮𑍍 ॥ 18

𑌨𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌷𑍍𑌵𑌭𑌦𑍍𑌰𑍇𑌷𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌸𑍇𑌵𑌯𑌾 ।
𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑍀 ॥ 19

𑌤𑌦𑌾 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌭𑌾𑌵𑌾𑌃 𑌕𑌾𑌮𑌲𑍋𑌭𑌾𑌦𑌯𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌚𑍇𑌤 𑌏𑌤𑍈𑌰𑌨𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 ॥ 20

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑌨𑌸𑍋 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌤𑌃 ।
𑌭𑌗𑌵𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ 21

𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟 𑌏𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍇 ॥ 22

அந்தணர்களே! முதலில் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்யின் பெரியோர்களுடைய தரிசனம் கிடைக்கும். பிறகு அறநெறி யொழுகச் சிரத்தை யுண்டாகும். பின்னர், சிரவணஞ் செய்வதில் இச்சையுண்டாம். அதன்பின் வாசுதேவகதையில் மிகுதியான அன்புண்டாகும். 17

புண்ணியத்தை யளிக்கும்சிரவணம் கீர்த்தனம் இவைகளையுடைய கிருஷ்ணன் தன் சரித்திரங்களைச் சிரவணம் செய்பவர்களாகிய சாதுக்களுடைய இருதயத்திலிருக்கும் காமம் முதலியவைகளை, அந்த சாதுக்கள் உய்வது கருதி அவர்களுடைய மனத்தில் வசித்திருந்து நாசஞ் செய்கிறார். 18

எப்போதும் † பாகவதர்களை வணங்குவதால் காமம் முதலியவைகள் அநேகமாய் ஒழிந்து, பின்னர் மகாமகிமை வாய்ந்த பகவானிடம் நிச்சலமான பக்தி யுண்டாகிறது. 19

அப்பொழுது ரஜோகுணம் தமோகுணம் இவைகளாலுண்டாகும் காமம் லோபம் முதலியவைகளால் மனம் கெடுதலுறாமல் சத்துவகுணத்திலிருந்து நிர்மலமாகும். 20

இங்ஙனம் பகவானிடம் செய்யும் பக்தி யோகத்தால் மனத்தெளிவடைந்து விஷய ஆசையை யொழித்தவனுக்கு அந்த பகவானுடைய சாக்ஷாத்கார முண்டாகும். 21

ஆத்ம சொரூபனைத் தரிசித்தவுடன் அகங்காரம் ஒழியும். பின்னர் சந்தேகங்கள் சிதறிப்போம். கர்மங்களும் நாசமடையும். 22

---

† பாகவதர்கள் - பகவானிடம் பக்தியுடையார். அல்லது பாகவத சாஸ்திரம். (மற்றொருபாடம்) சாதுக்களாகிய பாகவதர்கள்.

𑌅𑌤𑍋 𑌵𑍈 𑌕𑌵𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌪𑌰𑌮𑌯𑌾 𑌮𑍁𑌦𑌾 ।
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑍀𑌮𑍍 ॥ 23

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑍀 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑍈-
𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌕 𑌇𑌹𑌾𑌸𑍍𑌯 𑌧𑌤𑍍𑌤𑍇 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑍇 𑌹𑌰𑌿𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌹𑌰𑍇𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌃
𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌖𑌲𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌨𑍋𑌰𑍍𑌨𑍃𑌣𑌾𑌂 𑌸𑍍𑌯𑍁𑌃 ॥ 24

𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌦𑍍𑌦𑌾𑌰𑍁𑌣𑍋 𑌧𑍂𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑌃 ।
𑌤𑌮𑌸𑌸𑍍𑌤𑍁 𑌰𑌜𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ 25

𑌭𑍇𑌜𑌿𑌰𑍇 𑌮𑍁𑌨𑌯𑍋𑌽𑌥𑌾𑌗𑍍𑌰𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌮𑍍 ।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇𑌽𑌨𑍁 𑌤𑌾𑌨𑌿𑌹 ॥ 26

𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑌵𑍋 𑌘𑍋𑌰𑌰𑍂𑌪𑌾𑌨𑍍 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌪𑌤𑍀𑌨𑌥 ।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌕𑌲𑌾𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑌿 𑌹𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑌃 ॥ 27

ஆதலால் பெரியோர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் பகவானாகிய வாசுதேவனிடம் மனத்தை நிர்மலமாக்கும் பக்தி செலுத்துகிறார்கள். 23

* ஸத்வம் இராஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களும் மாயையைச் சார்ந்தவைகள். இந்த மூன்று குணங்களுடைய பரமபுருஷன் ஒருவனே சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்காகப் பிரமன், விஷ்ணு, சிவன் என்ற பெயரையடைகிறார். அந்த மூவருள், சத்வமூர்த்தியாகிய வாசுதேவரிடமே மானிடர்களுக்கு நன்மை யுண்டாகிறது. 24

பூமியின் விகாரமான அரணிக்கட்டையைவிட, வேதங் கூறும் கருமங்களைச் செய்ய அறிகுறியாக விருக்கும் புகைமேலானது. அதைவிட வேதமயமான அக்கினி சிறந்தது. இது போல், தமோகுணத்தை விட இரஜோகுணமும் இரஜோ குணத்தைவிட பிரஹ்ம சொருபத்தைப் பிரகாசிக்கச் செய்யும் சத்வ குணமும் மேலாகிறது. 25

ஆகையால் முனிவர்கள் முன்பு விசுத்தரும், சத்வமூர்த்தியும் அதோக்ஷஜருமாகிய பகவானை வழிபட்டார்கள். அந்த முனிவர்களை அனுசரித்தவர்களும் ஸம்ஸாரபந்தத்தினின்று விடுபட்டு முத்தி யடைவார்கள். 26

முத்தியின்பம் கருதினோர் கோரமான உருவமுடைய பூதபதிகளை (தமோகுண ரஜோகுண செய்கையையுடைய சாமான்னிய தேவர்களை) விட்டு வேறு தேவதைகளை நிந்தனை செய்யாமல் சாந்தமூர்த்தியான நாராயணனை வழிபடுகிறார்கள். 27

---

* பிரமன் இரஜோகுண சம்பந்த முடையவன். உருத்திரன் தமோகுண சம்பந்த முடையவன். விஷ்ணு சத்வகுண சம்பந்த மூடையவன்.

ரஜஸ்தம:ப்ரக்ருதய: ஸமஶீலா பஜந்தி வை |
பித்ருபூதப்ரஜேஶாதீந் ஶ்ரியைஶ்வர்யப்ரஜேப்ஸவ: || 28

வாஸுதேவபரா வேதா வாஸுதேவபரா மகா: |
வாஸுதேவபரா யோகா வாஸுதேவபரா: க்ரியா: ||
வாஸுதேவபரம் ஜ்ஞாநம் வாஸுதேவபரம் தப: |
வாஸுதேவபரோ தர்மோ வாஸுதேவபரா கதி: || 29 - 30

ஸ ஏவேதம் ஸஸர்ஜாக்ரே பகவாநாத்மமாயயா |
ஸதஸத்ரூபயா சாஸௌ குணமயாகுணோ விபு: || 31

தயா விலஸிதேஷ்வேஷு குணேஷு குணவாநிவ |
அந்த:ப்ரவிஷ்ட ஆபாதி விஜ்ஞாநேந விஜ்ரும்பித: || 32

யதா ஹ்யவஹிதோ வஹ்நிர் தாருஷ்வேக: ஸ்வயோநிஷு |
நாநேவ பாதி விஶ்வாத்மா பூதேஷு ச ததா புமாந் || 33

இராஜஸ தாமஸ குணங்களின் சுபாவமுடையவர்களும் பிதிர்த் தேவதைகளுடைய சிலம்போன்ற சில முடையவர்களுமாகிய ஜனங்கள், பொருள், பிரபுத் தன்மை, மக்கட்பேறு இவைகளை விரும்பி, பிதிர்க்கள், பூதங்கள், பிரமன் முதலியவர்களைத் திருப்தி செய்விக்கிறார்கள். 28

மறைகளும் வாசுதேவரைப் பற்றியவைகள். யாகங்களும் வாசுதேவரையே சார்ந்தவைகள். யோகசாஸ்திரங்களும் வாசுதேவரைப் பிரதிபாதிக்கின்றன. கிரியைகளும் வாசுதேவருக்குரியன. ஞானசாஸ்திரமும் வாசுதேவரைப் பற்றியே பேசுகின்றன. தருமசாஸ்திரமும் வாசுதேவ பரமானது. சொர்க்கம் முதலிய பலன்களும் வாசுதேவரைப் பற்றியவைகளே. 29-30

பிரபுவாகிய இந்த வாசுதேவன் நிர்க்குணனாயினும் முக்குணவடிவமானதும் காரிய காரண சொரூபமானதுமாகிய தன்னுடைய மாயையால், பிரபஞ்சத்தைப் படைக்கிறான். 31

அந்த மாயையால் உண்டான (ஆகாயம் முதலியவைகளின்) குணங்களில், சிற்சக்தியால் நிறைந்த பகவான் உட்புகுந்து குணமுள்ளவன் போல் (ஆகாயம் முதலியவை என் அதீனமானதென்று அபிமானமுடையவன் போல்) தோன்றுகிறான். 32

கட்டைகளிலிருந்து பிரகாசிக்கும் அக்கினியும் கட்டையும் ஒன்றாகக் காண்பது போல், சகல பிரபஞ்ச சொரூபமாகிய பரமபுருஷனும் பூதங்களில் பலவிதமாகத் தோன்றினாலும் (ஏகனேயாவான்) 33

𑌅𑌸𑍌 𑌗𑍁𑌣𑌮𑌯𑍈𑌰𑍍𑌭𑌾𑌵𑍈𑌰𑍍𑌭𑍂𑌤𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌸𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑍇𑌷𑍁𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑍋𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 ॥ 34

𑌭𑌾𑌵𑌯𑌤𑍍𑌯𑍇𑌷𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌵𑍈𑌲𑍋𑌕𑌭𑌾𑌵𑌨𑌃 ।
𑌲𑍀𑌲𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌨𑍁𑌰𑌤𑍋 𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 ॥ 35

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇, 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌸𑍂𑌤𑌃 ॥ 𑌜𑌗𑍃𑌹𑍇𑌪𑍌𑌰𑍁𑌷𑌂𑌰𑍂𑌪𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥
𑌸𑌂𑌭𑍂𑌤𑌂𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌮𑌾𑌦𑍌𑌲𑍋𑌕𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑌯𑌾 ॥ 1

𑌯𑌸𑍍𑌯𑌾𑌂𑌭𑌸𑌿𑌶𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂𑌵𑌿𑌤𑌨𑍍𑌵𑌤𑌃 ।
𑌨𑌾𑌭𑌿𑌹𑍍𑌰𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌾𑌦𑌾𑌸𑍀𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌜𑌾𑌂𑌪𑌤𑌿𑌃 ॥ 2

𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑌯𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍈𑌃 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍋𑌲𑍋𑌕𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 ।
𑌤𑌦𑍍𑌵𑍈 𑌭𑌗𑌵𑌤𑍋𑌰𑍂𑌪𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ 3

இந்த பகவான் பூதசூட்சுமங்கள் இந்திரியங்கள், மனம், இவைகளின் குணபாவங்களால், தான் படைத்த பூதங்களில் பிரவேசித்து அந்தந்த குணங்களை யனுபவிக்கின்ருன். 34

லோககர்த்தாவாகிய இந்த பகவான், தேவர் திரியக்ஜாதிகள் (மிருகம் முதலியவைகள்) மானிடர்கள் இவர்களில் லீலாமாத்திரமாக அவதரிக்க விருப்பங்கொண்டு சத்வகுணத்தால் உலகத்தைப் பரிபாலிக்கிருன். 35

2-வது அத்தியாயம் முற்றிற்று.

3-வது அத்தியாயம்.

† பகவான் ஆதியில் உலகத்தைப் படைக்கக்கருதி மகத், அகங்காரம், பஞ்சதன் மாத்திரைகள் இவைகளோடு கூடியதும் பதினாறு கலைகளையுடையதுமான புருஷரூபத்தைக் கிரகித்தார். 1

அந்த பகவான் புனலில் சயனித்து யோகநித்திரை புரியும்போது அவருடைய நாபியாகிய மடுவின்கண்ணுள்ள கமலமலரில் உலகத்தைப் படைக்கும் பிரஜாபதிகளுக்குப் பதியாகிய பிரமதேவர் உற்பத்தியாயினர். 2

அந்த ஈசுவரனுடைய அவதாரமனைமங்கவாறே உலகத்தின் விஸ்தாரமும் ஏற்பட்டது அந்தபகவானுடைய ரூபம் விசுத்தம் மிகுந்த சத்வகுணமுள்ளது.

---

† பகவானுடைய அவதாரங்களில் முதலாவதாகிய புருஷஅவதாரத்தைக் கூறுகிறது.
மகத் முதலியவைகளின் விவரம் பின்னுற் கூறப்படுகிறது,
பதினாறு கலைகள்-இந்திரியங்கள் பதினொன்று, மகா பூதங்கள் ஐந்து.
புருஷாவதாரந் தரித்தது பாத்ம கற்பத்தில்.

𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌦𑍋 𑌰𑍂𑌪𑌮𑌦𑌭𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾
𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌾𑌦𑍋𑌰𑍁𑌭𑍁𑌜𑌾𑌨𑌨𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌕𑍍𑌷𑌿𑌨𑌾𑌸𑌿𑌕𑌂
𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍌𑌲𑍍𑌯𑌮𑍍𑌬𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍋𑌲𑍍𑌲𑌸𑌤𑍍 ॥ 4

𑌏𑌤𑌨𑍍𑌨𑌾𑌨𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑍇𑌨 𑌸𑍃𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌾𑌦𑌯𑌃 ॥ 5

𑌸 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌦𑍇𑌵𑌃 𑌕𑍌𑌮𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌗𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌚𑌚𑌾𑌰 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌖𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ॥ 6

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌤𑍁 𑌭𑌵𑌾𑌯𑌾𑌸𑍍𑌯 𑌰𑌸𑌾𑌤𑌲𑌗𑌤𑌾𑌂 𑌮𑌹𑍀𑌮𑍍 ।
𑌉𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑍁𑌪𑌾𑌦𑌤𑍍𑌤 𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑌃 𑌸𑍌𑌕𑌰𑌂 𑌵𑌪𑍁𑌃 ॥ 7

𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍃𑌷𑌿𑌸𑌰𑍍𑌗𑌂 𑌵𑍈 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌸𑌃 ।
𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌮𑌾𑌚𑌷𑍍𑌟 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌯𑌤𑌃 ॥ 8

கணக்கற்ற பாதங்கள் துடைகள், கைகளுடையதும் வியப்புறத்தக்கமுகங்களையுடையதும் கணக்கற்ற தலை, செவி, கண், மூக்குகளுடையதும் கணக்கிட்டுச் சொல்லுதற்கரிய கிரீடங்கள், ஆடைகள், குண்டலங்களுடையதும் பிரகாசிப்பதுமாகிய ரூபத்தை யோகிகள் ஞானக்கண்ணால் பார்க்கிறார்கள். 4

ஆதிநாராயண சொரூபமாகிய இந்த புருஷாவதாரமானது மற்ற அநேக அவதாரங்கள் (காரியமுடிவில்) பிரவேசிக்கும் ஸ்தானம். இந்த ரூபமே அநேக அவதாரங்கள் உண்டாவதற்குக் காரணமானது. அழிவற்றது. இந்த ரூபத்தின் அம்சமாயுள்ளவர் பிரமதேவர். அந்த பிரமதேவரின் அம்சமானவர்கள் மரீசி முதலிய பிரஜாபதிகள். அந்த பிரஜாபதிகளால் தேவர்கள் திரியக்குகள் மானிடர்கள் சிருஷ்டிக்கப் படுகிறார்கள். (சனத்குமாரர் முதலிய அவதாரங்கள்). 5

* (புருஷரூபத்தையடைந்த) அந்தத் தேவன், முதலில் குமாரசிருஷ்டியையடைந்து, பிராமணனாகி ஒருவராலும் அனுஷ்டித்தற்கரிய பிரமசரிய விருதத்தை அகண்டிதமாக அனுஷ்டித்தார். 6

† யஞ்ஞேசுவரராகிய வாசுதேவர் இந்தப்பிரபஞ்சம் உண்டாகவும் பாதாளம் சென்ற பூமியை உயரக்கொண்டு வரும் பொருட்டும் இரண்டாந்தடவை வராகவதாரமெடுத்தார். 7

‡ பகவான், ரிஷி சிருஷ்டியில் தேவரிஷியாகிய நாரதராக மூன்றாந் தடவை அவதரித்தார். பந்த ஏதுக்களான கருமங்களை யொழிக்கக்கூடிய வைஷ்ணவ பாஞ்சராத்திராகமத்தைக் கூறியருளினார். 8

---

* சனத்குமாராவதாரம் அவதாரங்களில் ஒன்று. கௌமாரம், ஆரிஷம்; பிராஜாபத்தியம், மானவம் என்பன சிருஷ்டி விசேடங்களின் பெயர்கள்.

† வராகவதாரம்— அவதாரம் 2

‡ நாரதாவதாரம்— ,, 3

𑌤𑍁𑌰𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮𑌕𑌲𑌾𑌸𑌰𑍍𑌗𑍇 𑌨𑌰𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌵𑍃𑌷𑍀 ।
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌶𑌮𑍋𑌪𑍇𑌤 𑌮𑌕𑌰𑍋𑌦𑍍𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌂 𑌤𑌪𑌃 ॥ 9

𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 𑌕𑌪𑌿𑌲𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌶𑌃 𑌕𑌾𑌲𑌵𑌿𑌪𑍍𑌲𑍁𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚𑌾𑌸𑍁𑌰𑌯𑍇 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌮𑍍 ॥ 10

𑌷𑌷𑍍𑌠𑌮𑌤𑍍𑌰𑍇𑌰𑌪𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑍃𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌯𑌾 ।
𑌆𑌨𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌕𑍀𑌮𑌲𑌰𑍍𑌕𑌾𑌯 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌾𑌦𑌿𑌭𑍍𑌯 𑌊𑌚𑌿𑌵𑌾𑌨𑍍 ॥ 11

𑌤𑌤𑌃 𑌸𑌪𑍍𑌤𑌮 𑌆𑌕𑍂𑌤𑍍𑌯𑌾𑌂 𑌰𑍁𑌚𑍇𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌭𑍍𑌯𑌜𑌾𑌯𑌤 ।
𑌸 𑌯𑌾𑌮𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑍈 𑌰𑌪𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ 12

𑌅𑌷𑍍𑌟𑌮𑍇 𑌮𑍇𑌰𑍁𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌭𑍇𑌰𑍍𑌜𑌾𑌤 𑌉𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌧𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ॥ 13

---

* தருமகலா (யமபத்தினி) சிருஷ்டியில் பகவானனவர் நரன் நாராயணனென்கிற இரண்டு ரிஷிகளாக நான்காவது முறை அவதரித்து மற்றவர்களாற் செய்யமுடியாத சமதமங்களுடன் கூடிய தவம் புரிந்தார். 9

† ஈசன் கபிலர் என்ற பெயருடன் சித்தர்களுக்குப் பிரபுவாக ஐந்தாவது முறை அவதரித்து, ஓர் சமயம் வித்தியாச மடைந்ததும் தத்துவ சமூகத்தை நிர்ணயித்துக் கொடுப்பதுமாகிய சாங்கியசாஸ்திரத்தை ஆசுரி என்ற அந்தணருக்கு உபதேசம் செய்தார். 10

‡ அனசூயை அத்திரி இவ்விருவருடைய பிரார்த்தனைக் குட்பட்டு அந்த முனிவருக்குப் புத்திரனாக ஆறுவது முறை அவதரித்து, அளர்க்கன் என்ற இராஜ ரிஷிக்கும் பிரஹ்லாதன் முதலியோருக்கும் ஆத்ம வித்தையை உபதேசம் செய்தார். **11**

¶ ஆகூதியிடம் ருசிஎன்பவருக்கு ஏழாவதாக யஞ்ஞர் என்றுண்டானர். அந்த யஞ்ஞர் (தன் புத்திரர்களாகிய) யாமரர் முதலிய தேவர்களுடன் $ சுவாயம்புவ மன்வந்தரத்தைப் பரிபாலித்தார். 12

() மேருதேவியிடம் நாபி என்பவருக்கு உருக்கிரமமென அவதாரம் செய்து பிரமசரியம் முதலிய ஆச்சிரமிகளெல்லோரும் வணங்கத்தக்க மார்க்கத்தை (அதிவர்ணாச்சிரம) வழியைத் தீரர்களுக்குக் காட்டியருளினர். 13

---

*	நரநாராயணாவதாரம்	அவதாரம்	4
†	கபிலாவதாரம்	„	5
‡	தத்தாத்ரேயாவதாரம்	„	6
¶	யஞ்ஞாவதாரம்	„	7
$	தானே இந்திரனானர்		
()	ரிஷபாவதாரம்	„	8

𑌋𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌾𑌚𑌿𑌤𑍋𑌭𑍇𑌜𑍇 𑌨𑌵𑌮𑌂𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌂𑌵𑌪𑍁𑌃 ।
𑌦𑍁𑌗𑍍𑌧𑍇𑌮𑌾𑌮𑍋𑌷𑌧𑍀𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌯𑌂𑌸𑌉𑌶𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ 14

𑌰𑍂𑌪𑌂 𑌸𑌜𑌗𑍃𑌹𑍇𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑍁𑌷𑍋𑌦𑌧𑌿𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑍇 ।
𑌨𑌾𑌵𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑍍𑌯 𑌮𑌹𑍀𑌮𑌯𑍍𑌯𑌾𑌮𑌪𑌾𑌦𑍍𑌵𑍈𑌵𑌸𑍍𑌵𑌤𑌂 𑌮𑌨𑍁𑌮𑍍 ॥ 15

𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑌾𑌣𑌾 𑌮𑍁𑌦𑌧𑌿𑌂𑌮𑌥𑍍𑌨𑌤𑌾𑌂 𑌮𑌨𑍍𑌦𑌰𑌾𑌚𑌲𑌮𑍍 ।
𑌦𑌧𑍍𑌰𑍇 𑌕𑌮𑌠𑌰𑍂𑌪𑍇𑌣𑌪𑍃𑌷𑍍𑌠 𑌏𑌕𑌾𑌦𑌶𑍇𑌵𑌿𑌭𑍁𑌃 ॥ 16

𑌧𑌾𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌂 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌮𑌮𑍇𑌵𑌚
𑌅𑌪𑌾𑌯𑌯𑌤𑍍𑌸𑍁𑌰𑌾𑌨𑌨𑍍𑌯𑌾 𑌨𑍍𑌮𑍋𑌹𑌿𑌨𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌯𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 ॥ 17

𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌂 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑍍𑌦𑍈𑌤𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌦𑌦𑌾𑌰𑌕𑌰𑌜𑍈𑌰𑍂𑌰𑌾𑌵𑍇𑌰𑌕𑌾𑌂 𑌕𑌟𑌕𑍃𑌦𑍍𑌯𑌥𑌾 ॥ 18

* (முகுந்தனே) முனிவர்கள் பிரார்த்தித்துக்கொண்டதற் கிணங்கி அரசர்களுக்குரிய சரீரத்தையடைந்து இந்தபூமியில் (கோரூபம்) வஸ்துக்களெல்லாவற்றையுங்கறந்தார். ஓ அந்தணர்களே! அதனால் அந்த அவதாரம் மிகவும்சிறந்தது.

† சாட்சுஷமன்வந்தரப் பிரளயத்தில் பத்தாவதாக மத்ஸயாவதார மெடுத்தார். ஓடம்போன்ற இந்தபூமியில் வைவஸ்வதமனுவை யேற்றிக் காப்பாற்றினர்.

‡ தேவர்களும் அசுரர்களும் சமுத்திரத்தைக் கடையும் போது பதினொன்றாவதாகக் கூர்மாவதாரம் செய்து தமது முதுகில் மந்தரமலையைத் தாங்கினர். 16

பனிரண்டாவது பதின்மூன்றாவதாக ¶ தன்வந்திரியாகவும் § மோகினியென்ற ஸ்திரீயாகவும் அவதாரம் செய்து அசுரர்களுக்கு மோகமுண்டாக்கித் தேவர்களுக்குக் (அமுதத்தை) கொடுத்தார். 17

§ பதினான்காவதாக நரசிம்மாவதார மெடுத்து பலிசாலியும் அசுரசிரேஷ்டனுமாகிய இரண்யகசிபுவைத் தமது தொடையில் வைத்துக்கொண்டு பாய் முடைபவன் கோரையைக் கிழிப்பது போல் நகங்களால் கிழித்தார். 18

---

* பிருதுவின் அவதாரம் „ 9

† மன்வந்தரத்தின் முடிவில் பிரளய மில்லாவிட்டாலும் வைவஸ்வதமனுக்குத் தமது மாயையை வேடிக்கையாகக் காண்பித்தார் என்பது.

மத்ஷியாவதாரம்- அவதாரம்- 10
‡ கூர்மாவதாரம்-அவதாரம் „ 11
¶ தன்வந்திரி „ 12
§ மோகினி „ 13
§ நரசிம்மாவதாரம்- அவதாரம் 14

𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌂 𑌵𑌾𑌮𑌨𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌗𑌾𑌦𑌧𑍍𑌵𑌰𑌂 𑌬𑌲𑍇𑌃 ।
𑌪𑌦𑌤𑍍𑌰𑌯𑌂 𑌯𑌾𑌚𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌸𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌿𑌷𑍍𑌟𑌪𑌮𑍍 ॥ 19

𑌅𑌵𑌤𑌾𑌰𑍇 𑌷𑍋𑌡𑌶𑌮𑍇 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍍𑌰𑍁𑌹𑍋 𑌨𑍃𑌪𑌾𑌨𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌃𑌸𑌪𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌕𑍁𑌪𑌿𑌤𑍋 𑌨𑌿𑌃𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌮𑌕𑌰𑍋𑌨𑍍𑌮𑌹𑍀𑌮𑍍 ॥ 20

𑌤𑌤𑌃 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑍇 𑌜𑌾𑌤𑌃 𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌾𑌶𑌰𑌾𑌤𑍍 ।
𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑍇𑌦𑌤𑌰𑍋𑌃 𑌶𑌾𑌖𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌂𑌸𑍋𑌽𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌃 ॥ 21

𑌨𑌰𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 ।
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑍀𑌨𑌿 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥ 22

𑌏𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑍇 𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑍇 𑌵𑍃𑌷𑍍𑌣𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌨𑍀 ।
𑌰𑌾𑌮𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌵𑌿𑌤𑌿 𑌭𑍁𑌵𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌹𑌰𑌦𑍍𑌭𑌰𑌮𑍍 ॥ 23

𑌤𑌤𑌃 𑌕𑌲𑍌 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌸𑌂𑌮𑍋𑌹𑌾𑌯 𑌸𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌮𑍍 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌜𑌿𑌨𑌸𑍁𑌤𑌃 𑌕𑍀𑌕𑌟𑍇𑌷𑍁 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ 24

பதினைந்தாவதாக வாமனுவதார மெடுத்து மகாபலியிடம் மூன்றடி பூமியை யாசித்து சொர்க்கத்தை அவனிடமிருந்து கிரகிக்க விருப்பங் கொண்டு அவனுடைய யாகசாலை சென்றார். 19

† அரசர்கள் தருமத்துரோகஞ் செய்வதைப் பார்த்துச் சினமடைந்து பதினாறுவது முறை அவதாரம் செய்து இருபத்தொருதடவை பூமியில் க்ஷத்திரியர்களே இல்லாமல் போகும்படி நாசஞ்செய்தார். 20

‡ மானிடர்களுக்கு அறிவு குன்றி யிருப்பதை நோக்கிப் பதினேழாவது முறை பாராசருக்குச் சத்தியவதியிடம் உண்டாகி வேதமாகிய விருக்ஷத்திற்குச் சாகைகளை (கிளைகளை) யுண்டாக்கினார். 21

$ இதன் பிறகு பதினெட்டாவது முறை தேவகாரியங்களை நிறைவேற்றக்கருதி நரனுக அவதரித்து சமுத்திரத்தை நிக்கிரகித்தல் முதலிய பராக்ரமமான செயல்களைக் காட்டினார். 22

¶ பத்தொன்பதாவதில் பகவான் யாதவர்களிடம் பலராமன், கிருஷ்ணன் என்கிற பெயர்களை யுடையவராய்ப் பிறந்து பூபாரத்தை யொழித்தார். 23

() கலியுகம் பிரவிர்த்திக்கும் சமயத்தில் தேவர்களின் பகைவர்களைமோகப்படுத்துவதற்கு கீகடங்களில்(மத்திய கயாப்ரதேசங்களில்) இருபதாமுறை அஜினருக்குப் புத்திரராகப் புத்தர் என்ற பெயருடன் அவதரிக்கப் போகிறார். 24

வாமனுவதாரம் துஷ்டர்களின் மதத்தையடக்குகிற வடிவம். அல்லது குட்டை வடிவம்.		15
† பரசுராமாவதாரம்	அவதாரம்	16
‡ வியாசரினவதாரம்	,,	17
¶ இராமாவதாரம்	,,	18
$ பலராமகிருஷ்ணர்கள்	,,	19
() புத்தாவதாரம்	,,	20

𑌅𑌥𑌾𑌸𑍌 𑌯𑍁𑌗𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌦𑌸𑍍𑌯𑍁𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌷𑍁 𑌰𑌾𑌜𑌸𑍁 ।
𑌜𑌨𑌿𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌯𑌶𑌸𑍋 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌕𑌲𑍍𑌕𑌿𑌰𑍍𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 ॥ 25

𑌅𑌵𑌤𑌾𑌰𑌾 𑌹𑍍𑌯𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌯𑌾 𑌹𑌰𑍇𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍇𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌯𑌥𑌾𑌵𑌿𑌦𑌾𑌸𑌿𑌨𑌃 𑌕𑍁𑌲𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑌸𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ॥ 26

𑌋𑌷𑌯𑍋 𑌮𑌨𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌮𑌨𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌮𑌹𑍌𑌜𑌸𑌃 ।
𑌕𑌲𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑌰𑍇𑌰𑍇𑌵 𑌸𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌯𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥ 27

𑌏𑌤𑍇 𑌚𑌾𑌂𑌶𑌕𑌲𑌾𑌃 𑌪𑍁𑌂𑌸𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑌿𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌮𑍃𑌡𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥ 28

𑌜𑌨𑍍𑌮 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌯 𑌏𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌨𑌰𑌃 ।
𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌗𑍃𑌣𑌨𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌦𑍁𑌃𑌖𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 29

---

† கலியுகத்தின் முடிவில் அரசர்கள் திருடர்கள் போலாகும் போது ஜகத்குருவாகிய பகவான் இருபத்தோராவது முறை விஷ்ணுயஸஸ் என்ற ஓர் அந்தணரிடத்தில் கல்கி என்ற பெயருடன் அவதரிக்கப் போகிறார். 25

ஓ பிராமணசிரேஷ்டர்களே! சத்துவகுண நிதியாகிய ஹரியின்குறைவுறாத நீரையுடைய சிரசிலிருந்து ஆயிரக்கணக்கான கண்ணிவாய்க்கால்கள் ஏற்படுகின்றன. 26

‡ ரிஷிகள், ¶ முனிவர்கள், தேவர்கள் மிகுந்த பலமுடைய மனுபுத்திரர்கள் பிரஜாபதிகள் யாவரும் விஷ்ணுவின் அம்சமாகவே ஏற்பட்டார்கள். 27

பரம புருஷனுடைய § அவதாரங்களிற் சில அம்சமுடையன. சில பகவானுடைய மகிமை பொருந்தியவைகள். நாராயணனுடைய பிரத்தியக்ஷமானது கிருஷ்ணாவதாரந்தான். இந்த அவதாரங்கள் இந்திரனுக்குப் பகைவர்களாகிய அசுரர்களால் துன்பமுற்ற உலகத்திற்கு ஒவ்வொரு யுகத்திலும் சுகமுண்டாக்குகின்றன. 28

பகவானுடைய அதிரகசியமான இந்த அவதாரத்தைப்பரிசுத்தத்துடனும் பக்தியுடனும் காலைமாலை இருவேளையிலும் துதிக்கிறவன் துக்கம் நிறைந்த சம்சாரபந்தத்தினின்றும் விடுபடுவான். 29

---

† கல்கி அவதாரம் ,, 21

‡ ரிஷிகள் - மந்திரமறிந்தவர்கள்.

¶ முனிவர்கள் - மனனம் - அதாவது பிரஹ்ம சொரூபத்தையே யறிந்து ஆநந்திப்பவர்கள்.

§ சில சனத்குமாரர் முதலியவர்களிடம் ஞானம்ச மெனவும் பிருது முதலியோரிடம் சக்தியின் அம்சமெனவும் உணர்க.

𑌏𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌹𑍍𑌯𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌮𑌾𑌯𑌾𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂 𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ॥ 30

𑌯𑌥𑌾 𑌨𑌭𑌸𑌿 𑌮𑍇𑌘𑍌𑌘𑍋 𑌰𑍇𑌣𑍁𑌰𑍍𑌵𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑍋𑌽𑌨𑌿𑌲𑍇 ।
𑌏𑌵𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌰𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 ॥ 31

𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌯𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌵𑍍𑌯𑍂𑌢𑌗𑍁𑌣𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸 𑌜𑍀𑌵𑍋 𑌯𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑍍𑌭𑌵𑌃 ॥ 32

𑌯𑌤𑍍𑌰𑍇𑌮𑍇 𑌸𑌦𑌸𑌦𑍍𑌰𑍂𑌪𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑍇 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑌿𑌦𑌾 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌕𑍃𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ 33

𑌯𑌦𑍍𑌯𑍇𑌷𑍋𑌪𑌰𑌤𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌮𑌾𑌯𑌾 𑌵𑍈𑌶𑌾𑌰𑌦𑍀 𑌮𑌤𑌿𑌃 ।
𑌸𑌂𑌪𑌨𑍍𑌨 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌿 𑌸𑍍𑌵𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ 34

அரூபனும் சின்மாத்திரனுமாகிய ஜீவனுக்கு இந்த ஸ்தூல சரீரமானது பகவானுடைய மாயையின் குணங்களான மகத் முதலியவைகளில் ஏற்படுகிறது. 30

(வாயுவை ஆசரித்த) மேகக்கூட்டம் ஆகாயமார்க்கத்திலும் பூமியிலுள்ள தூளி வாயு விடத்திலும் அறியாதவர்களால் ஆரோபணம் செய்யப்படுவதுபோல் திரஷ்டாவா (பார்க்கிறவரா)கிய ஆத்ம சொரூபத்தில் பார்க்கக் கூடிய (சரீரம் முதலிய) வைகளை அஞ்ஞர்கள் ஆரோபணம் செய்கிறார்கள். 31

அவ்வியக்தமானதும் (சூட்சுமம்) பரிணாமமில்லாத கைகால் முதலிவைகளையுடையதுமாகிய மற்றொரு சரீரத்தையும் (ஸ்தூல சரீரத்தைப் போல்) பார்க்கவும் (இந்திரன் முதலியவர்களைப் போல்)கேட்கவும் முடியாது. ஜீவனுக்கு உபாதியாகிய இந்த லிங்கசரீரம் (சூட்சுமசரீரம்) ஜீவனுடைய உற்பத்தி நாசங்களுக்குக் காரணமாகிறது. 32

காரிய ரூபமாகிய ஸ்தூல சரீரம், காரணரூபமாகிய லிங்கசரீரம் இவ்விரண்டையும் அவித்தையால் ஆத்ம சொரூபத்தினுடைய ஆரோபிதங்களென்று சொரூபஞானத்தால் ஜீவன் எப்பொழுது ஒழிக்கிறானோ அப்பொழுது ஞான சொரூபமாகிய பிரஹ்மமாகவே ஆகிறான். 33

ஸர்வஞ்ஞனாகிய ஈசுவர சம்பந்தமுள்ள (அவித்தியாரூபிணியும் சம்சார சக்ரத்தால் கிரீடித்துக்கொண்டிருப்பவளுமாகிய) மாயை ஒழிவடைந்தால் அந்த மாயையே வித்தையாகிறாள். ஜீவன் அப்பொழுது பிரஹ்ம சொரூபனாகிப் பரமானந்த சொரூபத்தில் பிரகாசிக்கிறான். 34

---

31 வது சுலோகம் ஸ்தூல சரீரம் ஈசனுடைய ஆரோபிதமென்று கூறுகிறது.

32 வது சுலோகம் சூட்சும சரீரமும் ஆரோபிதமெனக்கூறுகிறது.

34-வது சுலோகத்தின் கருத்து - மாயை அவித்தையின் வடிவத்துடன் ஜீவனுக்கு ஆவரண விசேஷங்களைச் செய்கிறாள். அது வரையில் அவன் உபாதி யடைகிறதில்லை. அந்த மாயை வித்தையின் வடிவமாயின் அவனுக்குபாதியாகிய ஸ்தூல சூட்சுமங்களைத் தொலைத்துத் தானே ஒழிவடைகிறாள். அப்பொழுது அவன்பிரஹ்ம்மமாகிறான்.

𑌏𑌵𑌂 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 ।
𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌕𑌵𑌯𑍋 𑌵𑍇𑌦𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌿 𑌹𑍃𑌤𑍍𑌪𑌤𑍇𑌃 ॥ 35

𑌸 𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌮𑍋𑌘𑌲𑍀𑌲𑌃 𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌨 𑌸𑌜𑍍𑌜𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 ।
𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤 𑌆𑌤𑍍𑌮𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌷𑌾𑌡𑍍𑌵𑌰𑍍𑌗𑌿𑌕𑌂 𑌜𑌿𑌘𑍍𑌰𑌤𑌿 𑌷𑌡𑍍𑌗𑍁-
𑌣𑍇𑌶𑌃 ॥ 36

𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌪𑍁𑌣𑍇𑌨 𑌧𑌾𑌤𑍁𑌰𑌵𑍈𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 𑌕𑍁𑌮𑌨𑍀𑌷 𑌊𑌤𑍀𑌃 ।
𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌮𑌨𑍋𑌵𑌚𑍋𑌭𑌿𑌃 𑌸𑌨𑍍𑌤𑌨𑍍𑌵𑌤𑍋 𑌨𑌟𑌚𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌃 ॥

𑌸 𑌵𑍇𑌦 𑌧𑌾𑌤𑍁𑌃 𑌪𑌦𑌵𑍀𑌂 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌥𑌾𑌙𑍍𑌗𑌪𑌾𑌣𑍇𑌃 ।
𑌯𑍋𑌽𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌯𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌜𑍇𑌤 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌸𑌰𑍋𑌜𑌗𑌨𑍍𑌧𑌮𑍍 ॥

𑌅𑌥𑍇𑌹 𑌧𑌨𑍍𑌯𑌾 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌯𑌦𑍍𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇𑌽𑌖𑌿𑌲𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑍇 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌂 𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌭𑍂𑌯𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤 𑌉𑌗𑍍𑌰𑌃 ॥ 39

இவ்விதம் (ஜீவனுக்கு ஜன்மம் முதலியவை மாயையின் காரியமாவது போல்) கர்த்தாவாகாதவனுக்குக் கர்மங்களும் ஜன்மமில்லாதவனுக்கு ஜன்மங்களும் ஏற்படுகின்றன என்கிற இந்த அந்தர்யாமியின் இரகசியங்களைக் கவிகள் வர்ணிக்கிறார்கள். 35

அந்தர்யாமியும் அமோகமான (வியக்தமாகாத) லீலைகளையுடையவனுமாகிய பகவான் இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கிறான். சங்கரிக்கிறான். இப்பிரபஞ்சத்தில் பற்றுதலடைகிறதில்லை. ஆத்ம தந்திரனும் (ஸ்வாதீனனும்) ஆறு இந்திரியங்களுக்கு நியாமகனுமாகிய ஈசுவரன் பூதங்களுக்குள்ளிருந்து ஆறு இந்திரியங்களின் விஷயமாகிய (ஸ்பரிசம் முதலியவைகளை) ஆக்கிராணம் செய்கிறான். (அவைகளை விரும்புகிறதில்லை). 36

மனதால் ரூபங்களையும், வாக்கால் நாமங்களையும் விஸ்தாரப் படுத்துகிற இந்த ஈசுவரனுடைய லீலைகளை அறியாதவன் நடனுடைய நடத்தையை எப்படித் தெரிந்து கொள்ள மாட்டானோ அது போல், அறிவில்லாதவன் நன்றாகத் தெரிந்து கொள்ளமாட்டான். 37

உலகங்களைப் படைத்தவனும் அளவிறந்த ஆற்றலுடையவனும் சக்ராயுதந் தரித்தவனுமாகிய பரமபுருஷனுடைய பாதகமலங்களை வஞ்சகமின்றி இடைவிடாமல் அன்புடன் சேவிக்கும் பக்தனே அந்தப் பரமபுருஷனுடைய பதவியையறிவான். 38

உலகமெல்லாவற்றிற்கும் நாதனாகிய வாசுதேவனிடம், மீண்டும் (கர்ப்பவாசம் முதலிய துக்கங்களால்) உக்ரமான (ஜனனம் மரணம் என்கிற) (சுழலில் சிக்காத மனோபாவத்தை நீங்கள் செலுத்தியிருக்கிறீர்கள். ஆதலால், நீங்களே சர்வக்ஞர்கள். கிருதார்த்தர்கள். 39

ஆறு இந்திரியங்கள் - துவக் - சக்ஷுஸ், சுரோத்திரம் - ஜிஹ்வை - கிராணம் - மனசு இவை முறையே தோல், கண், காது, வாய், மூக்கு மனம் எனப்படும்.

𑌇𑌦𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌨𑌾𑌮 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌮𑍍𑌮𑌿𑌤𑌮𑍍 ।
𑌉𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌚𑌰𑌿𑌤𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌃 ॥ 40

𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌾𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯𑌧𑌨𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌨𑌂𑌮𑌹𑌤𑍍 ।
𑌤𑌦𑌿𑌦𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍁𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌤𑌾𑌂𑌵𑌰𑌮𑍍 ॥ 41

𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾𑌨𑌾𑌂𑌸𑌾𑌰𑌂𑌸𑌾𑌰𑌂𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ।
𑌸 𑌤𑍁 𑌸𑌂𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌾𑌮𑌾𑌸 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍
𑌪𑍍𑌰𑌾𑌯𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑍀𑌤𑌂 𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ॥ 42½

𑌤𑌤𑍍𑌰 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌤𑍋𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌪𑍍𑌰𑌰𑍍𑌷𑍇𑌰𑍍𑌭𑍂𑌰𑌿𑌤𑍇𑌜𑌸𑌃 ।
𑌅𑌹𑌂𑌚𑌾𑌧𑍍𑌯𑌗𑌮𑌂 𑌤𑌤𑍍𑌰𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ॥ 43½

𑌯𑍂𑌯𑌂 𑌭𑌵𑌹𑌿𑌤𑌾𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌯𑌾𑌂𑌚 𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ।
𑌸𑍋𑌹𑌂𑌵𑌃𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌯𑌥𑌾𑌧𑍀𑌤𑌂𑌯𑌥𑌾𑌮𑌤𑌿 ॥ 44½

(𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍋𑌪𑌗𑌤𑍇 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃𑌸𑌹 ।
𑌕𑌲𑍌𑌨𑌷𑍍𑌟𑌦𑍃𑌶𑌾𑌮𑍇𑌷 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌰𑍍𑌕𑍋𑌧𑍁𑌨𑍋𑌦𑌿𑌤𑌃 ॥)

இந்தப்புராணம் பாகவதம் என்று கூறப்படும். இது வேதத்திற்குச்சமமானது. உத்தமசுலோகனுகிய வாசுதேவனுடைய சரித்திரத்தைத் தன்னுள் அடங்கப்பெற்றது. இதை வியாசமகா முனிவர் அருளிச் செய்தனர். 40

தன்னியமும் மங்களம் பெறுதற்குக் காரணமானதும் சிறந்ததுமாகிய இந்தப் பாகவதபுராணத்தை உலக நன்மையின் பொருட்டு வியாசமுனிவர், ஆத்மஞானிகளுக்குள் சிறந்த தமது புத்திரனுக் குபதேசம் செய்தார். 41

அந்த சுகர் வேத இதிகாசங்களின் சாராம்ஸத்திலும் ஸாராம்ஸத்தை யெடுத்துப் பிரதிபாதித்திருக்கும் இந்தப் பாகவதத்தைக் கங்காநதியில் பிராயோபவேசவிருதத்துடன் (மரணம் வரையில் ஆகார மில்லாதிருத்தல்) பரம ரிஷிகள் சூழவிருக்கும்போது பரீக்ஷித்துமகாராஜனுக்குச் சிரவணம் செய்வித்தார். 42½

அந்தணசிரேஷ்டர்களே மகாதேஜஸ்வியாகிய சுகர் உபதேசம் செய்யும்போது அந்தண சிரேஷ்டரின் சமீபத்தில் நானுமிருந்து அவருடைய அனுக்ரகத்தால் சிரவணம்செய்து கொண்டேன். 43½

ஓ அந்தண சிரேஷ்டர்களே ! நீங்கள் நம்பிக்கையுடையவர்கள். நான் தெரிந்து கொண்டமட்டிலும் என் புத்திக்குத் தக்கபடி உங்களுக்குச் சிரவணம் செய்விக்கிறேன். 44½

† கிருஷ்ணன் தருமம், ஞானம் இவைகளுடன் தன் னிருப்பிடமாகிய வைகுண்டம் சென்ற பின்பு கலியுகத்தில் (ஞானமாகிய) கண்ணில்லாதவர்களுக்கு இப்புராணமாகிய சூரியன் உதயமாயிற்று.

3-வது அத்தியாயம் முற்றிற்று.

† அதிகப்பாடம்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇, 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 ‖ 𑌇𑌤𑌿𑌬𑍍𑌰𑍁𑌵𑌾𑌣𑌂 𑌸𑌂𑌸𑍍𑌤𑍂𑌯 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌤𑍍𑌰𑌿𑌣𑌾𑌮𑍍 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑌿𑌃 𑌸𑍂𑌤𑌂 𑌬𑌹𑍍𑌵𑍃𑌚𑌃 𑌶𑍌𑌨𑌕𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ‖ 1

𑌶𑍌𑌨𑌕𑌃 ‖ 𑌸𑍂𑌤 𑌸𑍂𑌤 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌵𑌦 𑌨𑍋 𑌵𑌦𑌤𑌾𑌂 𑌵𑌰 ।
𑌕𑌥𑌾𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑍀𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌂 𑌯𑌦𑌾𑌹 𑌭𑌗𑌵𑌾𑌞𑍍𑌛𑍁𑌕𑌃 ‖ 2

𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑍁𑌗𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌯𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌾 𑌕𑍇𑌨 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾 ।
𑌕𑍁𑌤𑌃 𑌸𑌞𑍍𑌚𑍋𑌦𑌿𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃 ‖ 3

𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀 𑌸𑌮𑌦𑍃𑌙𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌃 ।
𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑌤𑌿𑌰𑍁𑌨𑍍𑌨𑌿𑌦𑍍𑌰𑍋 𑌗𑍂𑌢𑍋 𑌮𑍂𑌢 𑌇𑌵𑍇𑌯𑌤𑍇 ‖ 4

4-வது அத்தியாயம்.

வியாசமுனிவர் கூறுகிறார்.

ஆயிரம் வருடம்வரையில் ஸத்ரம் என்னும் யாகத்தைச் செய்துகொண்டிருக்கும் முனிவர்களுக்குள் குலபதி (முக்கியர்) யும் (ஞானம் முதலியவைகளில்) பெரியவரும் ருக்வேத அத்தியயனம் செய்தவருமாகிய சௌனக முனிவர் சூதபுராணிகர் இவ்வாறு கூற அவரை நன்றாய் ஸ்துதி செய்து சொல்லுகிறார். 1

சௌனகமுனிவர் கூறுகிறார்.

மகா பாக்கியம் செய்தவரும் பேசுகிறவர்களுட் சிறந்தவருமாகிய சூதரே! மகிமைபொருந்திய சுகமகாமுனிவர் கூறியதும் பகவானை அதிக்கிரமித்து ஏற்பட்ட புண்ணியத்திற்குச் சாதனமானதுமாகிய கதையை எங்களுக்குச் சொல்ல வேண்டும். 2

வியாசமகா முனிவர் எந்த யுகத்தில் எந்த இடத்தில் † என்ன காரணத்தைக்கொண்டு யாரால் பிரேரணை செய்யப்பட்டு இந்தப் பாகவதசம்கிதையைச் செய்தார். 3

அந்த வியாசருக்குப் புத்திரராகிய சுகர் மகாயோகி. பிரஹ்மத்தைப் பார்க்கிறவர். பேதமற்றவர். ஒரே வஸ்துவில் நிலைத்திருக்கும் மதியை யுடையவர். மாயாசயனத்திலிருந்து விழித்துக் கொண்டவர். (ஆகையால்) மறைந்திருப்பவர். மூடன் போல் தோன்றுகிறவர். 4

† மகா பாரதம் முதலிய சாஸ்திரங்களைச் செய்தவருக்கு இந்தப் பாகவத சங்கிதையைச் செய்ய ஏற்பட்ட காரணமென்ன என்பதாம்-

𑌕𑌥𑌮𑌾𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌃𑌪𑍌𑌰𑍈𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃𑌕𑍁𑌰𑍁𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑍍 ।
𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌮𑍂𑌕𑌜𑌡𑌵𑌦𑍍 𑌵𑌿𑌚𑌰𑌨𑍍 𑌗𑌜𑌸𑌾𑌹𑍍𑌵𑌯𑍇 ॥ 5

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌨𑍁𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑍃𑌷𑌿𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑌪𑍍𑌯𑌨𑌗𑍍𑌨𑌂
𑌦𑍇𑌵𑍍𑌯𑍋 𑌹𑍍𑌰𑌿𑌯𑌾 𑌪𑌰𑌿𑌦𑌧𑍁𑌰𑍍𑌨 𑌸𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑍁𑌨𑍌 𑌜𑌗𑌦𑍁𑌸𑍍𑌤𑌵𑌾𑌸𑍍𑌤𑌿
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌮𑍍𑌭𑌿𑌦𑌾 𑌨 𑌤𑍁 𑌸𑍁𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 ॥ 6

𑌕𑌥𑌂𑌵𑌾 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍇𑌯𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌸𑌹 ।
𑌸𑌂𑌵𑌾𑌦𑌃 𑌸𑌮𑌭𑍂𑌤𑍍𑌤𑌾𑌤 𑌯𑌤𑍍𑌰𑍈𑌷𑌾 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑍀 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ॥ 7

இவ்வளவு மகிமைவாய்ந்த இந்தச் சுகர் குரு க்ஷேத்திரத்திலும் ஜாங்கல தேசத்திலும் முதன் முதலில் வந்திருந்து பிறகு அத்தினபுரியில் பைத்தியன், ஊமையன், மூடன் இவர்களைப் போல் சஞ்சாரஞ் செய்யும்போது இவரை இந்நகரிலுள்ளார் எவ்விதம் தெரிந்து கொண்டார்கள். 5

குமாரனாகிய சுகனைத் (எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்து செல்ல) தொடர்ந்து சென்ற அவரது தந்தையும் வயோதிகருமாகிய வியாச மகரிஷியைக் கண்டு ஜலக்ரீடை செய்து கொண்டிருந்த அப்ஸரஸ்திரீகள் அவர் வஸ்திரம் தரித்தவராயிருந்தும் வெட்கமுற்று ஆடையணிந்து கொண்டார்கள். திகம்பரனாகச் (வஸ்திரமின்றி) செல்பவரும் யௌவனபருவமுள்ளவருமாகிய வியாச புத்திரனாகிய சுகரைக்கண்ட அவர்கள் வெட்கமடையாமலும் வஸ்திரந் தரிக்காமலும் மிருந்தார்கள். இதைக்கண்ட வியாசமுனிவர் நான் விருத்தன்; ஆடைபுனைந்தவன். புத்திரனோ யௌவனன், ஆடைகளைந்தவன். அப்படியிருக்க, என்னைக் கண்டு மட்டும் வஸ்திர முடுத்துக் கொண்டீர்கள். புத்திரனைக் கண்டபோது ஒன்றும் செய்து கொள்ளவில்லை; ஏனப்படி என்று அப்சரஸ்திரீகளை வினவ, அந்த ஸ்திரீகள், முனிவரே தங்களுக்கு இவள் பெண் இவன் ஆண் என்கிற பேதபுத்தியிருக்கிறது. பரிசுத்த வஸ்துவில் கண்ணுள்ளஉமது குமாரன் சுகனுக்கு ஆண் பெண் என்கிற வித்தியாசமான புத்தியேயில்லை என்றார்கள். 6

* பாண்டவேயனாகிய. (பாண்டுவின் வம்சத்தில் ஜனித்தவன்)ராஜரிஷிக்கும் (பரீக்ஷித்து) சுகமுனிவருக்கும் பாகவத சங்கிதையாகிய இந்த சம்வாதம் எவ்விதமுண்டாயிற்று. 7

---

* அரசுபுரியும் பரீக்ஷித்துக்கும் ஆசையற்ற சுகருக்கும் சம்வாதமேற்க்காரணமில்லாததனால் கேள்வியுண்டாயிற்று.

𑌸 𑌗𑍋𑌦𑍋𑌹𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌂𑌹𑌿 𑌗𑍃𑌹𑍇𑌷𑍁 𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌾𑌮𑍍 |
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌤𑍇 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌂𑌸𑍍𑌤𑌦𑌾𑌶𑍍𑌰𑌮𑌮𑍍 ‖ 8

𑌅𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑍁𑌸𑍁𑌤𑌂 𑌸𑍂𑌤 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 |
𑌤𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮 𑌮𑌹𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌚 𑌗𑍃𑌣𑍀𑌹𑌿 𑌨𑌃 ‖ 9

𑌸 𑌸𑌮𑍍𑌰𑌾𑌟𑍍𑌕𑌸𑍍𑌯𑌵𑌾𑌹𑍇𑌤𑍋𑌃𑌪𑌾𑌣𑍍𑌡𑍂𑌨𑌾𑌂 𑌮𑌾𑌨𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 |
𑌪𑍍𑌰𑌾𑌯𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑍋𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌮𑌨𑌾𑌦𑍃𑌤𑍍𑌯𑌾𑌧𑌿𑌰𑌾𑌟𑍍𑌛𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ‖ 10

𑌨𑌮𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑌿𑌕𑍇𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨 𑌶𑌿𑌵𑌾𑌯𑌹𑌾𑌨𑍀𑌯 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌶𑌤𑍍𑌰𑌵𑌃 |
𑌕𑌥𑌂𑌸𑌵𑍀𑌰𑌃𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌙𑍍𑌗𑌦𑍁𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌂 𑌯𑍁𑌵𑍈𑌷𑌤𑍋𑌤𑍍𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌹𑍋 𑌸𑌹𑌾𑌸𑍁𑌭𑌿𑌃 ‖ 11

𑌶𑌿𑌵𑌾𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌭𑌵𑌾𑌯 𑌭𑍂𑌤𑌯𑍇 𑌯 𑌉𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌾 𑌜𑌨𑌾𑌃|
𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑌸𑍌𑌪𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌮𑍁𑌮𑍋𑌚 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯 𑌕𑍁𑌤𑌃𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ‖ 12

மகா பாகராகிய அந்தச்சுகர் கிருகஸ்தர்களுடைய கிருகங்களைப் பரிசுத்தப் படுத்துவதன் பொருட்டு * கோதோகனகாலம் வரையில் தான் தாமதிக்கிறார். 8

ஓ சூத! அபிமன்யுவின் குமாரனாகிய பரீக்ஷித் மகாராஜனை பாகவதோத்தமனென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அவ்வரசனுடைய ‡ அதி ஆச்சரியகரமான ஜன்மத்தையும் செய்கைகளையும் எங்களுக்குக் கூறவேண்டும். 9

பாண்டுமகாராஜனுடைய வம்சத்திற்குக் கீர்த்தியையுண்டாக்கும் ஸம்ராட்டாகிய அந்த அரசன் மேன்மையான சம்பத்தை இலட்சியம் செய்யாமல் கங்கையில் பிராயோபவேசம் செய்ததற்குக் காரணமென்ன? 10

ஓ சூதரே! சத்ருக்கள் தங்களுடைய நன்மையின் பொருட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து எந்த அரசனுடைய பாதபீடத்திற்குக் காணிக்கையாகத் தந்து வணங்கினார்களோ அந்தப் பரீக்ஷித்து மகாராஜனாகிய வீரன் யௌவனப் பருவமுள்ளவனாயினும் மற்றவர் எவர்களாலும் விட்டொழித்தற்கு இயலாத இராஜ்யசம்பத்தை பிராணனோடுவிடுவதற்கு எப்படி சம்மதித்தான்? 11

மகாகீர்த்தி வாய்ந்தவரே! அடைதற்குரியரென்றெண்ணத்தக்கபெரியோர்கள் உலகம் ஐசுவரியத்தைப் பெற்றுச் சுகமடையக் கருதி ஜீவித்திருக்கிறார்கள். தங்களுடைய சுயநலங்கருதி ஜீவித்திருக்கவில்லை. (அப்படி யிருக்க) இவ்வரசன் வைராக்கியமடைந்து பிறரரண்புகுதற்குரிய இந்தச் சரீரத்தை ஏன் விட்டார்? 12

---

8 வது சுலோகம்—கிருகஸ்தர்களின் கிருகங்களின் தங்குவது பிக்ஷைக்காக வல்ல; இல்லம் பரிசுத்த மடைவது கருதியேயாமென்பது கருத்து.

* கோதோகனகாலம்—பால் கறக்கும் போது மடியிலிருந்து ஒருபீல்விழும் நேரமாம்.

‡ அதி ஆச்சரியமான என்பது அஸ்திரத்தால் சாம்பலானாலும் பூர்ண சரீரத்துடன் பிறந்ததைக் காட்டுகிறது.

தத்ஸர்வம் நஸ்ஸமாசக்ஷ்வ ப்ருஷ்டோ யதிஹ கிஞ்சந ।
மந்யே த்வாம் விஷயே வாசாம் ஸ்நாதமந்யத்ர சாந்தஸாத் ॥ 13

ஸ்ரீ ஸூத: ॥

த்வாபரே ஸமநுப்ராப்தே த்ருதீயே யுகபர்யயே ।
ஜாத: பராசராத்யோகீ வாஸவ்யாம் கலயா ஹரே: ॥ 14

ஸ கதாசித்ஸரஸ்வத்யா உபஸ்ப்ருச்ய ஜலம் சுசி: ।
விவிக்த ஏக ஆஸீந உதிதே ரவிமண்டலே ॥

பராவரஜ்ஞஸ்ஸ ருஷி: காலேநாவ்யக்தரம்ஹஸா ।
யுகதர்மவ்யதிகரம் ப்ராப்தம் புவி யுகே யுகே ॥

பௌதிகாநாம் ச பாவாநாம் சக்திஹ்ராஸம் ச தத்க்ருதம் ।
அச்ரத்ததாநாந்நிஸ்ஸத்வாந் துர்மேதாந் ஹ்ரஸிதாயுஷ: ॥

துர்பகாம்ச்ச ஜநாந்வீக்ஷ்ய முநிர்திவ்யேந சக்ஷுஷா ।
ஸர்வவர்ணாச்ரமாணாம் யத்தத்யௌ ஹிதமமோகத்ருக் ॥ 15 - 18

சாதுர்ஹோத்ரம் கர்ம சுத்தம் ப்ரஜாநாம் வீக்ஷ்ய வைதிகம் ।
வ்யததாத்யஜ்ஞஸந்தத்யை வேதமேகம் சதுர்விதம் ॥ 19

வேதங்களைத்தவிர மற்ற (இதிகாசம் புராணம்) வைகளில் தாங்கள் கரை கண்டவர் என்று எண்ணுகிறேன். ஆகையால் நான் கேட்ட விஷயங்கள் முழுவதையும் கூறவேண்டும். 13

சூதபுராணிகர் கூறுகிறார்.

மூன்றாவதாகிய துவாபரயுகக் கடைசியில், வாஸவியிடம் பராசர முனிவருக்கு விஷ்ணுவின் அம்சத்துடன் ஞானியாகிய வியாசமுனிவர் உண்டாயினர். 14

(எல்லோருக்கும் உபகாரமாக விருக்கும்) தத்துவத்தை யுணர்ந்து மனனம் செய்கிறவரும் பிர்ஹ்ம சொரூபத்தையும் மற்றவைகளையும் அறிந்த வருமாகிய வியாச முனிவர், ஒரு சமயம் ஸரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்து உதயமானவுடன் ஜன சஞ்சார மில்லாத இடத்திற்குச் சென்று அங்கு உட்கார்ந்து, இந்தப் புவியில் அறியொணாதவேகமுடைய காலகதியால், யுகதர்மங்களான புண்ணிய பாவங்களடையும் மாறுதலையும் அதனால் பஞ்சபூதங்களினாலாகிய பிராணிகளுக்குண்டாகும் சாமர்த்தியக் குறைவையும் ஜனங்கள் சிரத்தை சத்துவகுணம் இவைகளை விட்டுப் பாபம் செய்வதில் மனதைச் செலுத்தி(தர்மத்தை யனுஷ்டிப்பதற்குரிய) ஆயுள்பலம் இவைகளிற் குறைவடைந்து போவார்களென்பதையும் தமது ஞானக்கண்ணால் பார்த்து வர்ணாச்சிரமங்களுக்கு எது நன்மை பயக்கத்தக்க தென்பதைப்பற்றி யோசிக்கலாயினர். 15-18

ஹோதாவென்ற ரித்விக் முதலிய நான்கு ரித்விக்குகளால் அனுஷ்டிக்கத் தக்கதும் பரிசுத்தமானதும் வேதத்தைச் சேர்ந்ததுமாகிய கர்மத்தை ஆய்ந்துணர்ந்து, பிரஜைகள் யாகத்தைக் குறைவின்றிச் செய்வதன் பொருட்டு வேதத்தை நான்கு பாகமாகப் பிரித்தனர். 19

* வாஸவி - உபரிசரன் என்ற வசுவின் வீரியத்திற் குண்டானவள்.

𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌥𑌰𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃 ।
𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌚 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌵𑍇𑌦 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 20

𑌤𑌤𑍍𑌰𑌰𑍍𑌗𑍍𑌵𑍇𑌦𑌧𑌰𑌃 𑌪𑍈𑌲𑌃 𑌸𑌾𑌮𑌗𑍋 𑌜𑍈𑌮𑌿𑌨𑌿𑌃 𑌕𑌵𑌿𑌃 ।
𑌵𑍈𑌶𑌮𑍍𑌪𑌾𑌯𑌨 𑌏𑌵𑍈𑌕𑍋 𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑍋 𑌯𑌜𑍁𑌷𑌾𑌮𑍁𑌤 ॥

𑌅𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌾𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑍁𑌮𑌨𑍍𑌤𑍁𑌰𑍍𑌦𑌾𑌰𑍁𑌣𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌮𑍇 𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌃 ॥ 21 – 22

𑌤 𑌏𑌤 𑌋𑌷𑌯𑍋 𑌵𑍇𑌦𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌸𑍍𑌯𑌨𑍍𑌨𑌨𑍇𑌕𑌧𑌾 ।
𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌃𑌪𑍍𑌰𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍇 𑌶𑌾𑌖𑌿𑌨𑍋𑌽𑌭𑌵𑌨𑍍 ॥ 23

𑌤 𑌏𑌵 𑌵𑍇𑌦𑌾 𑌦𑍁𑌰𑍍𑌮𑍇𑌧𑍈𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌰𑍍𑌯𑌥𑌾 ।
𑌏𑌵𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑍃𑌪𑌣𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 ॥ 23

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑍋𑌚𑌰𑌾 ।
𑌕𑌰𑍍𑌮𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌿 𑌮𑍂𑌢𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌏𑌵𑌂 𑌭𑌵𑍇𑌦𑌿𑌹 ॥

வேதம் ருக், யஜுஸ், சாமம் அதர்வமென நான்கு பாகமாகப் பிரிக்கப் பட்டது. (பாரதம் இராமாயணம் முதலிய) இதிகாசங்களும் (வைஷ்ணவபாகவதம் முதலிய) புராணங்களும் ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன.

இவைகளில் ருக்வேதத்தை பைலர் என்பவர் அத்தியயனம் செய்தார். சாமவேதத்தைக் கவியாகிய ஜைமினி யென்பவர் அத்தியயனம் செய்தனர். யஜுர்வேதத்தை அத்தியயனம் செய்தவர் வைசம்பாயன முனிவர் ஒருவரே. அதர்வவேதத்தின் பிரிவினைகளைத் தெரிந்து கொண்டவர் குரூரமான † ஸுமந்து என்ற முனிவர். இதிகாசபுராணங்களைத் தெரிந்து கொண்டவர் என் தந்தையாகிய ‡ ரோமஹர்ஷணர் 21-22

பிறகு அந்த ரிஷிகள் தத்தம் வேதத்தை அநேக பிரிவுகளாக வகுத்தனர். பின்னர் அவர்களுடைய மாணாக்கர்கள் அவர்களுடைய மாணாக்கர்கள் அவர்களுடைய மாணாக்கர்கள் இவர்களாலும் வேதங்கள் பல பிரிவினைகளை யடைந்தன.

முந்தி மேதாவிகளறிந்து கொண்ட வேதங்களை புத்திக்குறைவுடையவர்கள் பிறகு தெரிந்து கொண்டார்கள். கிருபணர்களிடம் கொண்ட பரிதாபத்தால் வியாசபகவான் இவ்வாறு செய்தார். 24

மாதர்கள் சூத்திரர்கள் மற்ற மூன்று வருணத்தவர்களில் அதமர்களானவர்கள் இவர்களுக்கு வேதங்கள் பயன்படா. இவ்விதம் செய்தால் அவர்கள்

---

† கொடிய அபராதம் செய்ததால் ஸுமந்து எனப்பெயர் பெற்றார். அதர்வவேதம் ஆபிசாரவிதியைக் கூறுவது. அதைத் தெரிந்துகொண்டாராதலால் அபராதியானார்.

‡ இதிகாசம் முதலியவைகளில் பிரதிபாதிக்கப்படும் பகவானுடைய சொரூபானுபவத்தாலுண்டான ஆனந்தத்தால் மயிர்க்குச் செறிதலை யடைந்தவரானதால் அப்பெயர் பெற்றனர்.

𑌇𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍 ‖ 25½

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌯𑌦𑌾 𑌨𑌾𑌤𑍁𑌷𑍍𑌯𑌦𑍍𑌧𑍃𑌦𑌯𑌂 𑌤𑌤𑌃 ‖

𑌨𑌾𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌦𑍍𑌧𑍃𑌦𑌯𑌃 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌟𑍇 𑌶𑍁𑌚𑍌 ।
𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌯𑌨𑍍𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌥 𑌇𑌦𑌂 𑌚𑍋𑌵𑌾𑌚 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 ‖ 27½

𑌧𑍃𑌤𑌵𑍍𑌰𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌮𑌯𑌾 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌗𑍁𑌰𑌵𑍋𑌽𑌗𑍍𑌨𑌯𑌃 ।
𑌮𑌾𑌨𑌿𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌲𑍀𑌕𑍇𑌨 𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌚𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ‖

𑌭𑌾𑌰𑌤𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍇𑌨 𑌹𑍍𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌃 ।
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌪𑍍𑌯𑍁𑌤 ‖

𑌤𑌥𑌾𑌪𑌿 𑌬𑌤 𑌮𑍇 𑌦𑍈𑌹𑍍𑌯𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑍈𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌅𑌸𑌂𑌪𑌨𑍍𑌨 𑌇𑌵𑌾𑌭𑌾𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 ‖ 28-30½

𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌾𑌨𑌾𑌂 𑌤 𑌏𑌵 𑌹𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ‖ 31½

𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌂 𑌖𑌿𑌲𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌖𑌿𑌦𑍍𑌯𑌤𑌃 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌨𑌾𑌰𑌦𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌗𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ‖ 32½

நன்மை யடைவார்களெனக்கருதி வியாசமுனிவர் கருணையால் பாரதமென்னும் நூலைச்செய்தார். 25½

ஓ அந்தணர்களே ! ஜனங்கள் கீர்த்தியையடைவதில் எந்தக்காரியத்தைச் செய்தும் எப்போதும் இவ்விதம் விருப்பங்கொண்டு முயற்சிப்பாராயினும், அவருடைய மனம் சந்தோஷ மடையவில்லை. அப்பொழுது பரிசுத்தமான சரஸ்வதிக் கரையில் இருப்பினும் சிறிதும் தெளியாத மனதுடன் தருமங்களை யறிந்த வியாசமுனிவர் தனிமையிருந்து இது விஷயமாக ஆலோசனை செய்து கூறுகிறார். 27½

விருதங்களை யனுஷ்டித்துக் கொண்டு சாதுக்களையும் குருக்களையும் நான் சிறிதும் வஞ்சகமின்றிப் பூசித்தேன். ஆசிரியர்களின் ஆக்ஞைகளையும் பரிபாலித்தேன். மாதர்கள் சூத்திரர்கள் இவர்கள் கொள்ளத்தக்க தருமங்களைப் போதிக்கும் வேதப் பொருளை பாரதம் என்னும் நூலிற் காட்டினேன். அவ்விதம் செய்தும், எனது சரீரத்துள்ள ஜீவன் பிரஹ்மதேஜஸை யடைந்தவர்களுக்குள் சிரேஷ்டமேயாயினும் பரிபூர்ணமாயினும் பிரஹ்மத்தின் சாம்மியத்தை யடையாதவன் போல் காண்கிறேன். கஷ்டம்! 30½

பரமஹம்சர்களுக்குப் பிரியமான பாகவத தருமங்களைப் பெரும்பாலும் நிருபணம் செய்யவில்லையா ? அந்த தருமங்கள் தான் அச்சுதனுக்குப் பிரியமானவைகள். 31½

இவ்வாறு தம்மைச் சூன்யமாகக் கருதி வருத்தமுறும் வியாச முனிவரிடம் முற்கூறிய அவதாராச்சிரமத்தைக் குறிப்பிட்டு நாரத முனிவர் வந்தார்.

𑌤𑌮𑌭𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌸𑌹𑌸𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌯𑌾𑌗𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌪𑍂𑌜𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌿𑌧𑌿𑌵𑌨𑍍𑌨𑌾𑌰𑌦𑌂 𑌸𑍁𑌰𑌪𑍂𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ 33½

𑌇𑌤𑌿𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌅𑌥 𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌨 𑌉𑌪𑌾𑌸𑍀𑌨𑌂 𑌬𑍃𑌹𑌚𑍍𑌛𑍍𑌰𑌵𑌾𑌃 ।
𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌵𑌿𑌪𑍍𑌰𑌰𑍍𑌷𑌿𑌂 𑌵𑍀𑌣𑌾𑌪𑌾𑌣𑌿𑌃 𑌸𑍍𑌮𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 ॥ 1

𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌦𑌃 ॥

𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌭𑌵𑌤𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌶𑌾𑌰𑍀𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌾𑌨𑌸 𑌏𑌵 𑌵𑌾 ॥ 2

𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌂 𑌸𑍁𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌮𑌪𑌿 𑌤𑍇 𑌮𑌹𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।
𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌰𑌤𑌂 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌪𑌰𑌿𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 ॥ 3

𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌮𑌧𑍀𑌤𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌶𑍋𑌚𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥 𑌇𑌵 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥ 4

வியாசர் வந்த ரிஷியைத் தேவபூஜிதாராகிய நாரதரென்றறிந்து விரைவாக எழுந்து விதிப்படி பூஜித்தார். 33½

4-வது அத்தியாயம் முற்றிற்று.

5-வது அத்தியாயம்.

சூதபுராணிகர் கூறுகிறார்.

பிறகு மகாகீர்த்திவாய்ந்தவரும் வீணையைக் கையிலேந்தியவரும் தேவரிஷியுமாகிய நாரதமகாமுனிவர் தமக்கு அருகே யிருப்பவரும் சுகத்தை விரும்பியவரும் அந்தணசிரேஷ்டருமாகிய வியாசமுனிவரைச் சிறிது புன்னகையுடன் பார்த்துக் கூறுகிறார். 1

நாரதமுனிவர் வினவுகிறார்.

ஓ பாராசகுமாரரே! மகாபாக்கியம் செய்தவரே! சரீரத்தில் அபிமானமுடைய உம்முடைய ஆத்மா சரீரத்துடனும் மனதிற்கு அபிமானமாகிய ஆத்மா மனதுடனும் சந்தோஷமடைகிறதா? 2

நீர் தருமம் முதலிய அர்த்தங்கள் நிறையப்பெற்றதும் பெரிதானதும் ஆச்சரிய முள்ளதுமாகிய பாரதத்தைச் செய்தீரல்லவா? (அதனால்) அறிந்து கொள்ளவேண்டிய தருமம் முதலியவைகளைத் தெரிந்து கொண்டு அவ்விதமே அனுஷ்டித்து வருகிறீரா? 3

நித்தியமாகிய தருமசொரூபத்தைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர். பிரபுவே! அவ்விதமிருந்தும் பயனடையாதவர் போல் ஏன் துக்கப்படுகிறீர். 4

𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 ||

𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑌯𑍋𑌕𑍍𑌤𑌂
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑍇 𑌮𑍇 || 4

𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌗𑌾𑌧𑌬𑍋𑌧𑌂
𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌹𑍇 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌭𑌵𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌮𑍍 || 5

𑌸 𑌵𑍈 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦 𑌸𑌮𑌸𑍍𑌤𑌗𑍁𑌹𑍍𑌯𑌂
𑌉𑌪𑌾𑌸𑌿𑌤𑍋 𑌯𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 |
𑌪𑌰𑌾𑌵𑌰𑍇𑌶𑍋 𑌮𑌨𑌸𑍈𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂
𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌗𑍁𑌣𑍈𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 || 6

𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑍍𑌯𑌟𑌨𑍍𑌨𑌰𑍍𑌕 𑌇𑌵 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌂
𑌅𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌰𑍋 𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 |
𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌧𑌰𑍍𑌮𑌤𑍋 𑌵𑍍𑌰𑌤𑍈𑌃
𑌸𑍍𑌨𑌾𑌤𑌸𑍍𑌯 𑌮𑍇 𑌨𑍍𑌯𑍂𑌨𑌮𑌲𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑍍𑌵 || 7

𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌦𑌃 ||

𑌭𑌵𑌤𑌾𑌨𑍁𑌦𑌿𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌂 𑌯𑌶𑍋 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌮𑌲𑌮𑍍 |
𑌯𑍇𑌨𑍈𑌵𑌾𑌸𑍌 𑌨 𑌤𑍁𑌷𑍍𑌯𑍇𑌤 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌖𑌿𑌲𑌮𑍍 || 8
𑌯𑌥𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌯𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌾 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 |
𑌨 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌹𑍍𑌯𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌃 || 9

வேதவியாசர் கூறுகிறார்.

நாரதரே! நீர் சொன்னவைகள் யாவும் என்னிடமிருக்கின்றன. அவ்விதமிருந்தும் (சரீராபிமானியும் மனதின் அபிமானியுமாகிய) என்னுடைய ஆத்மா சந்தோஷிக்கவில்லை. அதன் காரணம் விளங்கவில்லை. பிரமதேவரின் புத்திரரும் கம்பீரமான ஞானமுடையவருமாகிய தங்களை அதைப்பற்றிக் கேட்கின்றேன்.

காரிய காரணங்களை நியமனஞ் செய்கின்ற புராண புருஷன், தன்மனச் சங்கற்பத்தால் (பிரகிருதியின் குணங்களில்) பற்றுதலடையாமலே பிரபஞ்சத்தைப் படைத்துப் பரிபாலித்துச் சங்கரிக்கிறான். தாங்கள் அந்தப் பரமபுருஷனை யுபாசிப்பதால் வேதாந்த இரகசியத்தைத் தெரிந்து கொண்டவராகிறீர். உண்மையிது. 6

மூவுலகங்களிலும் சஞ்சரிக்கும் சூரியனைப் போல் எல்லாவற்றையும் பார்ப்பவர் நீர். பிராணவாயுவை யொத்து (யோகபலத்தால் பிராணிகளின்) மனதில் சஞ்சரித்துக் கொண்டு ஆத்மசாக்ஷியாக விளங்குகிறீர். யோகத்தால் பரபிரஹ்மத்தினிடமும் நியமங்களால் வேதங்களிலும் மிகுந்த ஆவலுள்ள எனக்கு மிகவும் குறைவுள்ள (அறிய வேண்டிய) விஷயத்தைக் கூறவேண்டும். 7

நாரதர் கூறுகிறார்.

பகவானாகிய வாசுதேவருடைய மகிமையை நீர் பெரும்பான்மையும் வர்ணிக்கவில்லை யாதலால், அவர் உம்மிடம் சந்தோஷமடையவில்லை. அதனால் உமது ஞானம் சூன்யமாயிற்றென்றெண்ணுகிறேன். 8

ஓ முனிசிரேஷ்டரே! தர்மம் முதலிய புருஷார்த்தங்களையும் அவைகளுக்குரிய சாதனங்களையும் வர்ணித்தது போல் வாசுதேவருடைய மகிமையையும் முக்கியமாகக் கொண்டு நீர் வர்ணிக்கவில்லை. 9

𑌨 𑌯𑌦𑍍𑌵𑌚𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌦𑌂 𑌹𑌰𑍇𑌰𑍍𑌯𑌶𑍋
𑌜𑌗𑌤𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌗𑍃𑌣𑍀𑌤 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌾𑌯𑌸𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌶𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾
𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌹𑌂𑌸𑌾 𑌨𑌿𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌶𑌿𑌕𑍍𑌕𑍍𑌷𑌯𑌾𑌃 ॥ 10

𑌤𑌦𑍍𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑍋 𑌜𑌨𑌤𑌾𑌘𑌵𑌿𑌪𑍍𑌲𑌵𑍋
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌲𑍋𑌕𑌮𑌬𑌦𑍍𑌧𑌵𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌨𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯𑌯𑌶𑍋𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌨𑌿𑌯
𑌚𑍍𑌛𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌵𑌃 ॥ 11

𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌪𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤𑌭𑌾𑌵𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂
𑌨 𑌶𑍋𑌭𑌤𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌲𑌂 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌕𑍁𑌤𑌃 𑌪𑍁𑌨𑌃𑌶𑌶𑍍𑌵𑌦𑌭𑌦𑍍𑌰𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍇
𑌨𑌚𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌂𑌕𑌰𑍍𑌮𑌯𑌦𑌪𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥ 12

---

*உலகத்திற்குப் பரிசுத்தமுண்டாகும் விஷ்ணுவின் கீர்த்தியை உட்கொள்ளாத வாக்கியங்கள் விசித்திரமான பதங்களையுடையதாயிருந்தாலும் அவைகளை, சத்வகுணத்தை முக்கியமாகக் கொண்ட மனமுடையவர்களும் மனோஜ்ஞமான பிரஹ்மசொரூபத்தை வாசஸ்தானமாகக் கொண்டவர்களுமாகிய சன்னியாசிகள் விரும்புவதில்லை. காக்கையை யொத்த காமிகளுக்கு விருப்பத்தைத் தரக் கூடியதென நினைத்து அன்பு பாராட்டுவதில்லை. 10

சுலோகம் பிழையுள்ளதாயினும் அதிலுள்ளவார்த்தைகள் அனந்தனுடைய மகிமையின் குறிப்புள்ள நாமங்களின் சம்பந்த முடையதாயின் அப்படிப்பட்ட பிரயோகம் ஜனங்களுடைய பாபக்குவியலை யொழிக்கும். ஏனெனில், சாதுக்கள் பகவானுடைய நாமங்களைச் (சொல்லுகிறவனிருந்தால்) சிரவணம் செய்வார்கள். (சிரவணம் செய்பவனிருந்தால்) தோத்திரம் செய்வார்கள். (சொல்லுகிறவன் சிரவணம் செய்கிறவன் இருவருமில்லாவிடில்) தாங்களே கீர்த்தனம் செய்வார்கள். 11

உபாதியற்ற பிரஹ்மசொரூப ஞானமும் அச்சுதனிடம் பக்தியில்லாவிடில் சோபிக்காது. (அப்படியிருக்க) எப்போதும் துக்கத்தைக் கொடுக்கும் † காமியம் ‡ அகாமியம் ஆகிய இருகர்மங்களும் ஈசுவரபக்தியில்லாவிடில் எப்படிச் சோபிக்கும். 12

---

* இந்த சுலோகம் சத்வகுணம் என்பது முதல் முடியச் சிலேடையாகப் பொருள்படக்கூடியது மானஸஸரஸில் சஞ்சரிக்கும் மகிமை பொருந்திய அன்னங்கள் மனோஜ்ஞமான தாமரைக் குவியலைவிட்டு காக்கைகள்போல் விசித்திரமான அன்னங்களுள்ள எச்சிற் குழியுள் சஞ்சரிக்க விரும்புமா?

கோவிந்தனுடைய குணசம்பந்தமில்லாத வாக்கியங்களைப் பெரியோர்கள் விரும்பார்கள் என்பது கருத்து.

† காமியம்- சொர்க்காதி சுகத்தை விரும்பிச் செய்யும் கருமம்.

‡ அகாமியம் - சொர்க்காதி சுகத்தை விரும்பாமல் கருமங்களைச்செய்து அவைகளை ஈசுவரார்ப்பணம் செய்தல்

𑌅𑌥𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌭𑌵𑌾𑌨𑌮𑍋𑌘𑌦𑍃𑌕𑍍
𑌶𑍁𑌚𑌿𑌶𑍍𑌰𑌵𑌾𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌰𑌤𑍋 𑌧𑍃𑌤𑌵𑍍𑌰𑌤𑌃 ।
𑌉𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯𑌾𑌖𑌿𑌲𑌬𑌨𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇
𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌯𑌦𑍍𑌵𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ॥ 13

𑌤𑌤𑍋 𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌨 𑌯𑌦𑍍𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌤𑌃
𑌪𑍃𑌥𑌗𑍍𑌦𑍃𑌶𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌰𑍂𑌪𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 ।
𑌨𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍𑌕𑍍𑌵𑌾𑌪𑌿𑌚𑌦𑍁𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑌤𑌿
𑌲𑌭𑍇𑌤𑌵𑌾𑌤𑌾𑌹𑌤𑌨𑍌𑌰𑌿𑌵𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑍍 ॥ 14

𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍇𑌽𑌨𑍁𑌶𑌾𑌸𑌤𑌃
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌯𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑍋𑌧𑌰𑍍𑌮𑌇𑌤𑍀𑌤𑌰𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋
𑌨 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌂𑌜𑌨𑌃 ॥ 15

𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 𑌕𑍋𑌽𑌰𑍍𑌹𑌤𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌂 𑌵𑌿𑌭𑍋
𑌰𑌨𑌨𑍍𑌤𑌪𑌾𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑌸𑍍𑌸𑍁𑌖𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑍈𑌰𑌨𑌾𑌤𑍍𑌮𑌨
𑌸𑍍𑌤𑌤𑍋 𑌭𑌵𑌾𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌯 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 𑌵𑌿𑌭𑍋𑌃 ॥ 16

ஆகையால் மகாபாக்கியம் செய்தமுனிவரே! பயன்தரும் அறிவினையும் பரிசுத்தமான கீர்த்தியையும் சத்திய சொரூபத்தில் அன்பினையும் விருதாநுஷ்டானங்களையுமுடைய தாங்கள், பந்தங்களினின்றும் விடுபடுவதற்கு மனத்தை நிலைநிறுத்தி வாசுதேவனுடைய லீலாவிசேஷங்களை ஸ்மரணம்செய்துகொண்டு வர்ணிக்கவேண்டும். 13

பகவானுடைய குணங்களை வர்ணிப்பதொழித்து வேறு நோக்கங்கொண்டு மற்றதெதையேனும் வர்ணிக்க எண்ணங்கொண்டவனுக்கு அந்த எண்ணத்தால் தோன்றும் ரூபங்களாலும் நாமங்களாலும் அவனுடைய அறிவானது கெட்ட காற்றினால் நிலைபெறாத ஓடத்தையொத்து எந்த இடத்திலும் எப்போதும் நிலை கொள்ளாது. 14

இயற்கையாகவே அனுராகமுள்ள மானுடர்களுடைய தருமங்களைக் குறித்து நிந்திக்கத்தக்க காமியகருமம் முதலியவற்றை வர்ணித்த தங்களுக்கு சாஸ்திரமரியாதை மீறின பெருந் தோஷமுண்டாயிற்று. ஏனெனில் பிராகிருத ஜனங்கள் உம்முடைய வாக்கியங்களைப் பார்த்து இதுதான் தருமமென நிச்சயித்து, (வேதங்களில் கூறியுள்ள) காமியகருமம் நிவர்த்திக்கப் பட்டிருப்பதை உண்மையென்று எண்ணுவதில்லை. 15

கால தேசத்தால் முடிவுறாத வியாபகராகிய பகவானுடைய (விகற்பமற்ற) ஆநந்த சொரூபத்தைச் சாமர்த்திய முள்ளவன் எவனோ அவன் நிவிருத்திமார்க்கத்தால் தெரிந்து கொள்கிறான். ஆகையால் (சத்துவம் முதலிய) குணங்களால் பிரவிருத்தி கருமத்தின் சுவபாவமுடைய தேகம் முதலியவைகளில் அபிமானமுடைய ஜனங்களுக்குப் பிரபுவினுடைய லீலைகளைக் காட்டியருளுங்கள். 16

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌹𑌰𑍇
𑌰𑍍𑌭𑌜𑌨𑍍𑌨𑌪𑌕𑍍𑌵𑍋𑌽𑌥 𑌪𑌤𑍇𑌤𑍍𑌤𑌤𑍋 𑌯𑌦𑌿 ।
𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌵 𑌵𑌾𑌭𑌦𑍍𑌰𑌮𑌭𑍂𑌦𑌮𑍁𑌷𑍍𑌯 𑌕𑌿𑌂
𑌕𑍋 𑌵𑌾𑌰𑍍𑌥 𑌆𑌪𑍍𑌤𑍋𑌽𑌭𑌜𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌤𑌃 ॥ 17

𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌹𑍇𑌤𑍋𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍇𑌤 𑌕𑍋𑌵𑌿𑌦𑍋
𑌨 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌯𑌦𑍍𑌭𑍍𑌰𑌮𑌤𑌾𑌮𑍁𑌪𑌰𑍍𑌯𑌧𑌃 ।
𑌤𑌲𑍍𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌦𑍁𑌃𑌖𑌵𑌦𑌨𑍍𑌯𑌤𑌃 𑌸𑍁𑌖𑌂
𑌕𑌾𑌲𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌗𑌭𑍀𑌰𑌰𑌂𑌹𑌸𑌾 ॥ 18

𑌨 𑌵𑍈 𑌜𑌨𑍋 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨𑌾𑌵𑍍𑌰𑌜𑍇𑌨𑍍
𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌸𑍇𑌵𑍍𑌯𑌨𑍍𑌯𑌵𑌦𑌙𑍍𑌗 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌮𑍍 ।
𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑍍𑌯𑍁𑌪𑌗𑍂𑌹𑌨𑌂 𑌪𑍁𑌨
𑌰𑍍𑌵𑌿𑌹𑌾𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑍇𑌨𑍍𑌨 𑌰𑌸𑌗𑍍𑌰𑌹𑍋 𑌜𑌨𑌃 ॥ 19

மானிடன் தனக்குரிய தருமத்தை யொழித்து ஹரியின் பாதகமலத்தை பஜனம் செய்து கொண்டேயிருந்து பரிபாகமடையாமலே மரணமடைந்தாளு கில், பிறகு அவன் எந்த நீசயோனியில் ஜனித்தானுயினும் குறைவடைவதேது? பகவானுடைய பாதகமலத்தை பஜனம் செய்யாமலே தனக்குரிய தருமங்களை யனுஷ்டிக்கும் மானிடன் அடைந்த பிரயோசனம் யாது? 17

ஸ்தாவரமிருக்கும் ஸ்தான முதல் பிர்ம்மதேவர் வரையிலுமுள்ள யாவரும் அடையமுடியாத பதத்தையடைவதற்கே முயற்சிக்கவேண்டும். விஷயசுகமென்பது முன்செய்த தீவினையால் நாகமுதலியவைகளை யனுபவிப்பது போல் முன் செய்த நல்வினையால் அனுபவிக்கக்கூடியது. அந்த அனுபவமானது கம்பீர மான வேகமுடைய காற்ருலேற்படுகிறது. 18

முகுந்தனிடத்தில் பக்திசெலுத்தும் மானிடன் தாழ்ந்த ஜாதியையடைந்தானுயினும் எப்போதும் கருமஞ் செய்பவனைப்போல் சம்சாரத்தில் பந்தப்படமாட்டான். ஏனெனில் பகவானுடைய சரணாரவிந்தரஸத்தை யனுபவித்த தாலுண்டாகும் நிகரற்ற சுகத்தை யடைவதால் முகுந்தனுடைய சரணகமலங்களை ஸ்மரித்துக் கொண்டேயிருப்பான். மீண்டும் அந்த இன்பத்தை விடுவதற்கு விருப்பங்கொள்ளான்.. 19

17-வது சுலோகத்தின் கருத்து - பஜனம் செய்பவன் நீசஜாதியில் பிறந்தாலும் கெடுதியடையான். பஜனம் செய்யாமல் கேவல தருமங்களை மட்டும் அனுஷ்டிப்பவனுக்கு இடையூறுண்டாமென்பது கருத்து.

18-வது சுலோகத்தின் கருத்து - விஷய சுகத்திற்கு முயற்சிசெய்யாமல் சாசுவதமான பதமடைய முயலவேண்டும்.

𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌵𑍇𑌤𑌰𑍋
𑌯𑌤𑍋𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌨𑌿𑌰𑍋𑌧𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 ।
𑌤𑌦𑍍𑌧𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑍇𑌦 𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑌿𑌤𑍇
𑌪𑍍𑌰𑌾𑌦𑍇𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 ॥ 20

𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑍇𑌹𑍍𑌯𑌮𑍋𑌘𑌦𑍃𑌕𑍍
𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌂𑌸𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑌲𑌾𑌮𑍍 ।
𑌅𑌜𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑌂 𑌜𑌗𑌤𑌃 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌤𑌤𑍍
𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑍋𑌽𑌧𑌿𑌗𑌣𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥ 21

𑌇𑌦𑌂𑌹𑌿 𑌪𑍁𑌂𑌸𑌸𑍍𑌤𑌪𑌸𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾
𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑌤𑍍𑌤𑌯𑍋𑌃 ।
𑌅𑌵𑌿𑌚𑍍𑌯𑍁𑌤𑍋𑌽𑌰𑍍𑌥𑌃 𑌕𑌵𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑍋
𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑍍 ॥ 22

𑌅𑌹𑌂 𑌪𑍁𑌰𑌾𑌤𑍀𑌤𑌭𑌵𑍇𑌽𑌭𑌵𑌂 𑌮𑍁𑌨𑍇
𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌨 𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑍋 𑌬𑌾𑌲𑌕 𑌏𑌵 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌷𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌷𑌤𑌾𑌮𑍍 ॥ 23

எந்த பரமபுருஷனிடம் பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி சங்காரங்கள் ஏற்படுகின்றனவோ அந்த பரமபுருஷன் அவதாரமாகிய நீர் பிராகிருத மானிடனைப் போலாகிறீர். நீர் எல்லாம் உணர்ந்தவர். ஆகையால் நான் உமக்குச் சிறிது ஞாபகமூட்டினேன். 20

பயன்றரத்தக்க ஞான முடையவரே! நீர்தான் பரமாத்மா வாகிய பரம புருஷனுடைய அம்சம். உமக்குப் பிறப்பில்லை யாயினும் உலகத்திற்கு மங்கள முண்டாக்க அவதரித்தவர். இதைநீர் தெரிந்து கொள்ளும். ஆகையால் மகானுபாவனாகிய பகவானுடைய திவ்ய லீலைகளைப்பற்றி வர்ணிக்க வேண்டும். 21

கவிகள் உத்தம சுலோகனுடைய குணங்களை வர்ணிப்பதையே மானிடர்களின் தவம் சாஸ்திராப் பியாசம், யாகம், § பூர்த்தம், நன் மொழிகள், தானம் இவைகளின் அழிவற்ற பிரயோசன மென நிரூபித் திருக்கிறார்கள். 22

நான்முன் கற்பத்தில் வேதாப்பியாசம் செய்பவர் களுக்கு வேலைக்காரி யாகிய ஓர் மாதுக்குப் புத்திரனாகப் பிறந்தேன். குழந்தையா யிருக்கும் போதே வருஷா காலத்தில் ¶ சாதுர்மாஸ்ய விருதத்தை யனுஷ்டிக்க ஒரே இடத்தில்வாசம்

20-வது - உமக்குத் தெரியாததைக் கூறவில்லை. தெரிந்த விஷயத்தையே ஞாபகப் படுத்தினேன் என்பது கருத்து.

§ பூர்த்தம் - அன்னதானம் குளம் வெட்டுதல் முதலிய தருமங்கள்.

¶ சாதுர் மாஸ்ய விருதம்-துறவிகள் மழைகாலம் நான்குமாதம் வரையில் ஒரே இடத்திலிருந்து அனுஷ்டிக்கும் விருதத்திற்குப் பெயர்.

𑌤𑍇 𑌮𑌯𑍍𑌯𑌪𑍇𑌤𑌾𑌖𑌿𑌲𑌚𑌾𑌪𑌲𑍇𑌽𑌰𑍍𑌭𑌕𑍇
𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌧𑍃𑌤𑌕𑍍𑌰𑍀𑌡𑌨𑌕𑍇𑌽𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌿 ।
𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 𑌕𑍃𑌪𑌾𑌂 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑍁𑌲𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌮𑌾𑌣𑍇 𑌮𑍁𑌨𑌯𑍋𑌽𑌲𑍍𑌪𑌭𑌾𑌷𑌿𑌣𑌿 ॥ 24

𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌲𑍇𑌪𑌾𑌨𑌨𑍁𑌮𑍋𑌦𑌿𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃
𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌮 𑌭𑍁𑌞𑍍𑌜𑍇 𑌤𑌦𑌪𑌾𑌸𑍍𑌤𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌃 ।
𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌸
𑌸𑍍𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮 𑌏𑌵𑌾𑌤𑍍𑌮𑌰𑍁𑌚𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ 25

𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌹𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌗𑌾𑌯𑌤𑌾
𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑌾𑌶𑍃𑌣𑌵𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌃 ।
𑌤𑌾𑌶𑍍𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌮𑍇𑌽𑌨𑍁𑌪𑌦𑌂 𑌵𑌿𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌰𑌵𑌸𑍍𑌯𑌙𑍍𑌗𑌮𑌮𑌾𑌭𑌵𑌦𑍍𑌰𑍁𑌚𑌿𑌃 ॥ 26

𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑌦𑌾𑌲𑌬𑍍𑌧𑌰𑍁𑌚𑍇𑌰𑍍𑌮𑌹𑌾𑌮𑌤𑍇
𑌪𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌰𑌵𑌸𑍍𑌯𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌾𑌮𑌤𑌿𑌰𑍍𑌮𑌮 ।
𑌯𑌯𑌾𑌹𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌦𑌸𑌤𑍍𑌸𑍍𑌵𑌮𑌾𑌯𑌯𑌾
𑌪𑌶𑍍𑌯𑍇𑌮𑌯𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌪𑌰𑍇 ॥ 27

செய்யவிரும்பிய வர்களான யோகிகளாகிய துறவிகளுக்குப் பணிவிடை செய்யத் தலைப்பட்டேன். 23

அந்த முனிசிரேஷ்டர்களாகிய யோகிகள் எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பவர்களாயினும் சபலத் தன்மையை யொழித்தவனும் விளையாடுவதற்குரிய வஸ்துக்களை யபேக்ஷிக்காதவனும் இந்திரிய நிக்ரகம் செய்தவனும் அனுகூலனும் மிதமாகச் சம்பாஷணை செய்பவனுமாகிய என்னிடம் கருணை கூர்ந்து அபிமானித்து வந்தார்கள். 24

பாத்திரங்களில் மிச்சமான அன்னங்களை அந்த அந்தணர்களுடைய அனுமதியின் பேரில் ஒருமுறை புசிப்பேன். அதனால் பாபங்களையொழிப்பேன். இங்ஙனம் அனுஷ்டித்து வந்தமையால் மனத்தெளிவு பெற்று அந்தத்துறவிகள் செய்துவந்த பரமேசுவர பஜனத்திலேயே மனதிற்குப் பிரீதியுண்டாயிற்று. 25

ஓ முனிவரே! அங்கு அந்தத்துறவிகள் கிருஷ்ணனுடைய கதைகளைக் கானம் செய்வார்கள். நான் அப்பொழுது சிரவணம் செய்து கொண்டிருப்பேன். மனதை அபகரிக்கும் அந்த பகவானுடைய சரித்திரங்களை எப்போதும் எனக் கேற்பட்ட சிரத்தைக் குறைவன்றிச் சிரவணம் செய்து வந்தேன். அப்படிப்பட்ட எனக்கு அம்முனிபுங்கவர்களுடைய அனுக்கிரகத்தால் பகவானுடைய லீலாவிசேஷங்களைக் கேட்பதில் மிகுந்த ஆவலுண்டாயிற்று. 26

அறிவிற் சிறந்த வியாசமுனிவரே! அன்பை யுண்டாக்கும் கதாசிரவணமுடைய அந்தப் பரமபுருஷனிடம் அன்பையடைந்த எனக்குத் தடைபடாத அறி

இத்தம் ஶரத்ப்ராவ்ருஷிகாவ்ருதூ ஹரேர்
விஶ்ருண்வதோ மேऽநுஸவம் யஶோऽமலம் ।
ஸங்கீர்த்யமாநம் முநிபிர்மஹாத்மபி
ர்பக்தி: ப்ரவ்ருத்தாத்மரஜஸ்தமோபஹா ॥ 28

தஸ்யைவம் மேऽநுரக்தஸ்ய ப்ரஶ்ரிதஸ்ய ஹதைநஸ: ।
ஶ்ரத்தயாநஸ்ய பாலஸ்ய தாந்தஸ்யாநுசரஸ்ய ச ॥

ஜ்ஞாநம் குஹ்யதமம் யத்தத்ஸாக்ஷாத்பகவதோதிதம் ।
அந்வவோசந் கமிஷ்யந்த: க்ருபயா தீநவத்ஸலா: ॥ 29-30

யேநைவாஹம் பகவதோ வாஸுதேவஸ்ய வேதஸ: ।
மாயாநுபாவமவிதம் யேந கச்சந்தி தத்பதம் ॥ 31

ஏதத்ஸம்ஸூசிதம் ப்ரஹ்மம்ஸ்தாபத்ரயசிகித்ஸிதம் ।
யதீஶ்வரே பகவதி கர்ம ப்ரஹ்மணி பாவிதம் ॥ 32

வுண்டாயிற்று. என்னுடைய அந்த அறிவால் பிரபஞ்சாதீதமாகிய பிரஹ்ம சொரூபமான என்னிடம் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் அவித்தையாலான கற்பித மென்று நான் பார்க்கிறேன். 27

இவ்வாறு சரத்காலத்திலும் வருஷாகாலத்திலும் நாடோறும மூன்று காலங்களிலும் மகாத்மாக்களாகிய முனிவர்கள் தோத்திரஞ் செய்யும் நிர்மல மான ஹரியின் குணங்களைச் சிரவணம் செய்து வந்த எனக்கு மனதில் உள்ள ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் போக்குகிற பக்தியுண்டாயிற்று. 28

அனுராகம், வணக்கம், சிரத்தை இந்திரிய நிக்கிரகம் பணிவிடை செய்த லாதி குணங்களுடையவனும் பாலனும், பாபமற்றவனுமாகிய என்னிடம் தீனர் களிடம் இரக்கமுடைய அந்த முனிவர்கள் கருணை கூர்ந்து, தாங்கள் வேறி டம் செல்லும்போது ஸ்தூலசூக்ஷ்ம சரீரவிவேசன ஞானத்திற்கும் மேலான ஈசுவரதத்துவ சொரூபஞான மடங்கிய இந்த பாகவதசாஸ்திரத்தை யுபதேசித் தார்கள். 29-30

பிரபஞ்சத்தைப் படைத்தவரும் மகிமை பொருந்தியவருமாகிய வாசு தேவருடைய மாயையின் தன்மையை அந்த ஞானத்தால் நான் தெரிந்து கொண்டேன். அவ்விதம் தெரிந்து கொண்டவர்கள் அந்த வாசுதேவனுடைய பதத்தையடைகிறார்கள். 31

ஏ பிரஹ்மசொரூப மறிந்தவரே ! மகிமையுள்ளவரும் எல்லாருக்கும் சிக்ஷ கருமாகிய பிரஹ்மத்தினிடம் அர்ப்பணஞ் செய்த கருமம் மூன்று தாபங் களுக்கும் ஔஷதமாகுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 32

𑌆𑌮𑌯𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌯𑍇𑌨 𑌸𑍁𑌵𑍍𑌰𑌤 |
𑌤𑌦𑍇𑌵 𑌹𑍍𑌯𑌾𑌮𑌯𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌪𑍁𑌨𑌾𑌤𑌿 𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌿𑌤𑌮𑍍 ||

𑌏𑌵𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑍋𑌗𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌹𑍇𑌤𑌵𑌃 |
𑌤 𑌏𑌵𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 𑌪𑌰𑍇 || 33-34

𑌯𑌦𑌤𑍍𑌰 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌤𑍋𑌷𑌣𑌮𑍍 |
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑌧𑍀𑌨𑌂 𑌹𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 || 35

𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌿𑌕𑍍𑌷𑌯𑌾𑌸𑌕𑍃𑌤𑍍 |
𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿 𑌗𑍁𑌣𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌿 𑌚 || 36

𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 |
𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑌾𑌯 𑌚 ||

𑌇𑌤𑌿 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌨𑍇𑌨 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌕𑌮𑍍 |
𑌯𑌜𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 || 37-38

விருதசீலரே ! பிராணிகளுக்கு நெய் முதலிய பதார்த்தங்கள் வியாதியை யுண்டாக்குமே தவிர அந்த வஸ்துவானது வியாதியைப் போக்காது. அவைகளில் ஏதாவது வேறொன்றைக் கலந்துபயோகிக்கின் அவைகளே வியாதியை யொழிக்கும். அது போலவே ஜனன மரணமாகிய ஸம்ஸாரத்தைக் கொடுப்பதற்குக் காரணமாகிய கருமங்களைப் பரம புருஷனிடம் அர்ப்பணம் செய்தால் அந்தக் கர்மங்களே நிவர்த்திக்கும் காரணமாகின்றன. 33-34

பகவானுக்கு மகிழ்ச்சியுண்டாகும் கருமங்களைச் செய்து அவைகளைப் பகவானிடமே அர்ப்பணம் செய்யவேண்டும். அப்பொழுதுபக்தியோகத்துடன் கூடிய ஞானம் உண்டாகும். 35

பெரியோர்கள் பகவானுடைய கட்டளைப்படி அடிக்கடி கருமங்களைச் செய்யும் போது அந்த பகவானாகிய கிருஷ்ணனுடைய குணங்களையும் நாமங்களையுந் துதிக்கிறார்கள். கிருஷ்ணனைச் சிந்திக்கிறார்கள். 36

*பகவானும் வாசுதேவனும் பிரத்யும்னனும் அனிருத்தனும் ஸங்கர்ஷணனுமாகிய உன்னை மனதால் நமஸ்கரிக்கின்றோம் என்ற இம்மந்திரத்தை ஜபம் செய்து மந்திர மூர்த்தியும் (மந்திரத்தில் கூறியதைத்தவிர மற்ற) மூர்த்தியில்லாதவரும் யக்ஞ புருஷருமாகிய ஈசுவரனைப் பூசிப்பவன் நல்ல அறிவுடையவனாகிறான். 37-38

---

* முதலாவது பெரியோர்களின் சேவை ; அதனால் அவர்களுடைய கருணைபெறுவது ; பிறகு தருமமனுஷ்டிப்பதில் சிரத்தை ; பிறகு பகவானுடைய கதா சிரவணஞ்செய்தல் பிறகு பகவானிடம் மிகுதியான அன்பு அதனால் ஸ்தூல சூக்ஷ்மத்தின் பகுத்தறிவுள்ள ஆத்ம ஞானம் ; பிறகு திடமான பக்தி ; பிறகு பகவானுடைய தத்துவஞானம், பிறகு அவருடைய கிருபையால் பகவத்குணங்களுண்டாதல் முதலிய கிரமங்களைக் காண வேண்டும்.

𑌇𑌮𑌂 𑌸𑍍𑌵𑌨𑌿𑌗𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍𑌨𑌵𑍇𑌤𑍍𑌯 𑌮𑌦𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌦𑌾𑌨𑍍𑌮𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌭𑌾𑌵𑌞𑍍𑌚𑌕𑍇𑌶𑌵𑌃 ॥ 39

𑌤𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌦𑌭𑍍𑌰𑌶𑍍𑌰𑍁𑌤 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌵𑌿𑌭𑍋𑌃
𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌯𑍇𑌨 𑌵𑌿𑌦𑌾𑌂 𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌦𑍁𑌃𑌖𑍈𑌰𑍍𑌮𑍁𑌹𑌰𑌰𑍍𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂
𑌸𑌂𑌕𑍍𑌲𑍇𑌶𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍁𑌶𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ॥ 40

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌏𑌵𑌂 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑍇𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 ।
𑌭𑍂𑌯𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍀𑌸𑍁𑌤𑌃 ॥ 1

𑌶𑍍𑌰𑍀𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 ॥

𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌵𑌸𑌿𑌤𑍇 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌷𑍍𑌟𑍃𑌭𑌿𑌸𑍍𑌤𑌵 ।
𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌵𑌯𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍇 𑌤𑌤𑌃 𑌕𑌿𑌮𑌕𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 ॥ 2
𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵 𑌕𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌤𑍇 𑌪𑌰𑌂 𑌵𑌯𑌃 ।
𑌕𑌥𑌂𑌚𑍇𑌦𑌮𑍁𑌦𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍀𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ॥ 3

ஓ வியாசமுனிவரே! கேசவன்தாமுபதேசித்த இந்த விஷயத்தை நான னுஷ்டித்ததறிந்து எனக்கு ஞானத்தையும் (அணிமை முதலிய) ஐச்வரியத் தையும் தம்மிடம் பிரீதியையும் கொடுத்தார். 39

மிகுதியான சாஸ்திராப்பியாசமுள்ள முனிவரே! அடிக்கடி துக்கத்தால் துன்பமுற்ற மனமுடையவர்களும் கிலேச நிவிருத்தியை வேறு விதமாக நினைக் காதவர்களுமாகிய வித்வான்களுக்குத் தெரிந்து கொள்ள விருப்பமுண்டாகும் படி பிரபுவாகிய கிருஷ்ணனுடைய மகிமையை வர்ணிக்க வேண்டும். 40

5-வது அத்தியாயம் முற்றிற்று.

6-வது அத்தியாயம்.

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

ஓ சௌனகமுனிவரே! ஸத்தியவதிக்குப் புத்திரரும் மகிமை பொருந் தியவருமாகிய வியாசமுனிவர் தேவரிஷியாகிய நாரத முனிவரின் ஜன்மத்தை யும் கர்மத்தையும் இவ்விதந் தெரிந்து கொண்டு மீண்டும் அந்த முனிவரைக் கேட்கிறார். 1

வியாசர் கேட்கிறார்.

பிர்ஹ்மத்தின் தத்வசொரூபத்தை யுபதேசம் செய்த துறவிகள் தூர தேசத்திற்குச் சென்ற பின்பு இளம் வயதினராகிய நீர் என்ன செய்தீர். 2

ஓபிரமபுத்திரரே! தாங்கள் தங்களுடைய வயது காலத்தில் எந்தத் தொழி லையனுசரித்து வந்தீர்கள்? காலங் கடந்த பின்னர் வேலைக்காரிக்குப் புத்திரனாக விருந்த தங்களுடைய சரீரத்தை எவ்வித மொழித்தீர்கள்? 3

𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌷𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌂𑌤𑍇𑌸𑍁𑌰𑌸𑌤𑍍𑌤𑌮 ।
𑌨𑌹𑍍𑌯𑍇𑌷𑌵𑍍𑌯𑌵𑌧𑌾𑌤𑍍𑌕𑌾𑌲 𑌏𑌷𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ॥ 4

𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌦𑌃 ॥

𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌵𑌸𑌿𑌤𑍇𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌷𑍍𑌟𑍃𑌭𑌿𑌰𑍍𑌮𑌮 ।
𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌵𑌯𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍇𑌤𑌤𑌏𑌤𑌦𑌕𑌾𑌰𑌿𑌷𑌮𑍍 ॥ 5

𑌏𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 𑌮𑍇 𑌜𑌨𑌨𑍀𑌯𑍋𑌷𑌿𑌨𑍍𑌮𑍂𑌢𑌾𑌚𑌕𑌿𑌂𑌕𑌰𑍀 ।
𑌮𑌯𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍇𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌾𑌵𑌚𑌕𑍍𑌰𑍇 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ 6

𑌸𑌾𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌕𑌲𑍍𑌪𑌾𑌸𑍀𑌦𑍍𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌮𑌮𑍇𑌚𑍍𑌛𑌤𑍀 ।
𑌈𑌶𑌸𑍍𑌯𑌹𑌿𑌵𑌶𑍇𑌲𑍋𑌕𑍋 𑌯𑍋𑌷𑌾𑌦𑌾𑌰𑍁𑌮𑌯𑍀𑌯𑌥𑌾 ॥ 7

𑌅𑌹𑌂𑌚𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍁𑌲𑍇 𑌊𑌷𑌿𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑍁𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌦𑌿𑌗𑍍𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌾𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍋𑌬𑌾𑌲𑌕𑌃 𑌪𑌂𑌚𑌹𑌾𑌯𑌨𑌃 ॥ 8

𑌏𑌕𑌦𑌾𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾𑌂 𑌗𑍇𑌹𑌾𑌦𑍍𑌦𑍁𑌹𑌨𑍍𑌤𑍀𑌂 𑌨𑌿𑌶𑌿𑌗𑌾𑌂𑌪𑌥𑌿 ।
𑌸𑌰𑍍𑌪𑍋𑌽𑌦𑌶𑌤𑍍𑌪𑌦𑌾𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 𑌕𑍃𑌪𑌣𑌾𑌂 𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃 ॥ 9

ஓ தேவ சிரேஷ்டரே! சகலத்தையும் ஒழிக்கும் இந்தக் காலமானது முந்திய கற்ப சம்பந்தமான தங்களுடைய அறிவை ஏன் கண்டிக்க வில்லை. 4

நாரதமுனிவர் கூறுகிறார்.

எனக்கு விக்ஞான சொரூபத்தை உபதேசஞ் செய்த மகான்கள், சென்ற பின்பு, எனது யௌவன வயதிலிருந்து (ஹரியின் குணங்களைத் துதித்தல்) இந்தத் தொழிலையே செய்து வந்தேன். 5

என் அன்னைக்கு நான் ஒருவனே புத்திரன். ஸ்திரீயாகையால் சுதந்தர மில்லாமலும் செய்யவேண்டிய காரியங்களில் யாதொரு முயற்சி யெடுத்துக் கொள்ளாமலு மிருந்துவீட்டு வேலைகளை மட்டும் செய்து கொண்டு வேறு கதியில்லாத பிள்ளையாகிய என்னிடம் மிகுந்த அன்புபாராட்டி வந்தாள். 6

சுதந்தர மில்லாத என் அன்னை எனது யோக க்ஷேமங்களை விரும்பி ஒன்றும் செய்யத் திறமை யற்றவளாய் மரத்தால் செய்த பதுமைபோல் இருந்தாள். ஜனங்கள் தங்களைப் படைத்து ஆளும் ஈசனுக்கன்றோ சுவாதீன மாகின்றார்கள்.

இதுகிழக்கு இதுமேற்கு என்கிற திசைகூடத் தெரியாத வனும் இது காஞ்சி இது காசியென்கிற தேசபேத மறியாதவனும் இது சைத்திரம் இது வைசாகம் என்கிற காலபேதந் தெரியாதவனுயு மிருந்த ஐந்துவயது சென்ற அதிபால்ய னுகையால் என் அன்னையை யுத்தேசித்து அவள் வசித்துவந்த பிராமணர்களுடைய கிருகத்திலேயே வாசஞ்செய்து கொண்டிருந்தேன். 8

நாதனற்ற என் அன்னை ஒருநாள் இரவில் மாடுகறக்கப் புறப்பட்டுப் போய் வழியில் ஓர்சர்ப்பத்தை மிதித்துவிட்டாள். அது (என்தாயாரை) தீண்டிற்று. 9

𑌤𑌦𑌾 𑌤𑌦𑌹𑌮𑍀𑌶𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌮𑌭𑍀𑌪𑍍𑌸𑌤𑌃 ।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌦𑌿𑌶𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌮𑍍 ॥ 10

𑌸𑍍𑌫𑍀𑌤𑌾𑌨𑍍 𑌜𑌨𑌪𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌪𑍁𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑍍𑌰𑌜𑌾𑌕𑌰𑌾𑌨𑍍 ।
𑌖𑍇𑌟𑌾𑌨𑍍 𑌖𑌰𑍍𑌵𑌟𑌵𑌾𑌟𑍀𑌶𑍍𑌚 𑌵𑌨𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥

𑌚𑌿𑌤𑍍𑌰𑌧𑌾𑌤𑍁𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌰𑍀𑌨𑍍 𑌇𑌭𑌭𑌗𑍍𑌨𑌭𑍁𑌜𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌜𑌲𑌾𑌶𑌯𑌾𑌨𑍍𑌶𑌿𑌵𑌜𑌲𑌾𑌨𑍍𑌨𑌲𑌿𑌨𑍀𑌸𑍍𑌸𑍁𑌰𑌸𑍇𑌵𑌿𑌤𑌾𑌃 ॥

𑌚𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌨𑍈𑌃 𑌪𑌤𑍍𑌰𑌰𑌥𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌦𑍍𑌭𑍍𑌰𑌮𑌰𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌨𑌲𑌵𑍇𑌣𑍁𑌶𑌰𑌸𑍍𑌤𑌂𑌬 𑌕𑍁𑌶𑌕𑍀𑌚𑌕𑌗𑌹𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

𑌏𑌕𑌏𑌵𑌾𑌤𑌿𑌯𑌾𑌤𑍋𑌹𑌮𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌵𑌿𑌪𑌿𑌨𑌂𑌮𑌹𑌤𑍍 ।
𑌘𑍋𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌯𑌾𑌕𑌾𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌲𑍋𑌲𑍂𑌕𑌶𑌿𑌵𑌾𑌜𑌿𑌰𑌮𑍍 ॥ 11-14

என்மாதா மரணமடைந்ததை பக்தர்களின் நன்மையின் பொருட்டு ஈசன் செய்த அனுக்கிரக மெனக் கருதி வடதிசையை நோக்கிப் பிரயாண மானேன்.

வடதிசையில் சகலவளமும் பொருந்திய தேயங்கள், நகரங்கள் கோகுலங்கள் (இடைச்சேரிகள்) இரத்தின முதலியவைக ளுண்டாகும் இடங்கள் பயிர் செய்பவர் களுடைய கிராமங்கள் மலைத் தாழ்வரையைச் சார்ந்த கிராமங்கள், கமுகு நிறைந்துள்ள தோப்புகள், நந்தவனங்கள், வனங்கள், உபவனங்கள்(மரம் செடி முதலியவைகள் வைத்துப் பயிர்செய்துள்ள தோட்டம்) விசித்திரமான தங்கம், வெள்ளி முதலிய லோகங்கள் விளையத்தக்க ஆச்சரிய கரமான பர்வதங்கள், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுடன் கூடிய மரங்கள், மங்கள முண்டக்கத்தக்க நீர் நிறைந்த மடுக்கள், விசித்திரமாகக் கூவும் பறவை யினங்கள், (விழித்துக் கொண்டே) உலாவும் வண்டினங்கள் இவைகளால் அழகு வாய்ந்ததும் தேவர்களும் புகழத் தக்கதுமாகிய ஓடைகள், இவைகளை நானொருவனாக வே கடந்து (இவைகளில் குணங்க ளுடையதும் குற்றங்களையுடையதுமாயிருப்பினும் எல்லாவற்றையும் சமமாகவே பாவித்து) கோரை, சிறிய துவாரமுள்ள மூங்கில், நாணல் விசேஷங்கள், திருணங்கள்,சாமன்னிய நாணல்கள், காற்று பிரவேசித்தவுடன் சத்த முண்டாகும் படியான மூங்கில்கள், இவைகள் பிரவேசிக்கமுடியாம லடர்ந்ததும் சகிக்க முடியாததும் பயங்கரமானதும் சர்ப்பங்கள், கோட்டான்கள் நரிகள் இவைகள் உலாவி விளையாடக் கூடியதுமாகிய ஓர்பெரிய அரண்யத்தைக் கண்டேன். 11-14

---

† யோகம் - கிடைக்காத ஒருவஸ்துவையடைவது. க்ஷேமம் கிடைத்ததைப் பரிபாலித்தல்.

‡ அனுச்கிரக மாவது - இங்கு கீதையின் வசனக் கருத்து. எவனுக்கு அனுக்கிரகம் செய்ய விரும்புகிறேனோ அவனுடைய பொருளை யபகரிப்பேன். அவன் உறவினரை நாசமடையும்படி செய்வேன்" என்பது கீதையின் வசனம்.

𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌹𑌂 𑌤𑍃𑌟𑍍𑌪𑌰𑍀𑌤𑍋 𑌬𑍁𑌭𑍁𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌹𑍍𑌰𑌦𑍇 𑌨𑌦𑍍𑌯𑌾 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋 𑌗𑌤𑌶𑍍𑌰𑌮𑌃 ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌨𑍁𑌜𑍇𑌽𑌰𑌣𑍍𑌯𑍇 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑍋𑌪𑌸𑍍𑌥 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌮𑍍 ॥ 15-16

𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌶𑍍𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌂 𑌭𑌾𑌵𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌾 ।
𑌔𑌤𑍍𑌕𑌣𑍍𑌠𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑍁𑌕𑌲𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑍍𑌯𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑍇 𑌶𑌨𑍈𑌰𑍍𑌹𑌰𑌿𑌃 ॥ 17

𑌪𑍍𑌰𑍇𑌮𑌾𑌤𑌿𑌭𑌰𑌨𑌿𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨 𑌪𑍁𑌲𑌕𑌾𑌙𑍍𑌗𑍋𑌽𑌤𑌿𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌃 ।
𑌆𑌨𑌨𑍍𑌦𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑍇 𑌲𑍀𑌨𑍋 𑌨𑌾𑌪𑌶𑍍𑌯𑌮𑍁𑌭𑌯𑌂 𑌮𑍁𑌨𑍇 ॥ 18

𑌰𑍂𑌪𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌯𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌨𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑍁𑌚𑌾𑌪𑌹𑌮𑍍 ।
𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸𑌹𑌸𑍋𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑍇 𑌵𑍈𑌕𑍍𑌲𑌬𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍁𑌰𑍍𑌮𑌨𑌾 𑌇𑌵 ॥ 19

𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑌦𑌹𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌮𑌨𑍋 𑌹𑍃𑌦𑌿 ।
𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌪𑌶𑍍𑌯𑌮𑌵𑌿𑌤𑍃𑌪𑍍𑌤 𑌇𑌵𑌾𑌤𑍁𑌰𑌃 ॥ 20

𑌏𑌵𑌂 𑌯𑌤𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌜𑌨𑍇 𑌮𑌾𑌮𑌾𑌹𑌾𑌗𑍋𑌚𑌰𑍋 𑌗𑌿𑌰𑌾𑌮𑍍 ।
𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌯𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌶𑍁𑌚𑌃 𑌪𑍍𑌰𑌶𑌮𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 ॥ 21

என்கண்முதலிய இந்திரியங்களும் தேகமும் சோர்வடைந்தவனாய்ப் பசி தாகமு அதிகப்பட்டது. அங்கிருந்த நதியின்மடுவில் ஸ்நானஞ்செய்து அந்தநீரை யருந்தி சிரமம் தெளிந்தபின் நிர்மானுஷியமான அந்த ஆரண்யத்தில் ஓர் அரச மாத்தடியில் உட்கார்ந்து என் மனதிலிருக்கும் பரமாத்வைத் துறவிகள் எனக் குபதேசித்தபடி தியானம் செய்தேன். 15-16

அன்போடு (பகவானுடைய) சரண கமலங்களைத் தியானம் செய்பவனும் ஆனந்த பாஷ்பம் நிறைந்த கண்களுடையவனு மாகிய என் இருதயத்தில் ஹரி யானவர் மெதுவாக ஆவிர்ப்பாவ மடைந்தார். 17

ஓமுனிவரே! மிகுந்த ஆனந்தத்தால் புளகாங்கித முற்ற தேகமுடையவனா கவும், பரமானந்த பிரவாகத்தில் மூழ்கினவனாகவும், சுகமடைந்தவனாகவுமிருந்த மையால் என்னையும் பரனையும் காணவில்லை. 18

மனதிற் கிசைந்ததும் துக்கத்தைப் போக்குவதும் முதன்முதலாகப் பார்த் ததுமாகிய பகவானுடைய திருவுருவத்தைக் காணாமல் ஆவலின் மிகுதியால் துக்கமடைந்து விரைவாக எழுந்திருந்தேன். 19

நான் மீண்டும் எனது இருதயத்தில் மனதை நிறுத்தி அந்தத் திருவுருவத் தைப் பார்க்க விருப்பங்கொண்டு பார்த்தும் காணவில்லை. பின் திருப்தியில்லாத நான் வியாதி யுடையவன் போலானேன். 20

வேத வாக்கியங் களுக்கும் எட்டாத அந்தபகவான், இவ்வாறு ஆரண்யத் தில் அவரைத் தவசிக்கு முயன்றுவரும் என்னையுத்தேசித்து விருப்பத்துடனும் மெதுவாகவும் என் துக்கத்தை யொழிப்பவர்போல் (சிலவார்த்தைகள் கூறினர்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

𑌹𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌮𑌾 𑌮𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌤𑌿 ।
𑌅𑌵𑌿𑌪𑌕𑍍𑌵𑌕𑌷𑌾𑌯𑌾𑌣𑌾𑌂 𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑍋𑌽𑌹𑌂 𑌕𑍁𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ 22

𑌸𑌕𑍃𑌦𑍍𑌯𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌰𑍂𑌪𑌮𑍇𑌤𑌤𑍍𑌕𑌾𑌮𑌾𑌯 𑌤𑍇𑌽𑌨𑌘 ।
𑌮𑌤𑍍𑌕𑌾𑌮𑌶𑍍𑌶𑌨𑌕𑍈𑌸𑍍𑌸𑌾𑌧𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑌿 𑌹𑍃𑌚𑍍𑌛𑌯𑌾𑌨𑍍 ॥ 23

𑌸𑌤𑍍𑌸𑍇𑌵𑌯𑌾𑌽𑌦𑍀𑌰𑍍𑌘𑌯𑌾 𑌤𑍇 𑌜𑌾𑌤𑌾 𑌮𑌯𑌿 𑌦𑍃𑌢𑌾 𑌮𑌤𑌿𑌃 ।
𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌵𑌦𑍍𑌯𑌮𑌿𑌮𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌗𑌨𑍍𑌤𑌾 𑌮𑌜𑍍𑌜𑌨𑌤𑌾𑌮𑌸𑌿 ॥ 24

𑌮𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌿 𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑍇𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑌰𑍍𑌗𑌨𑌿𑌰𑍋𑌧𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍍𑌚 𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ॥ 25

𑌏𑌤𑌾𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌰𑌰𑌾𑌮 𑌤𑌨𑍍𑌮𑌹𑌦𑍍 -
𑌭𑍂𑌤𑌂 𑌨𑌭𑍋𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌹𑌂 𑌚 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑌹𑌤𑌾𑌂 𑌮𑌹𑍀𑌯𑌸𑍇
𑌶𑍀𑌰𑍍𑌷𑍍𑌣𑌾𑌵𑌨𑌾𑌮𑌂 𑌵𑌿𑌦𑌧𑍇𑌽𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ 26

ஸ்ரீபகவான் கூறுகிறார்.

(கருணைக்குப் பாத்திரனான) ஏநாரத! நீ இந்தஜன்மத்தில் என்னைத்தரிசிக்க யோக்கியனல்ல. காமாதி வாசனைகளைத் தொலைக்க முடியாத குற்சித யோகிகளுக்கு அவர்கள் எவ்வளவுசிரமம் எடுத்துக் கொண்டாலும் பார்க்க முடியாதவன் நான். 22

குற்றமற்ற முனிவனே! நான் ஒருமுறை உனக்கு என் உருவத்தைக் காட்டினது என்னிடம் உனக்குமிருந்த அன்புண்டாவதன் பொருட்டேயாம். என்னிடம் அனுராக முள்ளவன்தன் இதயத்திலிருக்கும் காமாதி வாசனைகளைச் சிறுகச் சிறுகத் தொலைத்து விடுகிறான். 23

நீ சிலகாலம் சாதுக்களைச் சேவித்ததால் என்னிடம் உனக்குத் திடமான பக்தியுண்டாயிற்று.(ஆகையால்) வேலைக்காரியின் புத்திரனென்று நிந்திக்கத் தக்க இந்தச்சரீரத்தை விட்டொழித்து எனக்குப் * பாரிஷதனாக ஆவாய். 24

என்னிடம் உண்டான இந்தபக்திக்குக் குறைவுண்டாக வேண்டாம். உனக்கு என் அனுக்கிரகத்தால் பிராணிகளின் சிருஷ்டி, சங்கார காலங்களிலும் ஸ்மரணம் ஏற்படும். 25

எல்லாவற்றையும் படைக்குந் தன்மையுள்ளதும் ஆகாயமே சரீரமாகவுடையதும் (கர்மத்தாலான) சரீரமில்லாததும் பிரசித்தி யுள்ளதுமாகிய அந்தவிஷ்ணு சொரூபம் இங்ஙனம் கூறிமறைந்தது. அவருடைய கருணைக்குப் பாத்திரனாகிய நானும் மகான்களுக்கு மகானாகிய அந்தப்பரம புருஷனுக்குச் சிரங்குனிந்து வணங்குகிறேன். 26

* பாரிஷதன் - (விஷ்ணுவின்) சபையிலிருப்பவன்.

𑌨𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌹𑌤𑌤𑍍𑌰𑌪𑌃 𑌪𑌠𑌨𑍍
𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌿 𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌗𑌾𑌂 𑌪𑌰𑍍𑌯𑌟𑌂𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌮𑌨𑌾 𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃
𑌕𑌾𑌲𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍 𑌵𑌿𑌮𑌦𑍋 𑌵𑌿𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 ॥ 27

𑌏𑌵𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌤𑍇𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍𑌨𑌾𑌸𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌕𑌾𑌲𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑍂𑌤𑍍𑌕𑌾𑌲𑍇 𑌤𑌡𑌿𑌤𑍍𑌸𑍌𑌦𑌾𑌮𑌨𑍀 𑌯𑌥𑌾 ॥ 28

𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌮𑌯𑌿 𑌤𑌾𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑍍 ।
𑌆𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌨𑍍𑌯𑌪𑌤𑌤𑍍𑌪𑌾𑌞𑍍𑌚𑌭𑍌𑌤𑌿𑌕𑌃 ॥ 29

𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤 𑌇𑌦𑌮𑌾𑌦𑌾𑌯 𑌶𑌯𑌾𑌨𑍇𑌽𑌮𑍍𑌭𑌸𑍍𑌯𑍁𑌦𑌨𑍍𑌵𑌤𑌃 ।
𑌶𑌿𑌶𑌯𑌿𑌷𑍋𑌰𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌵𑌿𑌵𑌿𑌶𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑌹𑌂 𑌵𑌿𑌭𑍋𑌃 ॥ 30

𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯𑍇𑌦𑌂 𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑌤𑌃 ।
𑌮𑌰𑍀𑌚𑌿𑌮𑌿𑌶𑍍𑌰𑌾 𑌋𑌷𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌚 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 ॥ 31

வெட்கப் படாமலே அனந்தனுடைய நாமகீர்த்தனம் செய்து இரகசியமும் மங்களத்தை யளிக்கக் கூடியதுமாகிய பகவானுடைய அவதார வரலாற்றை ஸ்மரணம் செய்து கொண்டே இந்தபூமியில் மனமகிழ்ச்சியுடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். ஆசையைத் துரந்து மதமாற்சரியாதி குற்றங்க ளொழிந்து இந்தச் சரீரத்தை விடுங்காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். 27

ஓமுனிவரே! இவ்வாறு கிருஷ்ணனிடம் புத்தியைச் செலுத்தினவனும் நிர் மலமான அந்தக்கரண முடையவனு மாகிய எனக்குக் காலங் கிட்டியவுடன் மின் னல்போல் (பிரகாசத் துடன்) மிருத்தியூ தோன்றினன். 28

‡ பகவான், என்னிடம் சுத்தமும் தன்னைச் சேர்ந்ததுமாகிய அந்தப் பாரி ஷசரீரத்தைப் பிரயோகித்தார். உடனே, பலனை யனுபவித்ததால் பிராரப்த கர்ம ங்களொழியப் பெற்ற இந்தப் பாஞ்சபௌதிக சரீரம் விழுந்தது. 29

நாராயணன், பிரளயகாலத்தில் இந்த மூவுலகங்களைத் தன்னுள்ளடக்கிக் கொ ண்டு சமுத்திரஜலத்தில் சயனம்செய்து கொண்டிருக்கும் போது அவரிடம் சய னம் செய்துகொள்ள விருப்பங்கொண்ட பிரமதேவனுடைய மத்தியில் அவரு டைய மூச்சுக் காற்றுடன் பிரவேசித்தேன். 30

ஆயிரம் † சதுர்யுக சொரூபமான இரவின் முடிவில் எழுந்திருந்து இப்பிர பஞ்சத்தைப் படைக்க விருப்பங் கொண்ட பிர்மதேவ னுடைய பிராண வாயுக் களினின்று நானும் மரீசிமுதலிய முனிவர்களும் உண்டானேம். 31

‡ பாரிஷ சரீரம் கர்மாரப்தமில்லாத தென்றும் சுத்தமென்றும் நித்திய மென்றும் கூறப்பட்டது.

† சதுர்யுகம்-கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம், கலியுகம், எனநான்கு வகைப்படும்.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌲𑍋𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌪𑌰𑍍𑌯𑍇𑌮𑍍𑌯𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌃 ।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌵𑌿𑌘𑌾𑌤𑌗𑌤𑌿𑌃 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥ 32

𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌵𑍀𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌮𑍂𑌰𑍍𑌛𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌹𑌰𑌿𑌕𑌥𑌾𑌂 𑌗𑌾𑌯𑌮𑌾𑌨𑌶𑍍𑌚𑌰𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ 33

𑌪𑍍𑌰𑌗𑌾𑌯𑌤𑌃 𑌸𑍍𑌵𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌪𑌾𑌦𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌰𑌵𑌾𑌃 ।
𑌆𑌹𑍂𑌤 𑌇𑌵 𑌮𑍇 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌚𑍇𑌤𑌸𑌿 ॥ 34

𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍁𑌰𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌮𑍁𑌹𑍁𑌃 ।
𑌭𑌵𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌪𑍍𑌲𑌵𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌹𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑍍 ॥ 35

𑌯𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑌪𑌥𑍈𑌃 𑌕𑌾𑌮𑌲𑍋𑌭𑌹𑌤𑍋 𑌮𑍁𑌹𑍁𑌃 ।
𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌸𑍇𑌵𑌯𑌾 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌾𑌦𑍍𑌧𑌾 𑌨 𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 ॥ 36

§ பிழை படாத பிரமசரிய விருத முடைய நான், மகாவிஷ்ணுவின் அனுக்கிரகத்தால் எங்கும் தடையற்ற கமனமுடையவனாகி உள்ளும் புறம்பும் மூவுலகங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறேன். 32

ஈசுவரனால் அளிக்கப் பட்டதும் ‡ ஸ்வரங்களாகிய பிரம்மத்தால் அலங்காரமுள்ளதுமாகிய இந்தவீணையை (ஆரோகணம் அவரோகணம் என்கிற கிரமத்துடன்) சத்த முண்டாகும்படி செய்து ஹரிகதையைக் கானம்செய்து கொண்டே சஞ்சரிக்கிறேன். 33

பரிசுத்தமான பாத கமலங்களை யுடைய வரும் பிரியமான கதா சிரவணத்திற்கு விஷயமாக விளங்குகிற வருமாகிய பகவான் தம்முடைய பராக்கிரமங்களைப் பற்றிக் கானம் செய்யும் எனதுள்ளத்தில் அழைக்கப் பட்டவர் போல் விரைவாகத் தரிசனங்கொடுத் தருளினார். 34

விஷய போகங்களிற் கொண்ட இச்சையால் நோயடைந்த மனமுடைய மானிடர்களுக்கு அடிக்கொருதரம் ஹரியின் சரித்திரத்தை வர்ணிப்பதாகிய இந்தச் செய்கையே சம்சார சாகரத்திற்குத் தெப்பம் போலாகிறது. 35

காமத்தாலும் லோபத்தாலும் அடிக்கடி கெடுதி யுற்றமனம் சாக்ஷாத்தாக முகுந்தனை சேவிப்பதில் தெளி வடைவது போல் ¶ யமம் முதலிய யோக விசேஷங்களால் தெளிவடையாது. 36

---

§ கர்மிகள் புறம்பேயுள்ள பிர்மலோகம் முதலியவைகளுக்குச் சொல்ல மாட்டார்கள் தவத்தால் பிர்மலோகம் சென்றவர்கள் உள்ளே பூமிக்கு வரமாட்டார்கள். நாரதர் எங்கும் செல்வார்.

‡ ஸ்வரங்கள்- நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்தியம், தைவதம், பஞ்சமம் என ஏழுவகைப்படும்.

¶ யமம்முதலியன- யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என எட்டுவகை அங்கங்களுண்டு.

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌦𑌿𑌦𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌯𑌤𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌹𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾𑌨𑌘 |
𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌵𑌤𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌮𑌤𑍋𑌷𑌣𑌮𑍍 || 37

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ||

𑌏𑌵𑌂 𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌦𑍋 𑌵𑌾𑌸𑌵𑍀𑌸𑍁𑌤𑌮𑍍 |
𑌆𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌵𑍀𑌣𑌾𑌂 𑌰𑌣𑌯𑌨𑍍𑌯𑌯𑍌 𑌯𑌾𑌦𑍃𑌚𑍍𑌛𑌿𑌕𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 || 38
𑌅𑌹𑍋 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌧𑌨𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌯𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌵𑌨𑌃 |
𑌗𑌾𑌯𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌰𑌮𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍁𑌰𑌂 𑌜𑌗𑌤𑍍 || 39

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍌𑌨𑌕𑌃 ||

𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑍇 𑌨𑌾𑌰𑌦𑍇 𑌸𑍂𑌤 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌃 |
𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌂 𑌤𑌤𑌃 𑌕𑌿𑌮𑌕𑌰𑍋𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 || 1

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ||

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌤𑌟𑍇 |
𑌶𑌮𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌾𑌸 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤 𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 𑌸𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 || 2

குற்றமற்ற வியாச முனிவரே! நீர் கேட்டபடி நான் என்னுடைய ஜன்மத்தையும் மனமகிழச்செய்யும் இரகசியமான கருமத்தையும் கூறினேன் 37

சூதபுராணிகர் கூறுகிறார்.

மகாமகிமை வாய்ந்தவரும் தற்செயலாய் வந்தவரும் முனிபுங்கவரு மாகிய நாரதர் இங்ஙனம் சம்பாஷித்து வாசவிக்குப் புத்திரனாகிய வியாச முனிவரிடம் விடைபெற்று வீணாகானம் செய்துகொண்டே போனார். 38

சார்ங்கம் என்ற வில்லையுடைய பகவானுடைய கீர்த்தியைக் கானம்செய்து கொண்டு (ஆனந்தமேலீட்டினால்) மதங் கொண்டவர் போலிருந்து, சம்ஸாரமாகிற வியாதியால் துன்பமுறும் பிரபஞ்சத்தைத் தமது வீணாகானத்தால் பகவானிடம் அன்பு செலுத்தும்படி செய்கிறார் தேவரிஷியாகிய நாரதர். ஆச்சரியம்! 39

6-வது அத்தியாயம் முற்றிற்று.

7-வது அத்தியாயம்.

சௌனகமுனிவர் வினவுகிறார்.

மகிமை பொருந்தியவரும் சாமர்த்திய முள்ளவருமாகிய வியாச முனிவர், நாரத மகாமுனிவர் சென்றபின்பு அவருடைய கருத்துக் கிசைந்து ஏதேனும் செய்தனரா? 1

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

பிராமணர்கள் நிறைந்திருக்கும் சரஸ்வதி நதியின் மேல்கரையில் ரிஷிகளுடைய சத்ரம் என்னும் யாகம் நடந்து வருவதும் பிரசித்தி யுள்ளதும் சம்மியாப் பிராஸம் என்னும் பெயருள்ளதுமாகிய ஆச்சிரமம் ஒன்றுண்டு 2

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌵 𑌆𑌶𑍍𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌬𑌦𑌰𑍀𑌷𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑍇 ।
𑌆𑌸𑍀𑌨𑍋𑌽𑌪 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌦𑌧𑍍𑌯𑍌 𑌮𑌨𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥ 3

𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑍇𑌽𑌮𑌲𑍇 ।
𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌤𑌦𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑍍 ॥ 4

𑌯𑌯𑌾 𑌸𑌂𑌮𑍋𑌹𑌿𑌤𑍋 𑌜𑍀𑌵 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌪𑌰𑍋𑌽𑌪𑌿 𑌮𑌨𑍁𑌤𑍇𑌽𑌨𑌰𑍍𑌥𑌂 𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌚𑌾𑌭𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ 5

𑌅𑌨𑌰𑍍𑌥𑍋𑌪𑌶𑌮𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌮𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑍇 ।
𑌲𑍋𑌕𑌸𑍍𑌯𑌾𑌜𑌾𑌨𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ 6

𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌵𑍈 𑌶𑍍𑌰𑍂𑌯𑌮𑌾𑌣𑌾𑌯𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌪𑌰𑌮𑌪𑍂𑌰𑍁𑌷𑍇 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍁𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌪𑍁𑌂𑌸𑌶𑍍𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌭𑌯𑌾𑌪𑌹𑌾 ॥ 7

𑌸 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑍀𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌚𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍 ।
𑌶𑍁𑌕𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃 ॥ 8

இலந்த மரங்கள் நிறைந்த அலங்கார மான அந்த ஆச்சிர மத்தில் உட்கார்ந்து ஆசமனம் செய்து மனதை ஸ்திரப்படுத்திக் கொண்டார் வியாச முனிவர். 3

நிச்சல மானதும், பக்தி யோகத்தால் நிர்மலமானது மாகிய தமது மனத்தில் ஆதிபுருஷனையும் ஆதிபுருஷனை ஆசரித்த மாயையினையும் பார்த்தார். 4

ஜீவன் முக்குணங் களுக்கும் வேறுபட்டவ னாயினும் மாயையால் மோகமடைந்து முக்குணத்தின் சொரூபமுள்ள வனாகக் காண்கிறான். அந்த மூன்று குணங்களிற் கொண்ட அபிமானத்தா லுண்டான (நான் கர்த்தா என்பது முதலிய) அனர்த்தத் தையும் பெறுகிறான். (அத்தன்மை யையும் பார்த்தார்) 5

அனர்த்தங்களை யொழிக்கும் அதோக்ஷஜரிடம் சாக்ஷாத்தான பக்தி யோகத்தையும் பார்த்தார். இவைக ளனைத்தையும் பார்த்த வித்துவானாகிய வியாசர் இம்மாதிரி யறிந்து கொள்ளாத ஜனங்களுக்காக இந்த ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். 6

ஸ்ரீபாகவதத்தைச் சிரவணம் செய்யும் போதே பரம புருஷனாகிய கிருஷ்ண பகவானிடம் மானிடர் களுக்கு (ஆத்யாத்மிகம் முதலிய தாபங்களால் உண்டாகும்) சோகத்தையும் (தேகமே ஆத்மா வென்னும்) மோகத்தையும் (நரகம் முதலிய வைகளில் உண்டாகும்.) பயத்தையும் போக்குகிற பக்தி யுண்டாகிறது.

வியாசமுனிவர் பாகவத கிரந்தத்தைச் செய்து அதை நன்கு சோதித்து நிவிருத்தி மார்க்கத்தி லிருப்பவனும் முனியும் புத்திரனு மாகிய சுகருக்கு அத்தியயனம் செய்வித்தார். 8

𑌶𑍍𑌰𑍀𑌶𑍌𑌨𑌕𑌃 ॥

𑌸 𑌵𑍈 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍋𑌪𑍇𑌕𑍍𑌷𑌕𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌕𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌬𑍃𑌹𑌤𑍀𑌮𑍇𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑌃 𑌸𑌮𑌭𑍍𑌯𑌸𑌤𑍍 ॥ 9

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑌾𑌶𑍍𑌚 𑌮𑍁𑌨𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾 𑌅𑌪𑍍𑌯𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑍇 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑍈𑌤𑍁𑌕𑍀𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌿𑌤𑍍𑌥𑌂𑌭𑍂𑌤𑌗𑍁𑌣𑍋 𑌹𑌰𑌿𑌃 ॥ 10

𑌹𑌰𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌾𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌮𑌤𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌿𑌃 ।
𑌅𑌧𑍍𑌯𑌗𑌾𑌨𑍍𑌮𑌹𑌦𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌜𑌨𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ 11

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍋𑌽𑌥 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌲𑌾𑌪𑌨𑌮𑍍 ।
𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑌥𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ 12

𑌯𑌦𑌾 𑌮𑍃𑌧𑍇 𑌕𑍌𑌰𑌵𑌸𑍃𑌞𑍍𑌜𑌯𑌾𑌨𑌾𑌂
𑌵𑍀𑌰𑍇𑌷𑍍𑌵𑌥𑍋 𑌵𑍀𑌰𑌗𑌤𑌿𑌂 𑌗𑌤𑍇𑌷𑍁 ।
𑌵𑍃𑌕𑍋𑌦𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑌗𑌦𑌾𑌭𑌿𑌮𑌰𑍍𑌶
𑌭𑌗𑍍𑌨𑍋𑌰𑍁𑌦𑌣𑍍𑌡𑍇 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌪𑍁𑌤𑍍𑌰𑍇 ॥ 13

ஸ்ரீசௌனகமுனிவர் வினவுகிறார்.

நிவிருத்தி மார்க்கத்தி லிருப்பவரும் எல்லா வற்றிலும் உபேக்ஷை யுள்ளவரும் (1) ஆத்மா ராமருமாகிய அந்த சுகமுனிவர் எதற்காகப் பெரிதான இந்த பாகவதத்தை அப்பியாசம் செய்தார். 9

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

முனிவர்கள் தங்கள் இருதயத்தி லுள்ள அகங்காரம் முதலிய வர்களை யொழித்தவர் களாயினும் ஆத்ம ராமர்களாயினும் த்ரிவிக்ரமனிடம் பலனை விரும்பாமல் பக்தியைச் செய்கிறார்கள். ஹரியானவர் (விஷயத்தில் ஆசை யுள்ளவர்களுடையவும் விரக்தர்களுடையவும் மனதை வசப் படுத்துவதில் சாமர்த்தியமுள்ள) குணங்க ளுடையவராகிறார். 10

ஹரியின் குணங்களில் ஈடுபட்ட புத்தி யுடைய வரும் மகிமை பொருந்தியவரும் எப்போதும் விஷ்ணு பக்தர்களிடம் அன்புள்ள வரும் பாதராயணர் குமாருமாகிய சுகர் பெரிய இந்த ஆக்கியானத்தை அத்தியயனம் செய்தார். 11

கௌரவர் களுக்கும் ‡ ஸ்ருஞ்சயர்களுக்கும் யுத்தம் நடந்த காலத்தில்வீரர்கள் வீரசுவர்க்கம் அடைந்தார்கள். பின்னர் திருதராஷ்டிரான் குமாரனாகிய துரி

(1) - ஆத்மாராமர் - பரமாத்மாவிடம் இரமிப்பவர்.

‡ ஸ்ருஞ்சயர்கள் - பாண்டவர்கள். பாண்டவர்களும் கௌரவர்களே. சேனாதிபதியாகிய திருஷ்டத்தியும் நன் ஸ்ருஞ்சய வம்சத்தன். ஆகையால் பாண்டவர்களையும் ஸ்ருஞ்சயர்க ளென்று கூறுகிறார்கள்.

𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑍍𑌰𑍌𑌣𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌸𑍁𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑌤𑌾𑌂 𑌶𑌿𑌰𑌾𑌂𑌸𑌿 ।
𑌉𑌪𑌾𑌹𑌰𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯
𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌯𑌨𑍍𑌤𑌿 ॥ 14

𑌮𑌾𑌤𑌾 𑌶𑌿𑌶𑍂𑌨𑌾𑌂 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌸𑍁𑌤𑌾𑌨𑌾𑌂
𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌘𑍋𑌰𑌂 𑌪𑌰𑌿𑌤𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 ।
𑌤𑌦𑌾𑌰𑍁𑌦𑌦𑍍𑌬𑌾𑌷𑍍𑌪𑌕𑌲𑌾𑌕𑍁𑌲𑌾𑌕𑍍𑌷𑍀
𑌤𑌾𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌨𑍍𑌨𑌾𑌹 𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌾𑌲𑍀 ॥ 15

𑌤𑌦𑌾 𑌶𑍁𑌚𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌮𑍃𑌜𑌾𑌮𑌿 𑌭𑌦𑍍𑌰𑍇
𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍋𑌃 𑌶𑌿𑌰 𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 ।
𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌖𑍈𑌰𑍁𑌪𑌾𑌹𑌰𑍇
𑌤𑍍𑌵𑌾𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌯𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌦𑌗𑍍𑌧𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 ॥ 16

𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌵𑌲𑍍𑌗𑍁𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌜𑌲𑍍𑌪𑍈𑌃
𑌸 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑌃 ।
𑌅𑌨𑍍𑌵𑌾𑌦𑍍𑌰𑌵𑌦𑍍𑌦𑌂𑌶𑌿𑌤 𑌉𑌗𑍍𑌰𑌧𑌨𑍍𑌵𑌾
𑌕𑌪𑌿𑌧𑍍𑌵𑌜𑍋 𑌗𑍁𑌰𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌰𑌥𑍇𑌨 ॥ 17

யோதனன் பீமசேனனுல் விடப்பட்ட கதையின் அடியால் முறிந்த துடையுட னே வீரசுவர்க்கம் அடைந்தான். அப்போது துரோணு சாரியர் புத்திர னுகிய அசுவத்தாமன் துரௌபதியின் புத்திரர்களுடைய சிரங்களை அவர்கள் நித்திரை செய்யும்போது தன் யஜமானனுக்குப் பிரியமுண்டாக அபகரித்தான். அங்ஙனம் அபகரித்தது அவனுக்கு அப்பிரியமானது தான். இந்தச் செய்கை நிந்தையான தென்று பெரியோர்கள் கூறுகிறுர்கள். அப்பொழுது (அந்தப் புத்திரர் களுக்குத்) தாயாகிய திரௌபதி சிறுவர்களாகிய தன் புத்திரர்கள் இவ்விதம் வதைக்கப் பட்டதை யறிந்து சகிக்கமுடியாத வருத்தமடைந்து தன் கண்களினின்று நீர் பெருகக் கதறினுள். அப்பொழுது கிரீடமாலியாகிய அர்ச்சுனன் திரௌபதிக்குப் பின் வருமாறு சமாதானங் கூறுகிறுன். 13-15

‡ மங்கள சொரூப முடையவளே! ஆயுத மெடுத்த வனும் பிராமணுதமனு மாகிய அசுவத்தாம னுடைய தலையை என் காண்டீ வத்தினின்று பிரயோகிக்கப் படும் பாணங்களால் எடுத்து உன்னுடைய கண்ணீரைத் துடைக்கிறேன். நீ அந் தச் சிரமீதிருந்து புத்திரர்களைச்சுட்டு ஸ்நானம் செய்யப் போகிறுய் 16

அச்சுதனை மித்திரனுகவும்சூதனுகவும்அடையப் பெற்றவனும் கவசம் பூண் டவனும் பயங்கரமான வில்லையுடைய வனும் அனுமானைத் துவஜமாக வடைந்த வனுமாகிய அந்த அர்ச்சுனன் இவ்வாறு மனேஞ்ஞமும் விசித்திரமுமானசொற் களால்தன் காதலியாகிய திரௌபதிக்குச் சமாதானம்சொல்லி குருவாகியதுரோ ணரின் குமாரனுகியஅசுவத் தாமனை இரதத்திலேறிக்கொண்டு விரட்டினன். 17

‡ மற்றொருபாடம்-நீபுத்திரர்களைச்சுட்டு அந்தச் சிரமீதிருக்கப் போகிறுய்.

𑌤𑌮𑌾𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 𑌸 𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌯 𑌦𑍂𑌰𑌾𑌤𑍍 -
𑌕𑍁𑌮𑌾𑌰𑌹𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌨𑌾 𑌰𑌥𑍇𑌨 ।
𑌪𑌰𑌾𑌦𑍍𑌰𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌪𑌰𑍀𑌪𑍍𑌸𑍁𑌰𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌂
𑌯𑌾𑌵𑌦𑍍𑌗𑌮𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌭𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾 𑌕𑌃 ॥ 18

𑌯𑌦𑌾 𑌶𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍈𑌕𑍍𑌷𑌤 𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌜𑌿𑌨𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌿𑌰𑍋 𑌮𑍇𑌨𑍇 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍍𑌮𑌜𑌃 ॥ 19

𑌅𑌥𑍋𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯 𑌸𑌲𑌿𑌲𑌂 𑌸𑌨𑍍𑌦𑌧𑍇 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌜𑌾𑌨𑌨𑍍𑌨𑌪𑌿 𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌉𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 ॥ 20

தன்னை விரட்டிக் கொண்டு வரும் அர்ச்சுனனைக் குழந்தைகளைக் கொன்ற அசுவத்தாமன் வெகு தூரத்திலேயே பார்த்தான். அவன் மனம் மிகவும் பீதியடைந்து (1) பிராணனைக் காத்துக் கொள்ள விரும்பி பூமியில் எவ்வளவு தூரம் போகக் கூடுமோ அது வரையில் (2) உருத்திரரிடம் பயந்து பிரமதேவர் நடுங்கியோடியது போல் வெருண்டோடினன். 18

‡ பிராம்மண குமாரனுகிய அசுவத்தாமன் களைத்துப் போன குதிரைகளையுடைய தன்னைக் காத்துக்கொள்ள வேறுபாயம் காணுமல், பிர்ம்மாஸ்திரமே தன்னைக் காப்பதெனக் கருதினன். 19

பின்னர் அந்த அஸ்திரத்தை § உபஸம்ஹாரம் செய்ய அறியாதவனுய்ப் பிராணசங்கடம் நேர்ந்தபோது ஆசமனம் செய்து தியானித்து அஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். 20

---

(1) பிராணனை மட்டும் காப்பாற்ற விரும்பினுன். கீர்த்தியைக் காக்க விரும்பவில்லை.

(2) உருத்திரரிடம் பிரமதேவர் பயந்து ஓடக்காரண மென்ன வெனில், ஒருசமயம் பிரமதேவன் மிருகவடிவ மெடுத்துப் பெண்ணைப் புணர்வதற்கு யத்தனித்தான். அப்போது பரமசிவன் சினமடைந்ததால் வெருண் டோடினுன். உருத்திரரிடம் பயந்து சூரியன் ஓடியது போல் என்பது மற்றொரு பாடம். இச்சரித்திரம் வாம புராணத்தி லுள்ளது. வித்தியுன் மாலி யென்னும் இராக்கத னொருவன் பரமசிவனிடம் சொர்ண விமானத்தை யடைந்தான். இந்த இராக்கதன் சூரியனுக்குப் 'பின்புறமாகவே தன் விமானத்தின் மீது சஞ்சரித்து அந்த விமானத்தின் ஒளியால் இரவை அகற்றி வந்தான். அதைக்கண்ட சூரியன் தன்னுடைய கிரணவொளியால் அந்த விமானத்தின் ஒளியை யகற்றிவந்தான். அவன் சங்கானிடம் முறையிட்டான். சங்கான் சின மடைந்தான். அதுகண்டு சூரியன் பயந் தோடினுன்' அப்பொழுது சூரியன் ருத்திரனுடைய குரூர திருஷ்டியினுல் தகிக்கப் பட்டுக் கீழே விழுந்தான். பின்னர் சூரியன் ஸ்ரீகாசியில் லோலார்க்க னென்ற பெயருடன் விளங்கினுன் என்பது சரித்திரம்.

உருத்திரரிடம் பயந்த யமன்போல் என்பது மற்றொரு பாடம். இது மார்க்கண் டேயருக்காக உருத்திரர் சினங் கொண்டது கண்டு யமன் பயந்ததைக் குறிப்பதாகும்.

‡ பிராம்மண குமாரன் என்றதனுலும் உபசம்ஹாரம் தெரியாதவ னென்றதனுலும் இன்னது வருமென்கிற யோசனைக் குறைவை விளக்குகிறது.

§ மந்திரத்தை ஜபித்துப் பிரயோகித்த அஸ்திரத்தை நிறுத்தல்.

𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌉𑌲𑍍𑌬𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌦𑌿𑌶𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌦𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌵𑌾𑌚 𑌹 ॥ 21

𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌭𑌯𑌂𑌕𑌰 ।
𑌤𑍍𑌵𑌮𑍇𑌕𑍋 𑌦𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌪𑌵𑌰𑍍𑌗𑍋 𑌹𑌿 𑌸𑌂𑌸𑍃𑌤𑍇𑌃 ॥ 22

𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌪𑌰𑌃 ।
𑌮𑌾𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑍁𑌦𑌸𑍍𑌯 𑌚𑌿𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 ॥ 23

𑌸 𑌏𑌵 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌮𑌾𑌯𑌾𑌮𑍋𑌹𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌵𑌿𑌧𑌤𑍍𑌸𑍇 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ 24

𑌤𑌥𑌾𑌯𑌂 𑌚𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌭𑍁𑌵𑍋 𑌭𑌾𑌰𑌜𑌿𑌹𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 ।
𑌸𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌚𑌾𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌯 𑌚𑌾𑌸𑌕𑍃𑌤𑍍 ॥ 25

𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌕𑍁𑌤𑍋 𑌵𑍇𑌤𑌿 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌨 𑌵𑍇𑌦𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑌾𑌯𑌾𑌤𑌿 𑌤𑍇𑌜𑌃 𑌪𑌰𑌮𑌦𑌾𑌰𑍁𑌣𑌮𑍍 ॥ 26

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

𑌵𑍇𑌤𑍍𑌥𑍇𑌦𑌂 𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑍈𑌵𑌾𑌸𑍌 𑌵𑍇𑌦 𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌬𑌾𑌧 𑌉𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 ॥ 27

திக்குக ளெங்கும் பிரசண்டம் போல் பிரகாசித்துக் கொண்டு கிளம்பிய அந்த அஸ்திரத்தின் தேஜஸையும்(அப்போதுநேரிட்ட) பிராணுபத்தையும் பார்த்த அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் கூறுகிருன். 21

கிருஷ்ணு! கிருஷ்ணு! மகாபாகுவே! அன்பர்களுக்கு அபயங் கொடுப்பவனே! சம்சார மென்கிற (தீயால்) தகிக்கப் படுகிறவர்களை அதினின்றும் விடுவிப்பவன் நீ ஒருவன்தான். 22

நீயே பிரத்தியக்ஷ ஈசுவரன். நீதான் ஆதிபுருஷன். பிரகிருதிக்கு வேறுபட்டவன். தானே பிரகாசிக்கும் சக்தியால் மாயையை யொழித்துக் கைவல்ய சொரூபத்தி லிருப்பவன். 23

இவ்வளவநந்தம் மகிமையுள்ள நீ மாயையினுல் மோகமடைந்த மனமுடைய ஜீவன்களால் உபாசிக்கப் படுகிருய். அவைகளுக்குத் தரும முதலிய பயன்களை உனது மகிமையால் அளிக்கின்ருய். 24

ஆயினும் பூபாரத்தை யொழிப்பதற்கும் உன்னை யடைந்து மற்றதெதிலும் மனத்தைச் செலுத்தாதவர் களுமாகிய பக்தர்கள் அடிக்கடி தியானிப்பதற்கும் உனது அவதாரம் ஏற்படுகிறது. 25

தேவர்களுக்கும் தேவனுகிய பகவானே! மிகவும் பயங்கா மானதும் எங்குந் தடையின்றி வியாபித்தது மாகிய இந்த தேஜஸின் சொரூபம் யாது; இது எங்கிருந்து கிளம்பிற்று? எனக்குத் தெரிய வில்லையே. 26

ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிருன்.

இது துரோணு சிரியருடைய புத்திரனுகிய அசுவத் தாமனுடைய பிரமாஸ்திரம். அவன் தனக்குப் பிராணசங்கடம் உண்டானவுடன் இதைக் காட்டியிருக்

𑌨 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑌮𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌕𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।
𑌜𑌹𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜 𑌉𑌨𑍍𑌨𑌦𑍍𑌧𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍋 𑌹𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜𑌸𑌾 ॥ 28

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌫𑌾𑌲𑍍𑌗𑍁𑌨𑌃 𑌪𑌰𑌵𑍀𑌰𑌹𑌾 ।
𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌪𑌸𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌾𑌯 𑌸𑌂𑌦𑌧𑍇 ॥ 29

𑌸𑌂𑌹𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌮𑍁𑌭𑌯𑍋𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍀 𑌶𑌰𑌸𑌂𑌵𑍃𑌤𑍇 ।
𑌆𑌵𑍃𑌤𑍍𑌯 𑌰𑍋𑌦𑌸𑍀 𑌖𑌂 𑌚 𑌵𑌵𑍃𑌧𑌾𑌤𑍇𑌽𑌰𑍍𑌕𑌵𑌹𑍍𑌨𑌿𑌵𑌤𑍍 ॥ 30

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍁 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌦𑌹𑌨𑍍𑌮𑌹𑌤𑍍 ।
𑌦𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌸𑌾𑌂𑌵𑌰𑍍𑌤𑌕𑌮𑌮𑌂𑌸𑌤 ॥ 31

𑌪𑍍𑌰𑌜𑍋𑌪𑌦𑍍𑌰𑌵𑌮𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑌂 𑌚 𑌤𑌮𑍍 ।
𑌮𑌤𑌂 𑌚 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌂𑌜𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍋 𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ॥ 32

கிறான். இவன் உபசங்காரம் செய்யத் தெரியாதவன். தான் தெரியாதவன் என்பதை அவனே யறிவான். 27

இந்த பிர்ம்மாஸ்திரத்தின் தேஜஸை நிவர்த்திக்க மற்ற அஸ்திரங்களுக்குத் திறமை யில்லை. விருத்தி யடையும் இந்த தேஜஸை நீயும் பிர்மாஸ்திரப் பிரயோகம் செய்து அதனுடைய தேஜஸால் நாசம் செய்யவேண்டும். நீ அஸ்திரங்க ளெல்லாவற்றையும் பிரயோகம் செய்வதில் சமர்த்த னாயிற்றே. 28

சூத புராணிகர் கூறுகிறார்.

பகைவர்கள் மகாவீரர்க ளாயினும் அவர்களையும் கொல்ல வல்லவனாகிய பற்குனன், கிருஷ்ணன் இவ்விதம் கூறியதைக் கேட்டதும் ஆசமனம் செய்து கிருஷ்ணனை வலம்வந்து பணிந்து பிர்மாஸ்திரத்தை நிவாரணம் செய்ய பிர்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். 29

§ உடனே இரண்டு பிர்மாஸ்திரங்களின் தேஜசும் ஒன்றாய்க் கலந்து ஆகாயம் பூமி அந்தரிக்ஷம் எங்கும் பரவி சூரியன் அக்னி இவைகளைப்போல் விருத்தி யடைந்தது. 30

அசுவத்தாமன் அர்ச்சுனன் இவர்களால் பிரயோகிக்கப்பட்டதும் மூவுலகங்களையு மெரிப்பதும் மகத்து மாகிய அஸ்திரதேஜஸால் தகிக்கப்படும் பிராணிகள் யாவும் பிரளய காலாக்கினி என்றெண்ணின. 31

பிராணிகளுக் குண்டான உபத்திரவத்தையும் உலகத்திற் குண்டான நாசத்தையும் வாசுதேவரது அபிப்பிராயத்தையும் கவனித்து இரண்டு பிர்மாஸ்த்திரத்தையும் உபசங்காரம் செய்தான். 32

§ பிரளய காலத்தில் சங்கர்ஷணனுடைய முகத்தினின்றுண்டான அக்கினியும் சூரியனும் கலந்து விருத்தியடையும்,

𑌤𑌤 𑌆𑌸𑌾𑌦𑍍𑌯 𑌤𑌰𑌸𑌾 𑌦𑌾𑌰𑌣𑌂 𑌗𑍌𑌤𑌮𑍀𑌸𑍁𑌤𑌮𑍍 |
𑌬𑌬𑌨𑍍𑌧𑌾𑌮𑌰𑍍𑌷𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌃 𑌪𑌶𑍁𑌂 𑌰𑌶𑌨𑌯𑌾 𑌯𑌥𑌾 ‖ 33

𑌶𑌿𑌬𑌿𑌰𑌾𑌯 𑌨𑌿𑌨𑍀𑌷𑌨𑍍𑌤𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾 𑌰𑌿𑌪𑍁𑌂 𑌬𑌲𑌾𑌤𑍍 |
𑌪𑍍𑌰𑌾𑌹𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍁𑌪𑌿𑌤𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌮𑍍𑌬𑍁𑌜𑍇𑌕𑍍𑌷𑌣𑌃 ‖ 34

𑌮𑍈𑌨𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌤𑍍𑌰𑌾𑌤𑍁𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍁𑌮𑌿𑌮𑌂 𑌜𑌹𑌿 |
𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑌾𑌗𑌸𑌸𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌨𑌵𑌧𑍀𑌨𑍍𑌨𑌿𑌶𑌿 𑌬𑌾𑌲𑌕𑌾𑌨𑍍 ‖ 35

𑌮𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌮𑍁𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌂 𑌸𑍁𑌪𑍍𑌤𑌂 𑌬𑌾𑌲𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌜𑌡𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌂 𑌵𑌿𑌰𑌥𑌂 𑌭𑍀𑌤𑌂 𑌨 𑌰𑌿𑌪𑍁𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 ‖ 36

பின்னர் கோபத்தால் சிவந்த கண்களையுடைய அர்ச்சுனன் கௌதம வம்சத்தில் பிறந்த கிருபியின் புத்திரனும் குரூரனுமாகிய அசுவத்தாமனிடம் வந்து அவனை ஒரு பலமான கயிற்றினால் ‡ பசுவைக் கட்டுவது போல் கட்டினான்.

பகைவனாகிய அசுவத்தாமனைக் கயிறுகொண்டு கட்டி கூடாரத்திற்குக் கொண்டு போக விரும்பிய அம்புஜாக்ஷனாகிய கிருஷ்ணன் அர்ச்சுனனைக் கண்டதுங் கோபங்கொண்டு கூறுகிறான். 34

§ ஏ பார்த்த (குந்தியின் புத்திரன்) இவனைக் காப்பாற்ற வேண்டாம். இவன் தள்ளி விடப்பட்ட அந்தணன். ஆகையால் இவனை வதம்செய்; குற்றமற்றவர்களாகிய வாலிபர்களை நித்திரை செய்யும் இரவில் வதம் செய்தானல்லவா? 35

விரோதி (மதுபானஞ் செய்து) மயங்கியிருப்பினும் (வியாதியால்) பிரமத்தனாயிருப்பினும் (பிறந்தது முதல் பித்தால்) உன்மத்தனாகவிருப்பினும் நித்திரையிலிருப்பினும் வாலிபனாகவிருப்பினும் ஜடனாகவிருப்பினும் (முயற்சியில்லாதவன்) ஸ்திரீயாயிருப்பினும் சரணமடைந்து விடினும், இரதமிழந்து பயந்து ஓடினாலும் தருமந்தெரிந்தவர்கள் அவனைக் கொல்லக் கூடாது. 36

---

‡ கருணையின்றிக் கட்டுவதைக் காட்டுகிறது. அல்லது யாகத்தில் பசுவைக் கட்டுவது தருமமாகக் கருதப் படுவதுபோல் இந்த அசுவத்தாமனைக்கட்டுவதும் தர்மமாகுமென்பதாம்.

§ கிருஷ்ணன் அசுவத்தாமனைக் கொல் எனக் கூறினது அர்ச்சுனன் சோக மோகமுடையவனாயினும் தருமனிஷ்டன் என்ற பிரசித்தியை வெளியிடவேயாம்.

36-வது. இதிற் கூறியபடி அசுவத்தாமனும் பயந்து ஓடியவனாதலால், இவனைக் கொல்லும் படி 35-வது சுலோகத்தில கிருஷ்ணன் கூறிய தேனெனில் குழந்தையைக் கொன்றது மன்றித் தூங்கும்போது கொன்றதுமாகிய இரண்டு குற்றங்கள் ஏற்பட்டதால் வதஞ்செய்யப்படுவதற்குரியவன் என்பது கொண்டாம். அல்லது அர்ச்சுனன் மனதைப் பரீக்ஷிப்பதற்கு மட்டும் சொல்லுகிறவராகையால் கொல்லென்று கூறிக் கொல்லக் கூடாதவர்களிலும் கணக்கிட்டார். இதனால் தான் புத்திசாலியாகிய அர்ச்சுனன் பலவித காரணங்களுடன் பகவானுக்கு அந்தரங்கமான அபிப்பிராயமில்லையென்பது அறிந்து அவனைக்கொல்லவில்லை.

𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌪𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌯𑌘𑍃𑌣𑌃 𑌖𑌲𑌃 |
𑌤𑌦𑍍𑌵𑌧𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌯𑌦𑍍𑌦𑍋𑌷𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌧𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ‖ 37

𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌚 𑌭𑌵𑌤𑌾 𑌪𑌾𑌞𑍍𑌚𑌾𑌲𑍍𑌯𑍈 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌮𑌮 |
𑌆𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾𑌨𑌿𑌨𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌹𑌾 ‖ 38

𑌤𑌦𑌸𑍌 𑌵𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 𑌪𑌾𑌪 𑌆𑌤𑌤𑌾𑌯𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍁𑌹𑌾 |
𑌭𑌰𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌵𑍀𑌰 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌕𑍁𑌲𑌪𑌾𑌂𑌸𑌨𑌃 ‖ 39

𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑌃 |
𑌨𑍈𑌚𑍍𑌛𑌦𑍍𑌧𑌨𑍍𑌤𑍁𑌂 𑌗𑍁𑌰𑍁𑌸𑍁𑌤𑌂 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌹𑌨𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍 ‖ 40

𑌅𑌥𑍋𑌪𑍇𑌤𑍍𑌯 𑌸𑍍𑌵𑌶𑌿𑌬𑌿𑌰𑌂 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 |
𑌨𑍍𑌯𑌵𑍇𑌦𑌯𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑍈 𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌹𑌤𑌾𑌨𑍍 ‖ 41

𑌤𑌥𑌾𑌹𑍃𑌤𑌂 𑌪𑌶𑍁𑌵𑌤𑍍𑌪𑌾𑌶𑌬𑌦𑍍𑌧𑌮𑍍
𑌅𑌵𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌂 𑌕𑌰𑍍𑌮𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑍇𑌨 |

எவன் கருணையற்றவனும் துஷ்டனுமாக விருந்து பிறருடைய பிராணனைக்கொண்டு தன் பிராணனைக் காக்கக் கருதுகிறானோ அவனைக் கொல்வது அவனுக்கு நலம்பயக்கும். † ஏனெனில் பிறரை இம்சை செய்த குற்றத்தால் நரகத்தை யல்லவா அடைகிறான். 37

(அர்ச்சுனா!) நான் கேட்டுக்கொண் டிருக்கும் போதே திரௌபதியை நோக்கி, "ஏ மானினி! உன்னுடைய புத்திரர்களைக் கொன்ற அசுவத்தாமனுடைய சிரசைக் கொண்டுவருகிறே" னென்று நீ பிரதிக்ஞை செய்திருக்கிறாய். 38

ஏ வீரனாகிய பாண்டுநந்தன ! இந்த அசுவத்தாமன் ஆயுத மெடுத்தவன். பாபம் செய்தவன். உன்னுடைய புத்திரர்களைக் கொன்றவன். துரியோதனனுக்குப் பிரியத்தைச் செய்தவன். பிராமண குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டாக்கியவன். ஆகையால் இவனை வதம் செய்யலாம். 39

தரும முணர்ந்த கிருஷ்ணன் இங்ஙனம் பிரேரேபித்ததும் கீர்த்தி வானாகிய பார்த்தன், புத்திரர்களைக் கொன்றவனாயினும் அவனை (அசுவத்தாமனை)க் கொல்ல விரும்பவில்லை. 40

பின்னர், கோவிந்தனைத் தனக்கு நண்பனாகவும் சாரதியாகவு முடைய அர்ச்சுனன் தன்னுடைய கூடாரம்வந்து மரணமடைந்த தன் புத்திரர்களை நினைத்து வருந்தித் துக்கங்கொண் டிருக்கும் தன் நாயகியாகிய திரௌபதிக்கு அசுவத்தாமனைக் காட்டினான். 41

அவ்விதம் அவமானப்படுத்தப் பட்டவனும் பசுவைப்போல் கயிற்றினால் கட்டுண்டவனும் நிந்திக்கத்தக்க காரியங்களைச் செய்ததால் தலைகுனிந்து நிற்ப

---

† பாபம் செய்தவர்கள் இராஜனுடைய தண்டனைக்குட் பட்டால் அவர்களுக்கு நற்கதி யுண்டாகும். இது ஸ்மிருதி வசனக்கருத்து. வாலியை வதம் செய்வதற்கு இராமர் கூறிய அநேக காரணங்களுள் இதுவுமொன்று.

𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌪𑌕𑍃𑌤𑌂 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌸𑍁𑌤𑌂
𑌵𑌾𑌮𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌨𑌨𑌾𑌮 𑌚 ॥ 42

𑌉𑌵𑌾𑌚 𑌚𑌾𑌸𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌨𑌯𑌨𑌂 𑌸𑌤𑍀 ।
𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌾𑌂 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌾𑌮𑍇𑌷 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌗𑍁𑌰𑍁𑌃 ॥ 43

𑌸𑌰𑌹𑌸𑍍𑌯𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑍋𑌪𑌸𑌂𑌯𑌮𑌃 ।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌾 𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍋 𑌯𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ॥ 44

𑌸 𑌏𑌷 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑍋𑌣𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌰𑍍𑌧𑌂 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌨𑌾𑌨𑍍𑌵𑌗𑌾𑌦𑍍𑌵𑍀𑌰𑌸𑍂𑌃 𑌕𑍃𑌪𑍀 ॥ 45

𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌭𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌗𑍌𑌰𑌵𑌂 𑌕𑍁𑌲𑌮𑍍 ।
𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌨𑌾𑌰𑍍𑌹𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌪𑍂𑌜𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌮𑌭𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌃 ॥ 46

𑌮𑌾 𑌰𑍋𑌦𑍀𑌦𑌸𑍍𑌯 𑌜𑌨𑌨𑍀 𑌗𑍌𑌤𑌮𑍀 𑌪𑌤𑌿𑌦𑍇𑌵𑌤𑌾 ।
𑌯𑌥𑌾𑌹𑌂 𑌮𑍃𑌤𑌵𑌤𑍍𑌸𑌾𑌰𑍍𑌤𑌾 𑌰𑍋𑌦𑌿𑌮𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌮𑍁𑌖𑍀 𑌮𑍁𑌹𑍁𑌃 ॥ 47

வனும் அபசாரம்செய்தவனுமாகிய குருபுத்திரனுகிய அசுவத்தாமனைக்கண்டது ம்சோபனமான சுவபாவமுடைய பாஞ்சாலி கருணைகூர்ந்துவந்தனம்செய்தாள்.

பதிவிருதையாகிய பாஞ்சாலி இப்படி அசுவத்தாமன் கயிற்ருல் கட்டுண்டிருப்பதைக் கண்டும் சகிக்காமல் "இவர் பிராமணர்; தவிர குருவாகவும் ஏற்பட்டவர்; விட்டுவிடவேண்டும்! விட்டுவிடவேண்டும்!! என்ருள். 43

(நாத!) தாங்கள், இரகசியமான மந்திரத்துடனும், ஸம்ஹாரம் உபஸம்ஹாரங்களுடனும் தனுர்வித்தையையும் அஸ்திரவித்தைகளையும் கற்றுக்கொண்ட துரோணுசிரியரே இவர். † அவர்தான் புத்திரரூபமாக விருக்கிருர். மேலும் அந்த துரோணுசாரியரின் சரீரத்தில் ‡ பாதியாகிய கிருபியுமிருக்கிருள். (அந்த கிருபி தன்கணவன் மரணமடைந்தவுடன் தானும் உடன்மரணமடையவில்லை யெனின்) வீரனையீன்றவளாகையால் கணவனையனுசரித்துப் பரலோகம் செல்ல வில்லை.

ஆகையால் தருமமுணர்ந்தவரும் மகாபாக்கியம் செய்தவருமாகிய பிராணேசா! (அர்க்கியம் முதலியவைகளால்) பூசிக்கவும் அடிக்கடி வணங்கவும் தகுந்தது குருவம்சம். ஆகையால், தங்களால் துக்கத்தையடையத்தக்க தல்ல. 46

குழந்தைகள் மரணமடைந்ததால் துக்கமடைந்து கண்களினின்று நீர்பெருகும் முகத்துடனிருந்து நான் கதறுவதுபோல, பதியைத் தெய்வமாகக் கருதியவளும் கௌதம வம்சத்திற் பிறந்தவளுமாகிய இந்த அசுவத்தாமனுடைய தாயாரும் கதறவேண்டாம். 47

---

† அவர்தான் புத்திரரூபமாக விருக்கிருர் என்பது தானே புத்திரனுகப் பிறக்கிருன் என்னும் வேதப்பிரமாணங் கொண்டுகிற்கிறது.

‡ கிருபி துரோணுசாரியரின் பாதி சரீரமென்பதும் வேதப் பிரமாணமேயாம்.

𑌯𑍈𑌃 𑌕𑍋𑌪𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍁𑌲𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑍈𑌰𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌤𑌤𑍍𑌕𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑌦𑌹𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌸𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌂 𑌶𑍁𑌚𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ॥ 48

𑌸𑍂𑌤𑌃 ॥

𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌂 𑌸𑌕𑌰𑍁𑌣𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌲𑍀𑌕𑌂 𑌸𑌮𑌂 𑌮𑌹𑌤𑍍 ।
𑌰𑌾𑌜𑌾 𑌧𑌰𑍍𑌮𑌸𑍁𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌦𑌦𑍍𑌵𑌚𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ॥ 49

𑌨𑌕𑍁𑌲𑌃 𑌸𑌹𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 𑌯𑍁𑌯𑍁𑌧𑌾𑌨𑍋 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃 ।
𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌕𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌯𑌾𑌶𑍍𑌚 𑌯𑍋𑌷𑌿𑌤𑌃 ॥ 50

𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌾𑌮𑌰𑍍𑌷𑌿𑌤𑍋 𑌭𑍀𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌵𑌧𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌨 𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑍇 𑌯𑍋𑌽𑌹𑌨𑍍 𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌨𑍍 𑌶𑌿𑌶𑍂𑌨𑍍𑌵𑍃𑌥𑌾 ॥ 51

𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌭𑍀𑌮𑌗𑌦𑌿𑌤𑌂 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌃 ।
𑌆𑌲𑍋𑌕𑍍𑌯 𑌵𑌦𑌨𑌂 𑌸𑌖𑍍𑌯𑍁𑌰𑌿𑌦𑌮𑌾𑌹 𑌹𑌸𑌨𑍍𑌨𑌿𑌵 ॥ 52

அந்தக்கரணத்தை அடக்காத க்ஷத்திரியர்கள் அந்தணர்களுடைய வம்சத்திற்குக் கோபமுண்டாக்கினுல் அந்த க்ஷத்திரியர்களின் வம்சம் பரிவாரத்துடன் துக்கமடையும். அந்த அந்தணவம்சம் இந்த க்ஷத்திரிய வம்சத்தைப் பொசுக்கிவிடும். 48

சூதபுராணிகர் கூறுகிருர்.

ஓ அந்தணர்களே! யாகம் செய்யும் காலத்தில் அக்னியிலுண்டான (அல்லது இராஜமகிஷியான) திரௌபதியினுடைய அறநெறி வழுவாததும் நியாயங் கடவாததும் கருணை நிறைந்ததும் கபடமற்றதும் சமமானதும் புகழ்பெறகட்டியதுமாகிய வார்த்தையை இராஜாவாகிய தருமநந்தனன் கேட்டுப் புகழ்ந்தார்.

நகுலன், சகாதேவன், சாத்யகி, தனஞ்சயன் தேவகியின் குமாரனுகிய கிருஷ்ணன் இன்னும் மற்றுமுள்ளவர்கள் ஸ்திரீகள் முதலிய எல்லோரும் புகழ்ந்தார்கள். 50

¶ அச்சமயம் பீமசேனன் வெகுண்டெழுந்து யஜமானனுக்கும் தனக்கும் பயனின்றி நித்திரை புரியும் குழந்தைகளை வீணே வதம்செய்தானுகையால் இந்த அசுவத்தாமனைக் கொல்வதே தர்ம்மசாஸ்திர சம்மதமென்ருன். 51

* பீமசேனன் கூறியதையும் திரௌபதி கூறியதையும் கேட்ட நான்கு புயங்களையுடைய பகவான் தனது நண்பனுகிய அர்ச்சுனனுடைய முகத்தைப் பார்த்து புன்முறுவலுடன் கூறுகிருர். 52

¶ நித்திரை செய்த பாலர்களை வதம் செய்ததில் தனக்குப் பயனில்லாமற் போய்விட்டது. துரியோதனனுக்கும் பயனில்லை. இவ்விருவருக்கும் குழந்தைகளால் எவ்விதத் தீங்கும் கிடையாது. ஆகையால் இது வீண்வாதம் என்பதாம்.

* பீமன் வெகுண்டு அசுவத்தாமனைக்கொல்லவேண்டுமென்று கூறியதையும் பாஞ்சாலி கொல்லவேண்டாமென்று கூறியதையும் நிஷேதிக்க நான்குபுயங்களுடன் தரிசனந்தந்தான் பகவான் என்றறிக.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑍍𑌨 𑌹𑌨𑍍𑌤𑌵𑍍𑌯 𑌆𑌤𑌤𑌾𑌯𑍀 𑌵𑌧𑌾𑌰𑍍𑌹𑌣𑌃 ।
𑌮𑌯𑍈𑌵𑍋𑌭𑌯𑌮𑌾𑌮𑍍𑌨𑌾𑌤𑌂 𑌪𑌰𑌿𑌪𑌾𑌹𑍍𑌯𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ॥ 53

𑌕𑍁𑌰𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌤𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚 𑌭𑍀𑌮𑌸𑍇𑌨𑌸𑍍𑌯 𑌪𑌾𑌞𑍍𑌚𑌾𑌲𑍍𑌯𑌾 𑌮𑌹𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 ॥ 54

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌸𑌹𑌸𑌾𑌜𑍍𑌞𑌾𑌯 𑌹𑌰𑍇𑌰𑍍𑌹𑌾𑌰𑍍𑌦𑌮𑌥𑌾𑌸𑌿𑌨𑌾 ।
𑌮𑌣𑌿𑌂 𑌜𑌹𑌾𑌰 𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑍍𑌯 𑌸𑌹𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑌮𑍍 ॥ 55

𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌰𑌶𑌨𑌾𑌬𑌦𑍍𑌧𑌂 𑌬𑌾𑌲𑌹𑌤𑍍𑌯𑌾𑌹𑌤𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ।
𑌤𑍇𑌜𑌸𑌾 𑌮𑌣𑌿𑌨𑌾 𑌹𑍀𑌨𑌂 𑌶𑌿𑌬𑌿𑌰𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑌯𑌾𑌪𑌯𑌤𑍍 ॥ 56

ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறுகிறார்.

அர்ச்சுனா! அதமனாயினும் பிராமணனாகையால் அவனை வதம் செய்யக் கூடாது. $ ஆததாயியாகிய அந்தணனை வதம் செய்யவேண்டும். ஆகிய இவ்விரண்டு சாஸ்திரங்களையும் நானேற்படுத்தியிருக்கிறேன். எனதாக்ஞையைப் பரிபாலனம் செய். 53

* நீ உன் பிரியமுள்ள பாஞ்சாலிக்குச் சமாதானம் செய்த போது செய்த பிரதிக்ஞையை உண்மையாகச் செய். பீமசேனனுக்கும் எனக்கும் பாஞ்சாலிக்கும் பிரியமானதைச் செய். 54

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

பிறகு அர்ச்சுனன் ஹரியின் கருத்தையறிந்து கொண்டு விரைவாகத்தன் கைக்கத்தியால் அசுவத்தாமனுடைய சிரசிலிருக்கும் மணியையும் மயிரையும் அறுத்தெடுத்தான். 55

பாலஹத்தி செய்ததால் காந்தி இழந்தவனும், (சிரசிலிருந்த) மணியற்றவனுமாகிய அசுவத்தாமனைக் கட்டவிழ்த்து விட்டுக் கூடாரத்தை விட்டுத்துரத்தினான். 56

$ ஆததாயி - தீவைப்பவன், விஷம்கொடுப்பவன், ஆயுதமெடுப்பவன், பொருளையபகரிப்பவன், (பிறருடைய) பூமியையும் பெண்டிரையும் அபகரிப்பவன் எனப்பொருள்படும். இங்கு ஆயுதமெடுத்தானாகையால் இவன் ஆததாயியாகிறான். ஆததாயியாகிய அந்தணன் வேதவேதாங்கங்களின் கரைகண்டவனாயினும் அவன் எதிர்த்துக் கொல்லவருவானாயின் அவனை வதம் செய்யலாம். இதனால் பிர்மஹத்திசெய்தவனாகமாட்டான். (இதுவும் கிருஷ்ணபகவானால் ஏற்படுத்தப்பட்டதேயாகும்.)

* பீமனுக்கு அசுவத்தாமனை வதம் செய்வதில் பிரியம்; பாஞ்சாலிக்கு வதஞ்செய்யாமலிருப்பது பிரியம். இரண்டிலும் கிருஷ்ணனுக்குப் பிரியம்.

வபநம் த்ரவிணாதாநம் ஸ்தாநாந்நிர்யாபணம் ததா |
ஏஷ ஹி ப்ரஹ்மபந்தூநாம் வதோ நாந்யோऽஸ்தி தைஹிக: || 57

புத்ரஶோகாதுராஸ்ஸர்வே பாண்டவாஸ்ஸஹ க்ருஷ்ணயா |
ஸ்வாநாம் ம்ருதாநாம் யத்க்ருத்யம் சக்ருர்நிர்ஹரணாதிகம் || 58

இதி ஶ்ரீமத்பாகவதே ப்ரதமஸ்கந்தே ஸப்தமோऽத்யாய:.

ஶ்ரீஸூத: ||

அத தே ஸம்பரேதாநாம் ஸ்வாநாமுதககாம்யயா |
தாதும் ஸக்ருஷ்ணா கங்காயாம் புரஸ்க்ருத்ய யயு: ஸ்த்ரிய: || 1

தே நிநீயோதகம் ஸர்வே விலப்ய ச ப்ருஶம் புந: |
ஆப்லுதா ஹரிபாதாப்ஜரஜ:பூதஸரிஜ்ஜலே || 2

பிராமணுதமர்களுக்குக் கேசமறுத்தல், அவர்களின் பொருளைக் கிரகித்தல், இருப்பிடத்தைவிட்டு வெருட்டுதல் இவைகளையே வதமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்குத்தேகத்தைப் பற்றியவை வேறெதுவுமில்லை.

புத்திர சோகத்தால் வருந்தும் பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியுடனிருந்து மரணமடைந்த ஞாதிகளுக்குத்தகனம் செய்வதற்கு முயற்சியுள்ள காரியத்தைச் செய்தார்கள். 58

7-வது அத்தியாயம் முற்றிற்று.

8 - வது அத்தியாயம்.

சூதபுராணிகர் கூறுகிறார்.

* பின்னர் அந்தப்பாண்டவர்கள் மரணமடைந்தவர்களும் (தர்ப்பணத்தை) விரும்பியவர்களுமாகிய ஞாதிகளுக்குக்கங்கையில் தர்ப்பணம் செய்ய திரௌபதி முதலிய மாதர்களை முன்னே நடத்திக்கொண்டு சென்றார்கள். 1

அந்தப்பாண்டவர்கள் யாவரும் நீரால் தர்ப்பணஞ்செய்து மிகவும் பிரலாபித்து ஹரியின் பாதகமல தூளியால் பரிசுத்தமான கங்காஜலத்தில் மறுபடியும் ஸ்நானம் செய்தார்கள். 2

---

* பிரேத காரியத்திற்குச் செல்லும்போது மாதர்களை முன்னிட்டுக்கொண்டே செல்லவேண்டுமென்பது சாஸ்திரம்.

தத்ராஸீநம் குருபதிம் த்ருதராஷ்ட்ரம் ஸஹாநுஜம் |
காந்தாரீம் புத்ரஶோகார்த்தாம் ப்ருதாம் க்ருஷ்ணாம் ச மாதவ: || 3

ஸாந்த்வயாமாஸ முநிபிர் ஹதபந்தூந் ஶுசார்ப்பிதாந் |
பூதேஷு காலஸ்ய கதிம் தர்ஶயந்நப்ரதிக்ரியாம் || 4

ஸாதயித்வாஜாதஶத்ரோ: ஸ்வம் ராஜ்யம் கிதவைர்ஹ்ருதம் |
காதயித்வாஸதோ ராஜ்ஞ: கசஸ்பர்ஶக்ஷதாயுஷ: || 5

யாஜயித்வாஶ்வமேதைஸ்தம் த்ரிபிருத்தமகல்பகை: |
தத்யஶ: பாவநம் திக்ஷு ஶதமந்யோரிவாதநோத் || 6

ஆமந்த்ர்ய பாண்டுபுத்ராம்ஶ்ச ஶைநேயோத்தவஸம்யுத: |
த்வைபாயநாதிபிர்விப்ரை: பூஜிதை: ப்ரதிபூஜித: || 7

கந்தும் க்ருதமதிர்ப்ரஹ்மந் த்வாரகாம் ரதமாஸ்தித: |
உபலேபே(அ)பிதாவந்தீமுத்தராம் பயவிஹ்வலாம் || 8

அநேக முனிவர்களுடன் கூடியமாதவன் அங்கிருக்கும் குருவம்சத்திற்குப் பதியாகிய தருமபுத்திரர் அவருடன் பிறந்த பீமன் முதலியவர்கள், திருதராஷ்டிரன், புத்திரசோகத்தால் வருத்தமடைந்த காந்தாரி, குந்தி, திரௌபதி, உறவினர்களை இழந்த துக்கத்தில் மூழ்கிய மற்றவர்கள் இவர்களுக்கு ஜனன மரணமுதலிய காலகதியைப் பிராணிகளால் தடுக்க முடியாதென உபதேசித்துச் சமாதானம் செய்தார். 3—4

பகவானான கிருஷ்ணன் வஞ்சகர்களாகிய துரியோதனன் முதலியவர்கள் பிடுங்கிக் கொண்ட அஜாத சத்ருவின் (தரும புத்திரரின்) இராஜ்யத்தை அவருக்குச் சுவாதீனப்படுத்தி திரௌபதியின் கூந்தலை தொட்டதனால் ஆயுள் முடிவைப்பெற்ற துரியோதனாதிகளை பீமன் அர்ச்சுனன் முதலியவர்களைக் கொண்டு வதம் செய்தார். 5

மேலான ஒழுங்கையுடைய மூன்று அசுவமேதயாகங்களைத் தரும புத்திரருக்கு நடத்திக் கொடுத்து, நூறு அசுவமேதயாகங்களை யனுஷ்டித்த தேவேந்திரன் கீர்த்தி திக்குகளெங்கும் பரவி யிருப்பது போல் இந்த யுதிஷ்டிரருடைய பரிசுத்தமான கீர்த்தியைத் திசைகளெங்கும் பரவும்படி செய்தார். 6

கோவிந்தன் பாண்டு புத்திரர்களிடம் விடை பெற்றுக்கொண்டு சினி என்பவனுக்குக் கொள்பேரனாகிய சாத்தகியுடனும் உத்தவருடனும் எல்லோராலும் பூஜிக்கப்பட்ட துவைபாயனர்(வியாசர்) முதலிய முனிவர்கள் புகழத்துவாரகை செல்ல நிச்சயித்து இரதத்திலேறினார். அப்பொழுது பயத்தால் தளர்ச்சியடைந்து (அபுமன்யுவின் பத்தினியாகிய) உத்தரை எதிர் நோக்கி வரக்கண்டார். 7-8

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾 ||

𑌪𑌾𑌹𑌿 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑌿𑌨𑍍 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 |
𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌦𑌭𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 || 9

𑌅𑌭𑌿𑌦𑍍𑌰𑌵𑌤𑌿 𑌮𑌾𑌮𑍀𑌶 𑌶𑌰𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑌾𑌯𑌸𑍋 𑌵𑌿𑌭𑍋 |
𑌕𑌾𑌮𑌂 𑌦𑌹𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌨𑌾𑌥 𑌮𑌾 𑌮𑍇 𑌗𑌰𑍍𑌭𑍋 𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 || 10

𑌉𑌪𑌧𑌾𑌰𑍍𑌯 𑌵𑌚𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 |
𑌅𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑌿𑌦𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑍌𑌣𑍇𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌬𑍁𑌧𑍍𑌯𑌤 || 11

𑌤𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌥 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌸𑌾𑌯𑌕𑌾𑌨𑍍 |
𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌭𑌿𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌨𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑍁𑌪𑌾𑌦𑌦𑍁𑌃 || 12

𑌵𑍍𑌯𑌸𑌨𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑌨𑌨𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 |
𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌸𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂 𑌵𑍍𑌯𑌧𑌾𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 || 13

உத்தரை கூறுகிறாள்.

மகாயோகியும் தேவ தேவனும் உலகநாயகனுமாகிய கிருஷ்ண! இரக்ஷிக்க வேண்டும். இரக்ஷிக்க வேண்டும்! உலகத்தில் எல்லோரும் மரணம் முதலியன உடையவர்கள். தங்களையன்றி மற்றெவரும் பயமற்றவர்களல்ல. 9

ஈசனாகிய பிரபுவே! எரிக்கத் தக்க இரும்பு முனைகளுடன் கூடிய பாணம் என்னெதிர் நோக்கி வருகிறது. நாத! (இந்தபாணம்) என்னை இஷ்டப்படி தகிக்கட்டும்; என் கருப்பம் நாசமடைய வேண்டாம். 10

பக்தவத்ஸலனாகிய பகவான் உத்தரை கூறியதைக் கேட்டு (அவமான மடைந்ததால் சினமடைந்த) அசுவத்தாமன் இவ்வுலகத்தில் பாண்டவர்களே இல்லாமற் போகும்படி செய்யக் கருதிப் பிரயோகித்த § (பிர்மாஸ்திரம்) தென நினைத்தார். 11

பிருகு வம்சத்தில் பிறந்தவர் களுக்குள் சிறந்தவரான ஏசௌனக முனிவரே! பின்னர் அந்தப் பாண்டவர்களே தங்களுக் கெதிரில் பிரகாசித்துக் கொண்டு வரும் * ஐந்து பாணங்களைக் கண்டு † அக்கணமே அஸ்திரங்களை யெடுத்தார். 12

பிரபுவாகிய கிருஷ்ணன் தன்னைத்தவிர மற்றவர்களை விஷயமாகவே கருதாத (தன்னையே நம்பின) அந்தக்கரண முடைய பந்துக்களாகிய பாண்டர்களுக் கேற்பட்ட விபத்தை நோக்கித் தன் ஆயுதமாகிய சக்ராயுதத்தால் காத்தார். 13

---

§ அபாண்ட வாஸ்திரமென்றும் கூறுவார்கள்.

* பிர்மாஸ்திரம் ஒன்றே யாயினும் அது தன் மகிமையால் ஐந்தாகப் பிரிந்து ஐவரையும் நோக்கி வந்தது.

† அக்கணமே - என்றது ஐந்து பாணங்களைக் கண்டவுட னென்பதை யேனும் அப்போது கிருஷ்ணன் காக்கச் செல்ல யத்தனிக்கும் போதே என்பதையேனும் காட்டுகிறது.

𑌅𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 |
𑌸𑍍𑌵𑌮𑌾𑌯𑌯𑌾𑌵𑍃𑌣𑍋𑌦𑍍𑌗𑌰𑍍𑌭𑌂 𑌵𑍈𑌰𑌾𑌟𑍍𑌯𑌾𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑌨𑍍𑌤𑌵𑍇 || 14

𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍋𑌘𑌂 𑌚𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 |
𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌤𑍇𑌜 𑌆𑌸𑌾𑌦𑍍𑌯 𑌸𑌮𑌶𑌾𑌮𑍍𑌯𑌦𑍍𑌭𑍃𑌗𑍂𑌦𑍍𑌵𑌹 || 15

𑌮𑌾 𑌮𑌂𑌸𑍍𑌥𑌾 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑍇𑌽𑌚𑍍𑌯𑍁𑌤𑍇 |
𑌯 𑌇𑌦𑌂 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌵𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌃 || 16

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌜𑍈𑌃 𑌸𑌹 𑌕𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 |
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌿𑌦𑌮𑌾𑌹 𑌪𑍃𑌥𑌾 𑌸𑌤𑍀 || 17

𑌕𑍁𑌨𑍍𑌤𑍀 ||

𑌨𑌮𑌸𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌪𑌰𑌮𑍍 |
𑌅𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌰𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 || 18

𑌮𑌾𑌯𑌾𑌜𑌵𑌨𑌿𑌕𑌾𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌮𑌜𑍍𑌞𑌾𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 |
𑌨 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌮𑍂𑌢𑌦𑍃𑌶𑌾 𑌨𑌟𑍋 𑌨𑌾𑌟𑍍𑌯𑌧𑌰𑍋 𑌯𑌥𑌾 || 19

𑌤𑌥𑌾 𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌮𑌮𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 |
𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌥𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌮𑌹𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 || 20

பூதங்கள் எல்லா வற்றிற்கும் அந்தர்யாமியும் யோகேசுவாருமாகிய ஹரி யானவர் குருவம்சம் விருத்தி யடையத் தமது மாயையால் உத்தரையின் உள்ளிருந்து கர்ப்பத்தை மறைத்துக் கொண்டார். 14

ஓ பிருகு சிரேஷ்டரே! பிரமாஸ்திர மானது வீணாகாததும் வேறொன்றால் தடுக்கக் கூடாததுமாயினும் விஷ்ணு தேஜஸின் சொரூபமான சக்ராயுதத்தினிடம் வந்தவுடன் அடங்கி விட்டது. 15

இந்த பிரமாஸ்திரத்தை நிக்ரகம் செய்தது பற்றி அதிசயிக்கத்தக்க குணங்களையுடைய அச்சுதனிடம் ஆச்சரியப் படவேண்டாம். அவன் தான் ஜன்மமடையாமலே தன் மாயையால் இந்த பிரபஞ்சத்தைப் படைக்கிறான். பரிபாலிக்கிறான். சங்கரிக் கின்றான். 16

பிரமாஸ்திரத்தி னுடைய தேஜஸுக்குத் தப்பிய புத்திரர்கள், பாஞ்சாலி இவர்களுடனிருந்து பதிவிருதை யாகிய குந்தி பிரயாணத் திற்குத் தயாராகிய கிருஷ்ணனைப் பார்த்துக் கூறுகிறாள். 17

குந்தி கூறுகிறாள்.

ஆதிபுருஷனும் பிரகிருதிக்கு வேறுபட்ட வனும் பிரகிருதியை யடக்கியாள்பவனும் பூதங்களின் உள்ளும் புறம்பு மிருப்பவனும் காணமுடியாதவனும் மாயை என்னும் திரையில் மறைந் திருப்பவனும் அதோக்ஷஜனும் அழிவற்றவனுமாகிய தெரிந்து கொள்ளாத நான் உன்னை நமஸ்கரிக்கின்றேன். நாட்டியத்தை ஆசரித்த நடன்போன்றவர்நீர். (தேகத்திலுள்ள அபிமானமுள்ள)மூடரு

க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீநந்தநாய ச ।
நந்தகோபகுமாராய கோவிந்தாய நமோ நம: ॥ 21

நம: பங்கஜநாபாய நம: பங்கஜமாலிநே ।
நம: பங்கஜநேத்ராய நமஸ்தே பங்கஜாங்க்ரயே ॥ 22

யதா ஹ்ருஷீகேஶ கலேந தேவகீ
கம்ஸேந ருத்தாதிசிரம் ஶுசார்பிதா ।
விமோசிதாஹம் ச ஸஹாத்மஜா விபோ
த்வயைவ நாதேந முஹுர்விபத்கணாத் ॥ 23

ஷ்டிகளுக்கும் (பரமாத்ம ஜீவாத்ம விவேசனம் செய்யும்) பரம ஹம்சர்களுக்கும் (சுவரூபத்தை யறிந்த) முனிவர்களுக்கும் (இராகதுவேஷ முதலியவைகளற்ற) நிர்மலமான அந்தக் கரணமுடையவர் களுக்கும் காண முடியாத மகிமை யுடையவர். (அவ்விதமிருக்க) ஸ்தரீகளாகிய நாங்கள் பக்தியோகத்தைச் செய்து எவ்விதம் தங்கள் (சொரூபத்தை) காண்போம். 18-20

கிருஷ்ணரும் வாசுதேவரும் தேவகி நந்தனரும் நந்தகோப குமாரரும் கோவிந்தருமாகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்! 21

(1) பங்கயத்தை நாபியிலுடையவருக்கு நமஸ்காரம். பங்கய மாலைகளை யணிந்தவர்க்கு நமஸ்காரம். பங்கய நேத்திரனாகிய உமக்கு நமஸ்காரம்! (2) பங்கய அடையாள முள்ள பாதங்களை யுடைய உமக்கு நமஸ்காரம். 22

‡ ஹிருஷீகேச! துஷ்டனாகிய கம்சனால் இம்சிக்கப்பட்டவளும் வெகுகாலம் துக்க மடைந்தவளுமாகிய தேவகியை விடுவித்தது போலா நாதனாகிய நீர் என்னையும் விடுவித்தீர். என்னை என் புத்திரர்களுடன் அநேக ஆபத்துகளினின்றும் பலமுறையும் விடுவித்தீர். 23

---

(1) பங்கயத்தை நாபியில் என்றதால் பிரபஞ்சம் யாவும் பத்மாகாரமாக நாபியிலமைந் திருக்கிற தென்பது கருத்து.

(2) பாதங்களில் பத்மரேகைக ளிருக்கின்றன என்பதாம்.

18-19-20 இந்தமூன்று சுலோகங்களும் - ஆத்ராமர் களையும் தன்னுடைய குணங்க ளால் வசமாக்கி பத்தியோகம் செய்யும்படி செய்ய அவதரித்த பகவானாகிய உன்னை ஸ்திரீ கள் எவ்விதம் பக்திசெய்யப் போகிறார்கள். ஆகையால் நமஸ்கரிக் கிறேன் என்னும் கருத் துடையன. குந்திக்குக் கிருஷ்ணன் சிறியவனாயினும் பகவானாகையால் நமஸ்கரித்தாள் என்றறிக.

‡ தாயாகிய தேவகியை விட என்னிடம் மிகுந்த அபிமானத்தால் காப்பாற்றி யிருக்கி றாய். எப்படியெனில், தேவகி வெகுநாள் காராகிருகத்தி லிருந்தாள். கம்ஸனால் அவளுக்கு ஏற்பட்ட பயத்தை மட்டும் நிவிருத்தி செய்தீர். அவளுடைய புத்திரர்களைக் காக்கவில்லை. தவிர அவளுக்குப் புருஷன் நாதன். எனக்கு அநேகவிதமான ஆபத்துக்கள்; அதிலும் அடிக் கடி நேர்ந்திருக்கின்றன. அதிலும் என் பிள்ளைகளின் பொருட்டேயாம். நீ ஒருவனே எனக்கு நாதன்; ஆகையால் என்னிடம் மிகுந்த அபிமானமுடையவன் என்பது கருத்து.

விஷாந்மஹாக்நே: புருஷாதஸர்சநா
தஸத்ஸபாயா வநவாஸக்ருச்ச்ரத: ।
ம்ருதே ம்ருதேऽநேகமஹாரதாஸ்த்ரதோ
த்ரௌண்யஸ்த்ரதஶ்சாஸ்ம ஹரேऽபிரக்ஷிதா: ॥ 24

ஸா யோ யதிவஸ்ருஷ்டா நஸ்தா பாயாஸ்ஷுநோ முநி: ।
பரித்ருப்தாத்ரபுஷ்த ஸஹ திநேநோகெஶ்ஷதாம் பதே ॥ 25

விபத: ஸந்து தா: ஶஶ்வத்தத்ர தத்ர ஜகத்குரோ ।
பவதோ தர்ஶநம் யத்ஸ்யாதபுநர்பவதர்ஶநம் ॥ 26

ஜந்மைஶ்வர்யஶ்ருதஶ்ரீபிரேதமாந: புமாந் ।
நைவார்ஹத்யபிதாதும் வை த்வாமகிஞ்சநகோசரம் ॥ 27

நமோऽகிஞ்சநவித்தாய நிவ்ருத்தகுணவ்ருத்தயே ।
ஆத்மாராமாய ஶாந்தாய கைவல்யபதயே நம: ॥ 28

விஷத்தினின்றும் (பீமனுக்குத் துரியோதனன் விடமூட்டியது) பெரும் தீயினின்றும் (அரக்குமாளிகை) இராக்ஷத தரிசனத்தி னின்றும் (இடும்பன் முதலியவர்கள்) சூதாடும் சபையி னின்றும் வனவாச கஷ்டத்தி னின்றும் ஒவ்வொரு யுத்தத்திலும் அநேக $ மகாரதர்கள் பிரயோகித்த அஸ்திரங்களி னின்றும் அசுவத்தாமன் பிரயோகித்த பிர்மாஸ்திரத்தி னின்றும் ஏ கிருஷ்ண நாங்கள் உன்னால் இரக்ஷிக்கப் பட்டோம். 24

* வனத்தில் சஞ்சரிக்கும் எங்களைச் சபிக்கத் துரியோதனனுப்பிய மகா கோபியாகிய துர்வாச முனிவர் மூவுலகங்களுடன் கீரையாலும் திருப்தியடைந்தார். அதுவும் உன்னுடைய அனுக்கிரகமே. 25

ஜகத்குருவே! ஆபத்துக்கள் அடிக்கடி ஏற்படட்டும். ஏனெனில் அந்தந்த கஷ்ட காலங்களில் ஜனன மரண ரூபமாகிய சம்சாரத்தை நீக்கும் உன்னுடைய தரிசனம் மறுபடியும் கிடைக்கு மல்லவா? 26

ஜன்மம், பிரபுத்தன்மை, வேதசாஸ்திர சிரவணம், பொருள் இவைகளில் மேன்மை யடைந்து கர்வங்கொண்ட மானிடன் தீனரக்ஷகனாகிய உன்னை (கிருஷ்ண கோவிந்தா என்று) சொல்லவும் மாட்டான். 27

பக்தர்களுக்குப் பொருளானவனும் அற்றுப்போன (தருமம் அர்த்தம் காமம்) என்ற குணங்களின் செய்கை யுடையவனும் ஆத்மாராமனும் சாந்தரும் கைவல்லிய மருளவல்ல சமர்த்தனுமாகிய உன்னை நமஸ்கரிக்கிறேன். 28

$ மகாரதர்கள்- தங்களையும் தன்சாரதிகளையும் குதிரைகளையும் இரக்ஷித்துக் கொண்டு யுத்தம் செய்பவர்கள்.

* இது அதிகப்பாடம்.

𑌮𑌨𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑌾𑌲𑌮𑍀𑌶𑌾𑌨𑌮𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑍍 ।
𑌸𑌮𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌨𑍍𑌮𑌿𑌥𑌃 𑌕𑌲𑌿𑌃 ॥ 29

𑌨 𑌵𑍇𑌦 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑌗𑌵𑌂𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌿𑌤𑌂
𑌤𑌵𑍇𑌹𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌵𑌿𑌡𑌮𑍍𑌬𑌨𑌮𑍍 ।
𑌨 𑌯𑌸𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌦𑌯𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿
𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌶𑍍𑌚 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌿𑌷𑌮𑌾 𑌮𑌤𑌿𑌰𑍍𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ॥ 30

𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌨𑌜𑌸𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑍃𑌷𑌿𑌷𑍁 𑌯𑌾𑌦𑌸𑍍𑌸𑍁 𑌤𑌦𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌡𑌮𑍍𑌬𑌨𑌮𑍍 ॥ 31

𑌗𑍋𑌪𑍍𑌯𑌾𑌦𑌦𑍇 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌕𑍃𑌤𑌾𑌗𑌸𑌿 𑌦𑌾𑌮 𑌤𑌾𑌵𑌤𑍍
𑌯𑌾 𑌤𑍇 𑌦𑌶𑌾𑌶𑍍𑌰𑍁𑌕𑌲𑌿𑌲𑌾𑌞𑍍𑌜𑌨𑌸𑌂𑌭𑍍𑌰𑌮𑌾𑌕𑍍𑌷𑌮𑍍 ।
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨𑌿𑌨𑍀𑌯 𑌭𑌯𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯
𑌸𑌾 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌭𑍀𑌰𑌪𑌿 𑌯𑌦𑍍𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 ॥ 32

காலன், சிக்ஷகன், ஆதியும் அந்தமுமில்லாதவன். பிரபு, பூதங்களெல்லாவற்றையும் சமமாகப் பாவிப்பவன் நீ என்பதை நானறிவேன். உன்னை நிமித்த காரணமாகக் கொண்டு ஜனங்கள் ஒருவர்க்கொருவர் கலகம் செய்கிறார்கள். 29

* பகவானே! நீ மானிடன் செய்வதையே செய்து வருவதால் உன் கருத்தை யாராலும் அறிய முடியவில்லை. உனக்கு நண்பன், பகைவன் என்னும் பேதம் எப்போதுமில்லை. நீ சிலரைத் தண்டிப்பதாகவும் சிலரை ரக்ஷிப்பதாகவும் பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள் 30

பிரபஞ்ச சொரூபமாகிய ஏ! பரம புருஷ, அந்தர்யாமியும் ஜனன மற்றவனுமாகிய உனக்கு (வராகம் முதலிய) திரியக் ஜாதியிலும் (இராமர் முதலிய) மானிடனாகவும் (வாமனர் முதலிய) ரிஷிகளாகவும் (மத்ஸய முதலிய) ஜல ஜந்துக்களாகவும் ஜன்மம் ஏற்பட்டதும் அகர்த்தாவாகிய (ஒன்றும் செய்யாதவர்) உனக்குக் கர்மம் ஏற்பட்டதும் லீலையே யாம். 31

கிருஷ்ண! (தயிர்ச்சட்டியை யுடைத்ததனால்) அபராதியாகிய உன்னைக் கட்டுவதற்கு யசோதை கயிற்றை யெடுத்தாள். அச்சமயம் நீ, கண்களினின்று பெருகும் நீரோடு கலந்தமையுடனும், பரபரப்புடன் பார்க்கும்கண்களுடனும் கூடிய உனது முகத்தைக் கீழ்நோக்கி பயந்தவன்போல் காட்டிய உனது அவஸ்தையை நினைக்கும் போது எனக்கே மோக முண்டாகிறது. (ஜனன மரணரூபமாகிய சம்சார மென்னும்) பயமும் (மோக்ஷமளிக்கும உன்னிடம்) பயமடைகிறதல்லவா? 32

* சிலரை சிக்ஷிப்பது சிலரை ரக்ஷிப்பது என்னும் செய்கை மானிடனாக அவதரித்ததை அனுசரித்துச் செய்வதாகும். உண்மையில் பகவானுக்கு அந்த பேதமில்லை யென்பது கருத்து.

𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌹𑍁𑌰𑌜𑌂 𑌜𑌾𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇 ।
𑌯𑌦𑍋𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌵𑌾𑌯𑍇 𑌮𑌲𑌯𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ 33

𑌅𑌪𑌰𑍇 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌚𑌿𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌗𑌾𑌤𑍍 ।
𑌅𑌜𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯 𑌵𑌧𑌾𑌯 𑌚 𑌸𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌮𑍍 ॥ 34

𑌭𑌾𑌰𑌾𑌵𑌤𑌾𑌰𑌣𑌾𑌯𑌾𑌨𑍍𑌯𑍇 𑌭𑍁𑌵𑍋 𑌨𑌾𑌵 𑌇𑌵𑍋𑌦𑌧𑍌 ।
𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑍂𑌰𑌿𑌭𑌾𑌰𑍇𑌣 𑌜𑌾𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑍁𑌵𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ 35

𑌭𑌵𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌶𑍍𑌰𑌵𑌣𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌿 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑌿 𑌕𑍇𑌚𑌨 ॥ 36

𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌃
𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌿 𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵𑍇𑌹𑌿𑌤𑌂 𑌜𑌨𑌾𑌃 ।
𑌤 𑌏𑌵 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑍇𑌣 𑌤𑌾𑌵𑌕𑌂
𑌭𑌵𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑍋𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍 ॥ 37

பரிசுத்தமான மகிமையையுடைய யுதிஷ்டிரருக்குக் கீர்த்தியை யுண்டு பண்ணுவதற்கு, மலய பர்வதத்தின் கீர்த்தியை விருத்தி செய்ய வனத்தில் சந்தன விருக்ஷம் உண்டாவது போல் ஜன்ம மில்லாத நீ மிகுந்த பிரீதிக்குக் காரணமாகிய யாதவவம்சத்தில் அவதாரம் செய்தாய் எனச் சிலர் கூறுகிறார்கள். 33

* இந்தப் பிரபஞ்சம் க்ஷேமமடையவும் தேவ சத்துருக்கள் நாசமடையவும் பிரமன் முதலியவர்களால் (அல்லது சுதபஸ், பிருச்னி அவ்விருவரால்) பிரார்த்திக்கப்பட்டு வசுதேவருடைய பத்தினியாகிய தேவகியிடம் நீ அவதாரம் செய்ததென மற்றும் சிலர் கூறுகிறார்கள். 34

† சமுத்திரத்தில் தத்தளிக்கும் ஓடம் போல் மிகுதியான பாரத்தால் தத்தளிக்கும் பூபாரத்தைப் போக்க பிர்மதேவரால் பிரார்த்திக்கப்பட்டு அவதரித்ததாக மற்றுஞ் சிலர் கூறுகிறார்கள். 35

இந்த சம்சாரத்தில் அவித்தையாலும் காமத்தாலும் கருமத்தாலும் கிலேசமுறும் மானிடர்கள் (அந்தக் கிலேச நிவிருத்தியின் பொருட்டு) சிரவணம், ஸ்மரணம் இவைகளுக் குரியவைகளைச் செய்ய அவதாரம் செய்ததெனக் கூறுகிறார்கள் சிலர். 36

எந்த மானிடர்கள் உம்முடைய சரித்திரத்தை அடிக்கடி சிரவணம் கானம் கீர்த்தனம் ஸ்மரணஞ் செய்கிறார்களோ (மற்றவர்கள் கீர்த்தனம் செய்யக் கேட்டுச்) சந்தோஷ மடைகிறார்களோ அவர்கள் தான் சம்சார பரம்பரையை நிவிருத்திக்கும் உன்னுடைய பாத கமலத்தை விரைவாகப்பார்க்கிறார்கள். 37

---

* பிர்மமன் முதலியோரால் பிரார்த்திக்கப்படும் விவரம் 10-வது ஸ்கந்தத்திற் காண்க.

† முன் சுலோகத்தில் பிரமதேவர் பிராத்தித்தது முக்கிய மென்றும் இந்த சுலோகத்தில் பூமியின் பொருட்டென்றும் வித்தியாசம் காண்க.

𑌅𑌪𑌿 𑌸𑍍𑌵𑌿𑌦𑌦𑍍𑌯 𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌕𑍃𑌤𑍇𑌹𑌿𑌤 𑌪𑍍𑌰𑌭𑍋
𑌜𑌿𑌹𑌾𑌸𑌸𑌿 𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌸𑍁𑌹𑍃𑌦𑍋𑌽𑌨𑍁𑌜𑍀𑌵𑌿𑌨𑌃 |
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌭𑌵𑌤𑌃 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌾𑌤𑍍
𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 𑌰𑌾𑌜𑌸𑍁 𑌯𑍋𑌜𑌿𑌤𑌾𑌂𑌹𑌸𑌾𑌮𑍍 ‖ 38

𑌕𑍇 𑌵𑌯𑌂 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌦𑍁𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 |
𑌭𑌵𑌤𑍋𑌽𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌯𑌰𑍍𑌹𑌿 𑌹𑍃𑌷𑍀𑌕𑌾𑌣𑌾𑌮𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑍁𑌃 ‖ 39

𑌨𑍇𑌯𑌂 𑌶𑍋𑌭𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌥𑍇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌗𑌦𑌾𑌧𑌰 |
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌦𑍈𑌰𑌙𑍍𑌕𑌿𑌤𑌾 𑌭𑌾𑌤𑌿 𑌸𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑍈𑌃 ‖ 40

𑌇𑌮𑍇 𑌜𑌨𑌪𑌦𑌾𑌃 𑌸𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃 𑌸𑍁𑌪𑌕𑍍𑌵𑍌𑌷𑌧𑌿𑌵𑍀𑌰𑍁𑌧𑌃 |
𑌵𑌨𑌾𑌦𑍍𑌰𑌿𑌨𑌦𑍍𑌯𑍁𑌦𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑍇𑌧𑌨𑍍𑌤𑍇 𑌤𑌵 𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍈𑌃 ‖ 41

𑌅𑌥 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌕𑍇𑌷𑍁 𑌮𑍇 |
𑌸𑍍𑌨𑍇𑌹𑌪𑌾𑌶𑌮𑌿𑌮𑌂 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌦𑍃𑌢𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌷𑍁 𑌵𑍃𑌷𑍍𑌣𑌿𑌷𑍁 ‖ 42

𑌤𑍍𑌵𑌯𑌿 𑌮𑍇𑌽𑌨𑌨𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌮𑌤𑌿𑌰𑍍𑌮𑌧𑍁𑌪𑌤𑍇𑌽𑌸𑌕𑍃𑌤𑍍 |
𑌰𑌤𑌿𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌤𑌾𑌦𑌦𑍍𑌧𑌾 𑌗𑌙𑍍𑌗𑍇𑌵𑍌𑌘𑌮𑍁𑌦𑌨𑍍𑌵𑌤𑌿 ‖ 43

தன்னை ஆசரித்த வர்களுடைய மனோரத மெல்லா வற்றையும் பூர்த்தி செய்யும் பிரபுவே! அன்புடைய வர்களும் உன்னை யனுசரித்து ஜீவிப்பவர்களு மாகிய எங்களை இப்போது நீ கைவிடுவதற்கு விரும்பலாமா? துரியோதனன் முதலிய இராஜாக்கள் விஷயத்தில் பாபத்தைச் செய்த எங்களுக்கு உம்முடைய பாதார விந்தத்தைத் தவிர சரணமடையக் கூடியது வேறொன்றும் இல்லை. 38

இந்திரியங்களுக்கு ஈசனாகிய நீயில்லாவிடில் நாமமும் உருவமும் இல்லை; அதுபோல் நீ எப்போது எங்களைப் பார்க்காமல் போகிறாயோ அப்போதே. கீர்த்தியிலும் ஐச்வரியத்திலும் மேம்பட்ட யாதவர்களும் பாண்டவர்களு மாகிய நாங்கள் யார்? (இல்லாதவர் களாகவே ஆகிறோம்) 39

ஓ கதாதர! மற்றவர்களுக் கமையாத வஜ்ரம் முதலிய இலக்ஷணங்க ளமைந்த உன்னுடைய பாதங்களின் அடையாள முள்ள இந்த பூமி, இப்போது பிர காசிப்பது போல் (நீ ஊருக்குச் சென்றால்) பிரகாசிக்காது. 40

சகல வளப்பங்களுடனும் செவ்வனே வளர்ந்த ஒஷதிகள், கொடிகளையு டையனும் காடு மலை நதி கடல் இவைகளுடனுங் கூடிய இந்த தேசம் யாவும் உன்னுடைய பார்வையால் விருத்தி யடைகின்றன. 41

ஓ விச்வேச்வர! பிரபஞ்சத்தின் அந்தர் யாமியே! விச்வசுவரூப! என்னைச் சேர்ந்தவர் களாகிய பாண்டவர்க ளிடமும் யாதவர்க ளிடமும் எனக் கேற்பட் டிருக்கும் திடமான இந்த ஸ்னேக பாசத்தை நீக்கவேண்டும். 42

மது என்ற தேசத்திற்குப் பதியாகிய கிருஷ்ண! என் மதியானது மற்ற விஷயங்களில் சம்பந்தப் படாமல், கங்கை தன் பிரவாகத்தைக் கடலில் சேர்ப் பது போல் உன்னிடம் பிரத்தியக்ஷமாக அன்பை யடையட்டும். 43

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑌖 𑌵𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑍃𑌷𑌭𑌾𑌵𑌨𑌿𑌧𑍍𑌰𑍁𑌗𑍍-
𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌵𑌂𑌶𑌦𑌹𑌨𑌾𑌨𑌪𑌵𑌰𑍍𑌗𑌵𑍀𑌰𑍍𑌯 ।
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌗𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑍁𑌰𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌾𑌵𑌤𑌾𑌰
𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌖𑌿𑌲𑌗𑍁𑌰𑍋 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 ॥ 44

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌪𑍃𑌥𑌯𑍇𑌤𑍍𑌥𑌂 𑌕𑌲𑌪𑌦𑍈𑌃 𑌪𑌰𑌿𑌣𑍂𑌤𑌾𑌖𑌿𑌲𑍋𑌦𑌯𑌃 ।
𑌮𑌨𑍍𑌦𑌂 𑌜𑌹𑌾𑌸 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍋 𑌮𑍋𑌹𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌮𑌾𑌯𑌯𑌾 ॥ 45

𑌤𑌾𑌂 𑌬𑌾𑌢𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌗𑌜𑌸𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍 𑌪𑍍𑌰𑍇𑌮𑍍𑌣𑌾 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌨𑌿𑌵𑌾𑌰𑌿𑌤𑌃 ॥ 46

𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑍇𑌹𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌿𑌤𑍋𑌽𑌪𑍀𑌤𑌿𑌹𑌾𑌸𑍈𑌰𑍍𑌨𑌾𑌬𑍁𑌧𑍍𑌯𑌤 𑌶𑍁𑌚𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ 47

ஸ்ரீ கிருஷ்ண! அர்ச்சுனனுக்குச் சகாயனே! யாதவசிரேஷ்ட! பூமிக்குத் துரோகம் செய்த க்ஷத்திரியர்களின் வம்சத்திற்கு அக்கினியானவரே! குறையாத மகிமையுள்ளவரே! கோவிந்த! கோக்கள் பிராமணர்கள் தேவர்கள் இவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற் குரிய அவதாரம் செய்தவரே! யோகீசுவர எல்லோருக்கும் குருவாகியவரே உமக்கு நமஸ்காரம். 44

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

இவ்வாறு குந்தியின் மதுர வசனங்களால் பிரகடனம் செய்யப்பட்ட மகிமையையுடைய கிருஷ்ணன் மாயையால் மோகப் படுத்துகிறவர் போல் மந்தகாசம் செய்தார். 45

கிருஷ்ணன், (உனக்கு என்னிடம் அன்புண்டாகக் கடவதெனக்குந்தியிடம்) சொல்லிவிட்டு ஹஸ்தினபுரியில் பிரவேசித்து, குந்தி யிடத்திலும் (சுபத்திரை முதலிய ஸ்திரீகளிடத்திலும்) சொல்லிக் கொண்டு தன்னிருப்பிடம் பிரயாணமாகும்போது தருமபுத்திரர் அன்புமேலிட்டுத்தடுத்தார். (கொஞ்சக்காலம் இங்கிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்). 46

‡ மிகுந்த துக்கமுடைய தரும புத்திரருக்கு, பகவானுடைய அபிப்பிராய மறியாத வியாசர் முதலிய முனிவர்களும் § அற்புதமான செய்கை

‡ பகவானுடைய அபிப்பிராய மறியாதவர்கள் என்றது., ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பீஷ்மாசாரியார் நிர்யாண மடையும் மகோற்சவத்திற்குத் தரும புத்திரருடன் போகவேண்டுமென்றும் அந்த பீஷ்மரைக் கொண்டு யுதிஷ்டிரருக் குபதேசிக்கச் செய்யவேண்டு மென்றும் அபிப்பிராய மறியாதவர்கள்.

§ அற்புதமான செய்கையுடையவர் என்றது கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும். சந்திசெய்யத் தூது சென்றும் சமயோசித மாகப் பேசி யுத்தத்தையே தீர்மானித்ததுபோல் தருமபுத்திரருக்கு விவேக முண்டாகும்படி உபதேசித்தும் விவேக மில்லாமையையே தீர்மானப் படுத்தினர். அதுதான் அற்புதமான செய்கை.

அதாஹ ராஜா தர்மஸுதஸ்சிந்தயந் ஸுஹ்ருதாம் வதம் |
ப்ராக்ருதேநாத்மநா விப்ரா: ஸ்நேஹமோஹவஶம் கத: || 48

அஹோ மே பஶ்யதாஜ்ஞாநம் ஹ்ருதி ரூடம் துராத்மந: |
பாரக்யஸ்யைவ தேஹஸ்ய பஹ்வ்யோ மேऽக்ஷௌஹிணீர்ஹதா: ||49

பாலத்விஜஸுஹ்ருந்மித்ர பித்ருப்ராத்ருகுருத்ருஹ: |
ந மே ஸ்யாந்நிரயாந்மோக்ஷோ ஹ்யபி வர்ஷாயுதாயுதை: || 50

நைநோ ராஜ்ஞ: ப்ரஜாபர்துர்தர்மயுத்தே வதோ த்விஷாம் |
இதி மே ந து போதாய கல்பதே ஶாஸநம் வச: || 51

யுடைய கிருஷ்ணனும் விவேக முண்டாகும்படி இதிகாசங்களைக் கூறி யுபதேசித்தும் விவேக முண்டாகவில்லை. 47

ஓ அந்தணர்களே! தருமபுத்திர மகாராஜன், பந்துக்கள் வதஞ் செய்யப்பட்டதை நினைத்து ஸ்நேகம் மோகம் இவைகளுக்குட் பட்டு அவிவேகத் துடன் கூறுகிறார். 48

ஆச்சரியம்! துராத்மாவாகிய என் இருதயத்தில் ஏறியிருக்கும் அஞ்ஞானத்தைப் பாருங்கள். (நாய்நரி முதலிய வைகளுக்கு) ஆஹாரமாக மட்டும் ஏற்பட்ட இச்சரீரத்தின் நிமித்தம் என்னால் வெகு † அக்ஷௌகிணிசேனைகள் மாண்டன. 49

வாலிபர்கள், அந்தணர்கள், சம்பந்திகள், நண்பர்கள், பிதாவின் உடன் பிறந்தவர்கள், சகோதரர்கள் ஆசாரியர்கள் இவர்களுக்குத் துரோகம் செய்த எனக்குப் பதினாயிரம் வருஷங்களில் அநேகம் பதினாயிர வருஷங்க ளானாலும் நரகத்தினின்று விடுதலை யுண்டாகப் போகிற தில்லை. 50

தருமமாக யுத்தம் செய்து சத்துருக்களை வதம் செய்தால், அரசனுக்குப் பாபமுண்டாகாது என்று சாஸ்திரங்களில் கூறியுள்ள வசனங்களும் எனக்கு விவேகத்தை உண்டு பண்ணுகிற வைகளல்ல; ஏனெனில், அந்த வசனங்கள் பிரஜைகளைப் பரிபாலிக்கும் அரசனுக்கு ஏற்பட்டவைகள். 51

---

† அக்ஷௌகிணி - 1 - இரதம் 1 - கஜம் 5 பதாதிகள் 3 - குதிரைகள்சேர்ந்தது பத்தியென்று கணக்காகிறது. பத்தியை மூன்றாகப் பெருக்கினால் சேனாமுகம்; சேனாமுகம் மூன்று சேர்ந்தால் குல்மம்; குல்மம் மூன்றானால் கணம்; கணம் மூன்றானால் வாகினி; வாகினி மூன்றானால் பிருதனை; பிருதனை மூன்றானால் சமூ; சமூ மூன்றானால் அனீகினி; அனீகினி பத்து மடங்கானால் அக்ஷௌகிணி என்ற பெயரை அடையும்.

51 வது சுலோகத்தின் கருத்து அரசன் பிரஜைகளைப் பரிபாலிக்கும் போது மற்றவர்களால் பிரஜைகளுக்கு சங்கடம் நேரிட்டால் சங்கடத்திற் குள்ளாக்கும் அவர்களை அரசன் கொல்லவேண்டும். துரியோதனன பிரஜைகளைப் பரிபாலித்து வரும்போது வீணான இராஜ்யத்தின் ஆசையால் கொன்றமையால் நான்செய்தது பாபமே).

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌮𑌦𑍍𑌧𑌤𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌦𑍍𑌰𑍋𑌹𑍋 𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌿𑌹𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑍀𑌯𑍈𑌰𑍍𑌨𑌾𑌹𑌂 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌿𑌤𑍁𑌮𑍍 ॥ 52

𑌯𑌥𑌾 𑌪𑌂𑌕𑍇𑌨 𑌪𑌂𑌕𑌾𑌮𑍍𑌭𑌃 𑌸𑍁𑌰𑌯𑌾 𑌵𑌾 𑌸𑍁𑌰𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌹𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑌥𑍈𑌵𑍈𑌕𑌾𑌂 𑌨 𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌷𑍍𑌟𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥ 53

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌶𑍍𑌰𑍀 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌭𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌦𑍍𑌰𑍋𑌹𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌵𑌿𑌤𑍍𑌸𑌯𑌾 ।
𑌤𑌤𑍋 𑌵𑌿𑌨𑌶𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑍋𑌽𑌪𑌤𑌤𑍍 ॥ 1

𑌤𑌦𑌾 𑌤𑍇 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌦𑌶𑍍𑌵𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑍈𑌃 ।
𑌅𑌨𑍍𑌵𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌰𑌥𑍈𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌵𑍍𑌯𑌾𑌸𑌧𑍌𑌮𑍍𑌯𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ 2

𑌭𑌗𑌵𑌾𑌨𑌪𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌰𑍍𑌷𑍇 𑌰𑌥𑍇𑌨 𑌸𑌧𑌨𑌂𑌜𑌯𑌃 ।
𑌸 𑌤𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌰𑍋𑌚𑌤 𑌨𑍃𑌪𑌃 𑌕𑍁𑌬𑍇𑌰 𑌇𑌵 𑌗𑍁𑌹𑍍𑌯𑌕𑍈𑌃 ॥ 3

பந்துக்களை இழந்த ஸ்திரீகளுக்குச் செய்த துரோகத்தை, கிருகஸ்தாச்சிரமத்திற் குரிய கர்மங்களைச் செய்து போக்கடித்துக் கொள்ள நான் சமர்த்தனல்ல. 52

சேற்றால் சேற்று ஜலமும் மதுவால் மதுவால் உண்டான குற்றமும் எப்படிப் பரிசுத்த மாகாதோ அது போல் (தவறுதலால்) செய்த ஜீவ இம்சையை (புத்தியுடன் ஜீவ இம்சையைச் செய்யும் அசுவமேதம் முதலிய) யாகங்கள் போக்கவல்லமை யற்றவைகள். 53

8-வது அத்தியாயம் முற்றிற்று.

9 - வது அத்தியாயம்.

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

பிரஜைகளுக்கு இவ்விதம் துரோகம் செய்தோமெனப் பயந்து தருமங்களனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தால் ஹஸ்தினுபுரியினின்று புறப்பட்டு பீஷ்மாசாரியர் விழுந்து கிடக்கும் யுத்தகளமாகிய குருக்ஷேத்திரம் வந்தார் தருமபுத்திரர். 1

அப்பொழுது அந்த யுதிஷ்டிரரின் சகோதரர்களனைவரும் வியாசர் தௌம்மியர் முதலிய முனிவர்களும் சிறந்த குதிரைகள் பூட்டப்பட்டு சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட வைகளாகிய இரதங்களிலேறிக்கொண்டு தருமபுத்திரரை யனுசரித்துச் சென்றார்கள். 2

பிராமண சிரேஷ்டராகிய சௌனக முனிவரே! அர்ச்சுனனுடன் கூடின கிருஷ்ண பகவானும் இரதங்களை யனுசரித்துச் சென்றார். இவர்களுடன் கூடின யுதிஷ்டிர மகாராஜன் குஹ்யகர்களுடன் கூடின குபேரன் போல் விளங்கினார்.

ததৃஶுர் நிபதிதம் பூமௌ திவஶ்ச்யுதமிவாமரம் ।
ப்ரணேமு: பாண்டவா பீஷ்மம் ஸாநுகா: ஸஹ சக்ரிணா ॥ 4

தத்ர ப்ரஹ்மர்ஷய: ஸர்வே தேவர்ஷயஶ்ச ஸத்தம ।
ராஜர்ஷயஶ்ச தத்ராஸந் த்ரஷ்டும் பரதபுங்கவம் ॥ 5

பர்வதோ நாரதோ தௌம்யோ பகவாந் பாதராயண: ।
ப்ருஹதஶ்வோ பரத்வாஜஸ்ஸஶிஷ்யோ ரேணுகாஸுத: ॥

வஸிஷ்ட இந்த்ரப்ரமதஸ்த்ரிதோ க்ருத்ஸமதோऽஸித: ।
கக்ஷீவாந் கௌதமோऽத்ரிஶ்ச கௌஶிகோऽத ஸுதர்ஶந: ॥

அந்யே ச முநயோ ப்ரஹ்மந் ப்ரஹ்மராதாதயோऽமலா: ।
ஶிஷ்யைருபேதா ஆஜக்மு: காஶ்யபாங்கிரஸாதய: ॥ 6 – 8

தாந் ஸமேதாந் மஹாபாகாநுபலப்ய வஸூத்தம: ।
பூஜயாமாஸ தர்மஜ்ஞோ தேஶகாலவிபாகவித் ॥ 9

க்ருஷ்ணம் ச தத்ப்ரபாவஜ்ஞ ஆஸீநம் ஜகதீஶ்வரம் ।
ஹ்ருதிஸ்தம் பூஜயாமாஸ மாயயோபாத்தவிக்ரஹம் ॥ 10

தங்களுடன் வந்தவர்களுடன் கூடிய பாண்டவர்கள் சக்ர பாணியாகிய கிருஷ்ணனுடன் சொர்க்கத்தினின்று நழுவிய தேவனைப்போல் புவிமீது விழுந்திருக்கும் பீஷ்மரைப் பார்த்து நமஸ்காரம் செய்தார்கள். 4

அப்பொழுது அநேக பிர்மரிஷிகள் சிறந்த தேவரிஷிகள் இராஜரிஷிகள் பாதவம்ச சிரேஷ்டராகிய பீஷ்மரைப் பார்ப்பதற்கு வந்தார்கள். 5

ஓ பிராம்மண சிரேஷ்டரே! பர்வதர் நாரதர் தௌமியர் மகிமையுள்ள பாதராயணர், பிருகதச்வர், பரத்வாஜர், சிஷர்களுடன் கூடின பரசுராமர், வசிஷ்டர், இந்திரப்பிரமதர் த்ரிதர், கிருத்ஸமதர், அஸிதர், கக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்திரர், ஸுதரிசனர், சுகர்முதலிய மலமற்ற மற்றுமுள்ள முனிவர்கள் காசியபர் பிருகஸ்பதி முதலியவர்கள் இவர்கள் யாவரும் தத்தம் மாணக்கர்களுடன் வந்தார்கள். 6-8

தருமம் தெரிந்தவரும் தேச காலங்களின் வேற்றுமை தெரிந்து கொண்டவரும், வசூத்தமனுமாகிய பீஷ்மாசாரியார், மகாபாக்கிய வான்களும் சேர்ந்து வந்த வர்களுமாகிய அவர்களை அடைந்து பூசித்தார். 9

கிருஷ்ணனுடைய மகிமையைத் தெரிந்து கொண்ட வாசவீபுத்திரர், மாயையால் சரீரத்தைக் கிரகித்தவரும் தன் இருதயத்திலிருந்து கொண்டே (முன்னால்) வீற்றிருப்பவரும் ஜகதீச்வரனுமாகிய கிருஷ்ணனைப் பூஜித்தார். 10

பாண்டுபுத்ராநுபாஸீநாந் ப்ரஶ்ரயப்ரேமஸங்கதாந் |
அப்யாசஷ்டாநுராகாஶ்ரைரந்தீபூதேந சக்ஷுஷா || 11

அஹோ கஷ்டமஹோ ந்யாய்யம் யத்யூயம் தர்மநந்தநா: |
ஜீவிதும் நார்ஹத க்லிஷ்டம் விப்ரதர்மாச்யுதாஶ்ரயா: || 12

ஸம்ஸ்திதேऽதிரதே பாண்டௌ ப்ருதா பாலப்ரஜா வதூ: |
யுஷ்மத்க்ருதே பஹூந் க்லேஶாந் ப்ராப்தா தோகவதீ முஹு: || 13

ஸர்வம் காலக்ருதம் மந்யே பவதாம் ச யதப்ரியம் |
ஸபாலோ யத்வஶே லோகோ வாயோரிவ கநாவலி: || 14

யத்ர தர்மஸுதோ ராஜா கதாபாணிர்வ்ருகோதர: |
க்ருஷ்ணோऽஸ்த்ரீ காண்டிவம் சாபம் ஸுஹ்ருத்க்ருஷ்ணஸ்ததோ விபத் || 15

ந ஹ்யஸ்ய கர்ஹிசித்ராஜந் புமாந் வேத விதித்ஸிதம் |
யத்விஜிஜ்ஞாஸயா யுக்தா முஹ்யந்தி கவயோऽபி ஹி || 16

தஸ்மாதிதம் தைவதந்த்ரம் வ்யவஸ்ய பரதர்ஷப |
தஸ்யாநுவிஹிதோऽநாதா நாத பாஹி ப்ரஜா: ப்ரபோ || 17

அருகே வீற்றிருப்பவர்களும் வணக்கம் அன்பு இவைகளுடன் கூடியவர்களுமாகிய பாண்டு குமாரர்களைப் பார்த்து, ஆனந்த பாஷ்பத்தால் நனைந்த கண்ணுடன் கூறுகிறார். 11

ஓ தருமபுத்திர! பிராம்மணர்கள், தருமம், அச்சுதன் இவர்களை ஆசிரித்த நீங்கள், வருத்தத்துடன் ஜீவிக்கத் தகுந்தவர்களல்ல. ஆச்சரியம்! கஷ்டம்! ஆச்சரியம், அநியாயம்! 12

அதிரதனுகிய பாண்டு மகாராஜன் மரணமடைந்த பின்பு, இளங்குழந்தைகளுடையவளும் ஸ்திரீயுமாகிய குந்தி, உங்களுக்காக அடிக்கடி மிகவும் துன்பமடைந்தாள். 13

உங்களுக் குண்டான இவ்வளவு அப்பிரியமும் காலன் செய்தது என்று நினைக்கிறேன். வாயுவின் வசத்தில் மேகக் கூட்டங்கள் இருப்பது போல் எவன் வசத்தில் உலகம் இருக்கிறதோ அவனே காலன் ஆகிறான். 14

அரசனோ தருமபுத்திரன், கதாயுதத்தைக் கையி லுடையவனோ பீமசேனன், வில் பிடித்தவனோ அர்ச்சுனன், வில்லோ காண்டீவம், பந்துவோ கிருஷ்ணன் இவ்வித மிருந்தும் விபத்துண்டாகிறது. 15

ஏ இராஜனே! மானிடன் எப்போதும் இந்த கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளமாட்டான். இவரபிப் பிராயத்தைத் தெரிந்து கொள்ள யோகிகளாகிய கவிகளும் மோக மடைகிறார்கள். 16

ஆகையால் பாதவம்ச சிரேஷ்டனும், நாதனும், பிரபுவுமாகிய தருமநந்தன! இந்தப் பிரபஞ்சம் ஈசுவரனுக்கு சுவாதீன மென்று நிச்சயித்து, அந்த ஈசுவரனை அனுசரித்து நாதனில்லாத இந்தப் பிரஜைகளைப் பரிபாலனம் செய். 17

𑌏𑌷 𑌵𑍈 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌮𑍋𑌹𑌯𑌨𑍍𑌮𑌾𑌯𑌯𑌾 𑌲𑍋𑌕𑌂 𑌗𑍂𑌢𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌵𑍃𑌷𑍍𑌣𑌿𑌷𑍁 ॥ 18

𑌅𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌶𑌿𑌵𑌃 ।
𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌕𑌪𑌿𑌲𑍋 𑌨𑍃𑌪 ॥ 19

𑌯𑌂 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌮𑌾𑌤𑍁𑌲𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌅𑌕𑌰𑍋𑌸𑍍𑌸𑌚𑌿𑌵𑌂 𑌦𑍂𑌤𑌂 𑌸𑍌𑌹𑍃𑌦𑌾𑌦𑌥 𑌸𑌾𑌰𑌥𑌿𑌮𑍍 ॥ 20

𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌸𑌮𑌦𑍃𑌶𑍋 𑌹𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑌹𑌂𑌕𑍃𑌤𑍇𑌃 ।
𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌮𑌤𑌿𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥ 21

𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑌶𑍍𑌯 𑌭𑍂𑌪𑌾𑌨𑍁𑌕𑌂𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌨𑍍𑌮𑍇𑌸𑍂𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑌤𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌾𑌗𑌤𑌃 ॥ 22

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌾𑌚𑌾 𑌯𑌨𑍍𑌨𑌾𑌮 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍 ।
𑌤𑍍𑌯𑌜𑌨𑍍 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ 23

பிரத்தியக்ஷமாகிய இவர்தான் பகவான்; ஆதியிலிருப்பவர்; (ஆரியர்) நாராயணன் புருஷனுமானவர். இவர் மாயையால் உலகம் மோகமடையும்படி செய்து கொண்டு யதுவம்சத்தவர்களின் தேசத்தில் சஞ்சரிக்கிறார். 18

ஓ அரசனே! இந்த கிருஷ்ணனுடைய அதிரகசியமான மகிமையை பகவானாகிய பரமசிவன், தேவரிஷியாகிய நாரதர், பிரத்தியக்ஷமாக அவதாரம் செய்த பகவானாகிய கபிலர் இவர்களறிவார்கள். 19

நீ கிருஷ்ணனை அம்மான் பிள்ளையென்றும், மித்திரனென்றும், மிகுதியான சுகிருத்தென்றும் நினைக்கிறாய்; அதனால் மந்திரியாகவும் தூதனாகவும் சாரதியாகவும் செய்து கொள்ளுகிறாய். 20

இராகம் முதலியவைகளற்றவரும் அகங்காரமில்லாதவரும், இரண்டற்றவரும் எல்லோரிடமும் சமமான திருஷ்டியுடையவரும் எல்லா வுருவமும் தானேயா யிருப்பவருமாகிய இந்த கிருஷ்ண பகவானுக்கு மகிமையுள்ள அகங்காரத்தா லுண்டாகும் (தாழ்ந்தது உயர்ந்தது என்ற) புத்தியின் வைஷம்மியம் எப்போதும் இல்லை. 21

ஓ அரசனே! ஆயினும், § ஏகாந்த பக்தர்களிடம் உள்ள தயவைப் பார்த்தாயா? ஏனெனில் நான் பிராணனை விடும்பொழுது கிருஷ்ணன் பிரத்தியக்ஷமாக தரிசனம் கொடுக்க வந்தாரல்லவா? 22

இந்த கிருஷ்ண பகவானிடம் பக்தியுடன் மனதைச் செலுத்தி வாக்கினால் நாமகீர்த்தனம் செய்து சரீரத்தை விடுகிற யோகி காம்மிய கருமங்களினின்று விடுபடுகிறான். 23

---

§ ஏகாந்தபக்தர்கள் - மற்றவர்களிடம் மனதைச் செலுத்தாமல் பகவானையே பஜனம் செய்பவர்கள்.

𑌸 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌤𑌾𑌂
𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌯𑌾𑌵𑌦𑌿𑌦𑌂 𑌹𑌿𑌨𑍋𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌹𑌾𑌸𑌾𑌰𑍁𑌣𑌲𑍋𑌚𑌨𑍋𑌲𑍍𑌲𑌸
𑌨𑍍𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑍋 𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑌥𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌃 ॥ 24

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌸𑍍𑌤𑌦𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯 𑌶𑌯𑌾𑌨𑌂 𑌶𑌰𑌪𑌞𑍍𑌜𑌰𑍇 ।
𑌅𑌪𑍃𑌚𑍍𑌛𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚𑌾𑌨𑍁𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌾𑌮𑍍 ॥ 25

𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌣𑌂 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌗𑍋𑌪𑌾𑌧𑌿𑌭𑍍𑌯𑌾𑌮𑌾𑌮𑍍𑌨𑌾𑌤𑍋𑌭𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍 ॥
𑌦𑌾𑌨𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌰𑌾𑌜𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌭𑌗𑌵𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌸𑌮𑌾𑌸𑌵𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌤𑌃 ॥
𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌹𑍋𑌪𑌾𑌯𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾 𑌮𑍁𑌨𑍇 ।
𑌨𑌾𑌨𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌣𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 ॥ 26-28

𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸 𑌕𑌾𑌲𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌯𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑌶𑍍𑌛𑌨𑍍𑌦𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌸𑍍𑌤𑍂𑌤𑍍𑌤𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ 29

தேவதேவரும் மகிமை பொருந்தியவரும் பிரஸன்னமான ஹாஸியம் சிவந்த கண்கள், பிரகாசிக்கும் முககமலம் இவைக ளுடையவரும் தியானத்திற்கு விஷயமானவரும் நான்கு புஜமுடைய வருமாகிய அந்த கிருஷ்ணன் நான் இந்த சரீரத்தை விடுகிற வரையில் தாமதிக்கவேண்டும். 24

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

இந்த வார்த்தையை யுதிஷ்டிரர் கேட்டு, பாணங்களாகிற கூட்டில் சயனம் செய்து கொண்டிருக்கும் பீஷ்மாசாரியரைப் பார்த்து ரிஷிகள் சமீபத்திலிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் போதே அநேகவித தருமங்களைப் பிரசனம்செய்தார். 25

ஓ சௌனக முனிவரே! தருமங்களை யறிந்த பீஷ்மர், மானிட ஜாதிக்குரிய சாதாரண தருமங்கள், வர்ண (பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்) தருமங்கள் ஆசிரம (பிரும்மசரியம் முதலிய) தருமங்கள், வைராக்கியத்தின் உபாதியால் நிச்சயிக்கப்பட்ட பிரவிருத்தி மார்க்கத்தைக் கூறும் தருமங்கள், தான தருமங்கள், இராஜ தருமங்கள், மோக்ஷ தருமங்கள், ஸ்திரீ தருமங்கள், பகவானுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் தருமங்கள், உபாயங்களுடன் கூடின தருமம், அர்த்தம் காமம் மோக்ஷம் இவைகளை பிரித்தும் விரித்தும் சுருக்கியும் வெகு ஆக்கியானங் களிலும் இதிகாசங்களிலும் பிரதிபாதித் திருக்கும் விதம் வர்ணித்தார். 26-28

மரணத்தைத் தன்னிச்சைப்படி வருவித்துக் கொள்ளவல்ல யோகியாகிய அந்த பீஷ்மர் தருமங்களை நன்றாய்ப் பிரவசனம்செய்து கொண்டிருக்கும் போது இவர் விரும்பியபடி அந்த உத்தராயண காலம் வந்தது. 29

𑌤𑌦𑍋𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌗𑌿𑌰𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌣𑍀
  𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌂 𑌮𑌨 𑌆𑌦𑌿𑌪𑍂𑌰𑍁𑌷𑍇 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌲𑌸𑌤𑍍𑌪𑍀𑌤𑌪𑌟𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇
  𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌽𑌮𑍀𑌲𑌿𑌤𑌦𑍃𑌗𑍍𑌵𑍍𑌯𑌧𑌾𑌰𑌯𑌤𑍍 ॥ 30

𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑌾 𑌧𑌾𑌰𑌣𑌯𑌾 𑌹𑌤𑌾𑌶𑍁𑌭𑌸𑍍
  𑌤𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑍈𑌵𑌾𑌶𑍁 𑌗𑌤𑌾𑌯𑍁𑌧𑌶𑍍𑌰𑌮𑌃 ।
𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌸𑍍
  𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵 𑌜𑌨𑍍𑌯𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑌞𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ 31

𑌶𑍍𑌰𑍀𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌕𑍃𑌤𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃

𑌇𑌤𑌿 𑌮𑌤𑌿𑌰𑍁𑌪𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌵𑌿𑌤𑍃𑌷𑍍𑌣𑌾
  𑌭𑌗𑌵𑌤𑌿 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑍇 𑌵𑌿𑌭𑍂𑌮𑍍𑌨𑌿 ।
𑌸𑍍𑌵𑌸𑍁𑌖𑌮𑍁𑌪𑌗𑌤𑍇 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌹𑌰𑍍𑌤𑍁𑌂
  𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍁𑌪𑍇𑌯𑍁𑌷𑌿 𑌯𑌦𑍍𑌭𑌵𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌃 ॥ 32

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂
  𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 ।
𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂
  𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ 33

(யுத்தத்தில்) ஆயிரம் இரதிகளைப் பரிபாலித்த பீஷ்மர், மௌனமாயிருந்து கண்களை மூடாமலே ஆதிபுருஷனும் பிரகாசிக்கும் பீதாம்பர முடையவனும் நான்கு புயங்களுடைய வனும் முன்னால் இருப்பவனுமாகிய கிருஷ்ணனிடம் பற்றுதலற்ற மனதைச் செலுத்தினார். 30

பரிசுத்தமான தியானத்தால் அசுப மொழிந்தவரும் அந்த பகவானுடைய விக்ஷணத்தால் விரைவில் ஆயுதம் நீங்கி உபத்திரவ மடைந்தவரும் (அதனால்) இந்திரியங்க ளெல்லாவற்றின் பலவிதமான பிரமங்களின் நிவிருத்தி பெற்றவருமாகிய கங்கா புத்திரர் சரீரத்தை விடும்போது ஜனார்த்தனரை ஸ்தோத்திரம் செய்கிறார். 31

ஸ்ரீபீஷ்மாசாரியார் செய்த ஸ்ரீகிருஷ்ண பகவான் ஸ்துதி

விசேஷ மகிமையுடையவரும் ஸ்வரூபமான பிரஹ்மா னந்தத்தை யடைந்தவரும் ஜனனமரண பரம்பரையை உண்டுபண்ணும் பிரகிருதியை விளையாடுவதற்குச் சில சமயம் அடைந்தவரும் யாதவ சிரேஷ்டருமாகிய பகவானிடம் மற்றெதிலும் பற்றற்ற என்னுடைய புத்தியானது இவ்வாறு(விஷயநிவிர்த்தியுடன்) வைக்கப் பட்டது. 32

மூவுலகமும் விரும்பத் தக்கதும் பச்சிலை நிறமுடையது மாகிய சரீரத்தையுடையவரும் (இளம்) சூரியனுடைய கிரணம்போல் சுபாவமாகவே மஞ்சள் நிறமுடைய சிறந்த வஸ்திரம் தரித்தவரும் சுருண்ட மயிர்கள் சூழ்ந்த முகாரவிந்த முடையவருமாகிய பார்த்த சாரதியிடம் எனக்குப் பலனை அபேக்ஷியாத அன்புண்டாகட்டும். 33

𑌯𑍁𑌧𑌿 𑌤𑍁𑌰𑌗 𑌰𑌜𑍋 𑌵𑌿𑌧𑍂𑌮𑍍𑌰 𑌵𑌿𑌷𑍍𑌵
　　𑌕𑍍𑌕𑌚𑌲𑍁𑌲𑌿𑌤𑌶𑍍𑌰𑌮𑌵𑌾𑌰𑍍𑌯𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌯𑍇 ।
𑌮𑌮 𑌨𑌿𑌶𑌿𑌤𑌶𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨
　　𑌤𑍍𑌵𑌚𑌿𑌵𑌿𑌲𑌸𑌤𑍍𑌕𑌵𑌚𑍇𑌽𑌸𑍍𑌤𑍁𑌕𑍃𑌷𑍍𑌣 𑌆𑌤𑍍𑌮𑌾 ‖ 34
𑌸𑌪𑌦𑌿 𑌸𑌖𑌿𑌵𑌚𑍋 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇
　　𑌨𑌿𑌜𑌪𑌰𑌯𑍋𑌰𑍍𑌬𑌲𑌯𑍋𑌰𑌥𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑌿 𑌪𑌰𑌸𑍈𑌨𑌿𑌕𑌾𑌯𑍁𑌰𑌕𑍍𑌷𑍍𑌣𑌾
　　𑌹𑍃𑌤𑌵𑌤𑌿𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑍍𑌮𑌮𑌾𑌸𑍍𑌤𑍁 ‖ 35
𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑌪𑍃𑌤𑌨𑌾𑌮𑍁𑌖𑌂 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯
　　𑌸𑍍𑌵𑌜𑌨𑌵𑌧𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌦𑍋𑌷𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 ।
𑌕𑍁𑌮𑌤𑌿𑌮𑌹𑌰𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌯
　　𑌶𑍍𑌚𑌰𑌣𑌰𑌤𑌿𑌃 𑌪𑌰𑌮𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 ‖ 36

யுத்தத்தில் குதிரைகளின் குளம்புகளிலிருந்துண்டான தூளிகளால் அழுக்குண்டதும் அங்கு மிங்கும் அசைவதாகிய கேசங்களால் சிதறின வேர்வை நீர்நிறைந்ததும் அலங்காரமுமுள்ள முகமுடையவரும் தீக்ஷ்ணமான என் பாணங்களால் பேதிக்கப்பட்ட தேகமுடையவரும் (பாணங்களாலேயே) பிரகாசிக்கும் கவசமுடையவரு மாகிய கிருஷ்ணனிடம் என்மனம் பற்றுதலடையட்டும். 34

† நண்பனாகிய அர்ச்சுனன் வார்த்தையைக் கேட்டு உடனே தன்னுடையவும் சத்ருவுடையவும் சேனைகளின் மத்தியில் தேரைச் செலுத்தி நின்று, ‡ தமது பார்வையால் துரியோதன னுடைய சேனைகளின் ஆயுளை அபகரித்தவராகிய பார்த்தசாரதியிடம் எனக்கு மிகுதியான ப்ரீதியுண்டாகட்டும். 35

¶ சேனைக்குத் தலைவர்களாகிய நானும் மற்றவர்களும் சிறிதுதூரத்திலிருக்கும்போது பார்த்து ஞாதிகளும் பந்துக்களுமாகிய இவர்களை வதம்செய்வது குற்றம் என்றுரைத்து வருத்தமுற்ற விஜயனுக்கு, ஆத்தும தத்துவத்தைப் பிரதிபாதிக்கும் வித்தையால் நான், என்னுடையது என்பது முதலிய கெட்ட புத்தி

---

† இருபக்கத்துச் சேனைகளின் மத்தியில் தேரைச் செலுத்தி நிறுத்தும் ஓ அச்சுத! யுத்தம் செய்ய விருப்பங் கொண்டு வந்திருக்கும் இவர்கள் அனைவரையும் நான் பார்க்கிறேன் என்று கீதையில் கூறிய படியாம்.

‡ தன் பார்வையால் எல்லோருடைய ஆயுளை முடித்தவர் என்று கூறியதால் இவர் பீஷ்மர் இவர் துரோணர் இவன் கர்ணன் என்று அர்ச்சுனனுக்குக் காட்டிய உபாயத்தால் எல்லோருடைய ஆயுளையும் ஆகர்ஷணம் செய்து அர்ச்சுனனுக்கு ஜயம் கொடுத்தவர் என்பது கருத்து.

¶ தன்னைச் சேர்ந்த இவர்களை வதம் செய்வது தோஷமென்று எண்ணி நான் இவர்களோடு யுத்தம்செய்யவில்லை என்றுரைத்துத் துக்கமடைந்து வில்லை நழுவவிட்டுத் தேர்த்தட்டிலுட்கார்ந்தான் அர்ச்சுனன் என்று கீதை கூறுகிறது.

𑌸𑍍𑌵𑌨𑌿𑌗𑌮𑌮𑌪𑌹𑌾𑌯 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌂
    𑌋𑌤𑌮𑌧𑌿𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌵𑌪𑍍𑌲𑍁𑌤𑍋 𑌰𑌥𑌸𑍍𑌥𑌃 ।
𑌧𑍃𑌤𑌰𑌥𑌚𑌰𑌣𑍋𑌽𑌭𑍍𑌯𑌯𑌾𑌚𑍍𑌚𑌲𑌦𑍍𑌗𑍁𑌃
    𑌹𑌰𑌿𑌰𑌿𑌵 𑌹𑌨𑍍𑌤𑍁𑌮𑌿𑌭𑌂 𑌗𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌃 ॥ 37

𑌶𑌿𑌤𑌵𑌿𑌶𑌿𑌖𑌹𑌤𑍋 𑌵𑌿𑌶𑍀𑌰𑍍𑌣𑌦𑌂𑌶𑌃
    𑌕𑍍𑌷𑌤𑌜𑌪𑌰𑌿𑌪𑍍𑌲𑍁𑌤 𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑍋 𑌮𑍇 ।
𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌭𑌿𑌸𑌸𑌾𑌰 𑌮𑌦𑍍𑌵𑌧𑌾𑌰𑍍𑌥𑌂
    𑌸 𑌭𑌵𑌤𑍁 𑌮𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌗𑌤𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌃 ॥ 38

𑌵𑌿𑌜𑌯𑌰𑌥𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬 𑌆𑌤𑍍𑌤𑌤𑍋𑌤𑍍𑌰𑍇
    𑌧𑍃𑌤𑌹𑌯𑌰𑌶𑍍𑌮𑌿𑌨𑌿 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌯𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑍇 ।
𑌭𑌗𑌵𑌤𑌿 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 𑌮𑍁𑌮𑍂𑌰𑍍𑌷𑍋𑌃
    𑌯𑌮𑌿𑌹 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌹𑌤𑌾 𑌗𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍂𑌪𑌮𑍍 ॥ 39

யை யொழித்த பிரசித்தி யுள்ள பரமபுருஷனுடைய பாத பத்மங்களில் மிகுந்த பக்தி எனக் குண்டாகட்டும். 36

இந்த கிருஷ்ணன் தான் செய்த (ஆயுத மெடுக்காமலே உதவி செய்கிறேன் என்ற) பிரதிஞ்ஞையைவிட்டு நான்செய்த (கிருஷ்ணனை ஆயுதமெடுக்கும்படி செய்கிறேன் என்ற) பிரதிஞ்ஞையை உண்மையாகச் செய்வதன் பொருட்டு இரதத்திலிருந்து பூமியில் குதித்து சக்ராயுத மெடுத்து, தன்வயிற்றில் உலகமெல்லா மிருப்பதால் ஒவ்வொரு அடி வைக்கும்போது பூமி அசைய வழியில் உத்தரீயத்தை நழுவவிட்டுக் கொண்டு யானையைக் கொல்வதற்கு வரும் சிங்கம் போல் என்னெதிர் நோக்கி வந்தார். 37

அப்பொழுது ஆயுத பாணியாகிய என்னுடைய தீக்ஷ்ணமான பாணங்களால் அடிபட்டுக் கவசம் ஒடிந்து இரத்தம் பெருக (அர்ச்சுனன்) பலாத்காரமாக (தடுத்தும்) என்னை வதஞ்செய்ய என்னெதிரே வந்தார். அந்த பகவானாகிய முகுந்தனே எனக்குக் கதியாகவேண்டும். 38

விஜயனுடைய இரதத்தையே * குடும்பமாக உடையவரும் சவுக்கையும் குதிரைக் கடிவாளங்களையும் கையிற் கொண்டவரும் தேர் செலுத்துகிறவனுக் குரிய சௌந்தரிய முடையவரும் பார்க்கத்தக்க வருமாகிய கிருஷ்ணபகவானிடம் மரணமடைய விருப்பங்கொண்ட எனக்கு நிகரற்ற ப்ரீதியுண்டாகட்டும். இந்த யுத்தத்தில் அடிபட்டவர்கள் இந்த பகவானைத் தரிசித்து ‡ சாரூப்பிய முத்தியை யல்லவா அடைந்தார்கள். 39

---

* குடும்பமாக உடையவர் என்றதால் அநேக அகாரியங்களைச் செய்தாவது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று மனுகூறியபடி பக்தனாகிய அர்ச்சுனனுடைய தேரைச் செலுத்த அகாரிய மாயினும் செய்து பக்தபரி பாலனம் செய்தாரென்பது கருத்து.

‡ சாருப்பிய முத்தி என்பது பகவானுடைய ரூபம்போல் ரூபமடைந்திருப்பது.

ललितगतिविलासवल्गुहास
प्रणयनिरीक्षणकल्पितोरुमानाः ।
कृतमनुकृतवत्य उन्मदान्धाः
प्रकृतिमगन् किल यस्य गोपवध्वः ॥ 40

मुनिगणनृपवर्यसङ्कुलेऽन्तः
सदसि युधिष्ठिरराजसूय एषाम् ।
अर्हणमुपपेद ईक्षणीयो
मम दृशिगोचर एष आविरात्मा ॥ 41

क्षितिभरमवरोधितुं कुरूणां
श्वसन इवासृजदक्षवंशवह्निम् ।
तमिममहमनुव्रतार्तिहराङ्घ्रिं
हृदि परिरभ्य जहामि मर्त्यनीडम् ॥ 42

तमिममहमजं शरीरभाजां
हृदि हृदि धिष्ठितमात्मकल्पितानाम् ।
प्रतिदृशमिव नैकधार्कमेकं
समधिगतोऽस्मि विधूतभेदमोहः ॥ 43

அழகான நடை, விளையாட்டு, சுந்தரமான ஹாஸியம், அன்புள்ள பார்வை இவைகளால் ஏற்பட்ட மகாமகிமை யுடைய வர்களும் கிருஷ்ணன் செய்த கோவர்த்தனோத்தாரணம் முதலியவைகளை அனுசந்தானஞ் செய்தவர்களும் * மிகுந்த மதங்கொண்டவர்களுமாகிய கோபஸ்திரீளுமல்லவா இந்தப் பகவானுடைய சுவரூபத்தை அடைந்தார்கள். 40

தருமபுத்திருடைய இராஜசூய யாகத்தில் அநேக முனிவர்களும் இராஜசிரேஷ்டர்களும் நிறைந்த சபையின் மத்தியில் முனிவர்கள் முதலிய எல்லாருக்கும் பார்ப்பதற் குரியவராகிப் பூஜையை அடைந்த இந்த பரமாத்மா என் கண்களுக்கு விஷயமாகி ஆவிர்பவித் திருக்கிறார். 41

இந்தப் பகவான் பூபாரத்தைப் பரிகரிக்க வாயுபோல் * குருவம்சத் தார்களுக்கு பாச்சைக் காயாகிய வம்சவன்னியை (மூங்கில் தீ) உண்டு பண்ணினர். 42

அப்படிப்பட்ட மகிமை யுடையவரும் ஆசரித்த வர்களின் தாபத்தை யபகரிக்கும் பாதாரவிந்த முடையவரு மாகிய இந்தக் கிருஷ்ண பகவானை மனதில் ஆலிங்கனம் செய்து மானிடர் களுக்குக் கூடாகிய இந்த சரீரத்தை விடுகிறேன்.

பேதத்தையும் மோகத்தையும் ஒழித்த நான், சூரியன் ஒருவனாயினும் ஒவ்வொருவருடைய கண்களுக்கும் பலவிதமாகத் தோன்றுவதுபோல் தன்னால் படைக்கப்பட்ட சரீரந்தாங்கி மானிடர்களின் இருதயந்தோறும் தோன்றுகிற பிறப்பற்ற இந்தப் பகவானை நன்றாய் அறிந்தேன். 43

* மிகுந்த மதங் கொண்டவர்கள் என்றது, பகவானுடைய திவ்ய சரித்திரங்களின் ஸ்மரணத்தில் உண்டான நிகரற்ற பிரும்மானந்தத்தின் அனுபவமாகிற கடலில் மூழ்கினதால் மறந்து போன தன்னுடையவும் பிறருடையவும் சுவரூப முடையவர்கள் என்பதாம்.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌕𑍃𑌷𑍍𑌣 𑌏𑌵𑌂 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌮𑌨𑍋𑌵𑌾𑌗𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑍋𑌽𑌨𑍍𑌤𑌃𑌶𑍍𑌵𑌾𑌸 𑌉𑌪𑌾𑌰𑌮𑌤𑍍 ॥ 44

𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌯 𑌭𑍀𑌷𑍍𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌬𑌭𑍂𑌵𑍁𑌸𑍍𑌤𑍇 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌵𑌯𑌾𑌂𑌸𑍀𑌵 𑌦𑌿𑌨𑌾𑌤𑍍𑌯𑌯𑍇 ॥ 45

𑌤𑌤𑍍𑌰 𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌯𑍋 𑌨𑍇𑌦𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌮𑌾𑌨𑌵𑌵𑌾𑌦𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑌶𑌂𑌸𑍁𑌃 𑌸𑌾𑌧𑌵𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌖𑌾𑌤𑍍𑌪𑍇𑌤𑍁𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 ॥ 46

𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌹𑌰𑌣𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌮𑍍𑌪𑌰𑍇𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵 ।
𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥ 77

𑌤𑍁𑌷𑍍𑌟𑍁𑌵𑍁𑌰𑍍𑌮𑍁𑌨𑌯𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌤𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 ।
𑌤𑌤𑌸𑍍𑌤𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌹𑍃𑌦𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌯𑌯𑍁𑌃 𑌪𑍁𑌨𑌃 ॥ 48

𑌤𑌤𑍋 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑍋 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌹𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌗𑌜𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌪𑌿𑌤𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌮𑌾𑌸 𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀𑌂 𑌚 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌮𑍍 ॥ 49

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

அந்த பீஷ்மர் இவ்வாறு மனம்வாக்கு நேத்திரம் இவைகளின் வியாபாரங்களால் மகிமைபொருந்திய கிருஷ்ண பரமாத்மாவிடம் மனதைச் செலுத்தி, உள்ளடங்கிய சுவாச முடையவராகி ஒழிவடைந்தார். 44

பீஷ்மாசாரியார் நிஷ்கள பிரஹ்மத்தினிடம் கலந்ததைத்தெரிந்து யாவரும் பறவைகள் சாயங்காலத்தில் அடங்கியிருப்பதுபோல்பேசாம லிருந்தார்கள். 45

அங்கு தேவர்களும் மானிடர்களும் துந்துபி வாத்தியங்களை முழக்கினார்கள். அரசர்களுக்குள் (பிரஹ்ம நிஷ்டர்களாகிய) சாதுக்கள் கொண்டாடினார்கள். ஆகாயத்தினின்று புஷ்பமாரி பொழிந்தது. 46

ஓ பார்க்கவமுனிவ (சௌனக) ரே! தரும புத்திரர், பரலோகஞ் சென்ற அந்த பீஷ்மா சாரியாருக்கு ஸம்ஸ்காரம் முதலியவைகளைச் செய்து இரண்டு நாழிகை வரையில் வருத்த மடைந்தார். 47

முனிவர்கள் சந்தோஷ மடைந்து கிருஷ்ண பகவானை அவருடைய இரகசியத்தைப் பிரதிபாதிக்கும் நாமங்களால் தோத்திரம் செய்தார்கள். பிறகுஅவர்கள் கிருஷ்ணனிடம் மனதைச் செலுத்திக் கொண்டே தங்களுடைய ஆசிரமங்களை மறுபடியு மடைந்தார்கள். 48

பிறகு யுதிஷ்டிரர் கிருஷ்ணனுடன் அத்தினபுரி சென்று தந்தையாகிய திருதராஷ்டிரரையும் (புத்திர சோகத்தால்) சந்தாப முடைய காந்தாரியையும் சமாதானம் செய்தார். 49

𑌪𑌿𑌤𑍍𑌰𑌾 𑌚𑌾𑌨𑍁𑌮𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌿𑌤𑌃 |
𑌚𑌕𑌾𑌰 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌪𑌿𑌤𑍃𑌪𑍈𑌤𑌾𑌮𑌹𑌂 𑌵𑌿𑌭𑍁𑌃 ‖ 50

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇. 𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍌𑌨𑌕𑌃 ‖

𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑌿𑌕𑍍𑌥𑌸𑍍𑌪𑍃𑌧 𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑍋
𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌃 |
𑌸𑌹𑌾𑌨𑍁𑌜𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌰𑍁𑌦𑍍𑌧𑌭𑍋𑌜𑌨𑌃
𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌕𑌿𑌮𑌕𑌾𑌰𑌷𑍀𑌤𑍍𑌤𑌤𑌃 ‖ 1

𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ‖

𑌵𑌂𑌶𑌂 𑌕𑍁𑌰𑍋𑌰𑍍𑌵𑌂𑌶𑌦𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌿𑌰𑍍𑌹𑍃𑌤𑌂
𑌸𑌂𑌰𑍋𑌹𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌭𑌵𑌭𑌾𑌵𑌨𑍋 𑌹𑌰𑌿𑌃 |
𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌜𑌰𑌾𑌜𑍍𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑍋
𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾 𑌬𑌭𑍂𑌵 𑌹 ‖ 2

பிரபுவாகிய தரும நந்தனர் திருதராஷ்டிரனிடம் உத்தரவு பெற்று வாசுதேவர் அனுமோதிக்க, பிதிர்க்கள் பிதாமகர்கள் ஆண்டுவந்த இராஜ்யத்தைத் தருமமாகப் பரிபாலித்தார். 50

9-வது அத்தியாயம் முற்றிற்று.

10-வது அத்தியாயம்.

சௌனகமுனிவர் வினவுகிறார்.

தருமத்தை யனுஷ்டிப்பவர்களுக்குள் சிறந்த தருமபுத்திரர், தமது இராஜ்யத்தில் ஆசைகொண்ட * ஆததாயிகளைக் கொன்று (பந்துஜனங்கள் வதமடைந்த துக்கத்தால்) சுகக்குறை வடைந்து தம்பிமார்களுடன் பிறகு எவ்விதம் இராஜ்யத்தில் பிரவிருத்தித்தார்? என்ன செய்தார்? 1

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

† சம்சாரத்தை விருத்தி பண்ணும் ஈச்வரனாகிய ஹரி, குலமாகிய காட்டினுண்டான (கோபரூபமான) அக்கினியால் எரிந்துபோன குரு வம்சத்தை

* ஆததாயிகள் என்பதற்கு இலக்ஷணம் முந்தியே கூறப்பட்டிருக்கிறது. அதில் விஷம் கொடுத்தல் அரக்கு மாளிகையைத் தகனம் செய்தல், முதலிய கெட்ட செய்கை செய்தவர்கள் என்று கொள்ளவேண்டும்.

† கிருஷ்ணனுக்கு விருப்ப மிருந்தமையால் தருமபுத்திரர் இராஜ்யத்தில் பிரவிருத்தித்தார் என்பது கருத்து.

𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌭𑍀𑌷𑍍𑌮𑍋𑌕𑍍𑌤𑌮𑌥𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑍋𑌕𑍍𑌤𑌂
𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌧𑍂𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 ।
𑌶𑌶𑌾𑌸 𑌗𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌵𑌾𑌜𑌿𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌃
𑌪𑌰𑌿𑌧𑍍𑌯𑍁𑌪𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌨𑍁𑌜𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ 3

𑌕𑌾𑌮𑌂 𑌵𑌵𑌰𑍍𑌷 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌦𑍁𑌘𑌾 𑌮𑌹𑍀 ।
𑌸𑌿𑌷𑌿𑌚𑍁𑌃 𑌸𑍍𑌮 𑌵𑍍𑌰𑌜𑌾𑌨𑍍𑌗𑌾𑌵𑌃 𑌪𑌯𑌸𑍋𑌧𑌸𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌮𑍁𑌦𑌾 ॥ 4

𑌨𑌦𑍍𑌯𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾 𑌗𑌿𑌰𑌯𑌃 𑌸𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌿𑌵𑍀𑌰𑍁𑌧𑌃 ।
𑌫𑌲𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌷𑌧𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌕𑌾𑌮𑌮𑌨𑍍𑌵𑍃𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈 ॥ 5

𑌨𑌾𑌧𑌯𑍋 𑌵𑍍𑌯𑌾𑌧𑌯𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾 𑌦𑍈𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌹𑍇𑌤𑌵𑌃 ।
𑌅𑌜𑌾𑌤𑌶𑌤𑍍𑌰𑌾𑌵𑌭𑌵𑌨𑍍 𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑍍𑌞𑌿 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ॥ 6

‡ முளைக்கவைத்து யுதிஷ்டிரரை அவருடைய இராஜ்யத்தி லிருக்கச்செய்து சந்தோஷங் கொண்ட மனமுடையவரானர். 2

தருமநந்தனர் பீஷ்மாசாரியார் கூறியதையும் பிறகு அச்சுதன் கூறியதையும் கேட்டு அதனல் உண்டான விஞ்ஞானத்தால் (நான் கர்த்தா என்பது முதலிய) மோகத்தின் நிவிருத்தியடைந்து கிருஷ்ண பகவானையே ஆசிரயமாகக் கொண்டு தம்பிகள் சேவிக்க சமுத்திரம் வரையிலுமுள்ள பூமியை இந்திரன் போல் பரிபாலனம் செய்தார். 3

இந்திரன் (மழையை) நன்ருய் வருஷித்தான். பூமி அபீஷ்டம் யாவற்றையும் அளித்தது. பெருத்த மடியுடைய பசுக்கள் கோசாலைகளில் பாலைப் பெருக விட்டன. 4

பாண்டுநந்தனன் பரிபாலிக்கும்போது † நதிகள் கடல்கள் மலைகள் விருக்ஷங்கள் கொடிகள் அநேக ஓஷதிகள் இவையாவும் ஒவ்வொரு ருதுவிலும் நன்ருய்ப் பலிதமாய் வந்தன. 5

அஜாதசத்ரு (தருமர்) அரசனுக விருக்கும்போது, பிராணிகளுக்கு (மனதில்) துக்கங்களு மில்லை. (சீதம் உஷ்ணம் முதலியவற்ருல் உண்டாகும்) ரோகங்களுமில்லை. தெய்வம் பூதங்கள் ஆத்மா இவைகளைக் காரணமாகக்கொண்ட கிலேசங்களும் (ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம்) எப்போது முண்டாவதில்லை. 6

‡ முளைக்கும்படி செய்து என்றதால், பரீக்ஷித்து மகாராஜனை ஜீவிக்கச் செய்ததைக் கூறுவதாகும்.

† நதிகளா லுண்டாகும் பலனுகிய பயிர் விருத்தி, கடலின் பலனுகிய இரத்தினம் முதலியவைகள், மலைகளின் பலனுகியதாதுக்கள், விருக்ஷங்களின் பலனுகிய பழங்கள் கொடிகளின் பலனுகிய புஷ்பங்கள், ஓஷதிகளின் பலனுகிய நெல் முதலியவை. இவைகள் எந்தக் காலத்திலும் குறைவற விருத்தியாய் வந்தன.

𑌉𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌹𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑌪𑍁𑌰𑍇 𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌕𑌤𑌿𑌪𑌯𑌾𑌨𑍍 𑌹𑌰𑌿𑌃 ।
𑌸𑍁𑌹𑍃𑌦𑌾𑌂 𑌶𑍋𑌕𑌨𑌾𑌶𑌾𑌯 𑌸𑍍𑌵𑌸𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 ॥
𑌆𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌚𑌾𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯 𑌤𑌮𑍍 ।
𑌆𑌰𑍁𑌰𑍋𑌹 𑌰𑌥𑌂 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑍋𑌽𑌭𑌿𑌵𑌾𑌦𑌿𑌤𑌃 ॥ 7-8

𑌸𑍁𑌭𑌦𑍍𑌰𑌾 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀 𑌕𑍁𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌦𑍁𑌰𑍋𑌽𑌥 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ।
𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌶𑍍𑌚 𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑍁𑌰𑍍𑌗𑍌𑌤𑌮𑍋 𑌯𑌮𑍌 ॥
𑌵𑍃𑌕𑍋𑌦𑌰𑌶𑍍𑌚 𑌧𑍌𑌮𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌸𑍁𑌤𑌾𑌦𑌯𑌃 ।
𑌨 𑌸𑍇𑌹𑌿𑌰𑍇 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌰𑌹𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌵𑌨𑌃 ॥ 9-10

𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌦𑍁𑌃𑌸𑌙𑍍𑌗𑍋 𑌹𑌾𑌤𑍁𑌂 𑌨𑍋𑌤𑍍𑌸𑌹𑌤𑍇 𑌬𑍁𑌧𑌃 ।
𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌯𑌶𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌕𑍃𑌦𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯 𑌰𑍋𑌚𑌨𑌮𑍍 ॥ 11

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌧𑌿𑌯𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌹𑍇𑌰𑌨𑍍 𑌵𑌿𑌰𑌹𑌂 𑌕𑌥𑌮𑍍 ।
𑌦𑌰𑍍𑌶𑌨 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶 𑌸𑌂𑌲𑌾𑌪 𑌶𑌯𑌨𑌾𑌸𑌨 𑌭𑍋𑌜𑌨𑍈𑌃 ॥ 12

கிருஷ்ணபகவான் சுகிருத்துக்கள் (பாண்டவர்கள்) தங்கையாகிய சுபத்திரை இவர்களுடைய துக்கம் நீங்குவதற்கும் பிரிய முண்டாவ தற்கும் அத்தினபுரியில் சில மாசம் வரையில் வசித்துப் பிறகு தரும புத்திரரை நமஸ்கரித்து ஆலிங்கனம் செய்து அவரிடம் விடைபெற்று, சிலர் (நகுல சகாதேவர்கள் முதலியோர்) தன்னை நமஸ்கரித்து ஆலிங்கனம் செய்துகொள்ள பிறகு தேரின்மீ தேறினர். 7-8

சுபத்திரை, திரௌபதி, குந்தி, விதுரர், பிறகு யுதிஷ்டிரர், காந்தாரி, திருதராஷ்டிரன், ‡ யுயுத்சு, கிருபாசாரியார், நகுலன், சகதேவன், பீமசேனன், தௌமியர், உத்தரை (அல்லது சத்தியவதி) முதலிய ஸ்திரீகள் யாவரும் மோகமடைந்து சார்ங்கத்தை வில்லாகக் கொண்ட கிருஷ்ணனுடைய விரகத்தைச் சகிக்காம லிருந்தார்கள். 9-10

சாதுக்களின்சகவாசத்தால், (புத்திரன் முதலியவர்களிடம்) பற்றுதலை யொழித்த வித்வான், (அந்த சாதுக்கள்) மனேஞ்ஞமான கிருஷ்ணனுடைய மகிமையைக் கீர்த்தனம் செய்வதை ஒருதடவை கேட்கினும் (அந்த சாதுக்களின் சேர்க்கையை) விடச்சத்தி பெருன். 11

இத்துணை மகிமை வாய்ந்த கிருஷ்ண பகவானிடம், தரிசனம் ஸ்பரிசனம், சம்பாஷணை, சயனம், ஆசனம், போஜனம் இவைகளால் மனதைச் செலுத்திய குந்தியின் குமாரர்கள் எவ்விதம் அவர் பிரிவதைச் சகிப்பார்கள். 12

---

‡ யுயுத்சு என்பவன், திருதராஷ்டிரருக்கு வேசியிட முண்டானவன்.

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑍇𑌽𑌨𑌿𑌮𑌿𑌷𑍈𑌰𑌕𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑌮𑌨𑍁𑌦𑍍𑌰𑍁𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌵𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑌮𑍍𑌬𑌦𑍍𑌧𑌾 𑌵𑌿𑌚𑍇𑌲𑍁𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌹 ॥ 13

𑌨𑍍𑌯𑌰𑍁𑌨𑍍𑌧𑌨𑍍𑌨𑍁𑌦𑍍𑌗𑌲𑌦𑍍𑌬𑌾𑌷𑍍𑌪𑌮𑍌𑌤𑍍𑌕𑌣𑍍𑌠𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑌕𑍀𑌸𑍁𑌤𑍇 ।
𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌗𑌾𑌰𑌾𑌨𑍍𑌨𑍋𑌽𑌭𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ 14

𑌮𑍃𑌦𑌙𑍍𑌗 𑌶𑌙𑍍𑌖 𑌭𑍇𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌵𑍀𑌣𑌾 𑌪𑌣𑌵 𑌗𑍋𑌮𑍁𑌖𑌾𑌃 ।
𑌧𑍁𑌨𑍍𑌧𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑌕 𑌘𑌣𑍍𑌟𑌾𑌦𑍍𑌯𑌾 𑌨𑍇𑌦𑍁𑌰𑍍𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ 15

𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌶𑌿𑌖𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌃 𑌕𑍁𑌰𑍁𑌨𑌾𑌰𑍍𑌯𑍋 𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌵𑌵𑍃𑌷𑍁𑌃 𑌕𑍁𑌸𑍁𑌮𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌪𑍍𑌰𑍇𑌮𑌵𑍍𑌰𑍀𑌡𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌃 ॥ 16

𑌸𑌿𑌤𑌾𑌤𑌪𑌤𑍍𑌰𑌂 𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌦𑌾𑌮𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌰𑌤𑍍𑌨𑌦𑌣𑍍𑌡𑌂 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌸𑍍𑌯 𑌹 ॥ 17

𑌉𑌦𑍍𑌧𑌵𑌃 𑌸𑌾𑌤𑍍𑌯𑌕𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑍍𑌯𑌜𑌨𑍇 𑌪𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑍇 ।
𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌃 𑌕𑍁𑌸𑍁𑌮𑍈 𑌰𑍇𑌜𑍇 𑌮𑌧𑍁𑌪𑌤𑌿𑌃 𑌪𑌥𑌿 ॥ 18

சிநேகத்தால் கட்டுப்பட்ட அவர்கள் யாவரும் பகவானை அனுசரித்த மனமுடையவர்களாயிருந்தும் இமை கொட்டா நாட்டங்களால் கிருஷ்ணனைப் பார்த்துக் கொண்டு அங்கங்கே கிருஷ்ணனுடைய சமீபத்திலேயே சஞ்சரித்தார்கள். 13

உறவினர்களாகிய சுபத்திரை முதலியவர்கள், தேவகீ நந்தனன் கிருகத்தினின்று புறப்படும் போது மிகுந்த அன்பால் ததும்பும் கண்ணீரை அமங்களம் வேண்டாமெனக் கருதி அடக்கிக் கொண்டார்கள். 14

மிருதங்கம் சங்கம் பேரீ, வீணை, பணவம், கோமுகம், சற்சரீ ஆனகம் கண்டை துந்தபி முதலிய வாத்தியங்கள் ஏக காலத்தில் முழங்கின. 15

குருவம்சத்து ஸ்திரீகள், கிருஷ்ணனைப் பார்க்க விருப்பங்கொண்டு உப்பரிகைகளி லேறி அன்பு வெட்கம் இவைகளுடனும் புன்னகை கொண்ட பார்வையுடனும் (கிருஷ்ணன் மீது) புஷ்பமாரி பொழிந்தார்கள். 16

பிரீதியுள்ள (1) குடாகேசன் என்பவன் இரத்தின மயமான தண்டமுடையதும் முத்துச் சரங்களால் அலங்கார முள்ளதுமாகிய வெண்கொடையை மிகவும் அன்புள்ள கிருஷ்ணனுக்குப் பிடித்தான். 17

உத்தவர் சாத்தியகி இருவரும் மிகவும் ஆச்சரிய முள்ள சாமரங்களை விசினார்கள். மதுதேசங்களுக்குப் பதியாகிய கிருஷ்ணன் வழிநெடுகப் புஷ்பமாரி பொழிய விளங்கினர். 18

---

(1) குடாகேசன் என்றால் அர்ச்சுனன்.' குடாகை=நித்திரை; அதைஜயித்தவன் அல்லது வக்ரமான கேசங்க ளுடையவன் எனப்படும்.

அஶ்ரூயந்தாஶிஷஸ் ஸத்யாஸ் தத்ர தத்ர த்விஜேரிதா: ।
நாநுரூபாநுரூபாஶ்ச நிர்குணஸ்ய குணாத்மந: ॥ 19

அந்யோந்யமாஸீத் ஸஞ்ஜல்ப உத்தமஶ்லோகசேதஸாம் ।
கௌரவேந்த்ரபுரஸ்த்ரீணாம் ஸர்வஶ்ருதிமநோஹர: ॥ 20

ஸ வை கிலாயம் புருஷ: புராதநோ
ய ஏக ஆஸீதவிஶேஷ ஆத்மநி ।
அக்ரே குணேப்யோ ஜகதாத்மநீஶ்வரே
நிமீலிதாத்மந்நிஶி ஸுப்தஶக்திஷு ॥ 21

ஸ ஏவ பூயோ நிஜவீர்யசோதிதாம்
ஸ்வஜீவமாயாம் ப்ரக்ருதிம் ஸிஸ்ருக்ஷதீம் ।
அநாமரூபாத்மநி ரூபநாமநீ
விதித்ஸமாநோऽநுஸஸார ஶாஸ்த்ரக்ருத் ॥ 22

ஸ வா அயம் யத்பதமத்ர ஸூரயோ
ஜிதேந்த்ரியா நிர்ஜிதமாதரிஶ்வந: ।

நிர்க்குண சுவரூபனுக்குத் தகாதவைகளும் ஸகுண சுவரூபனுக்குசிதமான வகைளும் ஸத்தியமானவைகளுமான ஆசீர்வாத மொழிகளும் கேட்கப்பட்டன.

உத்தம சுலோகனிடம் மனதைச் செலுத்திய புருவம்ச சிரேஷ்டனுகிய பாண்டு நந்தனனுடைய பட்டணத்து ஸ்திரீகள் எல்லோருடைய செவியையும் மனதையும் அபகரிக்கும்படி ஒருவர்க் கொருவர் பேசிக் கொண்டார்கள். 20

எந்தப் பகவான் (சத்துவமுதலிய) குணங்களின் க்ஷோபத்திற்கு முன் உலகங்களுக்கு ஆத்துமாவாகிய ஈசுவரன் (ஜீவன்) மறைந்த சுவரூப முள்ளவனுயிருந்த போது (ஜீவனுக்குபாதியாகிய சத்துவ முதலிய * குணங்களின்) சக்திகள் லயமடைந்த சமயத்தில் பிரபஞ்ச மற்ற (தன்) சுவரூபத்தில் புராணராகவும் ஒருவராகவும் இருந்தனரோ அந்தப் புருஷன் தான் இந்த கிருஷ்ணன்.

நாமரூபங்களற்ற ஜீவனுக்கு நாமரூபங்களைச்செய்ய விரும்பியவரும் சாஸ்திரங்களைக் கற்பித்தவருமாகிய அந்தப் புராண புருஷனை தன்கால சக்தியால் பிரேரணை செய்யப் பட்டவளும் தன் அம்சமாகிய ஜீவன்களை மோகிக்கச் செய்கிறவளும் (ஆகையால்) சிருஷ்டி செய்ய விரும்பியவளு மாகிய மாயையை மறுபடியும் அனுசரித்தார். 22

இந்திரியங்களை ஜயித்தவர்களும் வாயுவை அடக்கியவர்களு மாகிய பக்திமான்கள் பக்திப் பெருக்கத்தால், நிர்மலமான மனதால் எந்தப்புராண புருஷனு

---

* பிரத்தியக்ஷ ஈசனுகையால் இவரைக் கண்டு மோகமடைவது ஆச்சரிய மல்ல என்பது கருத்து.

𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌲𑌿𑌤𑌾𑌮𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌾
𑌨𑌨𑍍𑌵𑍇𑌷 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌷𑍍𑌟𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥ 23

𑌸 𑌵𑌾 𑌅𑌯𑌂 𑌸𑌖𑍍𑌯𑌨𑍁𑌗𑍀𑌤𑌸𑌤𑍍𑌕𑌥𑍋
𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌗𑍁𑌹𑍍𑌯𑍇𑌷𑍁 𑌚 𑌗𑍁𑌹𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
𑌯 𑌏𑌕 𑌈𑌶𑍋 𑌜𑌗𑌦𑌾𑌤𑍍𑌮𑌲𑍀𑌲𑌯𑌾
𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌜𑍍𑌜𑌤𑍇 ॥ 24

𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌤𑌮𑍋𑌧𑌿𑌯𑍋 𑌨𑍃𑌪𑌾
𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰𑍈𑌷 𑌹𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 𑌕𑌿𑌲 ।
𑌧𑌤𑍍𑌤𑍇 𑌭𑌗𑌂 𑌸𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌂 𑌦𑌯𑌾𑌂 𑌯𑌶𑍋
𑌭𑌵𑌾𑌯 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌦𑌧𑌦𑍍𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥ 25

𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌶𑍍𑌲𑌾𑌘𑍍𑌯𑌤𑌮𑌂 𑌯𑌦𑍋𑌃 𑌕𑍁𑌲𑌮𑍍
𑌅𑌹𑍋 𑌅𑌲𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑌮𑌂 𑌮𑌧𑍋𑌰𑍍𑌵𑌨𑌮𑍍 ।
𑌯𑌦𑍇𑌷 𑌪𑍁𑌂𑌸𑌾𑌮𑍃𑌷𑌭𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌰𑌵𑌾
𑌸𑍍𑌵𑌜𑌨𑍍𑌮𑌨𑌾 𑌚𑌙𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑍇𑌨 𑌚𑌾𑌞𑍍𑌚𑌤𑌿 ॥ 26

டைய சுவரூபத்தை (அல்லது பாதத்தை) தரிசிக்கிறார்களோ, அவர்தான் இவர். இது நிச்சயம். இவர்(நம்முடைய) புத்தியைச் சோதிக்கத் தகுதியானவர்; (யோகம் முதலியவைகள்) தகுதியாகா. 23

ஓ! தோழி! ஒருவனாகிய ஈசுவரன் தன்னுடைய விளையாட்டால் பிரபஞ்சத்தை ஸிருஷ்டி செய்கிறார். பரிபாலிக்கிறார். சம்ஹரிக்கிறார். அந்தப் பிரபஞ்சத்தில் தான் பற்றுதலடைகிறதில்லை என்று வேதமோதும் வித்துவான்களால் வேதங்களிலும் இரகசியமான ஆகமங்களிலும் கானம் செப்பப்படுகிற புராண புருஷர் இந்த கிருஷ்ணன் தான். 24

அரசர்கள் அஞ்ஞானம் மிகுந்த புத்தியுடன் அதருமமாக நடந்து வரும்பொழுது இந்தப் பகவான்(உலகத்தின்) நன்மைக்காக ஒவ்வொரு சமயதிலும் சுத்தசத்துவசுவரூபத்தால், வர்ணாச்சிரம தருமம், ஐசுவரியம், சத்தியப்பிரஞ்ஞன் என்றதன்மை, உண்மை யுபதேசித்தல், தயை, கீர்த்தி இவைகளைப் பிரகாசப் படுத்துகிறார். 25

ஆச்சரியம்! ஆச்சரியம்!! யதுகுலம் மிகவும் சிலாக்கியமானது. மிகவும் ஆச்சரியம்! மதுவனம் மிகவும் புண்ணிய மானது. ஏனெனில், சிரவணம் செய்பவர்களுக்கு மிகப் பிரீதியைக் கொடுக்கும் கீர்த்தியுடையவரும் புருஷோத்தமருமாகிய பகவான் அவதாரம் செய்ததாலும் சஞ்சரிப்பதாலும் பெருமைப் படுத்துகிறாரல்லவா? 26

𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌸𑍍𑌵𑌰𑍍𑌯𑌶𑌸𑌸𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑌰𑍀
𑌕𑍁𑌶𑌸𑍍𑌥𑌲𑍀 𑌪𑍁𑌣𑍍𑌯𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑍀 𑌭𑍁𑌵𑌃 ।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑌿𑌤𑌂
𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌵𑌲𑍋𑌕𑌂 𑌸𑍍𑌵𑌪𑌤𑌿𑌂 𑌸𑍍𑌮 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥ 27

𑌨𑍂𑌨𑌂 𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌨𑌾𑌨𑌹𑍁𑌤𑌾𑌦𑌿𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃
𑌸𑌮𑌰𑍍𑌚𑌿𑌤𑍋 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌗𑍃𑌹𑍀𑌤𑌪𑌾𑌣𑌿𑌭𑌿𑌃 ।
𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌸𑍍𑌸𑌖𑍍𑌯𑌧𑌰𑌾𑌮𑍃𑌤𑌂 𑌮𑍁𑌹𑍁𑌰𑍍
𑌵𑍍𑌰𑌜𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑌂𑌮𑍁𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌯𑌦𑌾𑌶𑌯𑌾𑌃 ॥ 28

𑌯𑌾 𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑍁𑌲𑍍𑌕𑍇𑌨 𑌹𑍃𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑌰𑍇
𑌪𑍍𑌰𑌮𑌥𑍍𑌯 𑌚𑍈𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌹𑌿 𑌶𑍁𑌷𑍍𑌮𑌿𑌣𑌃 ।
𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌸𑌾𑌮𑍍𑌬𑌾𑌮𑍍𑌬𑌸𑍁𑌤𑌾𑌦𑌯𑍋 𑌪𑌰𑌾
𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌹𑍃𑌤𑌾 𑌭𑍌𑌮𑌵𑌧𑍇 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ॥
𑌏𑌤𑌾𑌃 𑌪𑌰𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌤𑍍𑌵𑌮𑌪𑌾𑌸𑍍𑌤𑌪𑍇𑌶𑌲𑌂
𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌶𑍌𑌚𑌂 𑌬𑌤 𑌸𑌾𑌧𑍁 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 ।
𑌯𑌾𑌸𑌾𑌂 𑌗𑍃𑌹𑌾𑌤𑍍𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌲𑍋𑌚𑌨𑌃 𑌪𑌤𑌿𑌰𑍍
𑌨 𑌜𑌾𑌤𑍍𑌵𑌪𑍈𑌤𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌿 𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍 ॥ 29-30

துவாரகையானது சுவர்க்கலோகம் சிறந்தது என்ற மகிமையை அவமதிக்கக் கூடியது. பூமிக்குப் புண்ணியத்தையும் கியாதியையும் விருத்திசெய்யக் கூடியது. மிகவும் ஆச்சரியம்! அந்த துவாரகை யிலுள்ள பிரஜைகள் (தங்களை) அனுக்கிரகிப்பதற்குச் செய்யும் புன்னகையுடன் கூடிய பார்வையுள்ள வரும் தங்களைக் காப்பவருமாகிய கிருஷ்ணனை எப்போதும் பார்க்கிறார்கள். 27

இந்தக் கிருஷ்ணன் பாணிக்கிரகணம் செய்து கொண்ட பத்தினிகள் (ஜன்மாந்தரத்தில்) விருதம், ஸ்நானம், ஹோமம் முதலிய தருமங்களைச் செய்து இந்த ஈச்வரனைப் பூஜித் திருக்கிறார்கள். ஏசகி! கோப ஸ்திரீகள் எந்த அதராமிருதத்தைப் பானம்செய்ய வேண்டுமென்று மோக மடைந்தார்களோ அந்த அதரா மிருதத்தைப் பத்தினிகள் அடிக்கடி யல்லவா பானம் செய்கிறார்கள். 28

வீரியத்தையே சுல்க(கன்னிகைகளுக்குக்கொடுக்கும்திரவியம்) மாகவுடைய கிருஷ்ணன், சுயம்வரத்தில் பலசாலிகளாகிய சிசுபாலன் முதலியவர்களை ஜயித்து அபகரித்த பிரத்யும்னனைப் புத்திரனாக உடைய ஜாம்பவதி முதலிய ஸ்திரீகள், நரகாசுரனை வதம்செய்தபோது ஆயிரக்கணக்காக அபகரிக்கப்பட்ட ஸ்திரீகள் இவர்கள் யாவரும் சுவதந்திரத் தன்மையற்றதும் பரிசுத்த மில்லாதது மாகிய தங்களுடைய ஜன்மத்தை ஒழித்தார்கள். ஏனெனில் தங்களுக்குப் பதியாகிய புண்டரீகாக்ஷன் (பாரிஜாத புஷ்பங்கொண்டு வருவதுமுதலிய) காரியங்களால் ஆனந்த மளித்துக்கொண்டு ஒரு சமயமும் அந்த ஸ்திரீகளின் கிருகத்தினின்று வெளிப் புறப்படுவ தில்லையல்லவா? ஆச்சரியம்! 29-30

॥ 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌾 𑌵𑌦𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸 𑌗𑌿𑌰𑌃 𑌪𑍁𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑍍 𑌸𑌸𑍍𑌮𑌿𑌤𑍇𑌨 𑌯𑌯𑍌 𑌹𑌰𑌿𑌃 ॥ 31

𑌅𑌜𑌾𑌤𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌪𑍃𑌤𑌨𑌾𑌂 𑌗𑍋𑌪𑍀𑌥𑌾𑌯 𑌮𑌧𑍁𑌦𑍍𑌵𑌿𑌷𑌃 ।
𑌪𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑌂𑌕𑌿𑌤𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ 32

𑌅𑌥 𑌦𑍂𑌰𑌾𑌗𑌤𑌾𑌨𑍍 𑌶𑍌𑌰𑌿𑌃 𑌕𑍌𑌰𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌰𑌹𑌾𑌤𑍁𑌰𑌾𑌨𑍍 ।
𑌸𑌂𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯 𑌦𑍃𑌢𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑌗𑌰𑍀𑌂 𑌹𑌰𑌿𑌃 ॥ 33

𑌕𑍁𑌰𑍁𑌜𑌾𑌂𑌗𑌲𑌪𑌾𑌞𑍍𑌚𑌾𑌲𑌾𑌨𑍍 𑌶𑍂𑌰𑌸𑍇𑌨𑌾𑌨𑍍 𑌸𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌨𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑌾𑌨𑌥 ॥ 34

𑌮𑌰𑍁𑌧𑌨𑍍𑌵𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌸𑍌𑌵𑍀𑌰𑌾𑌭𑍀𑌰𑌯𑍋𑌃 𑌪𑌰𑌾𑌨𑍍 ।
𑌆𑌨𑌰𑍍𑌤𑌾𑌨𑍍𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍋𑌪𑌾𑌗𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌹𑍋 𑌮𑌨𑌾𑌗𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 ॥ 35

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

அந்த முகுந்தன், இம்மாதிரி புகழும் அந்தப் பட்டணத்து ஸ்திரீகளின் மொழிகளைப்புன்னகையுடன் கூடிய பார்வையால் கொண்டாடிச் சென்றார். 31

அஜாத சத்ருவாகிய தருமபுத்திரர் மதுவென்ற அசுரனைச் சங்காரம் செய்த கிருஷ்ணனை இரக்ஷிப்பதற்காக சத்துருக்களிடம் சந்தேகங் கொண்டு சினேகத்தால் *நான்கு அங்கமுடைய சேனையை அனுப்பினர். 32

பிறகு சௌரியாகிய ஹரியானவர் அத்தியந்த நண்பர்களும் பிரிவாற்றாமையால் துன்ப முறுவோரும் வெகுதூரம் வந்தவர்களுமாகிய கௌரவர்களை நிறுத்தி விட்டுத் தன்னகரம் சென்றார். 33

ஓ சௌனக முனிவரே! குருதேசம், ஜாங்கலம், பாஞ்சாலம், சூரசேனம், யமுனைக் கரையிலுள்ள தேசங்கள், பிரமாவர்த்தம், குருக்ஷேத்திரம், மத்ஸிய தேசங்கள், ஸாஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசங்கள், ஜலமில்லாத பிரதேசங்கள், இவைகளைக் கடந்து, குதிரைகள் களைப்படைந்தமையால் பிரபுவாகிய கிருஷ்ணன் ஸௌவிர தேசங்கள் ஆபிரதேசம் ஸிந்துதேசம் ஆனர்த்த தேசங்கள் இவைகளை மெதுவாகக் கடந்தார். 34-35

---

* இரதம் யானை குதிரை பதாதி இவை நான்கும் அங்கமெனப்படும்.

𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌹 𑌤𑌤𑍍𑌰𑌤𑍍𑌯𑍈𑌰𑍍𑌹𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌹𑌣𑌃 ।
𑌸𑌾𑌯𑌂 𑌭𑍇𑌜𑍇 𑌦𑌿𑌶𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌗𑌵𑌿𑌷𑍍𑌠𑍋 𑌗𑌾𑌂 𑌗𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 ॥ 36

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌦𑌶𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌆𑌨𑌰𑍍𑌤𑌾𑌨𑍍 𑌸 𑌉𑌪𑌵𑍍𑌰𑌜𑍍𑌯 𑌸𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌜𑌨𑌪𑌦𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌕𑌾𑌨𑍍 ।
𑌦𑌧𑍍𑌮𑍌 𑌦𑌰𑌵𑌰𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌷𑌾𑌦𑌂 𑌶𑌮𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 ॥ 1

𑌸 𑌉𑌚𑍍𑌚𑌕𑌾𑌶𑍇 𑌧𑌵𑌳𑍋𑌦𑌰𑍋 𑌦𑌰𑍋
𑌽𑌪𑍍𑌯𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯𑌾𑌧𑌰𑌶𑍋𑌣𑌶𑍋𑌣𑌿𑌮𑌾 ।
𑌦𑌾𑌧𑍍𑌮𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 𑌕𑌰𑌕𑌞𑍍𑌜𑌸𑌮𑍍𑌪𑍁𑌟𑍇
𑌯𑌥𑌾𑌬𑍍𑌜𑌖𑌣𑍍𑌡𑍇 𑌕𑌲𑌹𑌂𑌸 𑌉𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑌃 ॥ 2

கிருஷ்ண பகவான் அங்கங்குள்ளவர்களிடம் பூஜை பெற்றுச் சாயங் காலம் மேற்றிசையை அடைந்தார். அப்பொழுது ஆகாயத்தி லிருக்கும் சூரியன் புன லுக்குட் புகுந்தான் (அஸ்தமன மானுன்). 36

10-வது அத்தியாயம் முற்றிற்று.

11-வது அத்தியாயம்.

சூதபுராணிகர் கூறுகிறுர்.

அந்த வாசுதேவன்! சகலவளமும் நிறையப்பெற்றதும் தனக்குச் சொந்த மானதுமாகிய ஆனர்த்த தேசங்களின் சமீபத்தில் செல்லும்போது, அங்குள்ள வர்களின் துக்க சமனம் செய்கிறவர்போல் சங்கத்தொனி செய்தார். 1

அந்த சங்கம் நடுவில் வெண்மை நிறமுடைய தாயினும் தாமோதரன் ஊதும்போது அவருடைய உதடுகளின் சிவப்பால், சிவந்த வர்ண முடையதாகி அந்தப் பகவா னுடைய கரகமலத்தின் மத்தியில் பிரகாசிக்கும் போது செந்தாம ரைக் கூட்டத்தில் உரத்துச்சத்தஞ் செய்து கொண்டிருக்கும், இராஜஹம்ஸம் போல் விளங்கிற்று. 2

𑌤𑌮𑍁𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯 𑌨𑌿𑌨𑌦𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑌯𑌭𑌯𑌾𑌵𑌹𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌦𑍍𑌯𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌭𑌰𑍍𑌤𑍃𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌾𑌲𑌸𑌾𑌃 ॥ 3

𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌨𑍀𑌤𑌬𑌲𑌯𑍋 𑌰𑌵𑍇𑌰𑍍𑌦𑍀𑌪𑌮𑌿𑌵𑌾𑌦𑍃𑌤𑌾𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌾𑌮𑌂 𑌨𑌿𑌜𑌲𑌾𑌭𑍇𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌦𑌾 ॥

𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌫𑍁𑌲𑍍𑌲𑌮𑍁𑌖𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌚𑍁𑌰𑍍𑌹𑌰𑍍𑌷𑌗𑌦𑍍𑌗𑌦𑌯𑌾 𑌗𑌿𑌰𑌾 ।
𑌪𑌿𑌤𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌹𑍃𑌦𑌮𑌵𑌿𑌤𑌾𑌰𑌮𑌿𑌵𑌾𑌰𑍍𑌭𑌕𑌾𑌃 ॥ 4 - 5

𑌨𑌤𑌾𑌃 𑌸𑍍𑌮 𑌤𑍇 𑌨𑌾𑌥 𑌸𑌦𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌪𑌙𑍍𑌕𑌜𑌂
𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌵𑍈𑌰𑌿𑌞𑍍𑌚𑍍𑌯𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 𑌕𑍍𑌷𑍇𑌮𑌮𑌿𑌹𑍇𑌚𑍍𑌛𑌤𑌾𑌂 𑌪𑌰𑌂
𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌾𑌲𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑍇𑌤𑍍𑌪𑌰𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥ 6

𑌭𑌵𑌾𑌯 𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌭𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑌾𑌵𑌨
𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌮𑌾𑌤𑌾𑌽𑌥 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 𑌪𑌿𑌤𑌾 ।
𑌤𑍍𑌵𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌚 𑌦𑍈𑌵𑌤𑌂
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌬𑌭𑍂𑌵𑌿𑌮 ॥ 7

𑌅𑌹𑍋 𑌸𑌨𑌾𑌥𑌾 𑌭𑌵𑌤𑌾 𑌸𑍍𑌮 𑌯𑌦𑍍𑌵𑌯𑌂
𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌦𑍂𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।

உலகத்திற்குப் பயத்தைக்கொடுக்கும் அரக்கர்களுக்கும் பயத்தைக்கொடுக்கக்கூடிய அந்தச் சத்தத்தைச் செவியுற்ற பிரஜைகள் யாவரும் பிரபுவைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவலுடன் எதிர்கொண்டு வந்தார்கள். 3

அங்குக் காணிக்கை கொண்டுவந்து சூரியனுக்குத் தீபம் கொடுப்பதுபோல் பிரயத்தினத்துடன் பூஜித்து ஆனந்தானுபவத்தால் எப்போதும் பூர்ணகாமனும் ஆத்மாராமனும் எல்லாருக்கும் சுகிருத்தாகிய வனும் காப்பாற்றுகிற வனுமாகிய பகவானைப் பார்த்து பிரீதியால் விகசித்த முகமுடையவர்களாகி, குழந்தைகள் தந்தையிடம் கூறுவதுபோல் கூறுகிறார்கள். 4-5

ஓ நாத! பிரமன், சனகாதிகள், இந்திரன் இவர்களால் வணங்கப் படுவதும் இந்தச் சம்சாரத்தில் மிகுந்த சுகத்தை விரும்பியவர் களுக்குப் பராயணமானதுமாகிய உம்முடைய பாத கமலத்திற்கு நாங்கள் வந்தனம் செய்கிறோம். நீர் பிரமன் முதலியவர்களுக்கும் பிரபுவாகிறீர். தங்களுக்குக் காலனும் பிரபுவாக மாட்டானல்லவா? 6

ஓ விச்வபாவன! நீர் எங்களுடைய நன்மையின் பொருட்டு அனுக்கிரகிக்க வேண்டும். எங்களுக்கு நீர் ஆத்மா! அந்தரங்க சுகிருத்தானவர், பிதா, பாலிக்கிறவர். சற்குரு, பரதெய்வம், தங்களை நாங்கள் அனுசரித் திருப்பதால் கிருதார்த்தர்களானோம். 7

ஆச்சரியம்! நாங்கள் தங்களால் நாதனுடையவர்களானோம். (எனெனில்) சுவர்க்கத்தில் வசிப்பவர் களுக்கும் கிட்டாத தரிசன மகிமையுடையதும், அன்-

ப்ரேமஸ்மிதஸ்நிக்³த⁴நிரீக்ஷணாநநம்
பஶ்யேம ரூபம் தவ ஸர்வஸௌப⁴க³ம் ॥ 8

யர்ஹ்யம்பு³ஜாக்ஷாபஸஸார போ⁴ ப⁴வாந்
குரூந் மதூ⁴ந் வாத² ஸுஹ்ருத்³தி³த்³ருக்ஷயா ।
தத்ராப்³த³கோடிப்ரதிம: க்ஷணோ ப⁴வேத்
ரவிம் விநாக்ஷ்ணோரிவ நஸ்தவாச்யுத ॥ 9

॥ ஸ்ரீ ஸூத உவாச ॥

இதி சோதீ³ரிதா வாச: ப்ரஜாநாம் ப⁴க்தவத்ஸல: ।
ஶ்ருண்வாநோऽநுக்³ரஹம் த்³ருஷ்ட்யா விதந்வந் ப்ராவிஶத்புரீம் ॥

மது⁴போ⁴ஜத³ஶார்ஹார்ஹகுகுராந்த⁴கவ்ருஷ்ணிபி⁴: ।
ஆத்மதுல்யப³லைர்கு³ப்தாம் நாகை³ர்போ⁴க³வதீமிவ ॥

பார்ந்த புன்னகையுடன் கூடிய சிநேகப் பார்வையுடைய முகமுமுள்ளதும் அவயவமெல்லா வற்றிலும் மனோஞ்ஞ மானதுமாகிய உமது திருவுருவத்தைத் தரிசிக்கிறோ மல்லவா ? 8

ஓ அச்சுத! ஓ அம்புஜாட்ச!(தாமரைக் கண்ண) நீர் எங்களைவிட்டு, பந்துக் களைப்பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தால் குரு க்ஷேத்திரத்திற்காவது மதுரா புரிக்காவது சென்றால், அப்பொழுது சூரியனில்லா விடில் நேத்திரம் குருட்டுத் தன்மையை யடைவதுபோல், தங்களைச்சார்ந்த எங்களுக் கேற்படும் ஒரு கணப் போது கோடிவருஷம் போல் ஆகும். 9

சூதபுராணிகர் கூறுகிறார்.

பக்தர்களைப் பரிபாலிக்கும் பகவான் பிரஜைகள் கூறும் சொற்களைக் கேட்டு பார்வையால் அவர்களுக் கனுக்கிரகம் செய்துகொண்டு தனக்குச் சமமான பல முள்ள,மது, போஜன், சார்கதேசத்தவர் அர்கதேசத்தவர், குரு வம்சத்தவர் அந்தக தேசத்தவர், விருஷ்ணிகள் இவர்களால், சர்ப்பங் களால் காக்கப்படும் போகவதி போல் காக்கப் படுவதும் ருதுக்களி லெல்லாமுள்ள மலர்கள் முதலிய விபவங்களை யுடையதும் புண்ணிய விருக்ஷங்கள் லதா கிருகங்கள் இவைகளை யுடைய * உத்தியானவனம். § உபவனம் ¶ ஆராமம் இவைகள் சூழப் பெற்ற தும் தாமரை ஓடைகளினால் அழகினை யுடையதும் நகரக் கோட்டை வாயில்களி லும் வீட்டு வாயில்களிலும் உற்சவத்தின் பொருட்டு கட்டப்படும் தோரண அலங்

---

* உத்தியானவனம் - பலனை முக்கியமாக உடையது.

§ உபவனம் - புஷ்பத்தை முக்கியமாகக் கொண்டது.

¶ ஆராமம் - கிரீடிப்பதற் குரியவனம்.

𑌸𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍁𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑍈𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑍃𑌕𑍍𑌷𑌲𑌤𑌾𑌶𑍍𑌰𑌮𑍈𑌃 ।
𑌉𑌦𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌵𑌨𑌾𑌰𑌾𑌮𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑌰𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥
𑌗𑍋𑌪𑍁𑌰𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌷𑍁 𑌕𑍃𑌤𑌕𑍌𑌤𑍁𑌕𑌤𑍋𑌰𑌣𑌾𑌮𑍍 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌧𑍍𑌵𑌜𑌪𑌤𑌾𑌕𑌾𑌗𑍍𑌰𑍈𑌰𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾𑌤𑌪𑌾𑌮𑍍 ॥
𑌸𑌂𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑌹𑌾𑌮𑌾𑌰𑍍𑌗𑌰𑌥𑍍𑌯𑌾𑌪𑌣𑌕𑌚𑌤𑍍𑌵𑌰𑌾𑌮𑍍 ।
𑌸𑌿𑌕𑍍𑌤𑌾𑌂 𑌗𑌨𑍍𑌧𑌜𑌲𑍈𑌰𑍁𑌪𑍍𑌤𑌾𑌂 𑌫𑌲𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌕𑍍𑌷𑌤𑌾𑌂𑌕𑍁𑌰𑍈𑌃 ॥
𑌦𑍍𑌵𑌾𑌰𑌿 𑌦𑍍𑌵𑌾𑌰𑌿 𑌗𑍃𑌹𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌦𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌫𑌲𑍇𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 ।
𑌅𑌲𑌂𑌕𑍃𑌤𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍁𑌮𑍍𑌭𑍈𑌰𑍍𑌬𑌲𑌿𑌭𑌿𑌰𑍍𑌧𑍂𑌪𑌦𑍀𑌪𑌕𑍈𑌃 ॥ 10-15

𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑌾𑌮𑌨𑌾𑌃 ।
𑌅𑌕𑍍𑌰𑍂𑌰𑌶𑍍𑌚𑍋𑌗𑍍𑌰𑌸𑍇𑌨𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ॥
𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌶𑍍𑌚𑌾𑌰𑍁𑌦𑍇𑌷𑍍𑌣𑌶𑍍𑌚 𑌸𑌾𑌮𑍍𑌬𑍋 𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌤𑍀𑌸𑍁𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑌵𑍇𑌗𑍋𑌚𑍍𑌛𑌶𑌿𑌤𑌶𑌯𑌨𑌾𑌸𑌨𑌭𑍋𑌜𑌨𑌾𑌃 ॥

𑌵𑌾𑌰𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌸𑌸𑍁𑌮𑌂𑌗𑌲𑍈𑌃 ।
𑌶𑌂𑌖𑌤𑍂𑌰𑍍𑌯𑌨𑌿𑌨𑌾𑌦𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑍋𑌷𑍇𑌣 𑌚𑌾𑌦𑍃𑌤𑌾𑌃 ॥
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌜𑍍𑌜𑌗𑍍𑌮𑍂𑌰𑌥𑍈𑌰𑍍𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌪𑍍𑌰𑌣𑌯𑌾𑌗𑌤𑌸𑌾𑌧𑍍𑌵𑌸𑌾𑌃 ॥ 16-18½

காரங்களை உடையதும் விசித்திரமான † துவஜங்கள் ‡ பதாகைகள் இவைகளால் உள்ளே வெயில் புகாமல் தடுக்கப் பெற்றதும், நன்கு சோதிக்கப் பட்ட இராஜவீதிகள், மற்றுமுள்ள வீதிகள், கடைத் தெருக்கள், ¶ அங்கணங்கள் இவைகளை உடையதும், வாசனை கலந்த நீர் தெளிக்கப் பெற்றதும், கனிகள், புஷ்பங்கள் அக்ஷதங்கள் அரும்புகள் இவைகள் இறைக்கப் பெற்றதும் தயிர் அக்ஷதங்கள், கனிகள், கரும்புகள் பூர்ண கும்பங்கள் பலிகள் தூபதீபங்கள் இவைகளால் அலங்கரிக்கப் பட்ட வீடுகளை யுடையது மாகிய துவாரகையில் பிரவேசித்தார். 10-15

ஓ சௌனக முனிவரே! மகாமனஸ்வியாகிய வசுதேவர் அக்ரூரர், உக்ரசேனர், ஆச்சரியமான பராக்கிரம முடைய பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன் ஸாம்பன், கதன் முதலியவர்கள் யாவரும் மிகுந்த அன்பிற்குரிய கிருஷ்ணன் வருகிறான் என்பதைச் செவியுற்று, அதனால் உண்டான சந்தோஷத்தின் மிகுதியால் சயனம், ஆசனம், போஜனம், இவைகளைத் தள்ளி சிறந்த யானைகளை முன்னிட்டுக்கொண்டு மங்கள வஸ்துக்களுடன் கூடிய அந்தணர்களுடனும் சங்கு, தூரியம் முதலிய வாத்திய முழக்கத்துடனும் வேத கோஷத்துடனும் ஆதரவும் அன்பின் மிகுதியா லுண்டான பரபரப்பு முடையவராய் இரதங்களுடன் எதிர்கொண்டுவந்தார்கள். 16-18½

† துவஜங்கள் - வீரசின்ன முள்ளவை.

‡ பதாகைகள் - ஜயங்கொடுக்கும் யந்திரங்கள்

¶ அங்கணங்கள் - வாசல் என்றமுற்றம்.

𑌵𑌾𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌶𑌤𑌶𑍋 𑌯𑌾𑌨𑍈𑌸𑍍𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍋𑌤𑍍𑌸𑍁𑌕𑌾𑌃 ।
𑌲𑌸𑌤𑍍𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌨𑌿𑌰𑍍𑌭𑌾𑌤𑌕𑌪𑍋𑌲𑌵𑌦𑌨𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ 19

𑌨𑌟𑌨𑌰𑍍𑌤𑌕𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌃 𑌸𑍂𑌤𑌮𑌾𑌗𑌧𑌵𑌨𑍍𑌦𑌿𑌨𑌃 ।
𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌭𑍁𑌤𑌾𑌨𑌿 𑌚 ॥ 20

𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌪𑍌𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌾𑌨𑌮𑌾𑌦𑌧𑍇 ॥

𑌪𑍍𑌰𑌹𑍍𑌵𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑌾𑌶𑍍𑌲𑍇𑌷𑌕𑌰𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌸𑍍𑌮𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ।
𑌆𑌶𑍍𑌵𑌾𑌸𑍍𑌯 𑌚𑌾𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌰𑍈𑌶𑍍𑌚𑌾𑌭𑌿𑌮𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 ॥ 22

𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌗𑍁𑌰𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌃 𑌸𑌦𑌾𑌰𑍈𑌃 𑌸𑍍𑌥𑌵𑌿𑌰𑍈𑌰𑌪𑌿 ।
𑌆𑌶𑍀𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌨𑍍𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑌾𑌵𑌿𑌶𑌤𑍍𑌪𑍁𑌰𑌮𑍍 ॥ 23

ஒளி பொருந்திய குண்டலங்கள் விளங்கும் கன்னமும் அதனால் அழகுவாய்ந்த முகமுமுடைய * உத்தம வேசிகள் அந்த கிருஷ்ணனைத் தரிசிக்க விரும்பி உற்சாகத்துடன் வாகனங்களின் மீதேறி நூற்றுக் கணக்காக (எதிர்கொண்டு) வந்தார்கள். 19½

(1) நடர்கள், (2) நர்த்தனக் காரர்கள், (3) கந்தர்வர்கள், (4) சூதர்கள், (5) மாகதர்கள், (6) வந்திகள் யாவரும் உத்தம சுலோகனுடைய அற்புதமான சரித்திரங்களைக் கானம் செய்கிறார்கள். 20½

† அப்பொழுது பிரபுவாகிய கிருஷ்ண பகவான் தன்னை யனுசரித்தவர்களாகிய நகரத்தார்களுடனும் உறவினர்களுடனும் விதிப்படி சேர்ந்து தலையாலும் வாக்கினாலும் வந்தனம் செய்தும் பின் ஆலிங்கனம் செய்தும் கையால் ஸ்பரிசித்தும் புன்னகை செய்தும் கண்ணோக்கியும் சமாதானம் செய்தார். நாய் மாம்சம் தின்னும் சண்டாளர்களுக்கும் விரும்பிய வைகளைக் கொடுத்துக் கௌரவப் படுத்தினார். 21-22½

கிருஷ்ணபகவான், பத்தினிகளுடன் கூடிய குருமார்கள், அந்தணர்கள், பெரியோர்கள், மற்றுமுள்ள வந்திகள் இவர்கள் ஆசீர்வதிக்க நகரத்தில் பிரவேசித்தார். 23½

---

* உத்தம வேசிகள் - நர்த்தனம் செய்பவர்கள்.

(1) நடர்கள் - சிருங்காரம் முதலிய நவரஸங்களையும் அபிநயிப்பதில் சாமர்த்திய முள்ளவர்கள்.

(2) நர்த்தனக் காரர்கள் - தாளம்முதலியவைகளை அனுசரித்து நர்த்தனம்செய்பவர்கள்.

(3) கந்தர்வர்கள் - பாடுகிறவர்கள்.

(4) சூதர்கள் - பிராசீன வரலாறை யுரைப்பவர்கள்.

(5) மாகதர்கள் - பரம்பரையைக் கொண்டாடுகிறவர்கள்.

(6) வந்திகள் - சமயோசித மாகப் பேசும் நிர்மலமான அறிவுடையவர்கள்.

† அவரவர் கௌரவத் திற்குத் தக்கபடி வந்தனம் செய்தார் என்பது கருத்து.

ராஜமார்க³ம் க³தே க்ருஷ்ணே த்³வாரகாயாம் குலஸ்த்ரிய: |
ஹர்ம்யாண்யாருருஹுர்விப்ராஸ்ததீ³க்ஷணமஹோத்ஸவா: ‖ 24

நித்யம் நிரீக்ஷமாணானாம் யத³பி த்³வாரகௌகஸாம் |
ந வித்ருப்யந்தி ஹி த்³ருஶ: ஶ்ரியோ தா⁴மாங்க³மச்யுதம் ‖

ஶ்ரியோ நிவாஸோ யஸ்யோர: பானபாத்ரம் முக²ம் த்³ருஶாம் |
பா³ஹவோ லோகபாலானாம் ஸாரங்கா³ணாம் பதா³ம்பு³ஜம் ‖ 26

ஸிதாதபத்ரவ்யஜனைருபஸ்க்ருத:
ப்ரஸூனவர்ஷைரபி⁴வர்ஷித: பதி² |
பிஶங்க³வாஸா வனமாலயா ப³பௌ⁴
க⁴னோ யதா²ர்கோடு³பசாபவைத்³யுதை: ‖ 27½

ப்ரவிஷ்டஸ்து க்³ருஹம் பித்ரோ: பரிஷ்வக்த: ஸ்வமாத்ருபி⁴: |
வவந்தே³ ஶிரஸா ஸப்த தே³வகீப்ரமுகா² முதா³ ‖ 28½

ஓ அந்தணர்களே! கிருஷ்ணன் துவாரகையில் இராஜவீதி வந்தவுடன் குலஸ்திரீகள் அந்த கிருஷ்ணனுடைய தரிசனத்தை மகோற்சவமாக நினைத்து உப்பரிகைகளின் மீதேறினார்கள். 24½

துவாரகையில் வாசம் செய்பவர்கள் இலக்ஷ்மி தேவிக்கு இருப்பிடமான சரீரமுடைய அச்சுதனை எப்போதும் நன்றாய்த் தரிசனம் செய்பவர்களாயினும் அவர்களுடைய நேத்திரங்கள் திருப்தியடையவில்லை. ஏனெனில் பகவானுடைய மார்பு ஸ்ரீதேவிக்கு வாசஸ்தானமாகிறது. (அவருடைய) முகமும் நேத்திரமும் (சௌந்தரியமாகிய அமிருதத்தைப்) பானம் செய்யும் பாத்திரமாகின்றன. (ஈசனுடைய) கைகள் லோக பாலர்களுக்கு வாசஸ்தானமாகின்றன. (முகுந்தனுடைய) சரணாரவிந்தம் பக்தர்களுக்கு இருப்பிடமாகிறது.

வெண்மை நிறமுடைய குடை சாமரங்கள் இவைகளால் உபசரிக்கப் பெற்றவரும் மார்க்கத்தில் புஷ்பமாரி பொழியப் பெற்றவரும் பீதாம்பர மணிந்தவரும் வனமாலையுடன் கூடியவருமாகிய வாசுதேவன் * சூரியன், நக்ஷத்திரங்களுடன் கூடிய சந்திரன், இந்திரனதுவில், மின்னல் இவைகளுடன் கூடிய மேகம்போல் விளங்கினார். 27½

அப்பொழுது கிருஷ்ணன் தாய் தந்தைகளின் கிருகத்தில் பிரவேசித்தார். அங்கு அவரைத் தாய்மார்கள் ஆலிங்கனம் செய்தார்கள். தேவகி முதலிய தாய்மார்களாகிய அவர்கள் எழுவரையும் தலையால் வணங்கினார். 28½

---

* சூரியன் - குடை, நக்ஷத்திரங்கள்-புஷ்பமாரி, சந்திரன் - சாமரம், வனமாலை - இந்திரன்வில், மின்னல்-பீதாம்பரம் இவ்விதம் உபமானித்துக் கொள்க. மேகத்திற்கு மேல் சூரியபிம்பமும், இருபக்கத்தில் இருசந்திரனும், நான்கு பக்கத்திலும் நக்ஷத்திரங்களும் அவைகளின் மத்தியில் இந்திரன் வில்லும் ஸ்திரமான மின்னலும் இருந்தால் அச்சமயம் மேகம் எவ்விதம் விளங்குமோ அவ்விதம் விளங்கினார் என்பது கருத்து.

𑌤𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌙𑍍𑌕𑌮𑌾𑌰𑍋𑌪𑍍𑌯 𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑍍𑌨𑍁𑌤𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌃 ।
𑌹𑌰𑍍𑌷𑌵𑌿𑌹𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌸𑌿𑌷𑌿𑌚𑍁𑌰𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌜𑍈𑌰𑍍𑌜𑌲𑍈𑌃 ॥ 29

𑌅𑌥𑌾𑌵𑌿𑌶𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌵𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌤𑍍𑌨𑍀𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌷𑍋𑌡𑌶 ॥ 30

𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌃 𑌪𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌯 𑌗𑍃𑌹𑌾𑌨𑍁𑌪𑌾𑌗𑌤𑌂
𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌮𑌨𑍋𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌾𑌃 ।
𑌉𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑍁𑌰𑌾𑌰𑌾𑌤𑍍𑌸𑌹𑌸𑌾 𑌸𑌨𑌾𑌶𑌯𑌾𑌤𑍍
𑌸𑌾𑌕𑌂 𑌵𑍍𑌰𑌤𑍈𑌰𑍍𑌵𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌲𑍋𑌚𑌨𑌾𑌨𑌨𑌾𑌃 ॥ 31

𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑍈𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾
𑌦𑍁𑌰𑌨𑍍𑌤𑌭𑌾𑌵𑌾𑌃 𑌪𑌰𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑍇 𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌰𑌵𑌦𑌮𑍍𑌬𑍁 𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍋𑌃
𑌵𑌿𑌲𑌜𑍍𑌜𑌤𑍀𑌨𑌾𑌂 𑌭𑍃𑌗𑍁𑌵𑌰𑍍𑌯 𑌵𑍈𑌕𑍍𑌲𑌵𑌾𑌤𑍍 ॥ 32

𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌸𑍌 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌗𑌤𑍋 𑌰𑌹𑍋𑌗𑌤𑌃
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌂 𑌨𑌵𑌂 𑌨𑌵𑌮𑍍 ।

அன்பினுல் பால் பெருகும் கொங்கைகளை யுடைய வர்களும் மகிழ்ச்சியால் தளர்ந்த மனமுடையவர்களுமாகிய அந்த தேவகி முதலியவர்கள் புத்திரனுகிய கிருஷ்ணனை மடிமீதுவைத்து நேத்திரங்களி லுண்டான நீரால் நனைத்தார்கள்.

பிறகு பதினறுபிரத்து நூற்றெட்டுப் பட்டமகிஷிக ளிருந்துவரும் உப்பரிகைகளை உடையதும் மிகவும் சிரேஷ்டமானதும் ஆசிக்கத்தக்க பொருள் யாவற்றையு முடையது மாகிய தன் அரண்மனை சென்ருர். $30\frac{1}{2}$

பட்ட மகிஷிகள் தேசாந்தரம் சென்று வீட்டிற்கு அருகேவந்த தங்கள் கணவனை எட்டிப் பார்த்து மனதில் மிகுந்த உற்சாகமும் வெட்கமுமடைந்த கண்களையும் முகத்தையு முடையவர் களாய் * விருதங்களுடன் ஆசனத்தினின்று விரைவாக எழுந்தார்கள். $31\frac{1}{2}$

கம்பீரமான அபிப்பிராய முடைய அந்தக் காமினிகள் தங்கள் பர்த்தாவை (தரிசனம் செய்வதற்கு முன்) மனதாலும் (தரிசனம் செய்தவுடன்) கண்களாலும் (சமீபத்தில் வந்தவுடன்) புத்திரர்களை எடுத்து ஆலிங்கனம் செய்து கொள்வது போல் இறுகத் தழுவியும் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். ஓ சௌனக முனிவரே! வெட்கமுடைய அந்த விலாசினிகள் பரவசமானமையால் அவர்களுடையவிழிகளினின்று எவ்வளவு அடக்கியும் நில்லாமல் நீர் பெருகிற்று. $32\frac{1}{2}$

இந்தபகவான் அந்தப்பட்டமகிஷிகளுக்குச் சமீபத்திலிருந்தாலும் இரகசியமாக இருந்தாலும் அவர்களுக்கு அவருடைய பாதகமலங்கள் ஒவ்வொரு

---

* விருதங்களாவன - கணவன் தேசாந்தரஞ் சென்றிருக்கும் போது விளையாடல், சரீரத்தை அலங்கரித்துக் கொள்ளல், சபை உற்சவங்களைத் தரிசிப்பது, ஹாஸ்யம், பிறரில்லம் செல்வது முதலியவைகளை விட்டுவிட வேண்டும் என்று யாஞ்ஞவல்கியர் கூறிய படியாம்.

𑌪𑌦𑍇𑌪𑌦𑍇 𑌕𑌾 𑌵𑌿𑌰𑌮𑍇𑌤 𑌤𑌤𑍍𑌪𑌦𑌾-
𑌚𑍍𑌚𑌲𑌾𑌪𑌿 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌰𑍍𑌨 𑌜𑌹𑌾𑌤𑌿 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ॥ 33

𑌏𑌵𑌂 𑌨𑍃𑌪𑌾𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌭𑌾𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑍍
𑌅𑌕𑍍𑌷𑍌𑌹𑌿𑌣𑍀𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍇𑌜𑌸𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌧𑌾𑌯 𑌵𑍈𑌰𑌂 𑌶𑍍𑌵𑌸𑌨𑍋 𑌯𑌥𑌾𑌨𑌲𑌂
𑌮𑌿𑌥𑍋𑌵𑌧𑍇𑌨𑍋𑌪𑌰𑌤𑍋 𑌨𑌿𑌰𑌾𑌯𑍁𑌧𑌃 ॥ 34

𑌸 𑌏𑌵𑌂 𑌨𑌰𑌲𑍋𑌕𑍇𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌵𑌮𑌾𑌯𑌯𑌾 ।
𑌰𑍇𑌮𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌤𑍍𑌨𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍋 𑌯𑌥𑌾 ॥ 35

𑌉𑌦𑍍𑌦𑌾𑌮𑌭𑌾𑌵𑌪𑌿𑌶𑍁𑌨𑌾𑌮𑌲𑌵𑌲𑍍𑌗𑍁𑌹𑌾𑌸-
𑌵𑍍𑌰𑍀𑌡𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌿𑌹𑌤𑍋 𑌮𑌦𑌨𑍋𑌪𑌿 𑌯𑌾𑌸𑌾𑌮𑍍 ।
𑌸𑌂𑌮𑍁𑌹𑍍𑌯 𑌚𑌾𑌪𑌮𑌜𑌹𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌦𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌸𑍍𑌤𑌾
𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 𑌵𑌿𑌮𑌥𑌿𑌤𑍁𑌂 𑌕𑍁𑌹𑌕𑍈𑌰𑍍𑌨 𑌶𑍇𑌕𑍁𑌃 ॥ 36

க்ஷணத்திலும் புதிது புதிதாக (தோன்றும்) ஆகுமாதலால் அந்தப் பாதகமலத்தில் எவளுக்குத்தான் பற்றில்லாமற் போகும்? இலக்ஷிமிதேவி சஞ்சல சுபாவமுடையவளாயினும் இந்த ஈசனை எப்போதும் விடுகிறதில்லை. 33½

இவ்விதம் புவிக்குப்பாரமாக ஜன்ம மடைந்தவர்களும் அக்ஷௌகிணிக்கணக்கான சேனைகளுடன் எங்கும் பரவிய மகிமையை உடையவர்களுமாகிய அரசர்களுக்குள் தான் ஆயுதமெடுக்காமலே விரோதத்தை உண்டு பண்ணிப் பின் (காற்றானது மூங்கில்களை ஒன்றுக்கொன்று உராய்ந்து சொள்ளும்படி செய்து தீயை உண்டுபண்ணி அவைகள் எரிந்தபின்பு, ஓய்வதுபோல்) ஒருவர்க்கொருவர் சண்டை நடந்து முடிந்தபின்னர் சமனமடைந்தார். 34½

அந்தப்பகவான் தன் மாயையால் இந்த மானிடப்பிரபஞ்சத்தில் அவதாரம் செய்து ஸ்திரீ ரத்தினங்களின் சமூகத்திலிருந்து பிராகிருத புருஷன் போல் இவ்விதம் ரமித்தார். 35½

* தங்கள்மனதிலுள்ள கம்பீரமான அபிப்பிராயத்தைக்குறிப்பிக்கும் நிர்மலமும் அழகானதுமாகிய மந்தகாசத்தாலும், வெட்கத்தாலும் கடாக்ஷவீக்ஷணத்தாலும் மன்மதனும்மயங்கி மோகமுற்றுத் தன்னுடையபுஷ்பபாணங்களைஎறிந்துவிடச் செய்யும் மகிமை பொருந்திய அந்த உத்தம ஸ்திரீகள், தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனுடைய இந்திரியத்தை க்ஷோபம் செய்யச் சக்தியற்றவர்களானார்கள். 36½

* ஸ்திரீ ரத்தினங்கள் பரமசிவனையும் மோகிக்கும்படி செய்து அவர் கையில்தரித்த பினாகமென்னும் வில்லை நழுவும்படிசெய்தவர்கள் என்பது ஒரு சாரார் கருத்து.

மந்யதே தமயம் லோகோ ஹ்யஸங்கமபி ஸங்கிநம் ।
ஆத்மௌபம்யேந மநுஜம் வ்யாப்ருண்வாநம் யதோऽபுத: ॥ 37½

ஏததீஸநமீஸஸ்ய ப்ரக்ருதிஸ்தோऽபி தத்குணை: ।
ந யுஜ்யதே ஸதாத்மஸ்தைர்யதா புத்திஸ்ததாஸ்ரயா ॥ 38½

தம் மேநிரேऽபலா மூடா: ஸ்த்ரைணம் சாநுவ்ரதம் ரஹ: ।
அப்ரமாணவிதோ பர்துரீஸ்வரம் மதயோ யதா ॥ 39½

இதி ஸ்ரீபாகவதே ப்ரதமஸ்கந்தே ஏகாதஸோऽத்யாய:.

॥ ஸ்ரீ ஸௌநக: ॥

அஸ்வத்தாம்நோபஸ்ருஷ்டேந ப்ரஹ்மஸீர்ஷ்ணோருதேஜஸா ।
உத்தராயா ஹதோ கர்ப: க்ருஷ்ணேநாஜீவித: புந: ॥

எங்கும் வியாபித்த அந்தப் பகவான் பற்றுதலற்றவராயிருந்தும் அவரை ஜனங்கள் தங்களுக்குச் சமமாகப் பற்றுதலுடையவரென் றெண்ணு கிருர்கள். ஆகையால் இவர்கள் தத்துவ மறியாதவர்களே யாவார்கள். 37½

ஆத்ம சுவரூபத்தை அடைந்த ஆனந்தம் முதலியவைகளோடு அந்த ஆத்ம சுவரூபத்தை ஆசரித்த அறிவு சேராதது போல் பகவான் பிரகிருதியி லிருப்பவராயினும் அந்தப் பிரகிருதியின் குணங்களுடன் சேருவதில்லே. இது தான் ஈசனுக்குள்ள பிரபுத்தன்மை. 38½

அகங்கார விருத்திகள் க்ஷேத்திரஞ்ஞனே சுவாதீனன் என்று நினைப்பது போல் கிருஷ்ண பகவானுடைய மகிமையை யறியாத ஸ்திரீகள் மூடத்தன்மை யால் அவரைத் தங்களுக்கு சுவாதீனன் என்றும் தனிமையில் தங்களே யனுசரிக் கிறவனென்றும் நினைக்கிருர்கள். 39½

11-வது அத்தியாயம் முற்றிற்று.

12 - வது அத்தியாயம்.

சௌனக முனிவர் வினவுகிருர்.

ஓ சூதபுராணிகரே! அசுவத்தாமன் விட்ட மிகுதியான தேஜஸுடைய பிரும்ம சிரச் என்ற அஸ்திரத்தால் அடியுண்டு நொந்த உத்தரையின் கர்ப்பம் கிருஷ்ணனல் மறுபடியும் ஜீவனே யடைந்தது (என்றுரைத்தீர்கள்). மகா புத்திசாலியும் மகாத்மாவுமாகிய அந்தப்பரீக்ஷித்து மகாராஜனுடைய உற்பத்தி

𑌤𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮 𑌮𑌹𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 |
𑌨𑌿𑌧𑌨𑌂 𑌚 𑌯𑌥𑍈𑌵𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌗𑌤𑌵𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾 ‖

𑌤𑌦𑌿𑌦𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑍋 𑌗𑌦𑌿𑌤𑍁𑌂 𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 |
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌨𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌦𑌾𑌚𑍍𑌛𑍁𑌕𑌃 ‖ 1-3

‖ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ‖

𑌅𑌪𑍀𑌪𑌲𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌰𑌾𑌜𑌃 𑌪𑌿𑌤𑍃𑌵𑌦𑍍𑌰𑌞𑍍𑌜𑌯𑌨𑍍𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 |
𑌨𑌿𑌸𑍍𑌸𑍍𑌪𑍃𑌹𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌾𑌦𑌾𑌨𑍁𑌸𑍇𑌵𑌯𑌾 ‖ 4

𑌸𑌂𑌪𑌦𑌃 𑌕𑍍𑌰𑌤𑌵𑍋 𑌲𑍋𑌕𑌾 𑌮𑌹𑌿𑌷𑍀 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍋 𑌮𑌹𑍀 |
𑌜𑌮𑍍𑌬𑍂𑌦𑍍𑌵𑍀𑌪𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌯𑌶𑌶𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑌂 𑌗𑌤𑌮𑍍 ‖

𑌕𑌿𑌂𑌤𑍇 𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌸𑍍𑌪𑌾𑌰𑍍𑌹𑌾 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌮𑌨𑌸𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾 |
𑌅𑌧𑌿𑌜𑌹𑍍𑌰𑍁𑌰𑍍𑌮𑍁𑌦𑌂 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌕𑍍𑌷𑍁𑌧𑌿𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑍇𑌤𑌰𑍇 ‖ 5-6

𑌮𑌾𑌤𑍁𑌰𑍍𑌗𑌰𑍍𑌭𑌗𑌤𑍋 𑌵𑍀𑌰𑌸𑍍𑌸 𑌤𑌦𑌾 𑌭𑍃𑌗𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 |
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌪𑍁𑌰𑍁𑌷𑌙𑍍𑌕𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌦𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜𑌸𑌾 ‖ 7

யையும், செய்கைகளையும், அவ்வரசன் சரீரத்தை விட்டு எவ்விதம் சென்றார் என்பதையும் அவருடைய வினாசத்தையும், சொல்லக்கூடுமெனின் கேட்க விரும்புகிறேன். சிரத்தையுள்ள எங்களுக்குக் கூறவேண்டும் அந்தப் பரீக்ஷித்து மகாராஜனுக்கு சுகப் பிர்மரிஷியல்லவா அறிவை அளித்திருக்கிறார்? 1-3

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

தரும புத்திரர் பிரஜைகளைத் தந்தைபோல் ஆதரித்துக் கிருஷ்ணனுடைய பாதகமலங்களைச் சேவித்து வந்தமையால் ஆசிக்கத்தக்க வஸ்துக்களெதிலும் ஆசையின்றிப் பரிபாலனஞ் செய்தார். 4

ஓ சௌனக முனிவரே! முகுந்தனிடம் மனதைச் செலுத்திய அந்த யுதிஷ்டிர மகாராஜனுக்கு, தேவர்களும் ஆசிக்கத்தக்க பொருள்கள், யாகங்களைச் செய்வதால் அடையத் தக்க சொர்க்கம் முதலிய உலகங்கள், திரௌபதி முதலிய பட்ட மகிஷிகள், சகோதரர்கள், இந்தப்புவிக்கும் ஜம்பூத்தீவுக்கும் அதிபதியாக இருக்கும் தன்மை, சொர்க்கம் வரையில் பரவிய கீர்த்தி ஆகிய இந்த விஷய சுகங்கள் (1) பசியால் வருந்துபவனுக்கு (புஷ்பம் சந்தனம் முதலிய) மற்ற வஸ்துக்களில் வெறுப்பேற் படுவது போல் சந்தோஷத்தை உண்டாக்காமல் வெறுப்பையே யளித்தன. 5-6

பிருகு வம்சத்திற் பிறந்த சௌனக முனிவரே! தாயின் கர்ப்பத்தை அடைந்திருக்கிறவனும் அஸ்திரத்தின் தேஜஸால் தகிக்கப் படுகிறவனும் வீரனு

---

(1) பசியுள்ளவனுக்கு அன்னத்தில் மட்டும் விருப்பமும் மற்றவைகளில் வெறுப்பும் உண்டாவது போல் தரும புத்திரருக்கு முகுந்தனிடம் விருப்பமும் மற்றவைகளில் வெறுப்பும் உண்டாயிற்று என்பது கருத்து.

𑌅𑌂𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌮𑌲𑌂 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌪𑍁𑌰𑌟𑌮𑍌𑌲𑌿𑌨𑌮𑍍 ।
𑌅𑌪𑍀𑌵𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌤𑌡𑌿𑌦𑍍𑌵𑌾𑌸𑌸𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ 8
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌤𑌪𑍍𑌤𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ।
𑌕𑍍𑌷𑌤𑌜𑌾𑌕𑍍𑌷𑌂 𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑌿𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌦𑌿𑌶𑌮𑍍 ॥ 9
𑌪𑌰𑌿𑌭𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌮𑍁𑌲𑍍𑌕𑌾𑌭𑌾𑌂 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍𑌤𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌮𑍁𑌹𑍁𑌃 ।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜𑌸𑍍𑌸𑍍𑌵𑌗𑌦𑌯𑌾 𑌨𑍀𑌹𑌾𑌰𑌮𑌿𑌵 𑌗𑍋𑌪𑌤𑌿𑌃 ॥ 10
𑌵𑌿𑌧𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌕𑌰𑍍𑌷𑍇 𑌪𑌰𑍍𑌯𑍈𑌕𑍍𑌷𑌤 𑌕 𑌇𑌤𑍍𑌯𑌸𑍌 ॥ $10\frac{1}{2}$
𑌵𑌿𑌧𑍂𑌯 𑌤𑌦𑌮𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌗𑍁𑌬𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 ॥
𑌮𑌿𑌷𑌤𑍋 𑌦𑌶𑌮𑌾𑌸𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌦𑌧𑍇 𑌹𑌰𑌿𑌃 । $11\frac{1}{2}$
𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑍋𑌦𑌰𑍍𑌕𑍇 𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌗𑍍𑌰𑌹𑍋𑌦𑌯𑍇 ॥
𑌜𑌜𑍍𑌞𑍇 𑌵𑌂𑌶𑌧𑌰𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍋𑌰𑍍𑌭𑍂𑌯𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌿𑌵𑍌𑌜𑌸𑌾 । $12\frac{1}{2}$
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍍𑌧𑍌𑌮𑍍𑌯𑌕𑍃𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥
𑌜𑌾𑌤𑌕𑌂 𑌕𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌾𑌚𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 । $13\frac{1}{2}$

மாகிய அந்தப் பரீக்ஷித்து கர்ப்பத்தி லிருக்கும் பொழுது கட்டவிரல் பிரமாண முள்ளவனும் நிர்மலனும் பிரகாசிக்கும் சொர்ண மகுட முடையவனும் சுந்தர ரூபனும் சியாமள வர்ணனும் மின்னற் போன்ற ஆடை யுடுத்தவனும் அச்சுதனும் அழகு வாய்ந்த நான்கு புயங்களை யுடையவனும் உருக்கின தங்கத்தாலமைந்த குண்டல மணிந்தவனும் இரத்தம் போல் சிவந்த நிறமுடைய கண்களுடையவனும் கதை தரித்தவனும் கொள்ளிக் கட்டை (எரிச்ச லில்லாத தீ) போன்ற கதையைத் தனக்கு (பரீக்ஷித்து) நான்கு திசைகளிலும் அடிக்கடி சுழற்றுகிற வனுமாகிய ஒரு புருஷனைக் கண்டான். $7\text{-}9\frac{1}{2}$

தன் கதையால் பிரமசிரச் என்ற அஸ்திரத்தின் தேஜஸை, சூரியன் பனியைப் போக்குவது போல் நிவிருத்தி செய்த அந்தப் புருஷனை பரீக்ஷித்து தன்னருகே பார்த்து, இந்தப் புருஷன் யார் என்று யோசித்தான். $10\frac{1}{2}$

ஊகிக்கத் தகாத மகிமையை உடையவரும் வீரிய முள்ளவரும் தருமத்தைக் காப்பவரும் எங்கும் வியாபித்த வருமாகிய ஹரியானவர், அந்த அஸ்திர தேஜஸ்ஸைப் போக்கிப் பத்துமாதத்துப் பாலன் பார்த்திருக்கும் போதே அந்த கர்ப்பத்திலேயே மறைந்தார். $11\frac{1}{2}$

பிறகு அனுகூலமான கிருகங்களின் உதயத்தையும் மென்மேலும் குணங்களின் அதிகமான தன்மையைக் குறிப்பது மாகிய லக்கினத்தில் பாண்டுவின் வம்சத்தைத் தரிக்கும் பரீக்ஷித்து பாண்டுமகாராஜனை யொத்த பராக்கிரமத்துடன் பிறந்தான். $12\frac{1}{2}$

அன்புள்ள தருமபுத்திர மகாராஜன் தௌம்மியர் கிருபாசாரியர் முதலிய பிராமணர்களைக் கொண்டு பிறந்த இந்த சிசுவுக்குப் புண்ணியாக வாசனம் செய்து ஜாத கருமத்தையும் செய்தார். $13\frac{1}{2}$

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌂 𑌗𑌾𑌂 𑌮𑌹𑍀𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍍 𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨𑍃𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌰𑌾𑌨𑍍 ॥
𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌸 𑌤𑍀𑌰𑍍𑌥𑌵𑌿𑌤𑍍 । 14½

𑌤𑌮𑍂𑌚𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

𑌏𑌷 𑌹𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑌨𑍍𑌤𑍌 𑌪𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌪𑍌𑌰𑌵𑌰𑍍𑌷𑌭 ।
𑌦𑍈𑌵𑍇𑌨𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑍇𑌨 𑌶𑍁𑌕𑍍𑌲𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌮𑍁𑌪𑍇𑌯𑍁𑌷𑌿 ॥

𑌰𑌾𑌤𑍋 𑌵𑍋𑌽𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌪𑍍𑌰𑌭𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌾𑌤 𑌇𑌤𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌬𑍃𑌹𑌚𑍍𑌛𑍍𑌰𑌵𑌾𑌃 ॥
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 17½

॥ 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ॥

𑌅𑌪𑍍𑌯𑍇𑌷 𑌵𑌂𑌶𑍍𑌯𑌾𑌨𑍍𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌶𑌸𑌾 𑌸𑌾𑌧𑍁𑌵𑌾𑌦𑍇𑌨 𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 । 18½

தானம் செய்வதற் குரிய பாத்திரம், தேசம், காலம் இவைகளை யறிந்தவராகிய யுதிஷ்டிர மகாராஜன் † புத்திரோற் பத்தியான புண்ணிய காலத்தில் பிராம்மணர் களுக்கு அறுசுவையோடு அன்ன மளித்துச் சொர்ணம், பசு, பூமி, சிறந்த கிராமங்கள், குதிரைகள் இவைகளைத் தானம் செய்தார். 14½

பிராம்மணர்கள் அப்பொழுது சந்தோஷ மடைந்து வணக்கத்துட னிருக்கும் அந்த தருமபுத்திர மகாராஜனை நோக்கி "புருவம்சத்தார்களுக்குள் சிரேஷ்டனாகிய பாண்டுநந்தன! புரு வம்சத்தார்களுக்கு ‡ பிரஜா தந்துவும் பரிசுத்தனுமாகிய இந்த குமாரன், தடைசெய்ய வொண்ணாத தெய்வகதியால் நாசமடைந்தபோது, தங்களுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டு மென்றே, (ஆசிரித்தவர்களுக்குச்சுகம் முதலியவற்றை) உண்டுபண்ணும் சுவபாவமுடைய விஷ்ணுவால் கொடுக்கப் பட்ட வனாகிறான். ஆகையால் இவன் விஷ்ணுராதன் என்ற பெயருடன் உலகத்தில் மிகுந்த கீர்த்தியோடு சிறந்த பாகவ தோத்தமனாக விளங்கப் போகிறான். சந்தேகமில்லை" என்று கூறினார்கள். 17½

யுதிஷ்டிர மகாராஜன் வினவுகிறார்.

ஓ அந்தணர்களே! இந்தக் குமாரன் மேலாகவாழ்ந்து கீர்த்தியாலும், நல்லவன் என்ற பிரசித்தியாலும், வம்சத்தவர்களும் மகாத் மாக்களும் புண்ணிய சுலோகர்களுமாகிய இராஜரிஷிகளை அனுசரித்திருப்பனா? 18½

---

† புத்திரன் பிறந்தவுடன் அந்த கிருகத்திற்குத் தேவர்களும் பிதிர்க்களும் வருகிறார்கள். ஆகையால் அந்தக்காலம் அநேக சூரிய கிரகணங்களுடன் கூடிய புண்ணியகாலத்துக்குச் சமமாகும். அந்தச் சமயம் தானம் செய்வது அக்ஷயமாகும்.

‡ பிரஜாதந்து - நூலைப்போல் அற்பமான ஓர் சிசு என்பதாம்.

॥ ப்ராஹ்மணா: ॥

வாகூடு ப்ரஜாவிதா ஸாக்ஷாதிக்ஷ்வாகுரிவ மாநவ: ॥ 19

ப்ரஹ்மண்யஸ்ஸத்யஸந்தஶ்ச ராமோ தாஶரதிர்யதா ।
ஏஷ தாதா ஶரண்யஶ்ச யதா ஹ்யௌஶீநரஶ்ஶிபி: ॥ 20

யஶோ விதநிதா ஸ்வாநாம் தௌஷ்யந்திரிவ யஜ்வநாம் ।
தந்விநாமக்ரணீரேஷ துல்யஶ்சார்ஜுநயோர்த்வயோ: ॥ 21

ஹுதாஶ இவ துர்த்தர்ஷஸ்ஸமுத்ர இவ துஸ்தர: ।
ம்ருகேந்த்ர இவ விக்ராந்தோ நிஷேவ்யோ ஹிமவாநிவ ॥ 22

திதிக்ஷுர்வஸுதேவாஸௌ ஸஹிஷ்ணு: பிதராவிவ ।
பிதாமஹஸமஸ்ஸாம்யே ப்ரஸாதே கிரிஶோபம: ॥ 23

பிராம்மணர்கள் கூறுகிறார்கள்.

ஓ தருமநந்தன! இந்த வாலிபன் மனுவின் மைந்தனாகிய பிரத்தியக்ஷ இக்ஷுவாகு மகாராஜனைப் போல் பிரஜைகளை இரக்ஷிக்கப் போகிறான். 19

இந்தப்புத்திரன் தசரதனுடைய குமாரன்(1) ஸ்ரீராமச்சந்திரப் பிரபுவைப் போல் பிராம்மணர்களிடம் பிரீதியுள்ளவனாகவும் சத்தியமான பிரதிஞ்ஞை யுள்ள வனாகவும் ஔசீனர தேசாதிபதியாகிய சிபிச்சக்ரவர்த்தியைப் போல் கொடையாளி யாகவும் சரண்ணிய னாகவும் இருக்கப் போகிறான். 20

இந்த வாலிபன் துஷ்யந்தன் குமாரனாகிய பரதன்போல், ஞாதிகள் யாகம் செய்தவர்கள் இவர்களுடைய மகிமையை விளங்கச் செய்கிறவன் கார்த்த வீரி யார்ச்சுனன் (தங்களுடைய சகோதரனாகிய) அர்ச்சுனன் இவ்விரு வருக்குச் சம னாகவும் வில்லாளி களுக்குள் முதன்மை யாகவும் இருக்கப் போகிறான். 21

இவன் அக்கினி பகவான்போல் ஆக்கிரமிக்கக் கூடாதவன். சமுத்திரம் போல் தாண்ட முடியாதவன். சிங்கம்போல் விக்கிரம முள்ளவன். ஹிமவத் பர்வதம் போல் (சாதுக்களுக்கு) சேவிப்பதற் குரியவன். 22

இந்த மகாத்மா பூமி தேவிபோல் பொறுமை யுள்ளவன். தாய் தந்தைகள் போல் (குற்றங்களை) பொறுக்கக் கூடியவன். பூதங்கள் எல்லா வற்றையும் சம மாகப் பார்க்குந் தன்மையில் பிரம தேவருக்குச் சமமானவன். அனுக்கிரகம் செய்வதில் பரமசிவனுக் கொப்பானவன். 23

(ஸ்ரீராமன் (1) பிராம்மணர்களிடம் அன்புபாராட்டியதும் சத்தியப் பிரதிஞ்ஞையுட னிருந்ததும் ஸ்ரீராமாயணம் அயோத்தியா காண்டம் ஆரண்ய காண்டம் முதலிய பாகங் களில் காண்க. சிபிச்சக்ரவர்த்தி தன்னுடைய மாம்சத்தைப் பருந்துக்குக் கொடுத்துப் புறா வைக் காப்பாற்றிப் பெரிய கொடையாளி யாகவும் சரண்ணியனாகவும் மிருந்தானென்பது பாரதங் கூறுகிறது.

𑌶𑌰𑌣𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍋 𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌏𑌷 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌃 ॥ 24

𑌰𑌨𑍍𑌤𑌿𑌦𑍇𑌵 𑌇𑌵𑍋𑌦𑌾𑌰𑍋 𑌯𑌯𑌾𑌤𑌿𑌰𑌿𑌵 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑌃 ।
𑌧𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑌲𑌿𑌸𑌮𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌪𑍍𑌰𑌹𑍍𑌰𑌾𑌦 𑌇𑌵 𑌸𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 ॥ 25

𑌆𑌹𑌰𑍍𑌤𑍈𑌷𑍋𑌽𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌾𑌨𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌕𑌃 ।
𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌜𑌨𑌯𑌿𑌤𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌚𑍋𑌤𑍍𑌪𑌥𑌗𑌾𑌮𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ 26

𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾 𑌕𑌲𑍇𑌰𑍇𑌷 𑌭𑍁𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ।
𑌤𑌕𑍍𑌷𑌕𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍋𑌪𑌸𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌤𑍍 ॥
𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤 𑌉𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃 𑌪𑌦𑌂 𑌹𑌰𑍇𑌃 । 27½
𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑍋 𑌮𑍁𑌨𑍇𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍁𑌤𑌾𑌦𑌸𑍌 ॥
𑌹𑌿𑌤𑍍𑌵𑍇𑌦𑌂 𑌨𑍃𑌪 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑍍𑌯𑌦𑍍𑌧𑌾𑌕𑍁𑌤𑍋𑌭𑌯𑌮𑍍 । 28½

𑌇𑌤𑌿 𑌰𑌾𑌜𑍍𑌞 𑌉𑌪𑌾𑌦𑌿𑌶𑍍𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌜𑌾𑌤𑌕𑌕𑍋𑌵𑌿𑌦𑌾𑌃 ॥
𑌲𑌬𑍍𑌧𑌾𑌪𑌚𑌿𑌤𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌗𑍍𑌮𑍁𑌃 𑌸𑍍𑌵𑌕𑌾𑌨𑍍 𑌗𑍃𑌹𑌾𑌨𑍍 । 29½

இந்த பாலன் இலக்ஷ்மீ காந்தனுகிய விஷ்ணுவைப் போல் பூதங்கள் யாவற்றிற்கும் ஆசிரயமாக விருப்பவன். நற்குணங்கள் யாவற்ருலும் உண்டாகும் மாகாத்மியத்தில் கிருஷ்ணனை அனுசரித்தவன். 24

இந்தக் குமாரன் உதாரத் தன்மையில் ரந்தி தேவ மகாராஜனைப்போன்றவன். யயாதி மகாராஜன் போல் தார்மிகன். தைரியத்தில் மகாபலிக்குச் சமமானவன். பிரஹ்லாதன் போல் கிருஷ்ண பகவானிடம் நல்ல அபினிவேச முடையவன். 25

இந்த பிராஞ்ஞன் அசுவமேதயாகங்களைச் செய்பவன். பெரியோர்களை உபாசிக்கிறவன். (ஜனமேஜயன் முதலிய) இராஜ ரிஷிகளை உண்டு பண்ணுகிறவன். துர் மார்க்கத்தில் பிரவே சிப்பவர்களைச் சிக்ஷிக்கிறவன். 26

பூதேவிக்காகவும் தருமத்திற் காகவும் கலிபுருஷனை இவன் சிக்ஷிக்கிறவன். 26½

இந்த தருமாத்மா பிராப்மண குமாரனுகிய சிருங்கி என்ற முனிவரால் அனுப்பப் பட்ட தக்ஷகனுல் தனக்கு மரணம் என்பதை யறிந்து பற்றுத லற்றவனுகி ஹரியின் பதத்தை யடையப் போகிருன். 27½

ஓ அரசனே! இந்த ஞானி வியாசமுனிவர் குமாரராகிய சுக முனிவரிடம் ஜீவாத்ம பரமாத்ம தத்துவத்தை யறிந்து கங்கையில் இந்தச் சரீரத்தைத் தொலைத்து பயமற்ற விஷ்ணு பதத்தை அடையப் போகிருன். நிச்சயம். 28½

ஜாதக சாஸ்திரத்தில் சாமர்த்தியமுள்ள பிராம்மணர்கள் யாவரும் அரசனிடம் இவ்வாறு தெரிவித்துச் சன்மானம் பெற்றுத் தங்களுடைய கிருகம் சென்ருர்கள். 29½

സ ഏഷ ലോകേ വിഖ്യാതഃ പരീക്ഷിദിതി യത്പ്രഭുഃ ॥
പൂർവ്വം ദൃഷ്ടമനുധ്യായൻ പരീക്ഷേത നരേഷ്വിഹ । 30½

സ രാജപുത്രോ വവൃധേ ആശു ശുക്ല ഇവോഡുപഃ ॥
ആപൂര്യമാണഃ പിതൃഭിഃ കാഷ്ഠാഭിരിവ സോഽന്വഹം । 31½

യക്ഷ്യമാണോഽശ്വമേധേന ജ്ഞാതിദ്രോഹജിഹാസയാ ।
രാജാലബ്ധധനോ ദധ്യൗ നാന്യത്ര കരദണ്ഡയോഃ । 32½

തദഭിപ്രേതമാലക്ഷ്യ ഭ്രാതരോഽച്യുതചോദിതാഃ ॥
ധനം പ്രഹീണമാജഹ്രുരുദീച്യാം ദിശി ഭൂരിശഃ । 33½

തേന സംഭൃതസംഭാരോ ധർമ്മപുത്രോ യുധിഷ്ഠിരഃ ॥
വാജിമേധൈസ്ത്രിഭിർഭീതോ യജ്ഞൈഃ സമയജദ്ധരിം । 34½

இந்தப் பரீக்ஷித்து ராஜன் தான் காணும் மானிடர்களுக்குள் கர்ப்பத்தில் கண்ட புருஷன்யார் என்பதைப்பற்றிப் பரீக்ஷித்த படியால், இந்தப்பிரபு உலகத்தில் பரீக்ஷித்து என்ற பெயரை யடைந்தார். 30½

சுக்ல பக்ஷத்தில் தினந்தோறும் கலைகளுடன் விருத்தியடையும் நக்ஷத்திர ராஜனாகிய சந்திரன் போல் இந்த இராஜகுமாரன் (தருமபுத்திரர் முதலிய) பிதிருக்களாலும் (அறுபத்து நான்கு) கலைகளாலும் விரைவாக விருத்தி யடைந்தான். 31½

தருமபுத்திர மகாராஜன் உறவினர் களுக்குத் துரோகம் செய்த குற்றத்தைப் போக்க விரும்பி அசுவமேத யாகம் செய்தவன் பொருட்டு * கப்பம் வாங்குவதாலும் துஷ்டர்களை சிக்ஷிப்பதாலும் கிடைக்கும் பொருளைத் தவிர வேறு பொருளை யடையாமல் திருப்தி யடைந்தார். 32½

இந்த அபிப்பிராயத்தை யறிந்த சகோதரர்கள் கிருஷ்ண பகவானிடம் உத்தரவுபெற்று வடதிசை சென்று (அங்குமருத்த மகாராஜன் யாகத்தில்) தியஜிக்கப்பட்ட (சொர்ணபாத்திரம் முதலிய) பொருளை அநேகமாகக் கொண்டு வந்தார்கள். 33½

(ஞாதிகளுக்குத் துரோகம் செய்தோம் என்று) பயந்த யுதிஷ்டிர மகாராஜன் அந்தப் பொருளால் மனோபீஷ்டம் நிறைவேறப் பெற்று சாமக்கிரிகளைச் சேகரித்து மூன்று அசுவமேத யாகம் செய்து யஞ்ஞேச்வராகிய ஹரியைப் பூசித்தார். 34½

---

* கப்பம் வாங்குவது, துஷ்டர்களைச் சிக்ஷித்து அந்தத் துஷ்டர்களுடைய பொருளைக் கிரகிப்பது இவ்விரண்டு வகையில் கிடைக்கும் பொருளை ஊழியம் செய்பவர்களுக்கு மட்டிலு முபயோகப் படுத்தவேண்டு மென்பது சாஸ்திரம்.

𑌆𑌹𑍂𑌤𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌯𑌾𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌰𑍍𑌨𑍃𑌪𑌮𑍍 ।
𑌉𑌵𑌾𑌸 𑌕𑌤𑌿𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌸𑍁𑌹𑍃𑌦𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 । 35½

𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 𑌸𑌹 𑌬𑌨𑍍𑌧𑍁𑌭𑌿𑌃 ॥
𑌯𑌯𑍌 𑌦𑍍𑌵𑌾𑌰𑌵𑌤𑍀𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌸𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍋 𑌯𑌦𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌃 । 36½

𑌇𑌤𑌿𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

॥ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌵𑌿𑌦𑍁𑌰𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌂 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌗𑌾𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑌪𑍁𑌰𑌂 𑌤𑌯𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑌿𑌵𑌿𑌤𑍍𑌸𑌿𑌤𑌃 ॥ 1

𑌯𑌾𑌵𑌤𑌃 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌨𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌤𑌾 𑌕𑍌𑌷𑌾𑌰𑌵𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 ।
𑌜𑌾𑌤𑍈𑌕𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌤𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚𑍋𑌪𑌰𑌰𑌾𑌮 𑌹 ॥ 2

தருமபுத்திர மகாராஜனுல் அழைக்கப் பட்ட கிருஷ்ண பகவான் பிராம் மணர்களைக் கொண்டு யுதிஷ்டிாருக்கு யாகங்களை நடத்திக் கொடுத்து சுகிருத் துக்களுக் குண்டான பிரீதியை விரும்பி சில மாதம் வரையில் (பாண்டவர்களு டைய பட்டணத்தில்) வாசம் செய்தார். 25½

ஓ சௌனகமுனிவரே!யுதிஷ்டிர ராஜன், திரௌபதி, பந்து ஜனங்கள் இவர் களிடம் விடை பெற்று யாதவர்கள் சூழ அர்ச்சுனனுடன் கிருஷ்ண பகவான் துவாரகை சென்ருர். 36½

12- வது அத்தியாயம் முற்றிற்று.

13- வது அத்தியாயம்.

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிருர்.

விதுரர், தீர்த்த யாத்திரை செய்யும்போது மைத்திரேயரிடம் தமக்குக்கதி யாகிய ஸ்ரீகிருஷ்ணன் வரலா றறிந்தார். அதனுல் தெரிந்து கொள்ள வேண்டிய வைகளை யறிந்து கொண்டார். பின் அத்தினபுரிக்கு வந்தார். 1

விதுரர் மைத்திரேயரிடம் எவ்வளவு வினுக்கள் கேட்டனரோ (அந்த வினுக்களில் இரண்டு மூன்று வினுக்களுக்கு மறுமொழிகளைக் கேட்ட வுடன்) கோவிந்தனிடம் மிகுந்த பக்தி யுண்டாகி பாக்கி வினுக்களின் மறுமொழிகளைத் தெரிந்து கொள்வதி னின்றும் ஒழிவடைந்தார். 2

𑌤𑌂 𑌬𑌨𑍍𑌧𑍁𑌮𑌾𑌗𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌸𑌹𑌾𑌨𑍁𑌜𑌃 |
𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑍋 𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑍁𑌶𑍍𑌚 𑌸𑍂𑌤𑌶𑍍𑌶𑌾𑌰𑌦𑍍𑌵𑌤𑌃 𑌪𑍃𑌥𑌾 ‖ 3

𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌸𑍁𑌭𑌦𑍍𑌰𑌾 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾 𑌕𑍃𑌪𑍀 |
𑌅𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌜𑌾𑌮𑌯𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍋𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌯𑌸𑍍𑌸𑌸𑍁𑌤𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ‖ 4

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌜𑍍𑌜𑌗𑍍𑌮𑍁𑌃 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌨𑍍𑌵 𑌇𑌵𑌾𑌗𑌤𑌮𑍍 |
𑌅𑌭𑌿𑌸𑌙𑍍𑌗𑌮𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍈𑌃 ‖ 5

𑌮𑍁𑌮𑍁𑌚𑍁𑌃 𑌪𑍍𑌰𑍇𑌮𑌬𑌾𑌷𑍍𑌪𑍌𑌘𑌂 𑌵𑌿𑌰𑌹𑍌𑌤𑍍𑌕𑌣𑍍𑌠𑍍𑌯𑌕𑌾𑌤𑌰𑌾𑌃 |
𑌰𑌾𑌜𑌾 𑌤𑌮𑌰𑍍𑌹𑌯𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌕𑍃𑌤𑌾𑌸𑌨𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ‖ 6

𑌤𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌸𑍀𑌨𑌂 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑌨𑍇 |
𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯𑌾𑌵𑌨𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌸𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌾𑌮𑍍 ‖ 7

‖ 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ‖

𑌅𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌥 𑌨𑍋 𑌯𑍁𑌷𑍍𑌮𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑌮𑍇𑌧𑌿𑌤𑌾𑌨𑍍 |

ஓசௌனக முனிவரே! தம்பி மார்களுடன் கூடின தருமபுத்திரர் திருத ராஷ்டிரர், யுயுத்சு, சஞ்சயர், கிருபாசாரியர்,குந்தி, காந்தாரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை, கிருபி, மற்றுமுள்ள ஞாதிகளின் பத்தினிகள், பாண்டு மகாராஜனுடைய ஞாதிகள் குமாரர்களுடன் கூடின ஸ்திரீகள் யாவரும் பந்துவாகிய விதுரர் வந்ததைப் பார்த்து சந்தோஷத்துடன் (கைகால்முதலிய வைகளுடன் கூடிய) சரீரங்கள் (மூர்ச்சை முதலியனவொழிந்து பின்) பிராணனை யடைந்தது போல் எண்ணி, ஆலிங்கனம் செய்தும் வந்தனங்கள் புரிந்தும் விதிப்படி சேர்ந்து எதிர் கொண்டார்கள். 3-5

யாவரும் விதுரருடைய பிரிவினு லுண்டான சோகத்தை நினைத்துப் பரவசர்களாகி ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள். தருமபுத்திர மகாராஜன் ஆஸனத்தி லமர்ந்த அந்த விதுரரைப் பூசித்தார். 6

அந்த விதுரர் போஜனம் செய்து சிரமபரிகாரஞ் செய்துகொண்டு ஆஸனத்தில் சுகமாக வீற்றிருக்கும் போது தருமபுத்திர மகாராஜன் வினயத்துடன் வணங்கி தன்னைச்சார்ந்த யாவரும் கேட்டுக் கொண்டிருக்க வினவுகிறுர். 7.

யுதிஷ்டிரர் வினவுகிறுர்.

ஓவிதுரரே(1) உங்களுடைய இறக்கைகளின் நிழலால் விருத்தி யடைந்த எங்களைத்தாங்கள் மறக்காமல் இருக்கிறீர்களா?நாங்களும் எங்கள் தாயாரும்தங்

---

(1) இறக்கைகளின் நிழல் என்பது, தங்கள் இறக்கை ளில்லாத பக்ஷிகள் என்றதையும் பிறரை ஆசரித்து ஜீவித்தலையும் விதுரர் இறக்கையுள்ள பக்ஷிபோல் போஷணை செய்தார் என்பதையும் விளக்குகிறது.

𑌵𑌿𑌪𑌦𑍍𑌗𑌣𑌾𑌦𑍍 𑌵𑌿𑌷𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍 𑌮𑍋𑌚𑌿𑌤𑌾 𑌯𑌤𑍍𑌸𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌃 ॥ 8

𑌕𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌵 𑌶𑍍𑌚𑌰𑌦𑍍𑌭𑌿𑌃 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ।
𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑍇𑌵𑌿𑌤𑌾𑌨𑍀𑌹 𑌭𑍂𑌤𑌲𑍇 ॥ 9

𑌭𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌿𑌭𑍋 ।
𑌤𑍀𑌰𑍍𑌥𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑍇𑌨 𑌗𑌦𑌾𑌭𑍃𑌤𑌾 ॥ 10

𑌅𑌪𑌿 𑌨𑌃𑌸𑍁𑌹𑍃𑌦𑌸𑍍𑌤𑌾𑌤 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 𑌵𑌾 𑌯𑌦𑌵𑌃 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑌤𑍇 ॥ 11

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌰𑌾𑌜𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌵𑌰𑍍𑌣𑌯𑌤𑍍 ।
𑌯𑌥𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌂 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌦𑍁𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌮𑍍 ॥ 12

𑌨𑌨𑍍𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌹𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌾𑌵𑍇𑌦𑌯𑌤𑍍𑌸𑌕𑌰𑍁𑌣𑍋 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌕𑍍𑌷𑌮𑌃 ॥ 13

𑌕𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌲𑌮𑌥𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑍀𑌤𑍍𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍋 𑌦𑍇𑌵𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌕𑍈𑌃 ।

களால் வெகு ஆபத்துகளி னின்றும் விஷம் தீ முதலியவற்றிலிருந்தும் காக்கப் பட்டோ மல்லவா? 8

பூமிமண்டலத்தில் சஞ்சாரம் செய்யும்போது தாங்கள் எவ்விதம் சரீரத் தைப்போஷித்தீர்கள்? இந்த பூமியி லுள்ள எந்த க்ஷேத்திரங்கள் எந்தத் தீர்த்தங் களைச் சேவித்தீர்கள்? 9

பிரபுவே! நாராயண மூர்த்தியை மனதிற் கொண்ட பரிசுத்தர் களாகிய தங்களைப் போன்ற பாகவதர்கள், (பாபம்செய்த ஜனங்களுடைய சேர்க்கை யால் அழுக்கடைந்த) தீர்த்தங் களுக்குச் சென்று பரிசுத்த மாக்குகிறார்கள். 10

பூஜிக்கத்தக்க விதுரரே! கிருஷ்ணனைத் தெய்வமாக உடையவர்களும் நமக் குச் சுகிருத்துக்களும் பந்துக்களு மாகிய யாதவர்கள் அவர்களுடைய நகரத்தில் சுகமாக இருக்கிறார்களா? தாங்கள் அவர்களை எங்கேயாவது பார்த்தீர்களா? அவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா? 11

இவ்விதம் யுதிஷ்டிரர் கேட்க, விதுரர் தான் முந்தியறிந்த வண்ணம் கிரம மாக யதுகுலம் நாசமடைந்த வரலாற்றைத் தவிர யாவற்றையும் வர்ணித்தார்.

துக்கமடை பவர்களைப் பார்த்துச் சகிக்க சக்தி யற்றவரும் மகாகருணை யுள்ளவரு மாகிய விதுரர், மானிடர்கள் கேட்டுச் சகிக்கமுடியாத அப்பிரியமான வரலாறை வந்ததும் தானே தெரியப் படுத்தவில்லை. 13

பிறகு விதுரர், தன்னைச்சார்ந்த தரும நந்தனர் முதலியவர்களால் தேவர் களைப்போல் பூசிக்கப்பட்டு எல்லோருக்கும் அன்பை உண்டு பண்ணிக் கொண்டு

𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌖𑌮𑌾𑌵𑌹𑌨𑍍 ॥ 14
𑌅𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑌰𑍍𑌯𑌮𑌾 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌯𑌥𑌾𑌵𑌦𑌘𑌕𑌾𑌰𑌿𑌷𑍁 ।
𑌯𑌾𑌵𑌦𑍍𑌦𑌧𑌾𑌰 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌂 𑌶𑌾𑌪𑌾𑌦𑍍𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌂 𑌯𑌮𑌃 ॥ 15

॥ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑍋 𑌲𑌬𑍍𑌧𑌰𑌾𑌜𑍍𑌯𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍌𑌤𑍍𑌰𑌂 𑌕𑍁𑌲𑌂𑌧𑌰𑌮𑍍 ।
𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌭𑍈𑌰𑍍𑌮𑍁𑌮𑍁𑌦𑍇 𑌪𑌰𑌯𑌾 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ॥ 61

மூத்த பிராதாவாகிய திருதராஷ்டிருக்கு தத்துவோபதேசம் செய்துகொண்டு கொஞ்சக்காலம் வசித்தார். 14

(1) யமதருமராஜன் (2) மாண்டவ்யருடைய சாபத்தால் நூறுவருஷம் வரையில் சூத்ரத்தன்மையை அடைந்தார். அதுவரையில் யமலோகத்தில் பாபிகளின் குற்றத்திற்குச் செய்யவேண்டிய தண்டனையை அந்தயமனுக்குத்தந்தையாகிய சூரியனிருந்து நடத்திவந்தான். 15

அரசனுத்திரவு பெற்ற தூதர்கள் திருடர்களைத் தொடர்ந்து, இவர்களைக் கண்டு இந்த முனிவருடன் திருடர்களைக் கட்டிக்கொண்டு அரசனிடம் கொண்டு வந்தார்கள். அரசன் யாவரையும் சூலத்தி லேற்றுப்படி கட்டளை யிட்டான். தூதர்களும் அவர்களை அவ்விதமே சூலத்தில் ஏற்றினார்கள். பிறகு அரசன் இவரை முனிவ ரென்றறிந்து சூலத்தினின்று இறக்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அந்த மாண்டவிய முனிவர் யமனிடம் சென்று கோபத்துடன் "யமனே! எனக்கு ஏன் சூலத்தி லேற்றும் படியான தண்டனைஏற்படுத்தினாய்" என்றுகேட்டார். அதற்கு யமன் "ஓமுனிவரே! நீர் வாலிபத்தில் பூச்சியைத் தர்ப்பையின் நுனியில்கோர்த்து விளையாடினீர்; அதனால்" எனறுன. அதுகேட்ட மாண்டவியர், வாலிபத்தில் பகுத்தறிவில்லாத நான் செய்த குற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையை ஏற்படுத்திய தால், நீசூத்ரனுகப் பிறக்கக் கடவாய் என்று சாபங் கொடுத்தார். அந்த யமதர்மராஜனே விதுரர் என்றறியவும்.

சூதபுராணிகர் கூறுகிறார்.

தருமபுத்திரர் இராஜ்ய மடைந்து லோக பாலர்களுக்குச் (இந்திரன் முதலியவர் களுக்குச்) சமமான காந்தியுடைய தம்பி மார்களுடன் வம்சத்தை ஏற்கத்தக்க பௌத்திரனைப் பார்த்து மிக மகிழ்ச்சியுடன் விளங்கினர். 16

---

(1) சூத்திரனுக்குத் தத்வோபதேசம்செய்ய அதிகாரம் எவ்விதம் மேற்பட்டதெனில், இவர் சூத்திரனல்ல; யமனே இவ்வுருவத்துடன் வந்தனர் என்பது. அதனை இந்த சுலோகந் தெரிவிப்பது காண்க.

(2) மாண்டவியருடைய சாப வரலாறு பாரதத்திற் காண்க.

𑌅𑌥𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 [illegible] 𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌨𑍋𑌦𑍍𑌧𑌵𑌶𑍈𑌨𑍇𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍍𑌵𑌾𑌰𑌵𑌤𑍀𑌂 𑌯𑌯𑍌 ॥ 17

𑌏𑌵𑌂 𑌗𑍃𑌹𑍇𑌷𑍁 𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌦𑍀𑌹𑌯𑌾 ।
𑌅𑌤𑍍𑌯𑌕𑍍𑌰𑌾𑌮𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌕𑌾𑌲𑌃 𑌪𑌰𑌮𑌦𑍁𑌸𑍍𑌤𑌰𑌃 ॥ 18

𑌵𑌿𑌦𑍁𑌰𑌸𑍍𑌤𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌭𑌾𑌷𑌤 ।

॥ 𑌵𑌿𑌦𑍁𑌰𑌃 ॥

𑌰𑌾𑌜𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌂 𑌭𑌯𑌮𑌾𑌗𑌤𑌮𑍍 ॥ 19

𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨 𑌯𑌸𑍍𑌯𑍇𑌹 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌸 𑌏𑌷 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌲𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌃 𑌸𑌮𑌾𑌗𑌤𑌃 ॥ 20

𑌯𑍇𑌨 𑌚𑍈𑌵𑌾𑌭𑌿𑌪𑌨𑍍𑌨𑍋𑌽𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑍈𑌰𑌪𑌿 ।
𑌜𑌨𑌃 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌵𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑍇𑌤 𑌕𑌿𑌮𑍁𑌤𑌾𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌧𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥ 21

---

(1) பிறகு பிரபுவாகிய கிருஷ்ண பகவான் தன்னை அநுசரித்து வரும் உறவினர்களிடம் விடைபெற்று அவர்களை நிறுத்திவிட்டு அர்ச்சுனன், உத்தவர், சாத்யகி இவர்கள் சூழ துவாரகாபுரி சென்றார். 17

இவ்விதம் கிருகங்களில் பற்றுத லுடையவர்களும் அந்தகிருக வியாபாரங் களில் ஈடு பட்டவர்களு மாகிய (திருதராஷ்டிரன் முதலிய) யாவருக்கும் பிரம தேவர் முதலியவர் களாலும் நிவிருத்தி செய்யமுடியாத காலமானது தெரியா மலே சென்றது. 18

விதுரர் இதை யறிந்து திருத ராஷ்டிரனைப் பார்த்துக் கூறுகிறார். 18½

விதுரர் கூறுகிறார்.

ஓ அரசனே! விரைவாக நீர் வெளிப் புறப்பட வேண்டும். இதோ பயமு ண்டா யிருக்கிறது! பாரும்! ஓ பிரபுவே! எவ்விதத்திலும் எப்போதும் தடை செய்ய முடியாத, மகிமை வாய்ந்த இந்தக் காலன் நம்மெல்லோ ருக்கும் வந்து விட்டான். 18-20

தேகத்தை அடைந்த இந்தப் பிராணி இந்தக் காலனால் மிகவும் அன்புள்ள பிராணன்களிலிருந்தும் உடனே விடுபடுகிறான். மற்றபொருள் முதலியவைகளி லிருந்து விடுபடுகிறான் என்பதற்குக் கேட்க வேண்டுமா? 21

---

(1) 12 வது அத்தியாயத்தின் கடைசியில் கிருஷ்ணன் துவாரகை சென்றா ரென்று மறுபடி இங்குக்கூறியது கதையின் தொடர்ச்சியின் பொருட்டேயாம்.

பித்ரு ப்ராத்ரு ஸுஹ்ருத் புத்ரா ஹதாஸ்தே விகதம் வய: ।
ஆத்மா ச ஜரயா க்ரஸ்த: பரகேஹமுபாஸஸே ॥ 22

அந்த: புரைவ பதிரோ மந்தப்ரஜ்ஞாஶ்ச ஸாம்ப்ரதம் ।
விஶீர்ணதந்தோ மந்தாக்நி: ஸராக: கபமுத்வஹந் ॥ 23

அஹோ மஹீயஸீ ஜந்தோர்ஜீவிதாஶா யதா பவாந் ।
பீமாபவர்ஜிதம் பிண்டமாதத்தே க்ருஹபாலவத் ॥ 24

அக்நிர்நிஸ்ருஷ்டோ தத்தஶ்ச கரோ தாராஶ்ச தூஷிதா: ।
ஹ்ருதம் க்ஷேத்ரம் தநம் யேஷாம் தத்தத்தைரஸுபி: கியத் ॥ 25

தஸ்யாபி தவ தேஹோऽயம் க்ருபணஸ்ய ஜிஜீவிஷோ: ।
பரைத்யநிச்சதோ ஜீர்ணோ ஜரயா வாஸஸீ இவ ॥ 26

கதஸ்வார்தமிமம் தேஹம் விரக்தோ முக்தபந்தந: ।
அவிஜ்ஞாதகதிர்ஜஹ்யாத் ஸ வை தீர உதாஹ்ருத: ॥ 27

‡ உம்முடைய தந்தை சகோதரர்கள் யாவரும் மாண மடைந்தார்கள். வயதும் சென்றது. சரீரமும் கிழத்தன்மையடைந்து விட்டது. (இவ்விதமாயும், பிறர் வீட்டை அண்டியிருக்கிறீர். 22

நீர் முன்பே (ஜனன மாகும்போதே) குருடன். இப்போது காதும் கேட்கா மல் புத்தியும் குறைந்து பற்களும் விழுந்து ஜாட ராக்கினியும் குறைந்து வியாதி யும் மிகுந்து கபமும் உறைந்திருக்கிற துமக்கு. 23

ஆச்சரியம்! பிராணிகளுக்கு உயிரில் ஆசை மிகுதியு முண்டுதான். (ஏனெனில்) அந்த ஆசையால் (பிள்ளைகளைக் கொன்ற) பீமசேனனால் கொடுக்கப்படும் பிண்டத்தை நாய்போல் புசிக்கிறீர். 24

நீர் எவர்களுக்கு அக்கினியை வைத்து (அரக்கு மாளிகையில்) விஷத்தை யும் கொடுத்து (கங்கைக் கரையில்) அவர்கள் மனைவியாகிய திரௌபதி யையும் தூஷித்து, (வஸ்திரத்தைக் களைந்தபோது) பொருளையும் பூமியையும் அபகரித்து (சூதாட்டத்தில்) துன்பப் படுத்தினீரோ அவர்கள் கொடுக்கும் அன்னத்தைப் புசித்துப் பிராணனை வைத்துக் கொண்டிருப்பதால் பயன் என்ன? 25

(சத்துருக்க ளிடமென்னத்தால்) ஜீவிப்பவரும் இன்னமும் வெகுகாலம் வரை யில் ஜீவித்திருக்க விரும்பியவரும் கிருபணரும் (மாணத்தை) விரும்பாதவரு மாகிய உம்முடைய இந்தச் சரீரம் கிழத்தனத்தால் மெலிந்து வஸ்திரம் போல் நாசமடையப் போகிறது. 26

அபிமானத்தை யொழித்தவனும் (இந்தவிடத்திற்குச் சென்றானென்பதை) எவரு மறியொணாத கதியுடையவனுமாகிய மானிடன் (கீர்த்தி தருமம் முதலிய) பயனெதுவுமில்லாத இச்சரீரத்தை விடுவானாகில் அவனே தீரனாகிறான்.

‡ விதுரர் திருதராஷ்டிரரை நிந்திப்பது வைராக்கியத்தை உண்டு பண்ணுவதற் கேயாம்.

ய: ஸ்வகாத் பரதோ வேஹ ஜாதநிர்வேத ஆத்மவாந் |
ஹ்ருதி க்ருத்வா ஹரிம் கேஹாத் ப்ரவ்ரஜேத் ஸ நரோத்தம: ‖ 28

அதோதீசீம் திஶம் யாது ஸ்வைரஜ்ஞாதகதிர்பவாந் |
இதோऽர்வாக் ப்ராயஶ: கால: பும்ஸாம் குணவிகர்ஷண: ‖ 29

ஏவம் ராஜா விதுரேணாநுஜேந
ப்ரஜ்ஞாசக்ஷுர்போதித ஆஜமீட: |
சித்வா ஸ்வேஷு ஸ்நேஹபாஶாந் த்ரடிம்நோ
நிஶ்சக்ராம ப்ராத்ருஸந்தர்ஶிதாத்வா ‖ 30

பதிம் ப்ரயாந்தம் ஸுபலஸ்ய புத்ரீ
பதிவ்ரதா சாநுஜகாம ஸாத்வீ |
ஹிமாலயம் ந்யஸ்ததண்டப்ரஹர்ஷம்
மநஸ்விநாமிவ ஸத்ஸம்ப்ரஹார: ‖ 31

அஜாதஶத்ரு: க்ருதமைத்ரோ ஹுதாக்நிர்
விப்ராந் நத்வா திலகோவஸ்த்ரருக்மை: |

மானிடன் இயற்கை யாகவோ பிறரின் உபதேசத்தாலோ இந்தச் சரீரம் முதலியவை பயனற்றதென்கிற தன்மையை அடைந்து ஞானியாகி இருதயத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானைத் தியானம் செய்துகொண்டு கிருஹத்தினின்று வெளிப்பட்டானே யாகில் அவன்தான் உத்தம புருஷனாகிறான். 28

ஆகையால் நீர் உம்மைச் சார்ந்தவர் களுக்குத் தெரியாமல் வட திசையை நோக்கிச் செல்லலாம். உமக்குஇனியுள்ள காலமானது மானிடர் களுக்கு (தைரியம் முதலிய) குணங்களைப் பெரும்பாலும் போக்கக் கூடியது. 29

இவ்விதம் தம்பியாகிய விதுரனால் போதனை செய்யப்பட்ட வனும் அஜமீடன்வம்சத்தில் ஜனித்தவனும் அறிவையே கண்ணாக உடையவனுமாகிய திருதராஷ்டிர மகாராஜன் தைரியங் கொண்டு தன்னைச் சார்ந்தவர்களிடம் அபிமானத்தை யொழித்துத் தம்பியாகிய விதுரன் மோக்ஷம் வனம் இவைகளுக்கு வழிகாட்ட வெளிப் பட்டான். 30

நல்ல சுவபாவ முடையவளும் பதிவிருதையு மாகிய சுபலராஜன் புத்திரி காந்தாரியும், சூரர்களுக்கு யுத்தத்தில் சிறந்த அடியானது சந்தோஷத்தைக் கொடுப்பது போல் இந்திரியத்தை ஜயித்தவர் களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் இமயமலைக்குச் செல்லும் தன் கணவனாகிய திருதராஷ்டிர மகாராஜனை அனுசரித்துச் சென்றாள். 31

அஜாத சத்ருவாகிய தருமநந்தனர் சந்தியாவந்தனம் முடித்து அக்னிகோத்திரம் செய்து திலம்(எள்ளு),கோக்கள் (பசு), சுவர்ணம், சிரேஷ்டவஸ்துக்

𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌗𑍁𑌰𑍁𑌵𑌂𑌦𑌨𑌾𑌯
𑌨𑌚𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌪𑌿𑌤𑌰𑍌 𑌸𑍌𑌬𑌲𑍀𑌂 𑌚 ॥ 32

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌜𑌯𑌮𑌾𑌸𑍀𑌨𑌂 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌾𑌨𑌸𑌃 ।
𑌗𑌾𑌵𑌲𑍍𑌗𑌣𑍇 𑌕𑍍𑌵 𑌨𑌸𑍍𑌤𑌾𑌤𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑍋 𑌹𑍀𑌨𑌶𑍍𑌚 𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 ॥ 33

𑌅𑌮𑍍𑌬𑌾 𑌵𑌾 𑌹𑌤𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌤𑌾 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌯𑌃 𑌕𑍍𑌵 𑌗𑌤𑌃 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 ।
𑌅𑌪𑌿 𑌮𑌯𑍍𑌯𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑍇 𑌹𑌤𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 𑌸 𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 ॥ 34

𑌆𑌶𑌂𑌸𑌮𑌾𑌨𑌃 𑌶𑌮𑌲𑌂 𑌗𑌂𑌗𑌾𑌯𑌾𑌂 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑍋𑌽𑌪𑌤𑌤𑍍 ।
𑌪𑌿𑌤𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌤𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑍌 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌹𑍃𑌦𑌃 𑌶𑌿𑌶𑍂𑌨𑍍 ॥ 35

𑌅𑌰𑌕𑍍𑌷𑌤𑌾𑌂 𑌵𑍍𑌯𑌸𑌨𑌤𑌃 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌯𑍌 𑌕𑍍𑌵 𑌗𑌤𑌾𑌵𑌿𑌤𑌃 ।

॥ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍍𑌨𑍇𑌹𑌵𑍈𑌕𑍍𑌲𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍂𑌤𑍋 𑌵𑌿𑌰𑌹𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌃 ॥ 36

𑌆𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌚𑌕𑍍𑌷𑌾𑌣𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌤𑌿𑌪𑍀𑌡𑌿𑌤𑌃 ।
𑌵𑌿𑌮𑍃𑌜𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑍂𑌣𑌿 𑌪𑌾𑌣𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥ 37

கள் இவைகளை யளித்து பிராம்மணர் குருவாகிய வர்களை நமஸ்காரஞ் செய்ய (அவர்கள்)கிருகத்திற்குச் சென்றார்கள். திருதராஷ்டிரர், விதுரர் இவ்விரு தந்தையர்களையும் காந்தாரியையும் பார்க்கவில்லை. 32

யுதிஷ்டிரர் மனம்நொந்தவ ராகி அங்கிருக்கும் ஸஞ்சயரைப் பார்த்துக் கேட்கிறார். காவல்கணர் குமாரராகிய ஸஞ்சயரே! வயசு சென்றவரும் கண்களில்லாதவரு மாகிய எங்களுடைய தந்தை எங்கே? 33

பிள்ளைகளைப் பறிகொடுத்துத் துன்பமடைந்த தாயாகிய காந்தாரி எங்கே? சுகிருத்தாகிய சிறியதந்தை விதுரர் எங்கு சென்றார்? பந்து ஜனங்களை இழந்த திருத ராஷ்டிரர் புத்தியில்லாத நான் செய்தது குற்றமென் றெண்ணித் துக்கங் கொண்டு தன் பத்தினியாகிய காந்தாரி யுடன் கங்கா நதியில் விழுந்தாரா? 34½

தந்தையின் உடன்பிறந்தவர் களாகிய திருதராஷ்டிரர் விதுர ரிருவரும் தந்தையாகிய பாண்டு மகாராஜன் பரலோகஞ் சென்றவுடன் சுகிருத்துக் களும் குழந்தைகளு மாகிய எங்களைக் கஷ்டப் பட்டுக் காப்பாற்றி னார்கள். அவர்கள் இந்த விடத்தைவிட்டு எங்கு சென்றார்கள்? 35½

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

ஸஞ்சயன், தனக்குப் பிரபுவாகிய திருதராஷ்டிர மகா ராஜனுடைய பிரிவாற்றாமையால் சரீரம் இளைத்துக் கருணையாலும் அன்பின் பரவசத் தன்மையாலும் மிகவும் துன்ப மடைந்தா ராதலால் பதில் ஒன்றும் கூறவில்லை. 36½

பிறகு கண்ணீரைக் கையால் துடைத்து புத்தியால் மனத்தை நிலை நிறுத்தி அரசனாகிய திருதராஷ்டிர னுடைய பாதங்களை ஸ்மரித்துக் கொண்டு அஜாத சத்ருவாகிய தரும புத்திரரைப் பார்த்துக் கூறுகிறார். 37½

𑌅𑌜𑌾𑌤𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌚𑍇 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌪𑌾𑌦𑌾𑌵𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 |
𑌅𑌹𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌰𑍍𑌵𑌃 𑌕𑍁𑌲𑌨𑌨𑍍𑌦𑌨 || 38

𑌨 𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌸𑌾𑌧𑍍𑌵𑍍𑌯𑌾 𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌾 𑌮𑍁𑌷𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 |
𑌅𑌥𑌾𑌜𑌗𑌾𑌮 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌦𑌃 𑌸𑌹𑌤𑍁𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌃 || 39

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌹 𑌸𑌾𑌨𑍁𑌜𑍋𑌽𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 |

|| 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ||

𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌗𑌤𑌿𑌂 𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌨𑍍 𑌕𑍍𑌵 𑌗𑌤𑌃 𑌇𑌤𑌃 || 40

𑌅𑌮𑍍𑌬𑌾 𑌵𑌾 𑌹𑌤𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌤𑌾 𑌕𑍍𑌵 𑌗𑌤𑌾 𑌚 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 |
𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌨𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌮𑌗𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 || 41

𑌕𑌰𑍍𑌣𑌧𑌾𑌰 𑌇𑌵𑌾𑌪𑌾𑌰𑍇 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌰𑌦𑌰𑍍𑌶𑌕𑌃 |

|| 𑌸𑍂𑌤𑌃 ||

𑌅𑌥𑌾𑌬𑌭𑌾𑌷𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌦𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 || 42

குரு வம்சத்தார்களைச் சந்தோஷப் படுத்துகிற ஓ அரசனே! உங்களுடைய தந்தைகளாகிய திருதராஷ்டிரர், விதுரர், பதிவிருதை யாகிய காந்தாரி இவர்கள் எங்குச்சென்றார்க ளென்பதை நானறியேன். மகாத்மாக்களாகியதிருதராஷ்டிரர் முதலியவர்கள் என்னை மோசஞ் செய்தார்கள். $38\frac{1}{2}$

பிறகு மகிமை பொருந்திய நாரதமுனிவர் தும்புருவுடன் அங்கு வந்தார். உடனே தருமபுத்திரர் தம்பி மார்களுடன் எழுந்து நமஸ்கரித்து (துக்கத்தால்) § பூஜிக்கிறவர் போல் வினவுகிறார். $39\frac{1}{2}$

தருமபுத்திரர் வினவுகிறார்.

ஓ நாரத பகவானே! தந்தைகளாகிய திருதராஷ்டிர விதுரர்களிருவருமெங்கு சென்றார்க ளென்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய தந்தை எங்கு சென்றார்? பிள்ளைகளைப் பறிகொடுத்துத் துன்பமடைந்தவளும் அதனால் துக்கிக்கத் தக்கவளுமாகிய தாய் காந்தாரி எங்கே சென்றாள்? $40\frac{1}{2}$

கரைகடந்த வியசனக்கடலில் மூழ்கிய எங்களுக்குக் கரைகாட்டும் மாலுமி போல் பகவானாகிய தாங்கள் தரிசனம் கொடுத்தீர்கள். சந்தோஷம்! என்னைக் காக்க வேண்டும்! $41\frac{1}{2}$

சூதபுராணிகர் கூறுகிறார்.

பிறகு முனிவர்களுக்குள் சிரேஷ்டராகிய நாரதபகவான் கூறுகிறார். 42

---

§ பூஜிக்கிறவர்போல் என்றதால் பூஜிக்கவில்லை என்றர்த்த மாகிறது. துக்கமுடையவன், கோப முடையவன், சிரத்தை யில்லாதவன் இவர்கள் ஆசிரியர்களையும் தேவர்களையும் பிராம்மணர் களையும் பூஜிக்க மாட்டார்கள் என்று ஸ்மிருதிவசனம் கூறுகிறது.

॥ 𑌨𑌾𑌰𑌦𑌃 ॥

𑌮𑌾 𑌕𑌞𑍍𑌚𑌨 𑌶𑍁𑌚𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌯𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌵𑌶𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌸 𑌸𑌂𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸 𑌏𑌵 𑌵𑌿𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑌿 𑌚 ॥ 43

𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌸𑌪𑌾𑌲𑌾 𑌯𑌸𑍍𑌯𑍇𑌮𑍇 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌬𑌲𑌿𑌮𑍀𑌶𑌿𑌤𑍁𑌃 ।
𑌯𑌥𑌾 𑌗𑌾𑌵𑍋 𑌨𑌸𑌿 𑌪𑍍𑌰𑍋𑌤𑌾𑌸𑍍𑌤𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌬𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌚 𑌦𑌾𑌮𑌭𑌿𑌃 ॥ 44

𑌵𑌾𑌕𑍍𑌤𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌨𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌬𑌦𑍍𑌧𑌾 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌬𑌲𑌿𑌮𑍀𑌶𑌿𑌤𑍁𑌃 ।
𑌯𑌥𑌾 𑌕𑍍𑌰𑍀𑌡𑍋𑌪𑌸𑍍𑌕𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌂𑌯𑍋𑌗𑌵𑌿𑌗𑌮𑌾𑌵𑌿𑌹 ॥ 45

𑌇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌤𑌥𑍈𑌵𑍇𑌶𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ।
𑌯𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌲𑍋𑌕𑌮𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌵𑌾 𑌨 𑌚𑍋𑌭𑌯𑌮𑍍 ॥ 46

𑌸𑌰𑍍𑌵𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑍋𑌹𑌜𑌾𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌹𑍍𑌯𑌙𑍍𑌗 𑌵𑍈𑌕𑍍𑌲𑌬𑍍𑌯𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍃𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ 47

நாரதர் கூறுகிறார்.

§ ஓ அரசனே! யாரைக்குறித்தும் நீர் துக்க மடைய வேண்டாம். ஏனெனில் உலகம்யாவும் ஈச்வரனுடைய சுவாதீனத்தி லல்லவா இருக்கிறது. அந்த ஈச்வரனே பூதங்கள் யாவற்றையும் சேர்த்து வைக்கிறார். வியோகத்தையும் உண்டு பண்ணுகிறார். லோக பாலர்களுடன் கூடினஜனங்கள் யாவரும் ஈச்வரனுக்குப் பூஜையைச் செய்கிறார்கள். 43½

மூக்கணாங்கயிறு போடப்பட்டுக் கழுத்தில் நீளமான கயிறால் கட்டப்பட்ட பசுக்கள்போல் மானிடர்கள் வேதமாகிய கயிற்றினால் (பிராம்மணன் க்ஷத்திரியன்) முதலியவர்களால் கட்டுண்டு பரமேச்வரனுக்குப் பூஜாதிரவியங்களைக் கொடுக்கிறார்கள். 44½

விளையாடுகிறவன் இச்சைப்படி விளையாடுவதற் குரிய வஸ்துக்கள் சேர்வதும் பிரிவதும்போல் மானிடர்களுக்கும் ஈசனிச்சைப்படி ஏற்படுகிறது. 45½

ஜனங்கள் (ஜீவனாயிருக்கும் தன்மையில்) நித்தியமாகவும் (தேகத்தை அடைந்த தன்மையில்) அநித்திய மாகவும் எண்ணுகிறாயா? (சுத்தப் பிர்ம சுவரூப மாகையால்) நித்தியமுமல்ல; அநித்தியமு மல்ல; ஆகையால் தந்தை முதலியவர்களைக் குறித்து எந்த விதத்திலும் வருத்தப்பட வேண்டியதில்லை. அவ்விதம் துக்க மடைதற்குக் காரணம் மோகத்தா லுண்டான சிநேகந்தான்.

ஆகையால் ஓ தருமபுத்திர! நாதனில்லாத வர்களும் கிருபணர்களு மாகிய தந்தை முதலியவர்கள் நானில்லாமல் எவ்வித மிருப்பார்கள் என்ற அஞ்ஞானத்தால் மனதில் ஏற்படும் வியாகுலத் தன்மையை விட்டுவிடு. ஆச்சரியம்! இந்

§ நாரதர் முதலிலேயே விவரத்தைத் தெரிவித்தால் மூர்ச்சை யடைவாரென்று கருதி முதலில் துக்கத்தை யொழிக்கும் படியான நீதியை யோதுகிறார்.

𑌕𑌥𑌂 𑌤𑍍𑌵𑌨𑌾𑌥𑌾𑌃 𑌕𑍃𑌪𑌣𑌾 𑌵𑌰𑍍𑌤𑍇𑌰𑌨𑍍𑌨𑍁 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌾𑌲𑌕𑌰𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌧𑍀𑌨𑍋 𑌦𑍇𑌹𑍋𑌽𑌯𑌂 𑌪𑌾𑌞𑍍𑌚𑌭𑍌𑌤𑌿𑌕𑌃 ॥ 48

𑌕𑌥𑌮𑌨𑍍𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍋𑌪𑌾𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌪𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾𑌪𑌰𑌮𑍍 ।
𑌅𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌦𑌾𑌨𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌮𑍍 ॥ 49

𑌫𑌲𑍍𑌗𑍂𑌨𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌹𑌤𑌾𑌂 𑌜𑍀𑌵𑍋 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌨𑌮𑍍 ।
𑌤𑌦𑌿𑌦𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌰𑌾𑌜𑌨𑍍𑌨𑍇𑌕 𑌆𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌦𑍃𑌕𑍍 ॥ 50

𑌅𑌨𑍍𑌤𑌰𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌰𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌤𑌂 𑌮𑌾𑌯𑌯𑍋𑌰𑍁𑌧𑌾 ।
𑌸𑍋𑌽𑌯𑌮𑌦𑍍𑌯 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃 ॥ 51

𑌕𑌾𑌲𑌰𑍂𑌪𑍋𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌮𑌭𑌾𑌵𑌾𑌯 𑌸𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌮𑍍 ।
𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌦𑍇𑌵𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌵𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ॥ 52

𑌤𑌾𑌵𑌦𑍍𑌯𑍂𑌯𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑌧𑍍𑌵𑌂 𑌭𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌵𑌦𑌿𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃 𑌸𑌹 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌾 𑌚 𑌸𑍍𑌵𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 ॥ 53

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌹𑌿𑌮𑌵𑌤 𑌋𑌷𑍀𑌣𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌗𑌤𑌃 ।
𑌸𑍍𑌰𑍋𑌤𑍋𑌭𑌿𑌃 𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌰𑍍𑌯𑌾 𑌵𑍈 𑌸𑍍𑌵𑌰𑍍𑌧𑍁𑌨𑍀 𑌸𑌪𑍍𑌤𑌧𑌾 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 ॥ 54

தச் சரீர மானது காலம் கருமம் குணங்கள் இவைகளுக்குச் சுவாதீன மாகவும் (பூமிமுதலிய) ஐந்து பூதங்களின் விகாரமாகவு முடையது. சர்ப்பத்தால் விழுங் கப்படுகிறவன்? மற்றவனே இரக்ஷிக்க முடியாததுபோல் இவன் எவர்களை இரக்ஷிக் கப் போகிறுன். கையில்லாத பசுக்கள் முதலியவைகள் கைகளுடன் கூடின (மா னிடர் முதலிய) வர்களுக்கும், பசுக்களுக்குக் காலில்லாதவை (திருணம் முதலிய வை) களுமாகப் பெரும் பூதங்களுக்கு அற்ப பூதங்கள் ஆகாரமாகின்றன. ஆகை யால் ஜீவன்கள் யாவும் ஜீவன்களுக்கே ஆகார மாகின்றன.

ஓ அரசனே! இந்தப் பிரபஞ்சம் யாவும் அனுபவிப்ப வர்களின் சுவரூப மாகவும் ஸ்வப்பிரகாச மாகவு மிருப்பவன் பகவான் ஒருவனே. அவரே பதார்த் தங்களெல்லா வற்றினுள்ளும் புறம்பும் விளங்குகிறுர். மாயையால் பலவாருகத் தோன்றும் ஈசனை நீபார். பூதபாவனராகிய அந்தப்பகவான் ஓ மகாராஜனே! இப் போது காலரூபனுக இப்புவியில் தேவ சத்துருக்கள் நாசமடைய அவதாரம் செய்திருக்கிறுர். தேவர்களுடைய காரியத்தை நிறை வேற்றினுர். பாக்கியுள்ள காரியங்களைப் பற்றி எதிர் பார்க்கிறுர். ஈச்வரனுகிய கிருஷ்ணன் இங்கு பூமியி லுள்ள வரையில் நீங்கள் கவனிக்கவேண்டும். 46-52½

இமயமலையின் தென் பாகத்தில் ஸப்த (ஏழு) ரிஷிகளின் பிரீதிக்காக ஆகாச கங்கை யானவள் தனித்தனியே ஏழுபிரிவாகப் பிரிந்து பிரவகிக்கிருள். பெரியோர்கள் அதை ஸப்தஸ்ரோதஸ் என்று கூறுகிறுர்கள். அந்த இடத்திற்கு திருதாரஷ்டிர மகாராஜன் பிராதாவுடனும் பத்தினியாகிய காந்தாரி யுடனும் சென்று அங்குள்ள முனிவர்களின் ஆச்சிரமத்தி லிருக்கிறுர். 53-54½

ஸப்தாநாம் ப்ரீதயே நாநா ஸப்தஸ்ரோதஃ ப்ரசக்ஷதே |
ஸ்நாத்வாநுஸவநம் தஸ்மிந் ஹுத்வா சாக்நீந் யதாவிதி || 55

அப்பக்ஷ உபஸாந்தாத்மா ஸ ஆஸ்தே விகதைஷணஃ |
ஜிதாஸநோ ஜிதஸ்வாஸஃ ப்ரத்யாஹ்ருதஷடிந்த்ரியஃ || 56

ஹரிபாவநயா த்வஸ்தரஜஸ்ஸத்வதமோமலஃ |
விஜ்ஞாநாத்மநி ஸம்யோஜ்ய க்ஷேத்ரஜ்ஞே ப்ரவிலாப்ய தம் || 57

ப்ரஹ்மண்யாத்மாநமாதாரே கடாம்பரமிவாம்பரே |
த்வஸ்தமாயாகுணோதர்கோ நிருத்தகரணாஸயஃ || 58

நிவர்திதாகிலாஹார ஆஸ்தே ஸ்தாணுரிவாசலஃ |
தஸ்யாந்தராயோ மைவாபூஃ ஸந்ந்யஸ்தாகிலகர்மணஃ || 59

ஸ வா அத்யதநாத்ராஜந் பரதஃ பஞ்சமேஹநி |
கலேபரம் ஹாஸ்யதி ஸ்வம் தச்ச பஸ்மீபவிஷ்யதி || 60

தஹ்யமாநேக்நிபிர்தேஹே பத்யுஃ பத்நீ ஸஹோடஜே |

அவ்வரசன் விதிப்படி அந்த ஸப்தஸ்ரோதஸ் என்ற தீர்த்தத்தில் முக்காலத்திலும் ஸ்னானம் செய்து அக்கினிகளிலும் ஹோமம் செய்து ஜலத்தையே ஆகாரம் செய்துகொண்டு அடங்கிய அந்தக் கரணத்துடன் மக்கள் முதலிய ஆசைகளொழித்து ஆஸனங்களை ஜயித்து மூச்சை அடக்கி (கண் முதலிய) ஆறு இந்திரியங்களையும் விஷயங்களிற் செல்ல வொட்டாமல் தடுத்து மகா விஷ்ணுவை பாவனை செய்வதால் தமஸ் இராஜஸ் ஸத்வம் என்ற தோஷங்களின்றி வாசம் செய்கிறார். 55-56

அந்த மகாத்மா மனதை (ஸ்தூல தேகத்தினின்று) விஞ்ஞான சுவரூபமாகிய புத்தியில் ஒன்று சேர்த்து அந்த விஞ்ஞான சுவரூபத்தை க்ஷேத்திரஞ்ஞனிடம் ஒன்றுபடுத்தி அந்த க்ஷேத்திரஞ்ஞனை ஆதாரமாகிய பிர்மத்தினிடம் குடத்துக்குள்ளிருக்கும் ஆகாசத்தை வேறுபடுத்தி மஹாகாசத்தில் சேர்ப்பது போல் ஒன்று படுத்தி மாயா குணங்களின் வாசனையைத் தொலைத்து, இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, புசிக்கத் தக்க வைகளையும் விடுத்து இப்போது மரம்போல் இருக்கிறார். இவ்விதம் கருமங்களெல்லாவற்றையும் தியாகம் செய்த அந்தத் திருதராஷ்டிர மகாராஜனுக்கு நீ இடையூறு செய்ய வேண்டாம். 57-59

ஓ இராஜனே! இதற்குப் பின்வரும் ஐந்தாவது நாளில் தன்னுடைய சரீரத்தை விடப்போகிறார். அந்தச் சரீரமும் சாம்பலாகப் போகிறது. 60

பர்ண சாலையுடனும் (கார்க பத்தியம் முதலிய) அக்னிகளுடனும் கணவனுடைய சரீரமானது (யோகாக்கினி யால்) பொசுங்கும் போது வெளிப் பக்கத்தி

ஸஹிஸ்ஸிதா வதிம் ஸாய்வீ தடஶிதநாவெக்ஷ்யதி ॥ 61

விஷாஜவஸ்த்தாஷ்வ்யம் நிஶாஜ்ஞ கணஜாநஷாந ।
ஹஷஶோகயாதஸ்யவஸா வநஜா தீர்த்தநிஷேவக: ॥ 62

॥ ஸுத: ॥

ஜத்யுக்த்வாதாரோஹஸஷ்வ்யம் நாரதஸ்வஹதும்பாந: ।
யுயிஷ்டிரோ வசஸ்தஸ்ய ஹ்ருதி க்ருத்வாஜஹாச்சுச: ॥ 63

இதி ஸ்ரீமத்பாகவதே ப்ரதமஸ்கந்தே த்ரயோதஶோத்யாய:

॥ ஸுத: ॥

ஸம்ப்ரஸ்திதே த்வாரகாயாம் ஜிஷ்ணௌ பந்துதிஷ்ருக்ஷயா ।
ஜ்ஞாதும் ச புண்யஶ்லோகஸ்ய க்ருஷ்ணஸ்ய ச விசேஷ்டிதம் ॥ 1

வ்யதீதா: கதிசிந்மாஸாஸ்ததா நாயாத்ததோர்ஜுந: ।
தத்ஶ ஹோரரூபாணி நிமித்தாநி குரூத்வஹ: ॥ 2

விருக்கும் பதிவிருதையாகிய பத்தினி காந்தாரி அந்தக் கணவனே அனுசரித்து அக்னியில் பிரவேசிக்கப் போகிருள். 61

குரு வம்சத்தார்களேச் சந்தோஷப் படுத்தும் யுதிஷ்டிர! விதுரரும் இந்த ஆச்சரியத்தைப் பார்த்து, ‡ சந்தோஷத் துடனும் துக்கத் துடனும் அங்கிருந்து தீர்த்தங்களேச் சேவிக்கச் செல்வார். 62

சூதபுராணிகர் கூறுகிருர்.

பிறகு நாரதமுனிவர் இவ்வா றுரைத்ததும் புருவுடன் சுவர்க்க மேறினர். தரும புத்திரர் அந்தநாரத முனிவரின் வார்த்தையை மனதில் நிலே நிறுத்தித் துக்கத்தை விட்டார். 63

13-வது அத்தியாயம் முற்றிற்று.

14-வது அத்தியாயம்.

சூதபுராணிகர் கூறுகிருர்.

அர்ச்சுனன் துவாரகையிலுள்ள உறவினர்களேப் பார்க்கவும் புண்ய சுலோகனுகிய கிருஷ்ண னுடைய சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளவும் கருதி யாத்திரை சென்று, சிலமாதம் வரையில் (ஏழுமாதம்) அந்தத் துவாரகையினின்று அவன் வரவில்லே. அப்பொழுது தருபுத்திரர் பயங்கரமான ரூபமுள்ள உத்பாதங்களேப் (அபச குனங்கள்) பார்த்தார். 1-2

‡ விதுரருக்கு திருத ராஷ்டிரர் நற்கதி யடைந்ததால் சந்தோஷமும் மாண மடைந்ததால் துக்கமும் ஏற்பட்டது.

𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌚 𑌗𑌤𑌿𑌂 𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌂 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑌰𑍍𑌤𑍁𑌧𑌰𑍍𑌮𑌿𑌣𑌃 |
𑌪𑌾𑌪𑍀𑌯𑌸𑍀𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌂 𑌕𑍍𑌰𑍋𑌧𑌲𑍋𑌭𑌾𑌨𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ‖ 3

𑌜𑌿𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌯𑌂 𑌵𑍍𑌯𑌵𑌹𑍃𑌤𑌂 𑌶𑌾𑌠𑍍𑌯𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌸𑍌𑌹𑍃𑌦𑌮𑍍 |
𑌪𑌿𑌤𑍃𑌮𑌾𑌤𑍃𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌦𑌮𑍍𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌕𑌲𑍍𑌕𑌨𑌮𑍍 ‖ 4

𑌕𑌨𑍍𑌯𑌾𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌿𑌣𑌞𑍍𑌜𑌾𑌤𑌂 𑌸𑍁𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑌵𑌾𑌦𑌕𑌮𑍍 |
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌤𑍍 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ‖ 5

𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌯𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌕𑌾𑌲𑍇 𑌤𑍍𑌵𑌨𑍁𑌗𑌤𑍇 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 |
𑌲𑍋𑌭𑌾𑌦𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍋𑌵𑌾𑌚𑌾𑌨𑍁𑌜𑌂 𑌨𑍃𑌪𑌃 ‖ 6

‖ 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ‖

𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑍋 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌯𑌾𑌂 𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍁𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑌯𑌾 |
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌚 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌚 𑌵𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ‖ 7

𑌗𑌤𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤𑌾𑌧𑍁𑌨𑌾 𑌮𑌾𑌸𑌾 𑌭𑍀𑌮𑌸𑍇𑌨 𑌤𑌵𑌾𑌨𑍁𑌜𑌃 |
𑌨𑌾𑌯𑌾𑌤𑌿 𑌕𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍇𑌦𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ‖ 8

𑌅𑌪𑌿 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸 𑌕𑌾𑌲𑍋𑌽𑌯𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 |
𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌙𑍍𑌗𑌮𑌾𑌕𑍍𑌰𑍀𑌡𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑌤𑌿 ‖ 9

காலம் பொல்லா தாயிற்று. வசந்தம் முதலிய ருதுதருமங்கள் மாறுதலடைந்தன. மானிடர்கள் குரோதம் லோபம் பொய் இவைகளுடன் கூடின மனமுடையவர்க ளாகிப் பாபங்களைச் செய்தார்கள். வியவகாரம் பெரும்பாலும் கபடமாயிற்று. சினேகம் வஞ்சனை கலந்திருந்தது. தந்தைதாய் சுகிருத்துக்கள் பிராதாக்கள் தம்பதிகள் யாவரும் கலகம்முதலிய வஞ்சனைகளைச் செய்தார்கள். தகப்பன் கன்னியைக்கிரயப் படுத்தவும்பிள்ளைகள் தாய் தந்தைகளைப்போஷியா திருக்கவும் பிராம்மணர்கள்வேதங்களில் வெறுப்புக்கொள்ளவும் சூத்திரர்வேதத்தைக் கற்று வேதாந்தம் பேசவுமாயினர். இம்மாதிரியான மிகவும் கெடுதியுள்ள அபசகுனங்களையும் மானிடர்களுடைய லோபம் முதலிய அதர்மமான பிரவிருத்தியையும் காலம்(கலி)வந்தவுடன் தருமபுத்திரர் பார்த்து அனுஜனாகிய பீமசேனனிடம் கூறுகிறார். 3-6

தருமபுத்திரர் கூறுகிறார்.

(ஓபீம!) அர்ச்சுனன் உறவினர்களைப் பார்க்கவும் புண்ய சுலோகனாகிய கிருஷ்ணன் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் துவாரகை சென்றான். 7

ஓபீமசேன! இப்பொழுது மாசம் ஏழாயிற்று. உன் தம்பி விஜயன் என்ன காரணத்தால் வரவில்லை. இதுவிஷயம் விவரமாக எனக்குத் தெரியவில்லை. 8

தேவரிஷியாகிய நாரதர் குறிப்பிட்டபடி பகவான் கிரீடைக்குரிய தன்னுடைய சரீரத்தை விடுவதற்கு விருப்பமுள்ள அந்தக் காலம் வந்து விட்டதோ என்னமோ தெரியவில்லை. 9

यस्यानुग्रहतोऽस्माकं राज्यं दाराः प्राणाः कुलं प्रजाः ।
आसन्सपत्नविजयो लोकाश्च यदनुग्रहात् ॥ 10

पश्योत्पातान्नरव्याघ्र दिव्यान्भौमान्सदैहिकान् ।
दारुणाञ्शंसतोऽदूराद्भयं नो बुद्धिमोहनम् ॥ 11

ऊर्वक्षिबाहवो मह्यं स्फुरन्त्यङ्ग पुनः पुनः ।
वेपथुश्चापि हृदये आराद्दास्यन्ति विप्रियम् ॥ 12

शिवैषोद्यन्तमादित्यमभिरौत्यनलानना ।
मामङ्ग सारमेयोऽयमभिरेभत्यभीरुवत् ॥ 13

शस्ताः कुर्वन्ति मां सव्यं दक्षिणं पशवोऽपरे ।
वाहांश्च पुरुषव्याघ्र लक्षये रुदतो मम ॥ 14

मृत्युदूतः कपोतोऽयमुलूकः कम्पयन्मनः ।
प्रत्युलूकश्च कुह्वानैर्विश्वं वै शून्यमिच्छतः ॥ 15

धूम्रा दिशः परिधयः कम्पते भूः सहाद्रिभिः ।
निर्घातश्च महांस्तात साकं च स्तनयित्नुभिः ॥ 16

ஸ்ரீகிருஷ்ண னுடைய அனுக்கிரகத்தால் நமக்கு சம்பத்து இராஜ்யம், மனைவி, பிராணன்கள், குலம், பிரஜைகள், சத்ரு விஜயம், (புண்ணிய) லோகங்கள் இவையாவும் உண்டாயின. 10

மானிட சிரேஷ்டனாகிய பீம! புத்தியை மோகிக்கச் செய்யும் கோரமான பயத்தை நாமறியும் பொருட்டுச் சரீரத்திலும் ஆகாயத்திலும் பூமியிலும் உண்டாகும் அபசகுனங்களைப் பார். 11

விருகோதர! என்இடது துடை கண் கை இவைகள் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்கமும் உண்டாகிறது. இவைகள் எனக்கு விரைவாகக் கெடுதியைக் கொடுக்கப் போகின்றன. 12

அடே பீம! நெருப்பை வாயில் வைத்துக்கொண்டு இதோ நரி உதயமாகும் சூரியனை நோக்கி ரோதனம் செய்கிறது. இதோ நாய் என்னைக் குறிப்பிட்டுத் தைரியமாகக் கதறுகிறது. 13

சிலாக்கியமான (கோ முதலிய) பசுக்கள் என்னை இடமாகச் சுற்றுகின்றன. மற்றுமுள்ள (கழுதை முதலிய) பசுக்கள் என்னை வலமாகச் சுற்றுகின்றன. ஓ புருஷ சிரேஷ்டனே! குதிரைகள் ரோதனம் செய்கின்றன. இவ்விதம் நான் பார்க்கிறேன். 14

இந்த மாடப்புறு மரணத்தைக் குறிப்பிடுகிறது. இந்தக் கோட்டான் காக்கை இரண்டும் என்மனதை நடுங்கச் செய்து குற்சிதமான கூச்சலிட்டு உலகத்தை விரைவாகச் சூன்யம் செய்ய விரும்புகின்றன. 15

திசைகள் தூமநிறமாயின. பரிவேஷங்கள் (கோட்டைகள்) இவ்வுலகத்தில் வியாபித்திருக்கின்றன. பூமியானது மலைகளுடன் நடுங்குகின்றது. மேகமில்லாமலே பேரிடியானது முழக்கத்துடன் உண்டாயிற்று. 16

𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌾𑌤𑌿 𑌖𑌰𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍋 𑌰𑌜𑌸𑌾 𑌵𑌿𑌸𑍃𑌜𑌂𑌸𑍍𑌤𑌮𑌃 ।
𑌅𑌸𑍃𑌗𑍍𑌵𑌰𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌜𑌲𑌦𑌾 𑌬𑍀𑌭𑌤𑍍𑌸𑌮𑌿𑌵 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 ॥ 17

𑌸𑍂𑌰𑍍𑌯𑌂 𑌹𑌤𑌪𑍍𑌰𑌭𑌂 𑌪𑌶𑍍𑌯 𑌗𑍍𑌰𑌹𑌮𑌰𑍍𑌦𑌂 𑌮𑌿𑌥𑍋 𑌦𑌿𑌵𑌿 ।
𑌸𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑍈𑌰𑍍𑌭𑍂𑌤𑌗𑌣𑍈𑌰𑍍𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑍇 𑌇𑌵 𑌰𑍋𑌦𑌸𑍀 ॥ 18

𑌨𑌦𑍍𑌯𑍋 𑌨𑌦𑌾𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑌾𑌂𑌸𑌿 𑌚 𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌚 ।
𑌨 𑌜𑍍𑌵𑌲𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌨 𑌕𑌾𑌲𑍋𑌽𑌯𑌂 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ॥ 19

𑌨 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌤𑌨𑌂 𑌵𑌤𑍍𑌸𑌾 𑌨 𑌦𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌮𑌾𑌤𑌰𑌃 ।
𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌮𑍁𑌖𑌾 𑌗𑌾𑌵𑍋 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍃𑌷𑌭𑌾 𑌵𑍍𑌰𑌜𑍇 ॥
𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌿 𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍀𑌵 𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌲𑌨𑍍𑌤𑌿 𑌚 । 20

𑌇𑌮𑍇 𑌜𑌨𑌪𑌦𑌾 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌃 𑌪𑍁𑌰𑍋𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌕𑌰𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌃 ॥
𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌶𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨𑌿𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌃 𑌕𑌿𑌮𑌘𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌃 । 21

𑌮𑌨𑍍𑌯 𑌏𑌤𑍈𑌰𑍍𑌮𑌹𑍋𑌤𑍍𑌪𑌾𑌤𑍈𑌰𑍍𑌨𑍂𑌨𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑌦𑍈𑌃 ॥ 22
𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑍍𑌰𑍀𑌭𑌿𑌰𑍍𑌹𑍀𑌨𑌾 𑌭𑍂𑌰𑍍𑌹𑌤𑌸𑍌𑌭𑌗𑌾 ।

வாயுவானது கடுமையாய் மோதி புழுதியுள்பட இருளுஞ் சூழ வீசுகிறது. மேகங்கள் எங்கும் சகிக்கமுடியாமல் இரத்தத்தை வருஷிக்கின்றன. 17

சூரியன் ஒளியிழந்து விட்டான். கிரகங்கள் ஒன்றுக் கொன்று ஆகாயமார்க்கத்தில் கலகம்செய்கின்றன. ருத்திரரைச்சார்ந்த பூதங்களின் கூட்டங்களுடன் பிராணிகள் கலந்திருப்பதால் ஆகாயம்பூமி இவ்விரண்டும் நன்ருய் ஜ்வலிப்பது போல் காணப் படுகின்றன. 18

(1) நதிகளும் நதங்களும் தடாகங்களும் (பிராணிகளின்) மனமும்கலங்கின. அக்னி நெய்யினுல் பிரகாசிக்க வில்லை. இந்தக்காலம் என்ன செய்யப் போகிறதோ? 19

கன்றுகள் முலைப்பால் குடிக்கவில்லை. தாய்ப்பசுக்கள் பால் கொடுக்க வில்லை. பசுக்கள் கண்ணீர் ததும்பிய முகத்துடன் ரோதனம் செய்கின்றன. காளைகள் விருஷபசாலையில் சந்தோஷமா யிருக்கவில்லை. பிரதிமைகள் அலறுகின்றனபோல வேர்வை யுடையன போலவும் அசைகின்றன போலவும் காணப் படுகின்றன. 20

இந்த தேசங்கள் கிராமங்கள் நகரங்கள் உத்தியானங்கள் ஆகரங்கள் ஆசிரமங்கள் இவைகள் சந்தோஷ மில்லாம லிருக்கின்றன. நமக்கு எந்த துக்கத்தைக் காட்டுமோ? 21

இந்தப் பெரும் உற்பாதங்கள் காணப்படுவது, மற்ற புருஷர்களுக்கில்லாத, (வஜ்ரம் முதலிய) மகிமையுள்ள பகவானுடைய பாதங்கள் படாமல் இந்த பூமியானது சீர்கெட்டிருப்பதி ஞலேயே என்றெண்ணுகிறேன். 22

---

(1) நதிகள் மேற்கிலிருந்து கிழக்குமுகமாகப் பிரவகிப்பன. நதங்கள் கிழக்கிலிருந்து மேற்கு முகமாகப் பிரவகிப்பன.

𑌇𑌤𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 ॥
𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌯𑌦𑍁𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌃 𑌕𑌪𑌿𑌧𑍍𑌵𑌜𑌃 । 23

𑌤𑌂 𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌪𑌤𑌿𑌤𑌮𑌯𑌥𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍁𑌰𑌮𑍍
𑌅𑌧𑍋𑌵𑌦𑌨𑌮𑌬𑍍𑌬𑌿𑌨𑍍𑌦𑍂𑌨𑍍 𑌸𑍃𑌜𑌨𑍍𑌤𑌂 𑌨𑌯𑌨𑌾𑌬𑍍𑌜𑌯𑍋𑌃 । 24

𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌹𑍃𑌦𑌯𑍋 𑌵𑌿𑌚𑍍𑌛𑌾𑌯𑌮𑌨𑍁𑌜𑌂 𑌨𑍃𑌪𑌃 ॥
𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌸𑍁𑌹𑍃𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌂𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌨𑌾𑌰𑌦𑍇𑌰𑌿𑌤𑌮𑍍 । 25

॥ 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ॥

𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌰𑍍𑌤𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌨𑌃 𑌸𑍍𑌵𑌜𑌨𑌾𑌃 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑌤𑍇 ॥
𑌮𑌧𑍁𑌭𑍋𑌜𑌦𑌶𑌾𑌰𑍍𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌾𑌨𑍍𑌧𑌕𑌵𑍃𑌷𑍍𑌣𑌯𑌃 । 26

𑌶𑍂𑌰𑍋 𑌮𑌾𑌤𑌾𑌮𑌹𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌥 𑌮𑌾𑌰𑌿𑌷𑌃 ॥
𑌮𑌾𑌤𑍁𑌲𑌃 𑌸𑌾𑌨𑍁𑌜𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍁𑌶𑌲𑍍𑌯𑌾𑌨𑌕𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌿𑌃 । 27

𑌸𑌪𑍍𑌤 𑌸𑍍𑌵𑌸𑌾𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍋 𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑌹𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌃 ॥
𑌆𑌸𑌤𑍇 𑌸𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌃 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌦𑍇𑌵𑌕𑍀𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 । 28

ஓ சௌனக முனிவரே! தருமபுத்திர மகாராஜன் இப்படிப் பட்ட அரிஷ்டங்களைப்பார்த்துக் கவலை கொண்டிருக்கும்போது அனுமானைத் துவஜமாக உடைய அர்ச்சுனன் துவாரகையி னின்று வந்தான். 23

தரும நந்தர் தமது பாதங்களில் விழுந்தவனும் முன்போ லில்லாதவனும் துக்கமடைந்த வனும் கீழ் நோக்கிய முகமுடையவனும் தாமரைப் பூப் போன்ற கண்களி லிருந்து நீர்த்திவலைகளைச் சொரிகின்றவனும் நடுங்கிய மனமுடையவனும் காந்தியற்றவனும் அநுஜனுமாகிய அந்த அர்ச்சுனனைப் பார்த்து நாரதர் கூறியதை நினைத்துச் சுகிருத்துக் களின் மத்தியில் கேட்கிறார். 24-25

யுதிஷ்டிரர் வினவுகிறார்.

(அர்ச்சுன.) ஆனர்த்த புரியல் நம்முடைய பந்துக்கள் சுகமாயிருக்கின்றார்களா? மதுக்கள் போஜகர்கள் தாசா தாசர்கள் ஸாத்வதர்கள் அந்தகர்கள் விருஷ்ணிகள் இவர்கள் யாவரும் சுகமாக விருக்கின்றார்களா? 26

ஏ பார்த்த! சூரனும் பூஜிக்கத் தக்கவனுமாகிய மாதாமகன் (தாயின் தந்தை) க்ஷேமமா? தம்பிமார்களுடன் கூடிய ஆனகதுந்தபி என்னும் பெயருள்ள மாமா சௌக்கியமா? 27

அந்த வசுதேவருடைய பத்தினிகளும் சகோதரிகளு மாகிய தேவகிமுதலிய ஏழு மாமிமார்களும் புத்திரர்கள் மருமக்கள் எல்லாரும் க்ஷேமமாக விருக்கின்றார்களா? 28

கச்சித்ராஜாஹுகோ ஜீவத்யஸத்புத்ரோஸ்ய சாநுஜ: ||
ஹ்ருதிகஸ்ஸஸுதோக்ரூரோ ஜயந்த கத ஸாரணா: |
ஆஸதே குசலம் கச்சித்யே ச சத்ருஜிதாதய: || 29-30

கச்சிதாஸ்தே ஸுகீ ராமோ பகவாந் ஸாத்வதாம் ப்ரபு: |
ப்ரத்யும்ந: ஸர்வவ்ருஷ்ணீநாம் ஸுகமாஸ்தே மஹாரத: || 31

கம்பீரரயோ நிருத்தோ வர்ததே பகவாநுத |
ஸுஷேணச்சாருதேஷ்ணச்ச ஸாம்போ ஜாம்பவதீஸுத: || 32

அந்யே ச கார்ஷ்ணிப்ரவரா: ஸபுத்ரா ருஷபாதய: |
ததைவாநுசரா: சௌரே: ச்ருததேவோத்தவாதய: || 33

ஸுநந்த நந்த சீர்ஷண்யா யே சாந்யே ஸாத்வதர்ஷபா: |
அபி ஸ்வஸ்த்யாஸதே ஸர்வே ராமக்ருஷ்ணபுஜாச்ரயா: || 34

அபி ஸ்மரந்தி குசலமஸ்மாகம் பத்தஸௌஹ்ருதா: |
பகவாநபி கோவிந்தோ ப்ரஹ்மண்யோ பக்தவத்ஸல: || 35

புரே கச்சித்ஸுதர்மாயாம் ஸுகமாஸ்தே ஸுஹ்ருத்வ்ருத: |
மங்களாய ச லோகாநாம் க்ஷேமாய ச பவாய ச || 36

அசத்தைப்(கம்ஸனை)புத்திரனாக உடைய உக்ரஸேனன்ஜீவித்திருக்கின்றாரா? உக்ரசேனனுடைய தம்பியாகிய தேவகன், ஹிருதிகனுக்குப் பிள்ளையாகிய கிருதவர்மன், அக்ரூரர், ஜயந்தன், கதன், ஸாரணன் ஸத்தியஜித்து முதலிய யாவரும் க்ஷேமமா? 29-30

பக்தர்களாகிய யாதவர்களுக்குப் பதியும் மகிமை பொருந்தியவரு மாகிய பலராமர் சௌக்கியமா? யாதவர்களுக்குள் மகா ரதனும் யுத்தத்தில் அதி சாமர்த்திய முள்ளவனும் மகிமை யுள்ளவனுமாகிய பிரத்தியும்னன் சுகமாக விருக்கிறானா? 31-$\frac{1}{2}$

ஸுஷேணன் சாருதேஷ்ணன் ஜாம்பவதியின் புத்திரனாகிய ஸாம்பன் மற்றுமுள்ள கிருஷ்ணன் குமாரர்களுக்குள் சிறந்தவர்கள், குமாரர்களுடன் கூடின ரிஷபன் முதலியவர்கள் கிருஷ்ணனுடைய நண்பர்களாகிய சுருததேவர் உத்தவர் முதலியவர்கள் மற்றுமுள்ள சுநந்தன் நந்தன் முதலிய பாகவத சிரேஷ்டர்கள், கிருஷ்ணனுடையவும் பலராமனுடையவும் புயத்தை ஆசரித்தவர்கள் யாவரும் க்ஷேமமாக விருக்கிறார்களா? 32-34

அபிமானம் குறையாத அவர்கள் யாவரும் நம்முடைய க்ஷேமத்தை நினைக்கிறார்களா? பிரும்மண்யனும் பக்தவத்சலனும் மகிமை தங்கியவனு மாகிய கிருஷ்ணபகவான் துவாரகையில் சுதர்மை என்ற சபையில் சுகிருத்துக்கள் சூழ்ந்திருக்கச் சுகமாக இருக்கிறாரா? 35-$\frac{1}{2}$

ஆதிபுருஷனாகிய பகவான் பலராமருடன் ஜனங்களின் மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற் காகவும் நன்மைக்காகவும் யதுகுலமாகிய கடலில் அவதரித்திருக்

𑌆𑌸𑍍𑌤𑍇 𑌯𑌦𑍁𑌕𑍁𑌲𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑌾𑌵𑌾𑌦𑍍𑌯𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌸𑌖𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 |
𑌯𑌸𑍍𑌯 𑌬𑌾𑌹𑍁𑌦𑌣𑍍𑌡𑌗𑍁𑌪𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌯𑌦𑌵𑍋𑌽𑌰𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 ||
𑌕𑍍𑌰𑍀𑌡𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌮𑌹𑌾𑌪𑍌𑌰𑍁𑌷𑌿𑌕𑌾 𑌇𑌵 || 37

𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑌮𑍁𑌖𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾
𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑍋 𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌃 |
𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑍍𑌯 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌾𑌶𑌿𑌷𑍋
𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌵𑌜𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑌵𑌲𑍍𑌲𑌭𑍋𑌚𑌿𑌤𑌾𑌃 || 38

𑌯𑌦𑍍𑌬𑌾𑌹𑍁𑌦𑌣𑍍𑌡𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌾𑌨𑍁𑌜𑍀𑌵𑌿𑌨𑍋
𑌯𑌦𑍁𑌪𑍍𑌰𑌵𑍀𑌰𑌾 𑌹𑍍𑌯𑌕𑍁𑌤𑍋𑌭𑌯𑌾 𑌮𑍁𑌹𑍁𑌃 |
𑌅𑌧𑌿𑌕𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌂𑌘𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌾𑌹𑍃𑌤𑌾𑌂 𑌬𑌲𑌾𑌤𑍍
𑌸𑌭𑌾𑌂 𑌸𑍁𑌧𑌰𑍍𑌮𑌾𑌂 𑌸𑍁𑌰𑌸𑌤𑍍𑌤𑌮𑍋𑌚𑌿𑌤𑌾𑌮𑍍 || 39

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌽𑌨𑌾𑌮𑌯𑌂 𑌤𑌾𑌤 𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌤𑍇𑌜𑌾 𑌵𑌿𑌭𑌾𑌸𑌿 𑌮𑍇 |
𑌅𑌲𑌬𑍍𑌧𑌮𑌾𑌨𑍋𑌽𑌵𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌤𑌾𑌤 𑌚𑌿𑌰𑍋𑌷𑌿𑌤𑌃 || 40

𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌹𑌤𑍋𑌽𑌭𑌾𑌵𑍈𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌮𑌂𑌗𑌲𑍈𑌃 |
𑌨 𑌦𑌤𑍍𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌰𑍍𑌥𑌿𑌭𑍍𑌯 𑌆𑌶𑌯𑌾 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 || 41

கிறார். அவருடைய சிறந்த பாகுவால் காக்கப்படும் யாதவர்கள் வைகுண்டநாத ஞகிய நாராயண மூர்த்தியை அனுசரித்தவர்கள் போல் மிகுதியான ஆனந்தத்துடன் விளையாடுகிறார்கள். 36-37

சத்தியபாமை முதலிய பதினாறுயிரம் ஸ்திரீகள் பகவானுடைய பாதசிச்ருஷை செய்யும் முக்கியமான காரியத்தால், யுத்தத்தில் (கிருஷ்ணனைக்கொண்டு) தேவர்களை ஜயித்து வஜ்ராயுதம் தரித்த இந்திரனுக்கு இஷ்டநாயகி யாகிய இந்திராணி யனுபவிப்பதற் குரிய தேவ போகங்களை (பாரிஜாதம் முதலியவை) அடைகிறார்கள். 38

பகவானுடைய புயபலத்தா லுண்டான வஸ்துக்களால் ஜீவிக்கும் யாதவ வீரர்கள், பலத்தால் அடைந்ததும் தேவர்களுக்குள் சிறந்தவர்களுக் குசிதமுமான சபையில் பாதங்களுடன் அடிக்கடி சஞ்சரிக்கிறார்கள். (அந்த கோவிந்தன் சௌக்கியமா?) 39

என்னப்பனே! நீ சௌக்கியமா? நீ தேஜஸ் குறைந்தவனாகக் காண்கிறாயே? நீ அங்கு வெகு காலம் வாசம் செய்தமையால் உன்னை பந்து ஜனங்கள் மதிக்கவில்லையா? அல்லது அவர்கள் உன்னை திரஸ்காரஞ் செய்தார்களா? 40

பிரியமற்ற கரோமான சப்தத்தால் (பேச்சுக்களால்) நீ அடிபடாம லிருக்கிறாயா? ஆசையுடன் யாசகர்களுக்குப் பிரதிஞ்ஞை செய்து, கூறியதைக் கொடுக்கத் தவறினாயா? 41

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌬𑌾𑌲𑌂 𑌗𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌂 𑌰𑍋𑌗𑌿𑌣𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ।
𑌶𑌰𑌣𑍋𑌪𑌸𑍃𑌤𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌤𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍀𑌃 𑌶𑌰𑌣𑌪𑍍𑌰𑌦𑌃 ॥ 42

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌗𑌮𑍋𑌽𑌗𑌮𑍍𑌯𑌾𑌂 𑌗𑌮𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ।
𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑍋 𑌵𑌾𑌥 𑌭𑌵𑌾𑌨𑍍𑌨𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌰𑍍𑌨𑌾𑌸𑌮𑍈𑌃 𑌪𑌥𑌿 ॥ 43

𑌅𑌪𑌿 𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌬𑌾𑌲𑌕𑌾𑌨𑍍 ।
(𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌤𑌿𑌥𑌿𑌭𑍃𑌤𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑌿𑌕𑍍𑌷𑍂𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌶𑍂𑌰𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌃 ॥)
𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍𑌨 𑌯𑌦𑌕𑍍𑌷𑌮𑌮𑍍 ॥ 44

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌤𑌮𑍇𑌨𑌾𑌥 𑌹𑍃𑌦𑌯𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍁𑌨𑌾 ।
𑌶𑍂𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌰𑌹𑌿𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌨 𑌰𑍁𑌕𑍍 ॥45

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

முன் நீ ஆசரித்த வர்களுக்கு அபயம் கொடுப்பவ னல்லவா? (ஆகையால் இப்போது) சாண மென்று வந்த பிராம்மணன், குழந்தை, பசு, வயோதிகன், ரோகிஷ்டன், ஸ்திரீ, இவர்களை நீ விடாம லிருக்கிறுயா? 42

நிந்திக்கத் தக்க ஸ்திரீயிடம் சங்கமம் செய்யாம லிருக்கிறுயா? சங்கமம் செய்யத் தகுதியான ஸ்திரீ அழுக்குள்ள வஸ்திரம் முதலியவற்றை யடைந் திருக்கக் கண்டு அந்த ஸ்திரீயிடம் சங்கமம் செய்யாம லிருந்து விட்டாயா? அல்லது மார்க்கத்தில் உனக்குச் சமமாக விருப்பவர் களாலும் உனக்குக் கீழ்ப் பட்டவர்களாலும் அவமானப் பட்டனேயோ? 43

நன்ருய்ப் புசிக்கத்தக்க பெரியோர்கள் குழந்தைகள் (அதிதிகள் பிருத்தி யர்கள், கர்ப்பிணிகள் ரோகிஷ்டர்கள் கன்னிகைகள்) இவர்களுக்கு முன் போஜ னம் செய்தாயா? நிந்திக்கத் தக்கதும்; அனுசிதமுமான காரியம் ஏதேனும் செய்ய வில்லையே? 44

ஓ அர்ச்சுன! மிகவும் அந்தரங்கனும் நமக்கு பந்துவுமாகிய ஸ்ரீ கிருஷ்ண னில்லாமல் எப்போதும் சூன்யனுகி விட்டோமே என்று எண்ணுகிருயா? இல்லா விடில் உனக்கு மனதில் உபத்திரவம் ஏற்படாது. 45

14-வது அத்தியாயம் முற்றிற்று.

॥ ஸ்ரீஸூத: ॥

ஏவம் க்ருஷ்ணஸக: க்ருஷ்ணோ ப்ராத்ரா ராஜ்ஞா விகல்பித: ।
நாநாஶங்காஸ்பதம் ரூபம் க்ருஷ்ணவிஶ்லேஷகர்ஶித: ॥ 1

ஶோகேந ஶுஷ்யத்வதநஹ்ருத்ஸரோஜோ ஹதப்ரப: ।
விபும் தமேவாநுஸ்மரந் நாஶக்நோத் ப்ரதிபாஷிதும் ॥ 2

க்ருச்ச்ரேண ஸம்ஸ்தப்ய ஶுச: பாணிநாம்ருஜ்ய நேத்ரயோ: ।
பரோக்ஷேண ஸமுந்நத்தப்ரணயௌத்கண்ட்யகாதர: ॥ 3

ஸக்யம் மைத்ரீம் ஸௌஹ்ருதம் ச ஸாரத்யாதிஷு ஸம்ஸ்மரந் ।
ந்ருபமக்ரஜமித்யாஹ பாஷ்பகத்கதயா கிரா ॥ 4

॥ அர்ஜுந: ॥

வஞ்சிதோऽஹம் மஹாராஜ ஹரிணா பந்துரூபிணா ।
யேந மேऽபஹ்ருதம் தேஜோ தேவவிஸ்மாபநம் மஹத் ॥ 5

15-வது அத்தியாயம்.

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

இவ்விதம் பலவிதமும் சந்தேகிப்பதற் கிடமான உருவத்துட னிருக்கக் கண்டு, தமையனுகிய தருமபுத்திரர், விகற்பித்துக்கேட்க, கிருஷ்ணனுக்கு நண்பனும் கிருஷ்ணனுடைய பிரிவாற் ருமையால் இளைத்தவனும் அந்த சோகத்தால் வாடிய முகத்தாமரையையும் மனத்தாமரையையு முடையவனும் ஒளியிழந்தவனுமாகிய அர்ச்சுனன் அந்தக்கிருஷ்ணனையே நினைத்துப் பதிற்கூறச் சக்தியில்லாதவனு யிருந்தான். 1-2

பார்த்தன் மிகுந்த சிரமத்துடன் கண்ணீரை யடக்கியும் பெருகியதைக் கையால் துடைத்துக்கொண்டு கிருஷ்ணன் பிரத்தியக்ஷமாக இல்லாததால் மிகுந்த அன்பும் ஆவலு மடைந்ததுமன்றி வியாகுலமுற்று, தேரோட்டுதல் முதலிய செய்கைகளில் (கிருஷ்ணனுடைய) நன்மையைக் கோரி நடந்ததையும் உபகாரம் செய்ததையும், நம்மைச் சார்ந்தவன் என்று நல்ல இருதயத் துடனிருந்ததையும் நினைத்துக்கொண்டு கண்ணீர் விட்டான். பின் தமையனுகிய யுதிஷ்டிர மகாராஜனை நோக்கித் தளர்ந்த குரலுடன் கூறுகிறுன். 3-4

அர்ச்சுனன் கூறுகிறுன்.

ஓ மகாராஜனே! பந்துவின் உருவந்தாங்கிய ஸ்ரீ ஹரியால் வஞ்சிக்கப் பட்டேன். அந்த பகவானுல் பிரமன்முதலிய தேவர்களுக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கும் சிறந்த என் தேஜஸானது அபகரிக்கப் பட்டது. 5

𑌯𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌲𑍋𑌕𑍋 𑌹𑍍𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ।
𑌉𑌕𑍍𑌥𑍇𑌨 𑌰𑌹𑌿𑌤𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌮𑍃𑌤𑌕𑌃 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌯𑌥𑌾 ॥ 6

𑌯𑌤𑍍𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌗𑍇𑌹𑌮𑍁𑌪𑌾𑌗𑌤𑌾𑌨𑌾𑌂
𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑌰𑌮𑍁𑌖𑍇 𑌸𑍍𑌮𑌰𑌦𑍁𑌰𑍍𑌮𑌦𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑍇𑌜𑍋 𑌹𑍃𑌤𑌂 𑌖𑌲𑍁 𑌮𑌯𑌾𑌭𑌿𑌹𑌤𑌶𑍍𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃
𑌸𑌜𑍍𑌜𑍀𑌕𑍃𑌤𑍇𑌨 𑌧𑌨𑍁𑌷𑌾𑌧𑌿𑌗𑌤𑌾 𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 ॥ 7

𑌯𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌵𑌹𑌮𑍁 𑌖𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑌗𑍍𑌨𑌯𑍇𑌽𑌦𑌾𑌮𑍍
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌸𑌾𑌮𑌰𑌗𑌣𑌂 𑌤𑌰𑌸𑌾 𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 ।
𑌲𑌬𑍍𑌧𑌾 𑌸𑌭𑌾 𑌮𑌯𑌕𑍃𑌤𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌶𑌿𑌲𑍍𑌪𑌮𑌾𑌯𑌾
𑌦𑌿𑌗𑍍𑌭𑍍𑌯𑍋𑌽𑌹𑌰𑌨𑍍𑌨𑍃𑌪𑌤𑌯𑍋 𑌬𑌲𑌿𑌮𑌧𑍍𑌵𑌰𑍇 𑌤𑍇 ॥ 8

𑌯𑌤𑍍𑌤𑍇𑌜𑌸𑌾 𑌨𑍃𑌪𑌶𑌿𑌰𑍋𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑌹𑌨𑍍𑌮𑌖𑌾𑌰𑍍𑌥𑌮𑍍
𑌆𑌰𑍍𑌯𑍋𑌽𑌨𑍁𑌜𑌸𑍍𑌤𑌵 𑌗𑌜𑌾𑌯𑍁𑌤𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑍀𑌰𑍍𑌯𑌃 ।
𑌤𑍇𑌨𑌾𑌹𑍃𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌥𑌨𑌾𑌥𑌮𑌖𑌾𑌯 𑌭𑍂𑌪𑌾
𑌯𑌨𑍍𑌮𑍋𑌚𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌦𑌨𑌯𑌨𑍍 𑌬𑌲𑌿𑌮𑌧𑍍𑌵𑌰𑍇 𑌤𑍇 ॥ 9

பொருளில்லாத தரித்திரன் பெரும்பாலும் சவத்திற்குச் சமமானவன் என்று எல்லோராலும் கூறப்படுவது போல் கிருஷ்ணன் ஒரு கணம் பிரிந்திருப்பினும் ஜனங்களுக்கு வெறுப்புண்டாக்கத் தக்க ரூபமுடையவனாகிறான். 6

இந்தக் கிருஷ்ணனுடைய ஆதரவால், சுயம்வரம் நடக்கும்போது துருபத மகாராஜ னரண்மனைக்கு வந்தவர்களாகிய மன்மத விகாரங்கொண்ட அரசர்களின் தேஜஸ்ஸானது நான் வில்லை எடுத்தவுடன் அபகரிக்கப் பட்டது. வில்லை நாண் கயிறுடன் சேர்த்தவுடன் மச்சியயந்திரம் அடிபட்டது. திரௌபதியும் கிடைத்தாள். 7

ஆச்சரியம்! நான் கிருஷ்ணனுடைய சன்னிதியில் தேவக் கூட்டங்களுடனிருந்த இந்திரனை வல்லமையால் வென்று காண்டவ வனத்தை அக்கினிபகவானுக்குக் கொடுத்தேன். அற்புதமான சிற்பத்தால் உலகங்களை மோகிக்கச் செய்யும் மயனுடைய சபை நமக்குக் கிடைத்தது. உம்முடைய இராஜசூய யாகத்தில் அரசர்கள் திசைகளினின்று காணிக்கை யாகத் திரவியக் குவியலைக் கொண்டு வந்தார்கள். 8

பதினாயிரம் யானைகளுக்குச் சமமான உற்சாகம் பராக்கிரமம் இவைகளையுடையவனும் ஆரியனும் தங்களுக்கு அனுஜனுமாகிய பீமசேனன் இராஜசூய யாகம் நடப்பதன் பொருட்டு இராஜாக்களின் சிரங்தோய்ந்த கழல்களையுடைய ஜராசந்தனை கோபாலன் சன்னிதியில் வதம் செய்தான். அந்த ஜராசந்தன் காலபைரவரை யுத்தேசித்துச் செய்யும் யாகத்திற்காக (பசுக்களின் ஸ்தானத்தில்) கொண்டுவந்த அரசர்களை முகுந்தன் விடுவித்தார். அந்த அரசர்கள் உம்முடைய யாகத்திற்கு மிகுந்த காணிக்கை கொண்டு வந்தார்கள். 9

𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌵𑌾𑌧𑌿𑌮𑌖 𑌕𑍍𑌲𑍃𑌪𑍍𑌤 𑌮𑌹𑌾𑌭𑌿𑌷𑍇𑌕
　　𑌶𑍍𑌲𑌾𑌘𑌿𑌷𑍍𑌠 𑌚𑌾𑌰𑍁 𑌕𑌬𑌰𑌂 𑌕𑌿𑌤𑌵𑍈𑌸𑍍𑌸𑌭𑌾𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌯 𑌪𑌦𑌯𑍋𑌃 𑌪𑌤𑌿𑌤𑌾𑌶𑍍𑌰𑍁𑌮𑍁𑌖𑍍𑌯𑌾
　　𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌕𑍃𑌤 𑌹𑌤𑍇𑌶 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌕𑍇𑌶𑌾𑌃 ॥ 10

𑌯𑍋 𑌨𑍋 𑌜𑍁𑌗𑍋𑌪 𑌵𑌨𑌮𑍇𑌤𑍍𑌯 𑌦𑍁𑌰𑌨𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾
　　𑌦𑍍𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌸𑍋𑌽𑌰𑌿𑌰𑌚𑌿𑌤𑌾𑌦𑌯𑍁𑌤𑌾𑌗𑍍𑌰𑌭𑍁𑌗𑍍𑌯𑌃 ।
𑌶𑌾𑌕𑌾𑌨𑍍𑌨𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑍁𑌪𑌯𑍁𑌜𑍍𑌯 𑌯𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌂
　　𑌤𑍃𑌪𑍍𑌤𑌾𑌮𑌮𑌂𑌸𑍍𑌤 𑌸𑌲𑌿𑌲𑍇 𑌵𑌿𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌸𑌂𑌘𑌃 ॥ 11

(பகவானுடைய) பாதங்களில் (நமஸ்காரம் செய்யும்போது) சொட்டும் கண்ணீருடன் கூடிய முகமுடையவளும் உமக்கு மனைவியுமாகிய திரௌபதியின் இராஜசூய யாகத்தில் செய்த மகாபிஷேகத்தால் மிகவும் சிலாகிக்கத் தக்கதும் சுந்தரமுமான கேசபாசமானது மோசக்காரர்களாகிய துச்சாதனன் முதலியவர்களால் சபையில் அவிழ்த்து இழுக்கப் பட்டது. பகவான் அந்த துச்சாதனன் முதலியவர்களின் மனைவிகள் கணவனை இழக்கவும் அதனால் அவர்கள் அவிழ்ந்த கேசங்களை யுடையவர்களாகவும் செய்தார். 10

† பதினாயிரம் சீடர்களுடன் (ஒரே பந்தியில்) புசிக்கிற தூர்வாசமுனிவரைக் கொண்டு சத்ருவாகிய துரியோதனன் செய்த பெரிய கஷ்டத்தினின்று காக்கக் கிருஷ்ணபகவான் வனம்வந்து, மீதியிருந்த கீரையைப் புசித்தார். ஏனெனில் ஜலத்தில் ஸ்னானஞ்செய்த ரிஷிக்கூட்டம் மூவுலகமும் திருப்தியடைந்ததாக எண்ணிற்று. 11

---

† ஒரு சமயம் துரியோதனன் தூர்வாச முனிவருக்கு அன்னமிட்டான். அந்த தூர்வாசர் சந்தோஷித்துத் "துரியோதன! நீ வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்" ளென்றார். துரியோதனன் பாண்டவர்கள் நாசமடைய வேண்டுமென்பதை மனதிலெண்ணி "ஓ முனிவரே! எங்கள் வம்சத்திற்குத் தருமபுத்திரன் முக்கியமானவன். ஆகையால், அவனுடைய கிருகத்திற்குச் சென்று தாங்கள் இவ்விதமாகவே பதினாயிரம் சீடர்களுடன் அதிதியாகிப் போஜனம் செய்யவேண்டும். ஆனால் திரௌபதி பசியால் வருத்தமடையக் கூடாது. ஆகையால், அந்தப் பாஞ்சாலி புசித்தபின்பு அவர்கள் கிருகம் செல்ல வேண்டும்" என்று வரம்கேட்டான். தூர்வாச முனிவர் அவ்விதமே வரம் கொடுத்து யுதிஷ்டிரரிருக்குமிடம் வந்தார். தரும புத்திரர் மிகவும் ஆதரவுடன் "முனிவரே! சீடர்களுடன் மாத்தியான்னிகம் செய்துவாருங்க" ளென்று கேட்டுக் கொண்டார். முனிவர், சீடர்களுடன் நதிக்குச் சென்று அகமரிஷணஸ்னானம் (பாபங்களைப் போக்கும் மந்திரங்களை ஜபம் செய்து செய்யும் ஸ்னானம்) செய்வதற்காக ஜலத்தில் முழுகினார். அப்பொழுது பாஞ்சாலி கவலையுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஸ்மரித்தாள். கிருஷ்ணன் பக்தர்களிடத்துக் கொண்ட அன்பால் அந்தக்கணமே அங்குவந்தார். திரௌபதி தூர்வாசமுனிவர் வந்த வரலாற்றைத் தெரிவித்தாள். அப்போது பகவான் "நான் பசியுடனிருக்கிறேன், எனக்குப் போஜனம் கொடு" என்றார். திரௌபதி மிகவும் வெட்க மடைந்து, "சுவாமி! நான்போஜனம் செய்யும்வரையில் சூரிய பகவான் கொடுத்த அக்ஷய பாத்திரத்தின் அன்னம் குறையாம லிருக்கும். போஜன மளித்

𑌯𑌤𑍍𑌤𑍇𑌜𑌸𑌾 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌯𑍁𑌧𑌿 𑌶𑍂𑌲𑌪𑌾𑌣𑌿𑌰𑍍
𑌵𑌿𑌸𑍍𑌮𑌾𑌪𑌿𑌤𑌃 𑌸𑌗𑌿𑌰𑌿𑌶𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌦𑌾𑌨𑍍𑌨𑌿𑌜𑌂 𑌮𑍇 |
𑌅𑌨𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌚𑌾𑌹𑌮𑌮𑍁𑌨𑍈𑌵 𑌕𑌲𑍇𑌵𑌰𑍇𑌣
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌭𑌵𑌨𑍇 𑌮𑌹𑌦𑌾𑌸𑌨𑌾𑌰𑍍𑌧𑌮𑍍 || 12

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌮𑍇 𑌵𑌿𑌹𑌰𑌤𑍋 𑌭𑍁𑌜𑌦𑌣𑍍𑌡𑌯𑍁𑌗𑍍𑌮𑌂
𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌰𑌾𑌤𑌿𑌵𑌧𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 |
𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 𑌯𑌦𑌨𑍁𑌭𑌾𑌵𑌿𑌤𑌮𑌾𑌜𑌮𑍀𑌢
𑌤𑍇𑌨𑌾𑌹𑌮𑌦𑍍𑌯 𑌮𑍁𑌷𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌭𑍂𑌮𑍍𑌨𑌾 || 13

𑌯𑌦𑍍𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃 𑌕𑍁𑌰𑍁𑌬𑌲𑌾𑌬𑍍𑌧𑌿𑌮𑌨𑌨𑍍𑌤𑌯𑌾𑌨𑌮𑍍
𑌏𑌕𑍋 𑌰𑌥𑍇𑌨 𑌤𑌤𑌰𑍇𑌽𑌹𑌮𑌤𑍀𑌰𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌂 𑌬𑌹𑍁 𑌧𑌨𑌂 𑌚 𑌮𑌯𑌾 𑌪𑌰𑍇𑌷𑌾𑌂
𑌤𑍇𑌜𑌾𑌸𑍍𑌪𑌦𑌂 𑌮𑌣𑌿𑌮𑌯𑌂 𑌚 𑌹𑍃𑌤𑌂 𑌶𑌿𑌰𑍋𑌭𑍍𑌯𑌃 || 14

கிருஷ்ணனுடைய தேஜஸ்ஸால் சூலாயுதம் தரித்த வரும் மகிமை வாய்ந்த வருமாகிய மகாதேவன் யுத்தத்தில் பர்வதராஜ புத்திரியாகிய உமையுடன் ஆச்சரிய மடைந்து, தம்முடைய அஸ்திரமாகிய பாசுபதத்தை எனக்குக் கொடுத்தார். மற்றுமுள்ள லோக பாலர்களும் தங்கள் தங்களுடைய அஸ்திரங்களைக் கொடுத்தார்கள். நான் இந்தச் சரீரத்துடன் இந்திர லோகம் சென்று சிறந்த இந்திரன் ஆஸனத்தில் பாதியை யடைந்தேன். 12

அந்தச் சுவர்க்கத்திலேயே நான் சந்தோஷமாக விருக்கும்போது இந்திரனுடன் கூடிய தேவர்கள் அவர்களுடைய சத்துருக்களாகிய நிவாதகவசர்கள் என்னும் அசுரர்களைக் கொல்லுவதற்காகக் காண்டிவம் என்னும் வில்லை அடையாளமாக உடைய சிறந்த என்னிரண்டு கைகளிலும் தஞ்சம் புகுந்தார்கள். ஓ தருமபுத்திர! இந்தக் கிருஷ்ணனால் என்னிருகையும் மகிமை யடைந்தன. மகிமை தங்குவதற் கிடமானவரும் புருஷன் என்றசொல்லுக் குரியவருமாகிய அந்தக் கிருஷ்ணன் இப்பொழுது என்னை மோசஞ் செய்தார். 13

(உத்தரகோக் கிரகணத்தில்) தாண்டுவதற்கு முடியாத (பீஷ்மாசாரியார் முதலியவர் களாகிய) ஜல ஜந்துக்களை யுடையதும், (காம்பீரியத்தால்) முடிவில்லாததும், (பிரதேசத்தால்) அளவிறந்தது மாகிய கௌரவ சைன்னிய மாகிய

துப் போஜனம்செய்தாயிற்று. ஆகையால் அன்னமில்லை" என்றாள். ஆயினும் கிருஷ்ணன் நிர்ப்பந்தம் செய்து அக்ஷய பாத்திரத்தைக் கொண்டுவரச்சொன்னார். திரௌபதி கொண்டுவர அந்தப் பாத்திரத்தின் வாயில் ஒட்டியிருந்த கீரையை மட்டிலும் புசித்தார். பிறகு முனிவர்களைக் கூப்பிடு என்றார். பகவான் தன் வயிற்றில் உலகங்களை வைத்திருப்ப தாலும் அந்தப்பகவான் திருப்தி யடைந்தமை யாலும் தூர்வாச முனிவரும் அவர் சீடர்களும் திருப்தி யடைந்து திரௌபதி நமக்காகப் பாகம் செய்தது வீணாகும்; அதனால் பாஞ்சாலியின் கோபத்திற்குப் பாத்திரமாக வேண்டுமென்று பயந்து ஓடினார்கள் என்பது சரித்திரம்.

𑌯𑍋 𑌭𑍀𑌷𑍍𑌮 𑌕𑌰𑍍𑌣 𑌗𑍁𑌰𑍁 𑌶𑌲𑍍𑌯 𑌚𑌮𑍂𑌷𑍍𑌵𑌦𑌭𑍍𑌰
𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌰𑌥𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌸𑍁 ।
𑌅𑌗𑍍𑌰𑍇𑌚𑌰𑍋 𑌮𑌮 𑌵𑌿𑌭𑍋 𑌰𑌥𑌯𑍂𑌥𑌪𑌾𑌨𑌾𑌮𑍍
𑌆𑌯𑍁𑌰𑍍𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌚 𑌦𑍃𑌶𑌾 𑌸𑌹 𑌓𑌜 𑌆𑌰𑍍𑌚𑍍𑌛𑌤𑍍 ॥ 15

𑌯𑌦𑍍𑌦𑍋𑌷𑍍𑌷𑍁 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁 𑌭𑍀𑌷𑍍𑌮𑌕𑌰𑍍𑌣
𑌨𑌪𑍍𑌤𑍃 𑌤𑍍𑌰𑌿𑌗𑌰𑍍𑌤 𑌶𑌲𑍍𑌯 𑌸𑍈𑌨𑍍𑌧𑌵 𑌬𑌾𑌹𑍍𑌲𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 ।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌮𑍋𑌘𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌾𑌨𑌿
𑌨𑍋𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍁𑌰𑍍𑌨𑍃𑌹𑌰𑌿𑌦𑌾𑌸𑌮𑌿𑌵𑌾𑌸𑍁𑌰𑌾𑌣𑌿 ॥ 16

𑌸𑍌𑌤𑍍𑌯𑍇 𑌵𑍃𑌤𑌃 𑌕𑍁𑌮𑌤𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌦 𑌈𑌶𑍍𑌵𑌰𑍋 𑌮𑍇
𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌮𑌭𑌵𑌾𑌯 𑌭𑌜𑌨𑍍𑌤𑌿 𑌭𑌵𑍍𑌯𑌾𑌃 ।
𑌮𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌹𑌮𑌰𑌯𑍋 𑌰𑌥𑌿𑌨𑍋 𑌭𑍁𑌵𑌿𑌷𑍍𑌠𑌂
𑌨 𑌪𑍍𑌰𑌾𑌹𑌰𑌨𑍍𑌯𑌦𑌨𑍁𑌭𑌾𑌵𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌃 ॥ 17

கடலை, கிருஷ்ணனை உறவினராக அடைந்த நான் ஒருவனாகவே இரதத்துடன் தாண்டினேன். (சத்துருக்களால்) அபகரிக்கப் பட்ட, மிகுதியான கோதனத்தையும் (பசுமாடுகளை) திருப்பினேன். மகிமைக்கு இருப்பிடமும் விலை மதிக்கத் தகாததுமாகிய பகைவர்களுடைய இரத்தின கிரீடத்தையும் அவர்களுடைய தலையிலிருந்து (மோகனாஸ்திரத்தால் மோகப்படுத்தி) அபகரித்தேன்.

ஓ பிரபுவே! கிருஷ்ண பகவான் அநேக க்ஷத்திரிய சிரேஷ்டர்களின் இரதக் கூட்டங்களுடன் கூடிய பீஷ்மர், கர்ணன், துரோணாசாரியார், சல்லியன் இவர்களுடைய சேனைகளில் எனக்கு முன்னால் சாரதியாக இருந்து அந்தப் பீஷ்மாசாரியார் முதலிய சிறந்த ரதிகர்களின் ஆயுளையும் உற்சாக சக்திகளையும் மனோ பலத்தையும் சரீர பலத்தையும் பார்வையால் அபகரித்தார். 15

துரோணாசாரியார், பீஷ்மாசாரியார், கர்ணன், அசுவத்தாமன், திரிகர்த்த தேசத்திற்கதிபனாகிய சுசர்மா, (மத்ரதேசாதி பதியாகிய) சல்லியன், ஸிந்து தேசாதி பதியாகிய ஜயத்ரதன், (சந்தனுவின் பிராதாவாகிய) பாஹ்லீகன் முதலிய சூரர்கள் பிரயோகம் செய்த பழுதுபடாத மகிமையுடைய அஸ்திரங்கள் யாவும், ஹிரண்ணியகசிபுவினால் விடப்பட்ட அஸ்திரங்கள் நரசிம்ம தாஸனாகிய பிரஹ்லாதனை யணுகா திருந்ததுபோல், கிருஷ்ண பகவானுடைய கைகளால் இரக்ஷிக்கப்படும் என்னையும் தொடவில்லை. (அந்தக்கிருஷ்ண பகவான் என்னை மோசம் செய்தார்). 16

எந்தப் பகவானுடைய பாத பங்கயத்தை மகான்களாகிய முனிவர்கள் முத்தியடைவதன்பொருட்டுப் பணிகிறார்களோ, § (தண்ணீரில்லாமல்)களைப் படைந்த

---

§ ஜயத்ரதனுடைய வதத்தில் குதிரைகள் தண்ணீர் குடிக்காமல் களைப்பை யடைந்தன. உடனே அர்ச்சுனன் தேரினின்று பூமியிலிறங்கிப் பாணங்களால் பூமியைப் பிளந்து குதிரைகளைத் தண்ணீர் கொள்ளும்படி செய்தான் என்பதாம்.

𑌨𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑍁𑌦𑌾𑌰𑌰𑍁𑌚𑌿𑌰𑌸𑍍𑌮𑌿𑌤𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌨𑌿
𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌹𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌸𑌖𑍇 𑌕𑍁𑌰𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑍇𑌤𑌿 ।
𑌸𑌞𑍍𑌜𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌨𑌿 𑌨𑌰𑌦𑍇𑌵 𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌪𑍃𑌶𑌾𑌨𑌿
𑌸𑍍𑌮𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌲𑍁𑌠𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌮𑌮 𑌮𑌾𑌧𑌵𑌸𑍍𑌯 ॥ 18

𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌟𑌨𑌵𑌿𑌕𑌤𑍍𑌥𑌨𑌭𑍋𑌜𑌨𑌾𑌦𑌿
𑌷𑍍𑌵𑍈𑌕𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯 𑌋𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌲𑌬𑍍𑌧𑌃 ।
𑌸𑌖𑍍𑌯𑍁𑌃 𑌸𑌖𑍇𑌵 𑌪𑌿𑌤𑍃𑌵𑌤𑍍𑌤𑌨𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌸𑍇𑌹𑍇 𑌮𑌹𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌤𑌯𑌾 𑌕𑍁𑌮𑌤𑍇𑌰𑌘𑌂 𑌮𑍇 ॥ 19

𑌸𑍋𑌽𑌹𑌂 𑌨𑍃𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌰𑌹𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍇𑌨
𑌸𑌖𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌣 𑌸𑍁𑌹𑍃𑌦𑌾 𑌹𑍃𑌦𑌯𑍇𑌨 𑌶𑍂𑌨𑍍𑌯𑌃 ।
𑌅𑌧𑍍𑌵𑌨𑍍𑌯𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑌙𑍍𑌗 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍
𑌗𑍋𑌪𑍈𑌰𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑌬𑌲𑍇𑌵 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥ 20

𑌤𑌦𑍍𑌵𑍈 𑌧𑌨𑍁𑌸𑍍𑌤 𑌇𑌷𑌵𑌃 𑌸 𑌰𑌥𑍋 𑌹𑌯𑌾𑌸𑍍𑌤𑍇
𑌸𑍋𑌽𑌹𑌂 𑌰𑌥𑍀 𑌨𑍃𑌪𑌤𑌯𑍋 𑌯𑌤 𑌆𑌨𑌮𑌨𑍍𑌤𑌿 ।

குதிரைக ளுடையவனும் (அதற்காக) புவிமீதிருந்த வனுமாகிய என்னைப் பகைவர்கள் எந்த முகுந்தனுடைய மகிமையால் மனமயங்கி அடிக்காமலிருந் தார்களோ, அந்தப் பகவானும் ஈசுவரனும் ஞான மளிப்பவனு மாகிய கிருஷ்ணனை அறிவில்லாத நான் சாரதியாக வமர்த்திக் கொண்டேனே. 17

ஓ அரசனே! மாதவனுகிய கிருஷ்ணனுடைய கம்பீரமும் சுந்தரமு மான புன்னகையையும் பரிகாசப் பேச்சுகளையும் ஏபார்த்த! ஏ அர்ச்சுன! நண்ப! குரு வம்சத் தார்களைச் சந்தோஷப் படுத்துகிறவனே! எனவழைக்கும் மனோற்சாக மான சம்பாஷணைகளையும் நினைக்கிற என் இருதயம் கலங்குகின்றது. 18

சயனம், ஆசனம், சஞ்சாரம், தன் குணங்களை வர்ணித்தல், போஜனம் முதலியவைகளில் பேதமில்லா திருந்தும். (ஒருசமயம் தவறுதலைப் பார்த்து, ஓ நண்ப! நீ சத்திய முடையவனு? என்று திரஸ்காரம் செய்தேன். பகவான் மிகுதியான மகிமையுள்ளவ ராகையால், புத்தியில்லாத என் குற்றம் யாவற்றையும் நண்பனுடைய (குற்றத்தை) நண்பன்போலும் பிள்ளையி னுடையதை (குற்றத்தை) தந்தைபோலும் பொறுத் தருளினர். 19

ஓஇராஜ சிரேஷ்டனே! அவ்வளவு குற்றம் செய்த நான் புருஷோத்தமனும், நண்பனும் அன்பனும், சுகிருத்து மாகிய கிருஷ்ணனை விட்டுப் பிரிந்து அதனல் சூன்யமான மனமுடையவ னுனேன். ஓஅரசனே! கிருஷ்ண னுடைய அந்தப் புரஸ்திரீகளாகிய பதினுறுயிரம் பேர்களை இரக்ஷித்துக் கொண்டு வரும்போது, வழியில் அசத்துக்க ளாகிய கோபாலர்க ளிடம் பலமில்லாத ஸ்திரீ போல் அபஜய மடைந்தேன். 20

அரசர்கள் யாவரும் மதிக்கத் தக்க அதேவில்லு, அதே பாணங்கள் அதே இரதம், அதே குதிரைகளையுடைய அதே ரதிகன்தான் நான். இவையனைத்தும்

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌤𑌦𑌭𑍂𑌦𑌸𑌦𑍀𑌶𑌰𑌿𑌕𑍍𑌤𑌂
𑌭𑌸𑍍𑌮𑌨𑍍 𑌹𑍁𑌤𑌂 𑌕𑍁𑌹𑌕𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌿𑌵𑍋𑌪𑍍𑌤𑌮𑍂𑌷𑍍𑌯𑌾𑌮𑍍 ॥ 21

𑌰𑌾𑌜𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌨𑍁𑌪𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌹𑍃𑌦𑌾𑌂 𑌨𑌸𑍍𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌪𑍁𑌰𑍇 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑌾𑌪𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌘𑍍𑌨𑌤𑌾𑌂 𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑌿𑌥𑌃 ॥ 22

𑌵𑌾𑌰𑍁𑌣𑍀𑌂 𑌮𑌦𑌿𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌮𑌦𑍋𑌨𑍍𑌮𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌜𑌾𑌨𑌤𑌾𑌮𑌿𑌵𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌂 𑌚𑌤𑍁𑌃𑌪𑌞𑍍𑌚𑌾𑌵𑌶𑍇𑌷𑌿𑌤𑌾𑌃 ॥ 23

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣𑍈𑌤𑌦𑍍𑌭𑌗𑌵𑌤 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌿𑌥𑍋 𑌨𑌿𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌯𑌨𑍍𑌮𑌿𑌥𑌃 ॥ 24

𑌜𑌲𑍌𑌕𑌸𑌾𑌂 𑌜𑌲𑍇 𑌯𑌦𑍍𑌵𑌨𑍍𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌣𑍀𑌯𑌸𑌃 ।
𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌾𑌨𑍍𑌬𑌲𑌿𑌨𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍋 𑌬𑌲𑌿𑌨𑍋 𑌮𑌿𑌥𑌃 ॥ 25

𑌏𑌵𑌂 𑌬𑌲𑌿𑌷𑍍𑌠𑍈𑌰𑍍𑌯𑌦𑍁𑌭𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌭𑌿𑌰𑌿𑌤𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌯𑌦𑍂𑌨𑍍𑌯𑌦𑍁𑌭𑌿𑌰𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌂 𑌭𑍂𑌭𑌾𑌰𑌾𑌨𑍍𑌸𑌞𑍍𑌜𑌹𑌾𑌰 𑌹 ॥ 26

பகவானன்றிச் சாம்பலில் செய்த ஹோமம் போலும் மோசக்காரனிடம் கொடுத்த (பொருள் முதலிய) வைபோலும் களர்நிலத்தில் விதைத்த விதை போலவும், ஒரு கணத்தில் பயனற்ற தாயின. 21

ஓ அரசனே! சுகிருத்துக் களின் பட்டணத்தில் உம்மால் கேட்கப் பட்ட சுகிருத்துக்களுக்குள் பிராம்மண சாபத்தால் மூடத் தன்மையயடைந்து வருணன் கன்னிகையாகிய மதிரையைப் (சாராயம்) பானம் செய்து அதனுல் உண்டான மதத்தால் மனம் பேதித்து, ஒருவருக் கொருவர் (தகப்பன் பிள்ளை பிரா தாஎன்று எப்போதும்) அறியாதவர்கள்போல் (கோரை களாலும்) முஷ்டிகளாலும் அடித்துக்கொண்டதில் நான்கு ஐந்து சுகிருத்துக்கள்மீதியிருக்கின்றூர்கள்.

பெரும்பாலும் ஜனங்கள் ஒருவருக் கொருவர் அடித்துக் கொள்வதும், இகழ்ந்து கொள்வதும் மகிமை பொருந்திய ஈசுவர னுடைய லீலையாகவே முடிகின்றன. 24

ஓ அரசனே! ஜலத்தில் வாசமுடைய ஜந்துக்களுக்குள், பெரிய ஜந்துக்கள் அற்பமான ஜந்துக்களைத் தின்பதுபோல், வலுவுடை யவர்கள் வலுவில்லாதவர்களையும் இருவரும் வலுவுடைய வர்களாயின் ஒருவரை யொருவர் புசித்தும் வருகிறூர்கள். 25

இவ்வாறு பிரபுவாகிய கிருஷ்ணன் வலுவுடைய யாதவர்களைக் கொண்டு வலுவற்ற யாதவர்களையும் வலுவுடைய யாதவர்களைக் கொண்டு மற்றுமுள்ள வலுவுள்ள யாதவர்களையும் ஒருவரை யொருவர் (சங்கரிக்கும்படி செய்து) பூபாரத்தைப் போக்கினர். 26

देशकालार्थयुक्तानि हृत्तापोपशमानि च ।
हरन्ति स्मरतश्चित्तं गोविन्दाभिहितानि मे ॥ 27

॥ श्रीसूतः ॥

एवं चिन्तयतो जिष्णोः कृष्णपादसरोरुहम् ।
सौहार्देनातिगाढेन शान्तासीद्विमला मतिः ॥ 28

वासुदेवाङ्घ्र्यनुध्यानपरिबृंहितरंहसा ।
भक्त्या निर्मथिताशेषकषायधिषणोऽर्जुनः ॥ 29

गीतं भगवता ज्ञानं यत्तत्संग्राममूर्धनि ।
कालकर्मतमोरुद्धं पुनरध्यगमत्प्रभुः ॥ 30

विशोको ब्रह्मसम्पत्त्या संछिन्नद्वैतसंशयः ।
लीनप्रकृतिनैर्गुण्यादलिङ्गत्वादसम्भवः ॥ 31

निशम्य भगवन्मार्गं संस्थां यदुकुलस्य च ।
स्वःपथाय मतिं चक्रे निभृतात्मा युधिष्ठिरः ॥ 32

தேசத்திற்கும் காலத்திற்கும் ஒத்தவைகளும் பிரயோஜன முடையவை களும் மனதிலுள்ள தாபங்களைப் போக்குகிறவைகளுமாகிய கோவிந்தன் கூறிய வார்த்தைகளை நினைக்குந் தோறும் என்மனம் அவச மாகின்றது. 27

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

மிகுந்த சினேகத்தால் கிருஷ்ணனுடைய பாதார விந்தத்தைத் தியானித்து இவ்வாறு அர்ச்சுன னுடைய புத்தியானது (ஆனந்தத்தின் மிகுதியால்) சாந்தி ரசத்தையும் வைராக்கியத்தையு மடைந்தது. 28

பிரபுவாகிய அர்ச்சுனன் வாசு தேவருடைய சரணங்களைத் தியானம் செய்ததால் அதிகப்பட்ட பக்தியினால் காமம் முதலிய வாசனைகள் யாவும் ஒழிந்த புத்தியுடைய வனாகி, யுத்தமுனையில் கிருஷ்ண பகவான் உபதேசம் செய்ததும் (இப்பொழுது) காலத்தாலும் கருமத்தாலும் மோகத்தாலும் மறைந் திருப்பது மாகிய ஞானத்தை மறுபடி யடைந்தான். 29-30

அர்ச்சுனன், நான் பிரம்மமாகவே ஆகிறேன் என்ற ஞானத்தால், அவித்தை சத்துவம் முதலிய குணங்களொழிந்து லிங்கசரீரம் நாசமடையப் பெற்று அதனால் ஸ்தூலசரீரத்தி னின்று விடுபட்டவனாகி, இரண்டு (ஜீவாத்ம பரமாத் மாக்கள்) என்றபேதம் நீங்கி துக்கமற்றவனானான். 31

நிச்சலமான மனமுடைய தரும புத்திரர், கிருஷ்ண பகவான் சென்ற மார்க்கத்தையும் யாதவவம்சம் நாச மடைந்ததையும் கேட்டு சுவர்க்க லோகஞ் செல்ல எண்ணங் கொண்டார். 32

𑌪𑍃𑌥𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑍋𑌦𑌿𑌤𑌂
𑌨𑌾𑌶𑌂 𑌯𑌦𑍂𑌨𑌾𑌂 𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑌤𑌿𑌂 𑌚 𑌤𑌾𑌮𑍍 ।
𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑍇
𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌰𑌰𑌾𑌮 𑌸𑌂𑌸𑍃𑌤𑍇𑌃 ॥ 33

𑌯𑌯𑌾𑌹𑌰𑌦𑍍𑌭𑍁𑌵𑍋 𑌭𑌾𑌰𑌂 𑌤𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌵𑌿𑌜𑌹𑌾𑌵𑌜𑌃 ।
𑌕𑌣𑍍𑌟𑌕𑌂 𑌕𑌣𑍍𑌟𑌕𑍇𑌨𑍇𑌵 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑌾𑌪𑍀𑌶𑌿𑌤𑍁𑌃 𑌸𑌮𑌮𑍍 ॥ 34

𑌯𑌥𑌾 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌜𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾 𑌨𑌟𑌃 ।
𑌭𑍂𑌭𑌾𑌰𑌃 𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑍋 𑌯𑍇𑌨 𑌜𑌹𑍌 𑌤𑌚𑍍𑌚 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ॥ 35

𑌯𑌦𑌾 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌮𑌾𑌂 𑌮𑌹𑍀𑌂
𑌜𑌹𑍌 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑌵𑌣𑍀𑌯𑌸𑌤𑍍𑌕𑌥𑌃 ।
𑌤𑌦𑌾𑌹𑌰𑍇𑌵𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌸𑌾-
𑌮𑌭𑌦𑍍𑌰𑌹𑍇𑌤𑍁𑌃 𑌕𑌲𑌿𑌰𑌨𑍍𑌵𑌵𑌰𑍍𑌤𑌤 ॥ 36

𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌸𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍁𑌧𑌃
𑌪𑍁𑌰𑍇 𑌚 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑍇 𑌚 𑌗𑍃𑌹𑍇 𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ।
𑌵𑌿𑌭𑌾𑌵𑍍𑌯 𑌲𑍋𑌭𑌾𑌨𑍃𑌤𑌜𑌿𑌹𑍍𑌮𑌹𑌿𑌂𑌸𑌨𑌾-
𑌦𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌚𑌕𑍍𑌰𑌂 𑌗𑌮𑌨𑌾𑌯 𑌪𑌰𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 ॥ 37

பகவான் அடைந்த (மற்றவர்க ளறியக் கூடாத) கதியையும் யாதவர்களின் நாசத்தையும் அர்ச்சுனன் கூறக்கேட்ட குந்தியும் பகவானுகிய அதோக்ஷஜ ரிடம் தீவிரமான பக்தியால் மனத்தைச் செலுத்தி, ஜீவன் முக்தை யாயினள்.

(கருமத்தால்) ஜன்ம மில்லாத கிருஷ்ணன் முள்ளை முள்ளினல் நீக்குவது போல் பூமியின் பாரத்தை ஒழித்துச் சரீரத்தைத் தியாகம் செய்தார். ஈச்வா னுக்கு ஜன்மமும் மரணமும் சமமானது தான். (ஜன்மத்தால் சந்தோஷமென்ப தும் மரணத்தால் வருத்தமென்பது மில்லை). ஏனெனில் இவ்விரண்டும் அந்தப் பகவானுடைய இஷ்டத்தை யனுசரித் துண்டாவன.) 34

நடன் பலவித வேடம் தரித்தும் பின் விட்டு விடுவதுபோல், மத்ஸியம் முதலிய ரூபங்களைப் பகவான் அடைந்து பின் விடுகிறுர். அதுபோல், பூமியின் பாரத்தை யொழித்த இச்சரீரத்தையும் விட்டார். 35

சிரவணம் செய்வதற் குரிய ஸத்சரிதங்க ளுடையவரும், மகிமை பொருந் திபவரு மாகிய முகுந்தன் தன் சரீர முள்பட இந்தப் பூமியை விட்டவுடன் அதே தினத்தில் அஞ்ஞானம் சூழ்ந்த மனமுடை யோர்களுக்குக் கெடுதி செய்யக் காரணமாகிய கலி புருஷனுகத் தோன்றினுர். 36

அப்பொழுது வித்துவானுகிய தரும புத்திரர், நகரத்திலும் இராஜ்யத்தி லும் மனதிலும் அந்தக் கலியின், லோபம் (தனமுடையவன் பொருள் ஸத்பாத் திரத்தி லுபயோகப் படாமை) பொய் பேசல், கபடத்தன்மை, இம்சைமுதலிய அதருமங்கள் பரவுவதைப் பார்த்து, பரலோகஞ் செல்வதற்கு எண்ணங் கொ ண்டார். 37

ஸ்வராட் பௌத்ரம் விநயிநமாத்மந꞉ ஸுஸமம் குணை꞉ ।
தோயநீவ்யா꞉ பதிம் பூமேரப்யஷிஞ்சத்கஜாஹ்வயே ॥ 38

மதுராயாம் ததா வஜ்ரம் ஶூரஸேநபதிம் தத꞉ ।
ப்ராஜாபத்யாம் நிரூப்யேஷ்டிமக்நீநபிபதீஶ்வர꞉ ॥ 39

விஸ்ருஜ்ய தத்ர தத்ஸர்வம் துகூலவலயாதிகம் ।
நிர்மமோ நிரஹங்கார꞉ ஸஞ்சிந்நாஶேஷபந்தந꞉ ॥ 40

வாசம் ஜுஹாவ மநஸி தத்ப்ராண இதரே ச தம் ।
ம்ருத்யாவபாநம் ஸோத்ஸர்கம் தம் பஞ்சத்வே ஹ்யஜோஹவீத் ॥ 41

த்ரித்வே ஹுத்வா ச பஞ்சத்வம் தச்சைகத்வேऽஜுஹோந்முநி꞉ ।
ஸர்வமாத்மந்யஜுஹவீத்ப்ரஹ்மண்யாத்மாநமவ்யயே ॥ 42

சீரவாஸா நிராஹாரோ பத்தவாங்முக்தமூர்தஜ꞉ ।
தர்ஶயந்நாத்மநோ ரூபம் ஜடோந்மத்தபிஶாசவத் ॥ 43

ஸ்வராட்டாகிய யுதிஷ்டிரமகாராஜன் தமது குணங்களுக்குச் சமமானவனும் வணக்கமுள்ளவனும் பௌத்திரனுமாகிய பரீக்ஷித்தைச் சமுத்திரத்தை வஸ்திரமாகக் கொண்ட பூமிக் கதிபதியாக்கி அத்தினபுரியில் பட்டாபிஷேகம் செய்வித்தார். 38

பிறகு உக்ரசேனன் புத்திரனுகிய வஜ்ரனுக்கு மதுரையில் பட்டாபிஷேகம் செய்வித்தார். பிறகு சாமர்த்திய முள்ள தருமநந்தனர் பிராஜாபத்தியம் என்ற இஷ்டியைச் செய்து அக்கினியைத் தம்மிடம் ஆரோபணம் செய்து கொண்டார். 39

அந்த அக்கினியில் பட்டு வஸ்திரங்கள், கங்கணங்கள், முதலிய யாவற்றையும் போட்டார். மோகத்தையும் அகங்காரத்தையும் ஒழித்தார். (உபாதி முதலிய) பந்தங்கள் யாவையும் ஒழித்தார். 40

முனிவராகிய தருமபுத்திரர், வாக்கு முதலிய இந்திரியங்களை மனதிலும் மனதைப் பிராணனிலும் பிராணனை அபானத்திலும் அபானத்தை (அதன்வியாபார மாகிய) விடுதலையுடன் (அபானத்தின் அதிஷ்டான தேவதை யாகிய) மிருத்தியுவிலும் அந்த மிருத்தியுவை (பூமி முதலிய) ஐந்து பூதங்களின் விகாரமாகிய சரீரத்திலும் பிறகு அந்தச் சரீரத்தை (சத்வம் முதலிய) மூன்று குணங்களிலும் அந்த மூன்று குணங்களையும் ஒன்ருகிய வித்தையிலும் எல்லாவற்றையும் ஆரோபணம் செய்வதற்குக் காரணமாகிய அவித்தையை ஜீவனிடத்திலும் அந்த ஜீவாத்மாவை கூடஸ்தனுகிய பிர்மத் திடத்திலும் ஹோமம் செய்தார். (அதாவது பாவனை செய்தார்). 41-42

பிறகு தருமபுத்திரர் மாவுரியுடுத்து, ஆகாரத்தை வெறுத்து மௌன விருதம்பூண்டு தலைமயிரை யவிழ்த்துக் கொண்டு ஜடன், பைத்தியங் கொண்டவன்,

𑌅𑌨𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋 𑌨𑌿𑌰𑌗𑌾𑌦𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌬𑌧𑌿𑌰𑍋 𑌯𑌥𑌾 ।
𑌉𑌦𑍀𑌚𑍀𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶𑌾𑌶𑌾𑌂 𑌗𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ 44

𑌹𑍃𑌦𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌯𑌤𑍋 𑌗𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑌮𑌨𑍁𑌨𑌿𑌰𑍍𑌜𑌗𑍍𑌮𑍁𑌰𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌃 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌃 ॥ 45

𑌕𑌲𑌿𑌨𑌾𑌽𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾 𑌭𑍁𑌵𑌿 ।
𑌤𑍇 𑌸𑌾𑌧𑍁𑌕𑍃𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ 46

𑌮𑌨𑌸𑌾 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌰𑍍𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌚𑌰𑌣𑌾𑌂𑌬𑍁𑌜𑌮𑍍 ।
𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌦𑍍𑌰𑌿𑌕𑍍𑌤𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌧𑌿𑌷𑌣𑌾𑌃 𑌪𑌰𑍇 ॥ 47

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌦𑍇 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑌤𑌯𑍋 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌅𑌵𑌾𑌪𑍁𑌰𑍍𑌦𑍁𑌰𑌵𑌾𑌪𑌾𑌂 𑌤𑍇 𑌅𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ 48

𑌵𑌿𑌧𑍂𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌿𑌰𑌜𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍈𑌵 𑌹𑌿 ।
𑌵𑌿𑌦𑍁𑌰𑍋𑌽𑌪𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌸𑍇 𑌦𑍇𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥ 49

பிசாசு இவர்கள்போல் தன்னுருவத்தை எல்லோருக்கும் காண்பித்துக்கொண்டு (தம்பிமார்களை) எதிர்பாராமல் செவிடன்போல் (ஒன்றையும்) கேளாமல் மனதில் பரப்பிர்மத்தைத் தியானம் செய்துகொண்டு மகாத்மாக்கள்(திருதாஷ்டிரர் முதலியவர்கள்) முந்திச் சென்ற வடதிசையில் பிரவேசித்தார். அங்குச் சென்றவர்கள் மறுபடி சம்சார பந்தத்தை அடைவதில்லை. சகோதரர்களாகிய (பீமன் முதலிய) யாவரும் நிச்சயம் செய்துகொண்டு அந்தத் தருமநந்தனரையே தொடர்ந்தார்கள். 43-45

அதருமத்திற்குத் தோழனாகிய கலியின் கண்களில் தென்பட்டவர்களும் (அவனால்)தீண்டப்பட்டவர்களுமாகிய பூமியிலுள்ள ஜனங்கள், தருமம்முதலிய புருஷார்த்தங்களைச் சரிவரச் செய்து நாராயணனுடைய சரணாரவிந்தமே தங்களுக்கு ஆதரவானதென்றறிந்து அந்தச்சரண கமலங்களை மனதில் தியானம் செய்தார்கள். கன்மஷம் நீங்கிய யோகிகளுக் கிருப்பிடமாகிய அந்த நாராயணனுடைய பாதகமலத்தில் ஒருமைப்பட்ட அறிவையுடையவர்களும், அந்தச் சரணாரவிந்தத்தின் தியானத்தால் விருத்தியடைந்த பக்தியால் பரிசுத்தமான புத்தியுடையவர்களுமாகிய மற்றுமுள்ள மகாத்மாக்கள், விஷயபோகங்களில் மனங்கொண்ட அசத்துக்களடைதற்கரிய நற்கதியைத்தோஷமற்ற ஆத்மாவுடன் அடைந்தார்கள். 46-48½

ஞானியாகிய விதுரரும் கிருஷ்ண பகவானிடம் மனதைச் செலுத்தியவராய், பிரபாசம் என்னும் புண்ய தீர்த்தத்தில் சரீரத்தைவிட்டு அந்தக் கிருஷ்ணனிடமே பற்றுக்கொண்டு (அப்பொழுது தன்னை யழைக்கவந்த) பிதிர்க்களுடன் தன்னிருப்பிடம் (யமனுடைய அதிகார ஸ்தானம்) சென்றார். 49½

க்ருஷ்ணாவேஶேந தச்சித்த: பித்ருபி: ஸ்வக்ஷயம் யயௌ |
த்ரௌபதீ ச ததாஜ்ஞாய பதீநாமநபேக்ஷதாம் || 50

வாஸுதேவே பகவதி ஹ்யேகாந்தமதிராப தம் ||
யஶ்ஶ்ரத்தயைதத் பகவத்ப்ரியாணாம்
பாண்டோஸ்ஸுதாநாமிதி ஸம்ப்ரயாணம் |
ஶ்ருணோத்யலம் ஸ்வஸ்த்யயநம் பவித்ரம்
லப்த்வா ஹரௌ பக்திமுபைதி ஸித்திம் || 51

இதி ஸ்ரீமத்பாகவதே ப்ரதமஸ்கந்தே பஞ்சதஶோऽத்யாய:

|| ஸ்ரீஸூத: ||

தத: பரீக்ஷித்த்விஜவர்யஶிக்ஷயா
மஹீம் மஹாபாகவதஶ்ஶஶாஸ ஹ |
யதா ஹி ஸூத்யாமபிஜாதகோவிதா:
ஸமாதிஶந்விப்ர மஹாகுணஸ்ததா || 1
ஸ உத்தரஸ்ய தநயாமுபயேம இராவதீம் |
ஜநமேஜயாதீம்ஶ்சதுரஸ்தஸ்யாமுத்பாதயத்ஸுதாந் || 2

அப்பொழுது திரௌபதி தன் பதிகளுக்குத் தன்னிடம் விருப்ப மில்லாமைகண்டு பகவானுகிய வாசுதேவரிடம் தீவிரமான புத்தியைச்செலுத்தி அந்தப் பகவானே அடைந்தாள். 50

மிகவும் மங்களத்தைக் கொடுப்பதும் பரிசுத்தமுமான இந்தப்பகவான் திவ்விய பதமடைந்த வரலாறையும் பாண்டு குமாரர்கள் யாத்திரை செய்ததையும் சிரத்தையுடன் கேட்பவன் முகுந்தனிடம் பக்தியை யடைந்து சித்தி பெறுவான். 51

15-வது அத்தியாயம் முற்றிற்று.

16-வது அத்தியாயம்.

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

ஓ சௌனக முனிவரே! பிறகு மஹா பாகவதனுகிய பரீக்ஷித்து மகாராஜன் பிராம்மண சிரேஷ்டர்களின் உபதேசத்தால் பூமியைப் பரிபாலித்தான். அவ்வரசன் ஜனனமான போது சோதிட சாத்திர வல்லவர்கள் எவ்விதம் கூறினுர்களோ அவ்விதமே சகல குணங்களையு முடையவனுக விருந்தான். 1

அந்த மகாராஜன் உத்தரன் கன்னிகை யாகிய இராவதியை மணம் புரிந்தான். அந்த இராவதியிடம் இவ்வரசனுக்கு ஜனமேஜயன் முதலிய நான்கு குமாரர்க ளுண்டானுர்கள். 2

𑌆𑌜𑌹𑌾𑌰𑌾𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌂 𑌭𑍂𑌰𑌿𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌨𑍍 ।
𑌶𑌾𑌰𑌦𑍍𑌵𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌾 𑌯𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌿𑌗𑍋𑌚𑌰𑌾𑌃 ॥ 3

𑌨𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹𑍌𑌜𑌸𑌾 𑌵𑍀𑌰𑌃 𑌕𑌲𑌿𑌂 𑌦𑌿𑌗𑍍𑌵𑌿𑌜𑌯𑍇 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ।
𑌨𑍃𑌪𑌲𑌿𑌙𑍍𑌗𑌧𑌰𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌂 𑌗𑍋𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 𑌪𑌦𑌾 ॥ 4

॥ 𑌶𑍍𑌰𑍀𑌶𑍌𑌨𑌕𑌃 ॥

𑌕𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌨𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌕𑌲𑌿𑌂 𑌦𑌿𑌗𑍍𑌵𑌿𑌜𑌯𑍇 𑌨𑍃𑌪𑌃 ।
𑌨𑍃𑌦𑍇𑌵𑌚𑌿𑌹𑍍𑌨𑌧𑍃𑌕𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌕𑍋𑌽𑌸𑍌 𑌗𑌾𑌂 𑌯𑌃 𑌪𑌦𑌾𑌹𑌨𑌤𑍍 ॥ 5

𑌤𑌤𑍍𑌕𑌥𑍍𑌯𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌯𑌦𑌿 𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑌥𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑌾𑌸𑍍𑌯 𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌲𑌿𑌹𑌾𑌂 𑌸𑌤𑌾𑌮𑍍 ॥ 6

𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑍈𑌰𑌸𑌦𑌾𑌲𑌾𑌪𑍈𑌰𑌾𑌯𑍁𑌷𑍋 𑌯𑌦𑌸𑌦𑍍𑌵𑍍𑌯𑌯𑌃 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌷𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑌙𑍍𑌗 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌾𑌮𑍍 ॥ 7

𑌇𑌹𑍋𑌪𑌹𑍂𑌤𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌶𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।

அந்தப் பரீக்ஷித்து, கிருபாசாரியாரைக் குருவாக அடைந்து, கங்கா நதிக் கரையில் அதிக தக்ஷிணைகளுடன் மூன்று அசுவமேதங்களைச் செய்தார். அந்த யாகங்களில் தேவர்கள் பிரத்தியக்ஷமாக வந்தார்கள். 3

வீரனாகிய பரீக்ஷித்து மகராஜன் திக்விஜயம் செய்து வரும்போது ஓரிடத்தில் காலால் ஆண் பசு, பெண் பசு இரண்டையும் புதைப்பவனும் சூத்திரனும் இராஜவேடம் பூண்டவனுமாகிய கலியைத் தன் பராக்கிரமத்தால் நிக்கிரகம் செய்தான். 4

ஸ்ரீசௌனக முனிவர் வினவுகிறார்.

பரீக்ஷித்து மகராஜன் திக்விஜயம் செய்யும் போது எதற்காகக் கலியை நிக்கிரகம் செய்தார்? இராஜ வேடம் தரித்த இந்தச் சூத்திரன் காலால் பசுவை இம்சித்ததால் மிகவும் அசுத்தனாகிறான். 5

மகா பாக்கியம் செய்த சூதபுராணிகரே! (கலியை நிக்கிரகம் செய்த) அந்த வரலாறானது, விஷ்ணுவின் சரித்திரத்தைச் சார்ந்ததாயினும் அல்லது விஷ்ணுவின் பாத கமலங்களில் பெருகும் மகரந்தங்களைப் புசிக்கும் சாதுக்களின் வரலாறைச் சார்ந்ததாயினும் சொல்ல வேண்டும். 6

மற்றுமுள்ள வீண் சம்பாஷணைகளால் என்ன பிரயோஜனம்? ஏனெனில் ஆயுளானது வீணே செலவாகிய தன்றோ? 6½

ஓ சூதபுராணிகரே! அற்பமான ஆயுளுடையவர்களும் மரணமடையக் கூடியவர்களும் (ஆயினும்) மோக்ஷத்தை விரும்புகிறவர்களுமாகிய மானிடர்

𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌾𑌵𑌦𑍍𑌯𑌾𑌵𑌦𑌾𑌸𑍍𑌤 𑌇𑌹𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ॥ 8

𑌏𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌹𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌹𑍂𑌤𑌃 𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌅𑌹𑍋 𑌨𑍃𑌲𑍋𑌕𑍇 𑌪𑍀𑌯𑍇𑌤 𑌹𑌰𑌿𑌲𑍀𑌲𑌾𑌮𑍃𑌤𑌂 𑌵𑌚𑌃 ॥ 9

𑌮𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌵𑌯𑍋 𑌮𑌨𑍍𑌦𑌾𑌯𑍁𑌷𑌶𑍍𑌚 𑌵𑍈 ।
𑌨𑌿𑌦𑍍𑌰𑌯𑌾 𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌨𑌕𑍍𑌤𑌂 𑌦𑌿𑌵𑌾 𑌚 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ 10

॥ 𑌶𑍍𑌰𑍀 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌯𑌦𑌾 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑍇𑌽𑌵𑌸𑌤𑍍
𑌕𑌲𑌿𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌜𑌚𑌕𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍇 ।
𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌮𑌨𑌤𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌤𑌤𑌃
𑌶𑌰𑌾𑌸𑌨𑌂 𑌸𑌂𑌯𑍁𑌗𑌶𑍌𑌣𑍍𑌡𑌿𑌰𑌾𑌦𑌦𑍇 ॥ 11

களுக்கு § மரணத்தைக் கொடுக்கும் மகிமை பொருந்திய நமனை இந்த ஸத்ர யாகத்தில் பசுவை இம்சிப்பதற்கு அழைத்து வந்திருக்கிறோம். இந்த யமதருமராஜன் இங்கிருக்கும் வரையில் எவனும் மரணமடைய மாட்டான். 7-8

இந்த மானிட லோகத்தில் பகவானுடைய லீலையாகிய அமுதங்கலந்த சொற்களை யனுபவிக்க வேண்டு மென்பதற்காகவே மகாரிஷிகள் மகிமை தங்கிய இந்த யமதருமராஜனை அழைத்து வந்தார்கள். 9

சோம்ப லுடையவனும் புத்தியீனனும் அற்பமான ஆயுளை யுடையவனுமாகிய மானிடனுடைய ஆயுளானது, இரவில் நித்திரையாலும் பகலில் பயனற்ற மற்றச் செய்கைகளாலும் வீணாகிறது. 10

ஸ்ரீசூதபுராணிகர் கூறுகிறார்.

குரு தேசத்திலும் ஜாங்கல தேசத்திலும் வசித்துவரும் பரீக்ஷித்து மகாராஜன் தன்னுடைய சேனைகளால் பரிபாலிக்கப்படும் தேசங்களில் அதிகம் ¶ பிரிய மில்லாததும் சிறிது பிரயமுள்ளதுமாகிய கலி பிரவேசித்தானென்னும் வரலாறைக் கேட்டு யுத்தம் செய்வதில் திறமையுள்ள அவ்வரசன் வில்லைத் தரித்தான். 11

---

§ மானிடர்களுக்கோ மரணமுண்டு. அவர்கள் முத்தியை விரும்புகிறார்கள். அந்த முத்தியானது ஹரிகதாம்ருத பானத்தைத் தவிர வேறு எந்த உபாயத்தாலும் கிடைப்பதரிது. அந்த ஹரி கதையைக் கேட்பதற்குள் மரணமேற் படாமலிருக்க உபாயம் வேண்டும். இந்த ஸத்ர யாகத்திற்கு யத்தினம் செய்து, இதில் பசுக்களை இம்சிப்பதற்காக யமனை அழைத்தால் யமன் வந்து இந்தக்காரியம் முடியும் வரையில் யாரும் மரண மடையார்கள். அந்தச் சமயத்தில் விஷ்ணு கதாமிருத பானம் செய்யலாம். அதனால் மோக்ஷத்தை யடையலாம் என்று முயற்சித் திருக்கிறோம். ஆகையால் நாராயணன் கதையைச் சொல்ல வேண்டு மென்பது 7-வது 9-வது வரையிலுள்ள கருத்து.

¶ (மிகவும் பிரியமில்லாதது சிறிதுபிரிய முடையது என்றதால் கலி பிரவேசித்தமையால் தீங்குண்டாகு மென்பது கருதிப் பிரியமின்மையும் யுத்தம் நேருமென்பதும் நோக்கிப் பிரியமும் என்பது கருத்து.)

𑌸𑍍𑌵𑌲𑌂𑌕𑍃𑌤𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌯𑍋𑌜𑌿𑌤𑌂
𑌰𑌥𑌂 𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌧𑍍𑌵𑌜𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑍍 ।
𑌵𑍃𑌤𑍋 𑌰𑌥𑌾𑌶𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌯𑌾
𑌸𑍍𑌵𑌸𑍇𑌨𑌯𑌾 𑌦𑌿𑌗𑍍𑌵𑌿𑌜𑌯𑌾𑌯 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌃 ॥ 12

𑌭𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌂 𑌕𑍇𑌤𑍁𑌮𑌾𑌲𑌂 𑌚 𑌭𑌾𑌰𑌤𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍂𑌨𑍍 ।
𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 𑌜𑌗𑍃𑌹𑍇 𑌬𑌲𑌿𑌮𑍍 ॥ 13

𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌶𑍃𑌣𑍍𑌵𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌗𑍀𑌯𑌮𑌾𑌣𑌂 𑌚 𑌯𑌶𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌸𑍂𑌚𑌕𑌮𑍍 ॥ 14

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑌮𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑍍𑌨𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍇𑌜𑌸𑌃 ।
𑌸𑍍𑌨𑍇𑌹𑌂 𑌚 𑌵𑍃𑌷𑍍𑌣𑌿𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌕𑍇𑌶𑌵𑍇 ॥ 15

𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍁𑌜𑍍𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌮𑌹𑌾𑌧𑌨𑌾𑌨𑌿 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌦𑌦𑍌 𑌹𑌾𑌰𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌮𑌨𑌾𑌃 ॥ 16

𑌸𑌾𑌰𑌥𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌷𑌦𑌸𑍇𑌵𑌨𑌸𑌖𑍍𑌯𑌦𑍌𑌤𑍍𑌯
𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑌾𑌨𑍁𑌗𑌮𑌨𑌸𑍍𑌤𑌵𑌨𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌾𑌨𑍍 ।

அந்தப் பார்த்திபன், நன்றாய் அலங்கரிக்கப் பெற்ற சியாமளவர்ண முடைய குதிரைகள் பூட்டியதும் சிங்கத் துவஜமுடையது மாகிய தேரின் மீதேறிக் கொண்டு இரதம் யானை குதிரை பதாதிகளுடன்கூடிய தன்சேனையுடன் பட்டணத்திலிருந்து திக்விஜயத்திற்காகப் புறப்பட்டான். 12

பத்ராச்வம், கேதுமாலம், பாரதம், உத்தர குருக்ஷேத்திரம், கிம்புருஷம் முதலிய வருஷங்களை ஜயித்து (வெகு திரவியங்களின் வரவு ரூபமான) பூஜையை அடைந்தான். 13

அங்கங்கு, மகிமையைக் குறிப்பிக்கும் மகாத்மாக்களாகிய தன் முன்னோர்களின் கீர்த்தியையும் அசுவத்தாமனுடைய அஸ்திர தேஜஸ்ஸால் தான் காக்கப்பட்டதையும் யாதவர்களுக்கும் பாண்டவர்களுக்குமுள்ள நேசத்தையும் அந்த யாதவ பாண்டவர்களுக்குக் கேசவனிடம் உள்ள பக்தியையும் அநேகர் கானம்செய்யக் கேட்டு இந்தப் பரீக்ஷித்து மகாராஜன் மிகுந்த சந்தோஷமடைந்து பிரீதியால் மலர்ந்த நேத்திரமும் நல்ல மனமுமுடையவனாகி விலைமதிக்கவொண்ணாத வஸ்திரங்களையும் ஹாரங்களையும் கானம் செய்தவர்களுக்குக் கொடுத்தான். 14-16

சிநேகமுள்ள பாண்டவர்களிடம் சாரத்தியம் செய்தல், சபையில் அதிபதியாயிருத்தல், பாண்டவர்களிட்டவேலைகளைச் செய்தல், தோழமை, தூதுநடத்தல், இரவில் கத்தியைக் கையில்பிடித்துக்கொண்டு விழித்திருத்தல், கூடச்செல்லல் பாண்டவர்களின் பெருமையைப் பற்றி ஸ்தோத்திரஞ் செய்தல் இவைகளையும் விஷ்ணுவாகிய கிருஷ்ணபகவான் உலகத்தார் யாவராலும் நமஸ்கரிக்கப்

𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑍇𑌷𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌷𑍁 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨𑍃𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 ॥ 17

𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌂 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌵𑌹𑌮𑍍 ।
𑌨𑌾𑌤𑌿𑌦𑍂𑌰𑍇 𑌕𑌿𑌲𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌯𑌦𑌾𑌸𑍀𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮𑍇 ॥ 18

𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌦𑍈𑌕𑍇𑌨 𑌚𑌰𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌮𑍁𑌪𑌲𑌭𑍍𑌯 𑌗𑌾𑌮𑍍 ।
𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑍁𑌵𑌦𑌨𑌾𑌂 𑌵𑌿𑌵𑌤𑍍𑌸𑌾𑌮𑌿𑌵 𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ॥ 19

॥ 𑌧𑌰𑍍𑌮𑌃 ॥

𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑌦𑍍𑌰𑍇𑌽𑌨𑌾𑌮𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑌿 𑌮𑍍𑌲𑌾𑌯𑌤𑍇𑌷𑌨𑍍𑌮𑍁𑌖𑍇𑌨 ।
𑌆𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌭𑌵𑌤𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑌾𑌧𑌿𑌂 𑌦𑍂𑌰𑍇 𑌬𑌨𑍍𑌧𑍁𑌂 𑌶𑍋𑌚𑌸𑌿 𑌕𑌞𑍍𑌚𑌨𑌾𑌮𑍍𑌬 ॥

𑌪𑌾𑌦𑍈𑌰𑍍𑌨𑍍𑌯𑍂𑌨𑌂 𑌶𑍋𑌚𑌸𑌿 𑌮𑍈𑌕𑌪𑌾𑌦
𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌷𑌲𑍈𑌰𑍍𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑍍 ।
𑌆𑌹𑍋 𑌸𑍁𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌹𑍃𑌤𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌗𑌾𑌨𑍍
𑌪𑍍𑌰𑌜𑌾 𑌉𑌤 𑌸𑍍𑌵𑌿𑌨𑍍𑌮𑌘𑌵𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌷𑌤𑌿 ॥ 21

படுந்தன்மையுள்ளவர் என்பதையும் கேட்ட பரீக்ஷித்து மகாராஜன் விஷ்ணுவின் சரணாரவிந்தங்களில் பக்தியைச் செலுத்தினன். 17

ஓ சௌனக முனிவரே! தினந்தோறும் அந்த அரசன் முன்னோர்களின் வழியை யனுசரித்து வரும்போது வெகு சீக்கிரமாக உண்டான ஆச்சரியத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். 18

(விருஷப ரூபங்கொண்டு) ஓரே பாதத்துடன் சஞ்சரிக்கும் தரும தேவதையானது, குழந்தையை இழந்த தாயைப்போல், கண்ணீர் பெருகும் முகமுடையவளும் ஒளியற்றவளு மாகிய (பசுவின் உருவங்கொண்ட) பூதேவியிடம் சென்று கேட்கிறது. 19

தருமதேவதை கூறுகிறது.

ஓ மங்களசுவரூப முடையவளே! உன்சரீரம் ஆரோக்கிய முடையதாக விருக்கிறதா? முகம் வாடி யிருப்பதுமன்றி ஒளியிழந்தவ ளாகக் காண்கிறாய்; நீ மனதில் ஏதோவருத்தங் கொண்டிருப்பதாக நினைக்கிறேன். அம்ம! தேசாந்தரத்தி லிருக்கும் குழந்தையை நினைத்து வருத்தப்படுகிறாயா? 20

(மூன்றுபாதங்கள்) குறைந்து ஓரேபாத முடையவ ளாகிய என்னைப்பற்றி வருத்த முறுகிறாயா? அல்லது இனி தருமமில்லாத அற்ப அரசர்கள் உன்னைப் பரிபாலிக்கப் போகிறார்க ளென்று பரிதாப மடைகிறாயா? அல்லது (உலகில் அந்தணர்கள் அதருமமாக யாகம்செய்யப் போகிறதால்) தேவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஹவிர்ப் பாகங்களை அசுரர்கள் அடையப் போகிறார்க ளென்று துன்பப்படுகிறாயா? அல்லது இந்திரன் மழை பொழியாமலிருந்து பிரஜைகள் பரிதாபமடைவார்க ளென்று கவலைப் படுகிறாயா? 21

𑌅𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯 𑌉𑌰𑍍𑌵𑌿 𑌬𑌾𑌲𑌾𑌨𑍍
𑌶𑍋𑌚𑌸𑍍𑌯𑌥𑍋 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍈𑌰𑌿𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌨𑍍 ।
𑌵𑌾𑌚𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍁𑌲𑍇 𑌕𑍁𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍇 𑌰𑌾𑌜𑌕𑍁𑌲𑍇 𑌕𑍁𑌲𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 ॥ 22

𑌕𑌿𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑍍 𑌕𑌲𑌿𑌨𑍋𑌪𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍
𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌾𑌤𑍈𑌰𑌵𑌰𑍋𑌪𑌿𑌤𑌾𑌨𑌿 ।
𑌇𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌵𑌾 𑌶𑌨𑌪𑌾𑌨𑌵𑌾𑌸𑌃
𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑍍𑌯𑌵𑌾𑌯𑍋𑌨𑍍𑌮𑍁𑌖𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑌮𑍍 ॥ 23

𑌯𑌦𑍍𑌵𑌾𑌮𑍍𑌬 𑌤𑍇 𑌭𑍂𑌰𑌿𑌭𑌰𑌾𑌵𑌤𑌾𑌰𑌕𑍃𑌤𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌯 𑌹𑌰𑍇𑌰𑍍𑌧𑌰𑌿𑌤𑍍𑌰𑌿 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌮𑌰𑌤𑍀 𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌾
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌾𑌨𑌿 ॥ 24

𑌇𑌦𑌂 𑌮𑌮𑌾𑌚𑌕𑍍𑌷𑍍𑌵 𑌤𑌵𑌾𑌧𑌿𑌮𑍂𑌲𑌂 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑍇 𑌯𑍇𑌨 𑌵𑌿𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌸𑌿 ।
𑌕𑌾𑌲𑍇𑌨 𑌵𑌾 𑌤𑍇 𑌬𑌲𑌿𑌨𑌾𑌂 𑌬𑌲𑍀𑌯𑌸𑌾
𑌸𑍁𑌰𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌂 𑌕𑌿𑌂 𑌹𑍃𑌤𑌮𑌮𑍍𑌬 𑌸𑍌𑌭𑌗𑌮𑍍 ॥ 25

ஓ பூதேவி! ஸ்திரீகளைக் கணவன்மார்கள் காப்பாற்றார்கள் என்றும் குழந்தைகளைத் தந்தைகள் போஷியார்கள் என்றும் அல்லது தந்தைகளே புருஷமாமிசம் தின்னும் கருணை யில்லாதவர்க (இராக்ஷசர்க) ளைப்போல் குழந்தைகளைத் துன்பப் படுத்துவார்க ளென்றும் அல்லது சரஸ்வதீ தேவிக் குண்டாகும் சங்கடத்தைச் சிந்தித்துக் கொண்டும் அல்லது பிர்ம குலத்திற்பிறந்த பிராம்மணோத்தமர்கள் கெட்ட ஆசாரமுள்ளதும் பிராம்மண விசுவாச மில்லாததுமாகிய இராஜாங்கத்தில் சேவிக்குப் போகிறார்க ளென்றும் விசன மடைகிறாயா?

அற்ப க்ஷத்திரியர்கள் கலியால் வியாபிக்கப் படுகிறார்க ளென்றும் அந்த க்ஷத்திரியர்கள் இராஜ்யங்களை இழக்கப் போகிறார்க ளென்றும் பிராணிகள் கண்ட விடங்களில் சயனம் ஆஸனம் போஜனம் பானம் ஸ்திரீசங்கமம் இவைகளை (விதிவிலக்கின்றி)ச் செய்யப் போகிறார்க ளென்றும் கவலைப்படுகிறாயா? 23

அம்மா பூதேவியே! அல்லது உன்னுடைய மிகுந்த பாரத்தைக் குறைக்க அவதாரம் செய்தவரும் (இப்போது) அந்தர்த்தானமடைந்த வருமாகிய கிருஷ்ணபகவானுடைய மோக்ஷம் என்ற உயர்ந்த தன்மையையும் பழிக்கும் சரித்திரங்களை நினைத்துக்கொண்டு(அந்தக் கிருஷ்ணனைப்)பிரிந்துவருத்த மடைகிறாயா? 24

அம்மா! அல்லது பலசாலிகளுக்குள் மிகுந்த பலமுள்ளவனாகிய காலன் தேவர்களாலும் பூசிக்கப்படும் உன்னுடைய சௌபாக்கியத்தை அபகரித்துக் கொண்டானா? என்ன காரணத்தால் வருத்தப்படுகிறாய்? ஓ பூதேவியே! உன் மனதிற்குண்டான வருத்தத்திற்குக் காரணத்தை எனக்குச் சொல்லவேண்டும்.

॥ 𑌧𑌰𑌣𑍀 ॥

𑌭𑌵𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌵𑍇𑌦 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌨𑍍𑌮𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌪𑍃𑌚𑍍𑌛𑌸𑌿 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌸𑍇 𑌯𑍇𑌨 𑌪𑌾𑌦𑍈𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑍈𑌃 ॥ 26

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌶𑍌𑌚𑌂 𑌦𑌯𑌾 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ।
𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌯𑌂 𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑍋𑌪𑌰𑌤𑌿𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ॥ 27

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌿𑌰𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋𑌬𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌕𑍌𑌶𑌲𑌂 𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑍈𑌰𑍍𑌯𑌂 𑌮𑌾𑌰𑍍𑌦𑌵𑌮𑍇𑌵 𑌚 ॥ 28

𑌪𑍍𑌰𑌾𑌗𑌲𑍍𑌭𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯𑌃 𑌶𑍀𑌲𑌂 𑌸𑌹 𑌓𑌜𑍋 𑌬𑌲𑌂 𑌭𑌗𑌃 ।
𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑍋𑌽𑌨𑌹𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 ॥ 29

𑌏𑌤𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌚 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌮𑌹𑌾𑌗𑍁𑌣𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌾 𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ॥ 30

𑌤𑍇𑌨𑌾𑌹𑌂 𑌗𑍁𑌣𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇𑌨 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌮𑍍 ।
𑌶𑍋𑌚𑌾𑌮𑌿 𑌰𑌹𑌿𑌤𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾 𑌕𑌲𑌿𑌨𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ॥ 31

பூதேவி கூறுகிறாள்.

ஓ தருமா! நீ யாவற்றையும் அறிவாய்; ஆயினும் நீ என்னைக்கேட்கிறபடியால் கூறுகிறேன். நீ உலகங்களுக்குச் சுகத்தைக்கொடுக்கும் நான்கு பாதங்களுடன் இருக்கிறவனல்லவா? 26

உண்மை புரைத்தல், பரிசுத்தனாயிருத்தல், பிறருடைய துக்கங்கண்டு வருந்தல், கோபம் உண்டாயினும் மனதை அடக்குதல், யாசகர்களுக்கு ஏராளமாகக் கொடுத்தல், போதும் என்றபுத்தி, தீவழி நில்லாமை, மனச்சஞ்சலமின்றி யிருத்தல், வெளி யிந்திரியங்களில் நிச்சலத்தன்மை, தனக்குரிய தருமம், இவன் சத்துரு இவன் மித்திரன் என்றபேத மில்லாமை, பிறர் குற்றம் பொறுத்தல் லாபம் கிடைக்கினும் உதாசீனமாக விருக்கும் தன்மை, சாஸ்திர விசாரணை, ஆத்மஞானம், ஆசை யில்லாமை, சிக்ஷிக்கும் தன்மை, யுத்தத்தில் உற்சாகம், மகிமை, சாமர்த்தியம், செய்யவேண்டிய காரியங்களை மறவாமற் செய்வது, பராதீன மாகாம லிருப்பது, காரியங்களைச் செய்யுந் திறமை, சௌந்தரியம், வியாகுலமில்லாம லிருப்பது, மனதிற் கடினமில்லாமை, புதிது புதிதாகத் தோன்றும் அறிவின் கௌரவம், வணக்கம், சுவபாவம், மனோபலம், கருமேந்திரிய பலம், சுகங்களுக்கு இருப்பிடமாக விருக்கும் தன்மை, கலங்காமை, சஞ்சல மற்ற தன்மை சிரத்தை, கீர்த்தி, எல்லோராலும் பூஜிக்கப்படுந்தன்மை, கர்வமில்லாமை, இந்த (39) குணங்களும், பெருந் தன்மையை விரும்பியவர்கள் விரும்பத்தக்க மற்றுமுள்ள அநேகசிறந்த குணங்களும்இயற்கையிலமைந்துஎப்போதுங்குறைவற்று விளங்கத்தக்க மகிமை வாய்ந்தவனும் குணங்களுக்கு இருப்பிடமுமாகிய ஸ்ரீநிவாசன் இல்லாததும், பாபங்களுக்குக் காரணமாகிய கலியால், பார்க்கப்படுகிறதுமாகிய இவ்வுலகத்தை நினைத்து வருத்தமடைகிறேன். 27-31

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚𑌾𑌨𑍁𑌶𑍋𑌚𑌾𑌮𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌂 𑌚𑌾𑌮𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍃𑌷𑍀𑌨𑍍 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ 32

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑍋 𑌬𑌹𑍁𑌤𑌿𑌥𑌂 𑌯𑌦𑌪𑌾𑌙𑍍𑌗𑌮𑍋𑌕𑍍𑌷
𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌸𑌮𑌚𑌰𑌨𑍍𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 ।
𑌸𑌾 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌸𑍍𑌵𑌵𑌾𑌸𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌵𑌨𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯
𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌸𑍌𑌭𑌗𑌮𑌲𑌂 𑌭𑌜𑌤𑍇 𑌽𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌾 ॥ 33

𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌮𑌬𑍍𑌜𑌕𑍁𑌲𑌿𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑍇𑌤𑍁𑌕𑍇𑌤𑍈𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌦𑍈𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑌸𑍍𑌸𑌮𑌲𑌂𑌕𑍃𑌤𑌾𑌙𑍍𑌗𑍀 ।
𑌤𑍍𑌰𑍀𑌨𑌤𑍍𑌯𑌰𑍋𑌚𑌮𑍁𑌪𑌲𑌭𑍍𑌯 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂
𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌸 𑌮𑌾𑌂 𑌵𑍍𑌯𑌸𑍃𑌜𑌦𑍁𑌤𑍍𑌸𑍍𑌮𑌯𑌤𑍀𑌂 𑌤𑌦𑌨𑍍𑌤𑍇 ॥ 34

𑌯𑍋 𑌵𑍈 𑌮𑌮𑌾𑌤𑌿𑌭𑌰𑌮𑌾𑌸𑍁𑌰𑌵𑌂𑌶𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌮𑍍
𑌅𑌕𑍍𑌷𑍌𑌹𑌿𑌣𑍀𑌶𑌤𑌮𑌪𑌾𑌨𑍁𑌦𑌦𑌾𑌤𑍍𑌮𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ।
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍁𑌃𑌸𑍍𑌥𑌮𑍂𑌨𑌪𑌦𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍌𑌰𑍁𑌷𑍇𑌣
𑌸𑌂𑌪𑌾𑌦𑌯𑌨𑍍𑌯𑌦𑍁𑌷𑍁 𑌰𑌮𑍍𑌯𑌮𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑌙𑍍𑌗𑌮𑍍 ॥ 35

ஓதேவ சிரேஷ்டனே! என்னையும் உன்னையும் தேவர்களையும் ரிஷிகளையும் பிதிரர்களையும் ஸாதுக்களையும் வர்ணாச்சிரமத்தவர்கள் யாவரையும் உத்தேசி த்து வருத்த மடைகிறேன். 32

பிரமன் முதலியவர்கள் இலக்ஷ்மீ தேவியின் கடாக்ஷமானது தங்களிடம் பொருந்த வேண்டுமென்ற விருப்பத்துடன் வெகுகாலம் தவம் செய்கிருர்கள். அவ்விதம் உத்தமர்களால் ஆசரிக்கப்படும் இலக்ஷ்மீ தேவியும் தனக்கு வாசம் செய்யும் ஸ்தானமாகிய தாமரைவனத்தை விட்டு மிகவும் ஆவல்கொண்டு பக வானுடைய பாதங்களின் லாவண்ணியத்தை அனுபவிக்கிருள். 33

நான் அந்த பகவானுடைய பத்மம், வஜ்ரம், அங்குசம், துவஜம், இவ்வ டையாளங்க ளமைந்த அழகுவாய்ந்த பாதங்களால் நன்ருய் அலங்கரிக்கப்பட்ட அங்கமுடைய வளாகி அந்த பகவானுடைய ஐசுவரியத்தையடைந்து மூவுலகி லும் மேலானவளாக விளங்கினேன். அந்தப் பெருமைக்கு முடிவுகாலத்தில், கருவங்கொண்ட என்னை அவர் விட்டு விட்டார். 34

சுவாதீனனுகிய பகவான், வெகு அக்ஷௌகணிக் கணக்கான அசுர வம்சத்தரசர்களால் எனக்குண்டான மிகுந்த பாரத்தைப்போக்கினர். பாதங் கள் குறைந்தவனும் அதனுல் கஷ்டமடைந்தவனுமாகிய உன்னை புருஷப்பிரயத் தினத்தால் தன்னிடம் நான்கு பாதமுடையவனுகச் செய்வதற்கு யது வம்சத் தில் அழகான சரீரமடைந்தார். 35

கா வா ஸஹேத விரஹம் புருஷோத்தமஸ்ய
ப்ரேமாவலோகருசிரவல்கிதவல்குஜல்பை: ।
ஸ்தைர்யம் ஸமாநமஹரந் மதுமாநிநீநாம்
ரோமோத்ஸவோ மம யதங்க்ரிவிடங்கிதாயா: ॥ 36

॥ ஸூத உவாச ॥

தயோரேவம் கதயதோ: ப்ருதிவீதர்மயோஸ்ததா ।
பரீக்ஷிந்நாம ராஜர்ஷி: ப்ராப்த: ப்ராசீம் ஸரஸ்வதீம் ॥ 37

இதி ஸ்ரீமத்பாகவதே ப்ரதமஸ்கந்தே ஷோடசோऽத்யாய:.

॥ ஸூத உவாச ॥

தத்ர கோமிதுநம் ராஜா ஹந்யமாநமநாதவத் ।
தண்டஹஸ்தம் ச வ்ருஷலம் ததர்ச ந்ருபலாஞ்சநம் ॥ 1

வ்ருஷம் ம்ருணாலதவளம் மேஹந்தமிவ பிப்யதம் ।
வேபமாநம் பதைகேந ஸீதந்தம் சூத்ரதாடிதம் ॥ 2

கிருஷ்ண பகவான் தம்முடைய அன்புள்ள பார்வை, மனோஞ்ஞமான புன்னகை, சுந்தரமான சம்பாஷணை, இவைகளால் சத்தியபாமை முதலிய ஸ்திரீகளுடைய கருவத்துடன் கூடிய மாருதிலைமையை அபகரித்தார். அந்த முகுந்தனுடைய சரணாரவிந்த தூளியால் எனக்கு (பயிர் முதலியவை என்ற வியாஜத்தால்) மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அந்தப்புருஷோத்தமனைப்பிரிய எந்த ஸ்திரீதான் பொறுப்பாள்? 36

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

இவ்வாறு பூதேவியும் தருமதேவதையும் பேசிக்கொண் டிருக்கும்போது பரீக்ஷித்து என்று பிரசித்தியுள்ள இராஜரிஷி கீழ்முகமாகப் பிரவகிக்கும் சரஸ்வதி நதிக்கரை வந்தார். 37

16-வது அத்தியாயம் முற்றிற்று.

17 - வது அத்தியாயம்.

சூதபுராணிகர் கூறுகிறார்.

பரீக்ஷித்து மகாராஜன் அங்கு நாதனற்றவர்களைப் போல் அடிபடுகிற எருதொன்றையும், பசுவொன்றையும், தடியைக் கையில் பிடித்துக் கொண்டு இராஜவேடம் பூண்ட சூத்திரனையும் பார்த்தான். 1

தாமரைத் தண்டு போல் வெண்மை வர்ண முடையதும் மூத்திரபுரீஷங்களைச் செய்வது போன்றதும் பயமுடையதும் நடுங்குகிறதும் ஒரு பாதத்தால் கிலேசமடைகிறதும்சூத்திரனால் அடிபடுகிறதுமாகிய விருஷபத்தையும்அவிகை

𑌗𑌾𑌂 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌦𑍁𑌘𑌾𑌂 𑌦𑍀𑌨𑌾𑌂 𑌭𑍃𑌶𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌪𑌦𑌾𑌹𑌤𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑌤𑍍𑌸𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑍁𑌵𑌦𑌨𑌾𑌂 𑌕𑍍𑌷𑌾𑌮𑌾𑌂 𑌯𑌵𑌸𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑍀𑌮𑍍 ॥ 3

𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌰𑌥𑌮𑌾𑌰𑍂𑌢𑌃 𑌕𑌾𑌰𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌦𑌮𑍍 ।
𑌮𑍇𑌘𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌯𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌸𑌮𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌃 ॥ 4

॥ 𑌰𑌾𑌜𑌾 ॥

𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌚𑍍𑌛𑌰𑌣𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌬𑌲𑌾𑌦𑍍𑌧𑌂𑌸𑍍𑌯𑌬𑌲𑌾𑌨𑍍𑌬𑌲𑍀 ।
𑌨𑌰𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑌿 𑌵𑍇𑌷𑍇𑌣 𑌨𑌟𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌽𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥ 5

𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌗𑌤𑍇 𑌦𑍂𑌰𑌂 𑌸𑌹𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌧𑌨𑍍𑌵𑌨𑌾 ।
𑌶𑍋𑌚𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌯𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍𑌰𑌹𑌸𑌿 𑌪𑍍𑌰𑌹𑌰𑌨𑍍𑌵𑌧𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ 6

𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌮𑍃𑌣𑌾𑌲𑌧𑌵𑌲𑌃 𑌪𑌾𑌦𑍈𑌰𑍍𑌨𑍍𑌯𑍂𑌨𑌃 𑌪𑌦𑌾 𑌚𑌰𑌨𑍍 ।
𑌵𑍃𑌷𑌰𑍂𑌪𑍇𑌣 𑌕𑌿𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌦𑍇𑌵𑍋 𑌨𑌃 𑌪𑌰𑌿𑌖𑍇𑌦𑌯𑌨𑍍 ॥ 7

𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌕𑍌𑌰𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑍋𑌰𑍍𑌦𑌣𑍍𑌡𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌿𑌤𑍇 ।
𑌭𑍂𑌤𑌲𑍇𑌽𑌨𑍁𑌪𑌤𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌿𑌨𑌾 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌶𑍁𑌚𑌃 ॥ 8

உண்டு பண்ணுகிறதும் மிகவும் தைன்ய மடைந்ததும் சூத்திரன் பாதத்தால் உதை படுகிறதும் புற்களை விரும்புவதும் கன்றில்லாததும் இளைப்புடையதும் கண்ணீர் நிறைந்த முகமுடையது மாகிய கோவையும் கண்டான். 2-3

சுவர்ணமயமான சாமான்களை யுடைய தேரின்மீதேறிக் கொண்டிருக்கும் பரீக்ஷித்து மகாராஜன் வில்லை ஆரோபணம் செய்து கொண்டு மேகம் போன்ற தொனியுடன் கம்பீரமாய் வினவுகிறான். 4

பரீக்ஷித்துமகாராஜன் கேட்கிறான்.

நீ யார்? என்னைக் கதியாக உடைய இவ்வுலகத்தில் வலுவற்றவர்களை வல்லமையுள்ள நீ பலாத்காரமாக இம்சிக்கிறாய். நீ நடனைப் (வேடம் பூண்டவன்) போல் அரசனாகிறாய்; செய்கையால் சூத்திரனாகிறாய். 5

காண்டிவம் என்ற வில்லையுடைய அர்ச்சுனனுடன் கிருஷ்ண பகவான் சென்றபின்பு, குற்றமில்லாதவர்களைத் தனியே யிருந்து அடிக்கிறாய். அதனால் நீ குற்றவாளியானாய்; அதனால் நீ வதமடைவதற் குரியவனாகிறாய். 9

ஓ விருஷபமே! நீ யார் தாமரைத் தண்டுபோல் வெண்மை நிறத்துடனும் மூன்றுபாதங்கள் குறைந்து ஒருபாதத்தால் சஞ்சாரம் செய்துகொண்டும் இருக்கிறாய்? விருஷபரூபத்துடன் இருந்து எங்களை வருத்தும் தேவனோ? 7

குருவம்சத் தரசர்களின் சிறந்த கைகளால் அணைத்ததற் கொப்பப் பரிபாலிக்கப்படும் இந்த பூமண்டலத்தில் உன் கண்ணீரைத் தவிர மற்றவர்களுடைய கண்களினின்று நீர் எப்போதும் விழாது. 8

மா ஸௌரபேயாத்ர ஶுசோ வ்யேது தே வ்ருஷலாத்பயம் ।
மா ரோதீரம்ப பத்ரம் தே கலாநாம் மயி ஶாஸ்தரி ॥ 9

யஸ்ய ராஷ்ட்ரே ப்ரஜாஸ்ஸர்வாஸ்த்ரஸ்யந்தே ஸாத்வ்யஸாதுபி: ।
தஸ்ய மத்தஸ்ய நஶ்யந்தி கீர்த்திராயுர்பகோ கதி: ॥ 10

ஏஷ ராஜ்ஞாம் பரோ தர்மோ ஹ்யார்த்தாநாமார்த்திநிக்ரஹ: ।
அத ஏநம் வதிஷ்யாமி பூதத்ருஹமஸத்தமம் ॥ 11

கோऽவ்ருஶ்சத்தவ பாதாம்ஸ்த்ரீந் ஸௌரபேய சதுஷ்பத: ।
மா பூவம்ஸ்த்வாத்ருஶா ராஷ்ட்ரே ராஜ்ஞாம் க்ருஷ்ணாநுவர்த்திநாம் ॥ 12

ஆக்யாஹி வ்ருஷ பத்ரம் வ: ஸாதூநாமக்ருதாகஸாம் ।
ஆத்மவைரூப்யகர்த்தாரம் பார்த்தாநாம் கீர்த்திதூஷணம் ॥ 13

ஜநேऽநாகஸ்யகம் யுஞ்ஜந் ஸர்வதோऽஸ்ய ச மத்பயம் ।
அநாகஸ்ஸ்விஹ பூதேஷு ய ஆகஸ்க்ருந்நிரங்குஶ: ॥ 14

ஆஹர்த்தாஸ்மி புஜம் ஸாக்ஷாதமர்த்யஸ்யாபி ஸாங்கதம் ।

காமதேனுவின் குமாரனாகிய விருஷபமே! நீ வருத்தமடைய வேண்டாம். உனக்குச் சூத்திரனிடம் ஏற்பட்ட பயமானது ஒழிந்துபோகும். ஓ அம்ம! துஷ்டர்களைத் தண்டிக்கிற நான் இருக்கும்போது உனக்கு நன்மையே உண்டாகும். அழ வேண்டாம். 9

பதிவிருதை யாகிய ஓ தேவி! ஒருவனுடைய இராஜ்யத்தில் யாரேனும் துஷ்டர்களால் ஹிம்சை யடைய நேரிடின், மதங்கொண்ட அத்தேசத் தரசனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்கியம், பரலோகம் இவைகளும் நாச மடையும். 10

துக்கப் படுகிறவர்க ளுடைய துக்கத்தை யொழிப்பதே அரசர்களுக்கு முக்கியமான தருமமாகும். ஆதலால், பிராணிகளுக்குத் துரோகம் செய்பவனும் அஸத்துக் களுக்குள் சிறந்தவனுமாகிய இவனை வதஞ்செய்கிறேன். 11

காமதேனுவின் குமாரனே! நான்கு பாதங்களுடைய உன் மூன்று பாதங்களை எவன் வெட்டினான்? கிருஷ்ணபகவானை அனுசரித்தவர்களாகிய அரசர்கள் பரிபாலனம் செய்யும் இராஜ்யத்தில் உன்னைப்போல் யாரும் இருக்கக்கூடாதல்லவா (யாரும் உன்னைப்போல் வருத்தமடையக் கூடாதென்பது கருத்து) 12

ஓ விருஷபமே! குற்றமற்றவர்களும் ஸாதுக்களுமாகிய உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும். உன்னுடைய பாதங்களைச் சேதித்து விகாரப்படுததியவன் எவன்? குந்தியின் குமாரர்களைச் சார்ந்தவர்களாகிய எங்களுடைய கீர்த்தியைத் தூஷித்தவனுமெவன் சொல்லு. 13

குற்றமற்ற வர்களுக்குத்துன்பம் செய்பவன் எவனோ அவனுக்கு என்னால் எங்கும் பயமுண்டு. (துஷ்டர்களைத்தண்டிப்பதால் ஸாதுக்களுக்கே நன்மை யுண்டாகும்) எவன் குற்றமற்றவர் களுக்குத் தடையின்றிக் கெடுதல் செய்கிறானோ அவன் தேவனாயினும் அவனுடைய தோள்வளைகளுள்பட கையை நான் வாங்கி விடுவேன். 14½

𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌹𑌿 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ॥ 15
𑌶𑌾𑌸𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑌾𑌪𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌥𑌾𑌨𑌿𑌹 ।

॥ 𑌧𑌰𑍍𑌮𑌃 ॥

𑌏𑌤𑌦𑍍𑌵𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍇𑌯𑌾𑌨𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌭𑌯𑌂 𑌵𑌚𑌃 ॥ 16
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌦𑍌𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑌃 ।
𑌨 𑌵𑌯𑌂 𑌕𑍍𑌲𑍇𑌶𑌬𑍀𑌜𑌾𑌨𑌿 𑌯𑌤𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭 ॥ 17
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌮𑍋 𑌵𑌾𑌕𑍍𑌯𑌭𑍇𑌦𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌵𑌸𑌨𑌾 𑌆𑌹𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ 18
𑌦𑍈𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌽𑌪𑌰𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑌪𑌰𑍇 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ।
𑌅𑌪𑍍𑌰𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌾𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌕𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥ 19
𑌅𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇 𑌵𑌿𑌮𑍃𑌶 𑌸𑍍𑌵𑌮𑌨𑍀𑌷𑌯𑌾 ।
𑌏𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌵𑌦𑌤𑌿 𑌸 𑌸𑌮𑍍𑌰𑌾𑌡𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥ 20
𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌵𑌿𑌖𑍇𑌦𑌃 𑌪𑌰𑍍𑌯𑌚𑌷𑍍𑌟 𑌤𑌮𑍍 ।

ஆபத்தில்லாமலிருக்கும்போது துன்மார்க்கமுடையவர்களாகிய அதருமிஷ்டர்களைச் சாஸ்திரப்படி தண்டிக்கும் அரசனுக்கு, தங்களுக்குரிய தருமங்களை அனுஷ்டானம் செய்துவரும் ஸாதுக்களைப் பரிபாலனம் செய்வது முக்கிய தருமமல்லவா? 15½

தருமதேவதை கூறுகிறது

பாண்டவர்களைச் சார்ந்த தாங்கள் தான் துக்கமடைந்தவர்களுக்கு அபயம் கொடுக்கும் வார்த்தை பேசுவதற் குரியவர்கள். ஏனெனில், அந்தப் பாண்டவர்களுடைய அநேக நற்குணங்களாலல்லவா கிருஷ்ண பகவான் தூதுநடப்பதுமுதலிய காரியங்களில் பிரவேசித்தார். 16½

ஓ புருஷ சிரேஷ்டனே! நாங்கள் (வாதம் செய்பவர்களின்) வாக்கிய பேதங்களால் மோகமடைந்து, எவன் இந்தத் துன்பத்திறகுக் காரணமானவனோ அந்தப் புருஷனைத் தெரிந்துகொள்ள வில்லை. 17½

பேதபுத்தியற்ற யோகிகள் சிலர் தங்களுக்குத் தாங்களே பிரபுவென்று பேசிக் கொள்ளுகிறார்கள். மற்றுமுள்ளவர்கள் (சோதிடர்கள்) தெய்வந்தான் என்று கூறுகிறார்கள். மற்றுமுள்ளவர்கள் (மீமாம்சகர்கள்) கருமமே பிரபு வாகிற தென்கிறார்கள். சிலர் மனதுக்கு எட்டாதவனும் வாக்குக்கு எட்டாதவனுமாகிய பரமேச்வரனிடமே சுகம் முதலியவை உண்டாகின்றன என்று நிச்சயிக்கிறார்கள். ஒ இராஜ சிரேஷ்டனே! உம்முடைய புத்தியால் இவைகளில் எது உசிதமோ அதைப்பற்றி யோசித்துக் கொள்ளும் (என்றது) 18-19½

ஓ பிராம்மண சிரேஷ்டர்களே! தருமதேவதை இவ்வாறு பேசும்போது சம்ராட்டாகிய பரீக்ஷித்து மகாராஜன் மோகந் தெளிந்து, சாவதான மனதுடன் தரும தேவதையை நோக்கிப் பதிலுரைக்கிறான். 20½

॥ ராஜா ॥

धर्मं ब्रवीषि धर्मज्ञ धर्मोऽसि वृषरूपधृक् ॥ 21

यदधर्मकृतः स्थानं सूचकस्यापि तद्भवेत् ।
अथवा देवमायाया नूनं गतिरगोचरा ॥ 22

चेतसो वचसश्चापि भूतानामिति निश्चयः ।
तपः शौचं दया सत्यमिति पादाः कृते कृताः ॥ 23

अधर्मांशैस्त्रयो भग्नाः स्मयसङ्गमदैस्तव ।
इदानीं धर्म पादस्ते सत्यं निर्वर्तयेद्यतः ॥ 24

तं जिघृक्षत्यधर्मोऽयमनृतेनैधितः कलिः ।
इयं च भूमिर्भगवता न्यासितोरुभरा सती ॥ 25

அரசன் கூறுகிறான்.

தருமந் தெரிந்தவனே! $ தருமத்தைக் கூறுவதால் விருஷரூபந் தரித்த தருமதேவதை யாகிறாய்? ஏனெனில், அதருமம் செய்கிறவனுக் குரிய நாகங்களே அந்த அதருமிஷ்டனைப் பற்றிப்பேசுகிறவனு மடைகிறானல்லவா? அல்லது பகவானுடைய மாயையை நிச்சயமாகவே யாருமறிய முடியாது. அந்த மாயை பிராணிகளின் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதவள் என்பது சித்தாந்த மானதுதான். 22½

¶ஓதரும! கிருதயுகத்தில் தவம் சௌசம், தயை, ஸத்தியம் என்றமூன்று பாதங்க ளிருந்தன. அதருமத்தின் அங்கங்களாகிய கருவம், சேர்க்கை, மதம் இவைகளால் உன்னுடைய மூன்று பாதங்களும் துன்ப மடைந்தன. இக்கலியில் மிகுந்த பிரயத்தினத் துடன் ஜீவிக்கக் காரணமாகிய ஸத்தியம் என்ற பாதமானது உனக் கிருக்கிறது. அந்தப் பாதத்தையும் அசத்தியத்தால் விருத்தியடையும் இந்த அதருமிஷ்டனுகிய கலியானவன் புண்பண்ணுவதற்கு விரும்புகிறான்.

பதிவிருதை யாகிய இந்த பூதேவி தன்னுடைய மிகுதியான பாரமானது கிருஷ்ண பகவானல் குறைக்கப் பட்டமையாலும் அந்த பகவானுடைய அழகு

$ ஹிம்ஸிப்பவன் இன்னானென்று தெரிந் திருந்தாலும், அவனைப்பற்றிச் சொல்வது அவனுக்குரிய நரகத்திற் கிடமாகும். என்று தரும தேவதை உரைக்கவில்லை அல்லது மாயையினல் தெரியாம லிருந்தாலு மிருக்கலாம் என்பது 21-22½ சுலோகங்களின் கருத்து.

¶ கிருதயுகத்தில் தருமம் தவம் சௌசம் தயை ஸத்தியம் என்னும் நான்கு பாதங்களுண்டு. அதருமத்திற்குக் கருவம் சேர்க்கை மதம் அசத்தியம், இந்நான்கும் அங்கமாகும். திரேதாயுகத்தில் தவம் கருவத்தாலும் சௌசம் சேர்க்கையாலும் தயை மதத்தாலும் ஸத்தியம் அசத்தியத்தாலும் நான்கிலொரு அம்சம் குறைவாகும். துவாபர யுகத்தில் பாதி குறையும் கலியுகத்தில் முக்கால்பாகம் குறையும். பாக்கியுள்ள காற்பங்கும் கடைசியில் நாசமடையும் என்பது புராணக் கொள்கை.

ஶ்ரீமத்பிஸ்தத்பதந்யாஸைஃ ஸர்வதஃ க்ருதகௌதுகா ।
ஶோசத்யஶ்ருகலா ஸாத்வீ துர்பகேவோஜ்ஜிதா ஸதீ ॥ 26

அப்ரஹ்மண்யா ந்ருபவ்யாஜாஃ ஶூத்ரா போக்ஷ்யந்தி மாமிதி ।
இதி தர்மம் மஹீம் சைவ ஸாந்த்வயித்வா மஹாரதஃ ॥ 27

நிஶாதமாததே கட்கம் கலயே(அ)தர்மஹேதவே ।
தம் ஜிகாம்ஸுமபிப்ரேத்ய விஹாய ந்ருபலாஞ்சனம் ॥ 28

தத்பாதமூலம் ஶிரஸா ஸமகாத்பயவிஹ்வலஃ ।
பதிதம் பாதயோர்வீரஃ க்ருபயா தீனவத்ஸலஃ ।
ஶரண்யோ நாவதீச்ச்லோக்ய ஆஹ சேதம் ஹஸந்நிவ ॥ 29

॥ ராஜா ॥

ந தே குடாகேஶயஶோதராணாம்
பத்தாஞ்ஜலேர்வை பயமஸ்தி கிஞ்சித் ।
ந வர்திதவ்யம் பவதா கதஞ்சன
க்ஷேத்ரே மதீயே த்வமதர்மபந்துஃ ॥ 30

வாய்ந்த அந்த பாத ஸ்பரிசத்தால் எங்கும் ஆனந்த மடைந்து இருந்தனள். இப்பொழுது அந்த பகவான் தன்னுடைய ஸ்தானம் சென்றமையால் அவரில்லாத பாக்கியக் குறைவை யடைந்து கண்ணீர் பெருகும் முகத்துடன் வருத்த மடைகிறாள். பிராம்மண பக்தியில்லாத வஞ்சக அரசர்கள் தன்னைப் புசிக்கப் போகிறார்க ளென்றும் வருத்த மடைகிறாள். 25-26½

இவ்விதம் மகாரதனாகிய பரீக்ஷித்து தருமனையும் பூதேவியையும் நல்வார்த்தைகளால் சமாதானம் செய்து, அதருமத்திற்குக் காரணமாகிய கலியைக்கொல்லுவதற்குத் தீக்ஷ்ணமான கத்தியை எடுத்தான். 27½

பரீக்ஷித்து மகாராஜன் வதஞ்செய்ய விரும்பியதையறிந்த அந்தச்சூத்திரன் இராஜவேடத்தை விட்டுஅச்சத்தால் தளர்ச்சியுற்று அந்தப் பரீக்ஷித்தினுடைய பாதங்களுக்குச் சமீபத்தில் தலையால் வணங்கினான். அப்பொழுது தீனர்களிடம் அன்புள்ள வனும் தீரனும் சரணமடையத் தகுதியானவனும் சிறந்த கீர்த்திக் குரியவனுமாகிய மகாராஜன் தன்பாதங்களில் விழுந்த அந்தச்சூத்திரனை வதம் செய்யவில்லை. மந்தகாசம் செய்து ஒருவார்த்தை கூறுகிறான். 29

அரசன் கூறுகிறான்

குடாகேசனுடைய (அர்ச்சுனன்.) கீர்த்தியைப் பெற்ற எங்களைக் குறித்து அஞ்சலிசெய்த உனக்குச் சிறிதேனும் அச்சமில்லை. இது நிச்சயம். எங்களுடைய இராஜ்யத்தில் எவ்விதத்திலும் நீ இருக்கக் கூடாது. நீ அதருமத்திற்குப் பந்துவல்லவா? 30

𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌂 𑌨𑌰𑌦𑍇𑌵𑌦𑍇𑌹𑍇
 𑌷𑍍𑌵𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌯𑌮𑌧𑌰𑍍𑌮𑌪𑍂𑌗𑌃 ।
𑌲𑍋𑌭𑍋𑌽𑌨𑍃𑌤𑌂 𑌚𑍌𑌰𑍍𑌯𑌮𑌨𑌾𑌰𑍍𑌯𑌮𑌂𑌹𑍋
 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾 𑌚 𑌮𑌾𑌯𑌾 𑌕𑌲𑌹𑌶𑍍𑌚 𑌦𑌮𑍍𑌭𑌃 ॥ 31

𑌨 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑌧𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍋
 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌚 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌵𑍍𑌯𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑍈
 𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌤𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌃 ॥ 32

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌹𑌰𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌜𑍍𑌯𑌮𑌾𑌨
 𑌇𑌜𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌜𑌤𑌾𑌂 𑌶𑌂 𑌤𑌨𑍋𑌤𑌿 ।
𑌕𑌾𑌮𑌾𑌨𑌮𑍋𑌘𑌾𑌨𑍍 𑌸𑍍𑌥𑌿𑌰𑌜𑌂𑌗𑌮𑌾𑌨𑌾𑌮𑍍
 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌵𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥ 33

॥ 𑌶𑍍𑌰𑍀𑌸𑍂𑌤𑌃 ॥

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍈𑌵𑌮𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸 𑌕𑌲𑌿𑌰𑍍𑌜𑌾𑌤𑌵𑍇𑌪𑌥𑍁𑌃 ।
𑌤𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌸𑌿𑌮𑌾𑌹𑍇𑌦𑌂 𑌦𑌣𑍍𑌡𑌪𑌾𑌣𑌿𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌯𑌤𑌮𑍍 ॥ 34

இராஜாக்களின் சரீரத்தில் நீ இருக்கும்போது லோபம், பொய், திருட்டுத்தனம், துஷ்டத்தன்மை, தங்கட்குரிய தருமங்களை விடுதல், லக்ஷ்மீகரமின்மை, கபடம், டம்பம் முதலிய இவ்வாறான அதருமக் கூட்டமானது உன்னை அநுசரிக்கின்றது. **31**

ஓ அதருமத்திற்குப்பந்துவே! ஆகையால், தருமத்துடனும் ஸத்தியத்துடனுமிருக்கக் கூடிய பிர்மா வர்த்தமென்னும் தேசத்தில் நீ இருக்கக் கூடாது. இத்தேசத்தில் யாகத்தை நன்று யியற்றவல்ல பெரியோர்கள் யாகங்களைச் செய்து யஞ்ஞேசுவரனைப் பூசிக்கிறார்கள். 32

யாக மூர்த்தியும் மகிமை வாய்ந்தவரு மாகிய கிருஷ்ணனை இங்கு பூசிக்கிறார்கள். கிருஷ்ணபகவான் தம்மைப் பூசிப்பவர் களுக்கு க்ஷேமத்தையும் பழுதில்லாத (அவர்களுடைய) கோரிக்கைகளையும் கொடுக்கிறார். வாயுவானவன் பிராண ரூபத்துடன் உள்ளே யிருந்தாலும் வெளியிலு மிருப்பது போல், இந்த பகவான் ஸ்தாவர ஜங்கமங் களுக்கு ஆத்மாவாகவும் உள்ளும் புறம்பும் இருக்கிறார். 33

ஸ்ரீ சூதபுராணிகர் கூறுகிறார்.

பரீக்ஷித்து மகாராஜனால் இவ்வாறு கட்டளை யிடப்பட்ட அந்தக் கலியானவன், நடுக்கங் கொண்டு முயற்சியுள்ள யமனைப்போல் கத்தியை ஓங்கிநிற்கும் அவ்வரசனை நோக்கிக் கூறுகிறான். 34

यत्र क्व वाथ वत्स्यामि सार्वभौम तवाज्ञया।
लक्षये तत्र तत्रापि त्वामात्तेषुशरासनम्॥ 35

तन्मे धर्मभृतां श्रेष्ठ स्थानं निर्देष्टुमर्हसि।
यत्रैव नियतो वत्स्य आतिष्ठंस्तेऽनुशासनम्॥ 36

॥ सूत उवाच ॥

अभ्यर्थितस्तदा तस्मै स्थानानि कलये ददौ।
द्यूतं पानं स्त्रियः सूना यत्राधर्मश्चतुर्विधः॥ 37

पुनश्च याचमानाय जातरूपमदात्प्रभुः।
ततोऽनृतं मदः कामो रजो वैरं च पञ्चमम्॥ 38

अमूनि पञ्च स्थानानि ह्यधर्मप्रभवः कलिः।
औत्तरेयेण दत्तानि न्यवसत्तन्निदेशकृत्॥ 39

